சித்தர்கள் போற்றும்

வாலை

கொங்கணர், கருவூரார், அபிராமி அந்தாதி விளக்கவுரை







பாட்டுச்சித்தர்

ஓம்சக்தி நாராயணசாமி

சீர்காழி



நூலாசிரியரின் தவம்



அன்புடன்

பாட்டுச்சித்தர்

ஓம்சக்தி நாராயணசாமி

வெளியீடு :

ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்
7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பைவட்டம்,
நெல்லை மாவட்டம் – 627 425.
செல் : 9843650639, 9894751006

பாட்டுச்சித்தர்
ஓம்சக்தி நாராயணசாமி
ஐயா அவர்கள் எழுதிய நூல்கள்

1. ஸ்ரீ மாணிக்க நாச்சியார் மகிமைகள்
2. ஸ்ரீ தர்மசாஸ்தா சபரிமலை ஐயப்பன்
3. சித்தர்கள் நமக்களித்த வெளிச்சம்
4. பதினென் சித்தர்களின் தசதீட்சை
5. சித்தர்கள் வழிகாட்டும் வாசியோகம்
6. சற்குரு ஸ்ரீ காகபுசுண்டர் பெருநூல் காவியம் 1000: மூலமும் உரையும்
7. சிவவாக்கியர் ஜீவிதமும் சிந்தனையும்
8. ஸ்ரீ கோரக்க சித்தர் கதையும் கருத்தும்
9. ஸ்ரீ பாம்பாட்டிச் சித்தர் தேடலும் பாடலும்
10. ஸ்ரீ அகத்தியர் (ஞானப்பாடல்கள்)
11. கைவல்ய நவநீதம்: மூலமும் உரையும்
12. தெய்வத்தமிழ் திருமந்திரம் 3000 மூலமும் உரையும்
13. சித்தர்கள் போற்றும் வாலை
14. தேன் தமிழ் திருவாசகம்
15. திருக்கோவையார்
16. திருவள்ளுவர் அருளிய ஞானவெட்டி பாகம் 1

சித்தர்கள் போற்றும்

வாலை



ஸ்ரீமனோன்மணி சித்தர் பீட அறக்கட்டளை
பதிவு எண் - 13/2017

பாட்டுச்சித்தர்
ஓம்சக்தி நாராயணசாமி

பாட்டுச்சித்தர் தவக்குடில்,
நெ., 27, தியாகராஜர் நகர்,
சீர்காழி - 609 110.
செல் : **9843650639, 9894751006**

சித்தர்கள் போற்றும்

வாலை

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 2018
இரண்டாம் பதிப்பு : மார்ச் 2021
மூன்றாம் பதிப்பு : ஜனவரி 2024

பாட்டுச்சித்தர் தவக்குடில்
27, தியாகராஜ நகர், சீர்காழி - 609 110
நாகை மாவட்டம்.
செல் : 9843650639, 9894751006


விலை : ரூ. 200/- (சித்தர் பீட நன்கொடைக்காக)

வெளியீடு : ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்
7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பை வட்டம்,
நெல்லை மாவட்டம் - 627 425.
செல் : 9843650639, 9894751006

தாள் : 18.6 N/S மேப்லித்தோ

EST 1980

அச்சிட்டோர் : ஆர் வி இண்டஸ்ட்ரீஸ்
118/26 வேலாயுதம் ரோடு
சிவகாசி - 626123
போன் : 04562 - 227589
Email : business@orrveeprinters.com



பாட்டுச்சித்தர்
ஓம்சக்தி நாராயணசாமி,
ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீடம்
பதிவு எண். 15/2018
சீர்காழி - 609 110
செல்: 9843650639

முன்னுரை

அன்புடையீர்! அடியேன் சித்தர் நூல் வரிசையில் எழுதி வெளியிடும் பதினொன்றாவது நூலாக "சித்தர்கள் போற்றும் வாலை" எனும் இந்நூல் அன்னையின் அருளால் ஆக்கப்பட்டு வெளிவருகின்றது. அடியேனை தடுத்தாட்க் கொண்டு ஆன்மிகப் பாதையில் அழைத்து வந்தவன் என் குருநாதன் ஐயப்பன். அவனே என் காதில் காயத்ரி மந்திரம் உபதேசித்து அன்னையை வணங்குமாறு உத்தரவிட்டான். அவன் சொல்லிய வண்ணமே அன்னையின் புகழை பாடியும் அவள் மந்திரத்தை ஓதியும் அன்னையைப் போற்றி வந்தேன். அன்னையும் அடியவனை ஏற்று அவள் ஆலயவிழாவில் அருளாளர்களால் சக்திதாசன் என்னும் பட்டமளித்து ஆசீர்வதித்தாள். அன்றிலிருந்து என் பெயரோடு ஓம்சக்தி சேர்ந்துகொண்டது. பின் அன்னையின் திருக்கோயில் திருப்பணியை செய்து முடிக்க என் ஐயன் ஆணையிட்டான். பனிரெண்டு வருட காலம் அயராது பாடுபட்டு அவள் ஆலய கும்பாபிஷேகத்தை அவளருளால் செய்து முடித்தேன். இக்கால கட்டத்தில் தான் ஸ்ரீ காகபுசுண்டரே என் வீட்டிற்கு வந்து யோகத்தைக் காட்டிக் கொடுத்தார். அந்த யோக சாதனையிலும் பனிரெண்டு ஆண்டுகள் சிரத்தையுடன் இருந்து பாட்டுச்சித்தர் எனப்பேர் பெற்றேன். ஞான நிலையில் அடியேனை நிலைநிறுத்தி வாலையின் திருவடியை மெய்ப்பொருள் என தொட்டுக்காட்டி என் குருநாதனே உபதேசித்தான். ஆதலால் அன்னை மாணிக்க நாச்சியார் ஆலயத்தில் என் ஐயனுக்கு அழகான கோயில் கட்டி கும்பாபிஷேகம் முடித்தேன்.

அதன்பின் வினைப்பயனால் கட்டிய கோயிலை விட்டு விலகியும், குடியிருந்த வீட்டையும் இழந்து பரதேசியாய் இமயமலை சென்று அகோரிகளிடம் கூடித்திரிந்தேன். அவர்கள் கற்று தந்த ஹடயோகத்தை அறிந்து காகபுசுண்டர் சொன்ன ஹடயோகம் என்பார்கள் ஆகாதப்பா என்ற சொல்லை நினைந்து விலகி வந்தேன். இவ்வளவு நல்ல கெட்ட

அனுபவங்களிலும் அடியேன் வாசியோகம் செய்வதையும் வாலை அன்னையை வணங்குவதையும் ஒருநாளும் கைவிட்டது கிடையாது. அதனால் வினைத்துன்ப காலங்களிலும் சோதனை வரும் காலங்களிலும் அவள் என்னை கைவிட்டது கிடையாது. எந்தக் காலத்திலும் எனக்குப் பசிப்பிணி வாராவண்ணம் இன்று வரை பாதுகாத்து வளர்த்து பார்த்து வருகிறாள். அவள் குருவாக நின்று காட்டியவாறு முழுமையான தவசாதனையில் ஈடுபட்டு இரண்டு வருட காலம் பாடுபட்டு வந்தேன். என் குருநாதன் என்னுள் தோன்றி நீ கற்ற யோக ஞான உண்மையை இறைவனைத் தேடும் நல்ல உயிர்களுக்கு உணர்த்த வேண்டும். ஆண்டு தோறும் சித்தர் விழா நடத்தி அன்னதானம் செய்து சித்தர் நூல் எழுதி வெளியிட வேண்டும் என ஆணையிட்டான். அன்றிலிருந்து மெய்ப்பொருள் உபதேசத்தையும், காகபுசுண்டர் காட்டித்தந்த வாசிப் பயிற்சியையும் சொல்லித்தந்து கடந்த பனிரெண்டு ஆண்டுகாலமாக இறைப்பணியாக செய்து வருகிறேன். அதுபோல் ஆண்டு தோறும் சித்தர் நூல் எழுதி வெளியீட்டு விழா நடத்தி வருகின்றேன். அவை உலகமெங்கும் பரவி நல்ல உயிர்களை அடைந்து நல்ல பலன்களை அளித்து வருகின்றது.

என் நூல்களில் சொல்லும் அனைத்தும் சித்தர்கள் யாவரும் சொன்னவையே. இதுபோல் உலகில் வரும் நூல்களில் எல்லாம் உள்ள யோக ஞான விசயங்கள் அனைத்தும் சித்தர்கள் சொன்ன உண்மையாகத்தான் இருக்கும். இறைவனை உணரவும் சேரவும் உள்ள எல்லா செய்திகளும் சித்தர்கள் தங்கள் நூல்களில் சொல்லியே சென்றுள்ளார்கள். புதிய புதிய கலைகள் என்றும் நூல்கள் என்றும் வரும் யோக ஞான உண்மைகள் யாவும் சித்தர்கள் சொன்னவையே. அதையே தான் நானும் நூலாக்கி தருகின்றேன். அவை உலகில் வரும் நல்லுயிர்களுக்கு நல்வழி காட்டவும் இறைவனை அடையும் சாதனைகள் இதுதான்என உணர்த்தவும் செய்கின்றன என்பதை அறிந்து அன்பே சிவம் எனக்கொண்டு தவம் செய்தபடி வாழ்ந்து வருகின்றேன். என்னிலும் மேலான ஞான நிலையடைந்து இறவாநிலை பெற வேண்டும் என்று இசக்கி சித்தர் போன்ற பல உண்மையான சாதகர்களை உருவாக்கி வருகின்றேன். என்னைப் போல் நூல்கள் எழுதச் சொல்லி செங்கைசிவகுமார், ஓரெழுத்து ஜெயக்குமார் போன்ற சில சிறந்த சிந்தனையாளர்களை உலகுக்கு அடையாளம் காட்டுகின்றேன். அன்பையும் அன்னையின் அருளையும் துணை கொண்டு வாழ்ந்து

வருகிறேனே தவிர இன்றுவரை எவரையும் ஏமாற்றி திரிபவன் இவன் இல்லை. என்னை ஏமாற்றிச் சென்ற குருவாக வந்தவர்கள் பலருண்டு. என்னை ஏமாற்றிய சீடர்களும் இவ்வுலகில் பலருண்டு. எல்லாம் இறைவன் செயலே என்று இப்பூமியில் இருந்து வருகின்றேன். இறுதிவரை இறைவன் எனக்களித்த பணியை செய்தவாறே தவத்தில் நான் இயங்கிக் கொண்டே தான் இருப்பேன். இறுதி தீர்ப்பளிப்பவள் வாலையே. அவள் ஒருத்தியே நான் விரும்பும் நிலையை அருளும் ஆற்றல் உள்ளவள்.

மெய்யன்பர்களே! இவ்வுலகில் வரும் பல குருநாதர்களும், வள்ளலார் வழியில் வந்த ஞானிகள் சிலரும் தம் சீடர்களுக்கு வாசியோகம் பிராணாயாமம் செய்ய வேண்டிய தேவையில்லை. ஞான சரியை நிலையில் நின்று தியானம் செய். அது ஒன்றே போதும் என போதனைகள் செய்கின்றார்கள். இவர்களை சிவவாக்கியர் தூரம் தூரம் என்று சொல்லுவார்கள் சோம்பர்கள் என்கின்றார். யோகம் என்பது தேவையில்லை என்றால் இன்று உலகமே யோகதினம் என்று கொண்டாடுமா சிந்திப்பீர். சித்தர்கள் சொன்ன வாசியோகமே யோகசக்தியான வாலை என்பதை ஆராய்ந்து அறியுங்கள். இதனை எல்லாம் விளக்கி இந்நூலில் விரிவாக எழுதியுள்ளேன். வாலையின் கருணையை படித்துணருங்கள். அனைத்து ஆன்மிக இரகசிய உண்மைகளும் இந்நூல் ஒன்றிலேயே அடங்கியுள்ளது. வாலையை அறிவதே மெய்ஞானம். இந்த மெய்ஞானத்தை அனைவரும் அடைய விரும்புவதே அடியேன் எண்ணம்.


நான் என் அன்னை ஸ்ரீ மாணிக்க நாச்சியம்மன் கோயிலுக்கு "ஸ்ரீமாணிக்க நாச்சியம்மன் மகிமைகள்" எனும் நூலை எழுதி 1982 ஆம் ஆண்டில் வெளியிட்டேன். அது அப்போதே ரூ 2/ - விலையில் விற்றுத் தீர்ந்து விட்டது. இப்போதும் எத்தனையோ மெய்யன்பர்கள் அந்த நூல் வேண்டும் என்று கேட்பார்கள். ஆதலால் என் உள்ளத்தில் அன்னைக்கு ஒரு நூல் எழுத வேண்டும் என்ற ஆசை இருந்தது. இந்தாண்டு காசியில் இருந்த போது ஐயன் என் உள்புகுந்து திருவாசகம் விளக்கவுரை எழுத ஆணையிட்டான். அதுபோல் திருவாசகம் எழுதிக் கொண்டிருக்கும் போது அன்னை அறிவில் நின்று இந்த வாலை என்னும் நூலை இயற்றச் சொன்னாள். அதனால் இந்நூலையும் எழுதிவந்தேன். வெகுதுரிதமாக வாலை நூல் நிறைவு பெற்று அன்னையின் அருளால் முன்னதாக

வெளிவருகின்றது. இந்நூலும் தமிழ் வாசகர்களிடம் நற்பெயரைப் பெற்று நிலைத்து நிற்க வாலை அன்னையை பிரார்த்தித்து ஆன்மிக நெஞ்சங்கள் அனைத்தும் வாலையின் அருள் அடைய வாழ்த்துகின்றேன்.

இந்நூலில் கொங்கணச்சித்தர் அருளிய வாலைக்கும்மி, கருவூர் சித்தர் அருளிய பூஜாவிதி, அபிராமிபட்டர் அருளிய அபிராமி அந்தாதி பாடல்களுக்கும் விளக்கவுரை எழுதி இணைத்துள்ளேன். நான் கற்றுப் பயின்ற அன்னையின் அருள் பெறும் நல்ல மந்திரங்களையும், ஸ்தோத்திரங்களையும் சொல்லியுள்ளேன். நல்லுயிர்கள் படித்துப் பழகி அன்னையின் அருள் பெற முயலும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். அவரவர் தம் முயற்சியினாலும், பயிற்சியினாலும், உன்மையான அன்பினாலும் அடையவேண்டிய நல்வழிகள் யாவும் இந்நூலில் அடங்கியுள்ளது. இந்நூல் எழுதும் காலத்தில் என்னைத்தேடி வந்து என் எழுத்துப் பணிக்கு உதவவேண்டும் என்று தன் உழைப்பால் சிறுகச்சிறுக பணம் சேர்த்து ரூ. 44100/- கொடுத்து இந்நூல் அச்சிட பங்கெடுத்துக் கொண்ட என் இனிய அன்பர் திரு. S. R. முரளிகிருஷ்ணன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து ஆசீர்வதிக்கின்றேன். இந்நூலிற்கு அட்டைப்படம் அமைத்துத்தந்த மெய்யன்பர் திரு. R. ரமேஷ் சிற்பி அவர்களுக்கும், இந்நூலை முழுமையாக்கி அச்சிட்டுத்தந்த அன்புச்சீடர் V.S.T. ஆப்செட் திரு. S.M. வேதாசலம் அவர்களுக்கும் என் இதயப் பூர்வமான நன்றியைக் கூறி வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

பாட்டுச்சித்தர்.



ஓம்சக்தி நாராயணசாமி
ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட அறக்கட்டளை
பதிவு எண். 15/2018
பாட்டுச்சித்தர் தவக்குடில்
27, தியாகராஜ நகர், சீர்காழி - 609 110
நாகை மாவட்டம். செல்: 9843650639
www.srimanonmanisiddharpeedam.com

பாட்டுச்சித்தர்
ஓம்சக்தி நாராயணசாமி
ஐயா அவர்கள் இயற்றியது

ஆதியே துணை

சீர்மேவும் சீர்காழிநகர் ஊழியக்காரன் தோப்பில்
பார்மேவும் பார்வதியாள் பாம்புடனே வீற்றிருப்பாள்
கார்மேவும் வேம்படி விநாயகரின் தாள் பணிந்து
தேர்மேவும் கண்மணி நாச்சியம்மனுக்கு பாடிடுவோம் பாமாலை.

**1. எங்கெங்கிருந்து எவரெவர் ஏதேது வேண்டிடினும்
அங்கங்கிருந்து அகமகிழ அருளுகின்ற தாய் நீயே
நாட்டம் வைத்து தேடிவந்து நம்பி அழும் பக்தருக்கு
நாளும் துணையிருந்து நல் வாழ்வை தரும் தேவி
புற்றடியில் உறைகின்றாள் புண்யவதி நாச்சியம்மா
கருமாரியாக வந்து காத்தருளும் காளியம்மா
உற்றவளே உமையவளே உன்பாதம் சரணடைந்தோம்
நற்றவத்தின் நாயகியே நான் என்னும் காரணியே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.**

**2. புற்றினிலே பூத்தவளே புவனங்கள் காப்பவளே
பற்றினிலே பாடுகின்றோம் பாவங்கள் தீர்த்திடம்மா
சிவனாட நீயாட சித்தரெல்லாம் பார்த்து நிற்க
கால் தூக்கி ஆடி நின்ற சக்தியெல்லாம் நின்னதன்றோ
தோற்றது போல் நீ நடித்து தோன்றி வந்து தவமிருந்து
காப்பதற்கோ எங்களையும் கருணையினால் பிறந்ததன்றோ
நர்த்தனத்தின் பெருமையினால் இம்மண்ணும் சிறந்ததம்மா
நடராஜ மனோகரியே மாணிக்க மனோன்மணியே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.**

3. வேண்டியதை தந்திடுவாய் வேண்டி நின்று பூசை செய்தால்
காட்சி தந்து ஆண்டு கொள்வாய் காலமெல்லாம் காத்து நிற்பாய்
நித்திரையில் வீற்றிருப்பாய் நேரத்தில் முன் நிற்பாய்
சத்துருவை தள்ளிவைப்பாய் சமயத்தில் வந்திடுவாய்
குழந்தை உரு கொண்டவளே குறைகளையும் தீர்ப்பவளே
உழன்று வரும் பக்தருக்கு உறுதுணையாய் நிற்பவளே
கற்றதுவும் கொஞ்சமம்மா கருணை முகம் காட்டிடம்மா
பெற்றவளே நாச்சியம்மா பிள்ளைகளை காத்திடம்மா
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

4. பெற்றவளே தாயாரே பேச்சியெனும் நாச்சியரே
புற்றினிலே வீற்றிருந்து ஆட்சி செய்யும் மாரியரே
கற்பிப்பாய் கலைகளெல்லாம் காமாட்சி கலைமகளே
உற்சவத்தில் மகிழ்பவளே உற்ற துணை வருபவளே
சக்தியெல்லாம் உன் வடிவே சமயபுரம் சமைந்தவளே
சாதித்து வாழ்பவளே சாட்சியாக இருப்பவளே
சோதித்து வாட்டிடாதே வேடிக்கை பார்த்திடாதே
சாதனையை காட்டியம்மா சக்தியெலாம் திரட்டிடம்மா
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

5. அஞ்சி அஞ்சி வாழுகின்றோம் அவனியெல்லாம் வஞ்சமம்மா
கெஞ்சி கெஞ்சி பாடுகின்றோம் கெட்டதெல்லாம் விலக்கிடம்மா
கொஞ்சி கொஞ்சி பேசியம்மா கொஞ்சம் முகம் காட்டிடம்மா
மஞ்சள் நிற மேனியளே மகிமை பல கொண்டவளே
பஞ்சமெல்லாம் போக்கிடவே பார்வதியே பார்த்திடம்மா
அஞ்சுதலை நீக்கியம்மா ஆறுதலை அளித்திடம்மா
நஞ்சு மனம் கொண்டவரை பிஞ்சு மனம் ஆக்கிடுவாய்
வஞ்சமிலா நெஞ்சு தந்து வாழ வைத்து பார்த்திருப்பாய்
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

6. சின்னஞ்சிறு பெண்ணுருவாய் சிங்கமீதில் பவனி வந்தாய்
தன்னந்தனி தவவடிவாய் தாங்கி நின்று தயை புரிந்தாய்
எங்கள்குல தேவியென்றே எந்நாளும் போற்றுகின்றோம்
மங்காத செல்வம் தந்து மக்களையும் கூட்டி வைத்தாய்
ஒன்றுபடச் செய்திடுவாய் ஒற்றுமையாய் வாழ வைப்பாய்
விட்டகுறை உள்ளவர்க்கு வீடு சென்று காட்சி தந்தாய்
சித்து பல செய்பவளே சித்தர்களின் தலைவி நீயே
நிலையாக அமர்ந்தவளே நித்தியமாய் இருப்பவளே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

7. மந்திரமாய் ஆனவளே மகிமை பல கொண்டவளே
தந்திரமாய் இருப்பவளே தரித்திரத்தை துடைப்பவளே
எந்திரத்தில் நீயமர்ந்தாய் ஏழுலகும் ஆட்சி செய்தாய்
இன்பமெல்லாம் தந்திடுவாய் ஈடேற்றி வைத்திடுவாய்
அரு உருவாய் ஆனவளே ஆயிரங்கண் கொண்டவளே
கருவறையில் நீயமர்ந்து காப்பது உன் மைந்தர்களை
உறுதுணையாய் வந்திடம்மா ஊழ்வினையைப் போக்கிடம்மா
உன்னையன்றி வேறுகதி உண்மையிலே இல்லையம்மா
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

8. கண்ணாக உள்ளவளே கண்ணபுரம் அமர்ந்தவளே
பெண்ணாக தோன்றிவந்து பேரரசி வீற்றிருந்தாள்
உண்ணாமல் உறங்காமல் உறவாடி நின்றவளே
எண்ணாமல் இருந்தாலும் இதயத்தில் துடிப்பவளே
மண்ணாகி காற்றாகி மழையாகி வருபவளே
விண்ணாகி நெருப்பாகி விளையாடி நின்றவளே
அறிவாகி நினைவாகி அகிலமெங்கும் இருப்பவளே
உள்ளுணர்வில் நின்று எனை உன் பாதம் சேர்ப்பவளே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

9. தீயாகி நின்ற தாயே தீமைகளை கொன்ற தாயே
சேயாக எனை நீயும் சேர்த்தணைத்த அன்புத் தாயே
ஓயாத துன்பமம்மா உலகத்தில் உள்ளதம்மா
மாயாத வினைகளையும் மாற்றி வைக்கும் மாரியம்மா
மூலாதாரந்தனிலே மூண்டெழுந்த ஆதிசக்தி
ஆறாதாரந்தனிலும் அமர்ந்திருப்பாள் ஆத்தாளே
காரணமாய் வந்தவளே காலத்தைப் படைத்தவளே
பூரணமாய் உள்ளவளே பூலோகம் காப்பவளே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

10. ஊத்தைச் சடலம் அம்மா உப்பிருந்த பாண்டம் அம்மா
மாற்றிப் பிறந்திடவும் மருந்தெனக்கு தாரும் அம்மா
சாகாக் காலறியேன் வேகாத் தலையறியேன்
போகாப் புனலறியேன் தோத்தரிக்கும் முறையறியேன்
சித்தமிரங்கி இங்கு சீக்கிரமாய் வந்திடம்மா
அஞ்சாதே என்று சொல்லி ஆதரித்து காத்திடம்மா
சத்தியமே மெய்ப்பொருளே சகல ஞானத் தத்துவமே
அன்பினாலே ஆட்சி செய்யும் அம்பிகை உன் அடைக்கலமே
நாகத்தின் உருவினிலே நடமாடும் நாச்சியம்மா
நவக்கிரஹ நாயகியே நாகமுத்து மாரியம்மா.

பதிகம் பத்தும் படிப்போரின் குறைகளையும் தீர்த்து வைத்து பதினாறு பேறுகளும் பாக்கியமும் தான் கொடுத்து பாலகனாம் உன் மைந்தன் பாட்டுசித்தன் படைத்ததைப் பார்வதியே நீ ஏற்று பாரினையே காத்திடம்மா.

சித்தர்கள் போற்றும் வாலை

சித்தர்கள் யாவரும் போற்றிடும் வாலை என்றால் என்ன? ஏன் எல்லாம் படைத்த அத்தாய்க்கு பத்துவயது சின்னஞ்சிறு பெண்ணாக வடிவம் கொடுத்து வணங்கினார்கள்? வேத வழியில் சொல்லும் பாலாவும் சித்தர் வழியில் சொல்லும் வாலையும் ஒன்றா? அவள் கோயில் எங்கே உள்ளது, அங்கு சென்று எவ்வாறு வழிபடுவது என்று சிந்திக்கும் நல்லுயிர்களே வாலையை அறியும். பூர்வ ஜென்ம புண்ணியம் உடையோரே வாலையை உணர்வார். ஒன்றாய் அரும்பி பலவாய் விரிந்து இவ்வுலகமெங்கும் நின்றாள், பின் அனைத்தையும் நீங்கி நிற்பாள். இவளே கடவுளர் யாவருக்கும் மேலான இறைவியும் ஆவாள் என்பார் அபிராமி பட்டர். அவ்வாறு ஒன்றான ஆதி சக்தியே வாலை ஆவாள். இவளே அனைத்திலும் மூலசக்தியாக நின்று அருள் புரிபவள். அவளையே வேதங்கள் அது, பிரமம், பாலா என சொல்லி வழிபடச் சொல்கின்றது. சித்தர்கள் சிவம், சிவை, வாலை எனச் சொல்லி பூசிக்க வழிகாட்டுகின்றார்கள். பாலா, வாலை எனச்சொல்வது சோதி ஒளியாக விளங்கும் ஆதியும் அந்தமும் இல்லாத அன்னை பராசக்தியையே.

அவள் அருள் இன்றி அணுவும் அசையாது. அனைத்திலும் அனைத்திற்கும் காரண காரியமாய் இருப்பவள் அன்னை பராசக்தியே. அவளைப் போற்றி வணங்காத தெய்வங்களும் இல்லை, வானுலகத் தேவர்களும் இல்லை. இப்பூமியில் வந்து இறவாநிலை கண்டு சாதித்த சித்தர்களும், நான் பிரமம் என்றுணர்ந்து தத்வமசி என்னும் தானே அதுவாகி நின்ற ரிஷிகளும், முத்திநிலை கண்ட முனிவர்களும் அன்னையை வணங்கி அவளருள் பெற்றே மகத்தான பேறுகளை பெற்றார்கள். கல்வி செல்வம் வீரம் என்பதை அடையவேண்டி அனைத்து பக்தர்களும் அன்னையை வணங்குவதால்தான் வளமான வாழ்வை அடைகின்றார்கள். அண்ட சராசரங்கள் அனைத்தையும் படைத்த அம்மாபெரும் சக்தி எல்லா மனிதரிலும் எள்ளுக்குள் எண்ணெய் போல் வாலைப் பெண்ணாக வீற்றிருக்கின்றாள்.

அதை அறியாது போனாலும் அவளை வணங்காத மனிதர்களும் இப்பூமியில் எவரும் இல்லை. அனைத்துக் கலைகளும் அவளிடமிருந்தே தோன்றுவதால் அவளே ஸ்ரீ வித்யை என்னும் நாயகி ஆவாள். அவள் துணையின்றி எவராலும் இறைவனை அடைய முடியாது. அவளை முழுமையாக அறிந்தவர் எவரும் கிடையாது. ஆதலால் சிவனே தன் உடம்பில் சரிபாதியை சக்திக்கு கொடுத்து உமையொருபாகனாய் இருக்கின்றான்.

வேதங்களும் சாஸ்திரங்களும் அவள் புகழையே வெகுவாகப் போற்றி போதிப்பதால் வேத நாயகியாக விளங்குகின்றாள். வேதாந்தமும் சித்தாந்தமும் முடிவாகச் சொல்வது சோதி சொரூபிணியான அப்பராசக்தியின் திருவடி சரண் புகுவதையே. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நல்வழிகளுக்கு தலைவியாக விளங்குபவள் அன்னையே. நாதாந்த நாயகியான அவள் நாமப் பிரியையாக இருந்து அதனைக் கேட்டு மகிழ்ந்து அருள் புரிகின்றாள். அவள் புகழையே பாடி அவள் நாமங்களையே ஓதி தொண்டு செய்யும் தன் பக்தர்களுக்கு அவர்கள் வேண்டிய பலன்களை கொடுத்து அருள்பவள் அன்னையே. அவள் மந்திரங்களை பல்லாயிரக்கணக்கில் உபாசனை செய்து பூசைகள் போடும் மந்திரவாதிகள் அதற்கு கூலியாக தான் நினைத்த காரிய சித்திகளை அன்னையிடமிருந்தே அடைகின்றனர். இப்படி நல்லது கெட்டது அனைத்திற்கும் நாயகியாய் நிற்பவளே வாலை பராசக்தி. வேதம் அவளை சிற்சக்தி என்னும் பாலா என்கின்றது. சித்தர்கள் அவளை சின்னஞ்சிறுபெண்ணான வாலை என்கின்றனர். வேதப் பொருளுணர்ந்த ஞானிகள் அவளை பாலா என்றும் திரிபுரசுந்திரி என்றும் ஆதிபராபரை என்றும் சொல்லிப் போற்றி வணங்குவர். சித்தர்கள் அவளை வாலை என்றும், கன்னி என்றும், மனோன் மணி என்றும் கண்டு வணங்கி வரம் பெற்றனர். அவள் அருள் இன்றி இறப்பை வெல்லவோ இறவாநிலை அடையவோ இயலாது.

யோக சாதனைகளில் வாலையே வாசியாகி யோகசக்தியாக விளங்குகின்றாள். தியான சாதனைகளில் ஞான சக்தியாக ஞானத்தில் ஞானமாகி வாலை ஞான சொரூபினியாக விளங்குகின்றாள். ஆதலால் அனைத்து சித்தர்களும் வாலை

என்னும் பராசக்தியையே மெய்குருவாக கொண்டு அவள் திருவடியை பற்றி நின்றே யோகஞான சாதனைகளில் தவம் புரிந்து அன்னையின் அருளை அடைந்தார்கள். யாராலும் அளவிட முடியாத அம்மாபெரும் சக்தி தன்னுள் பத்துவயதே உடைய சின்னஞ்சிறு பெண்ணாகி நிற்பதை அறிந்து அதுவே அவள் திருவடி என்பதை உணர்ந்து பற்றிக் கொண்டு வாலை அருள் பெற்றார்கள். எல்லோர்க்கும் வாலை ஒருவளே உண்மையான சற்குரு எனவும் பாடி உணர்த்தினார்கள். வாலை என்பது தத்துவங்கள் யாவும் கடந்த தத்துவநாயகியான பரம்பொருள்தத்துவம் சக்தியும் சிவமும் ஒன்றான சிவமே வாலை. சிவன் சக்தி சிவம் என்ற மூன்றும் ஒன்றாகி நின்றவளே வாலை. அவள் திருவடிப்பேறு அடைவதுவே பிறவிக் கடலைக் கடக்கும் வழியாகும்.

வாலை நம்முள் ஆதியாக நின்றுள்ளாள். அவளிடமிருந்தே உயிரும் உடலும் நமக்கு வந்தது. ஆதலால் நம்முள் ஆதியாகவும் சோதியாகவும் வாசியாகவும் வாலை முப்பொருள் உண்மையாய் அமைந்து நிற்கின்றாள். வாலை நமக்குள் வெளி, ஒலி, ஒளி என்று ஓங்காரவடிவாக விளங்குகின்றாள். சத், சித், ஆனந்தம் என்ற மெய்ப்பொருளாய் நின்ற வாலைத்தாயை நம் அறிவு, உணர்வு, மனம் என்பதை ஆராய்ந்து தன்னை அறியும் அறிவே மெய் ஞானம். இதை நமக்கு அறிவுறுத்தவே சித்தர்கள் நமக்கு சாகாக்கால், வேகாத்தலை, போகாப்புனல் என்று போதித்தார்கள். கால் என்பது நம்முள் வாசியாக நிற்கும் காற்று. அது நம் ஆன்மா. ஆன்மா என்றும் அழிவதில்லை என்பதால் அது சாகாக்கால். அனைத்திற்கும் தலையானது தீ. அத்தீ எரிந்து கொண்டே இருந்தாலும் அதனால் வெந்து உடம்பு கெடுவதில்லை. அத்தீ அணைந்து போனால் உடம்பு சுடுகாட்டுத்தீயால் வெந்து அழிந்துபோகும். அது ஆன்மாவின் உள்நின்ற தீயான சிவன். புனல் என்பது நீர். தீயான சிவனையும் காற்றான ஆன்மாவையும் தாங்கி நிற்கும் வீடே நீர். அது மேலிருந்து கீழே விழுந்து போவதே இல்லை. அவ்வாறு போகாப்புனலாய் நின்றவளே சக்தி. அவளையே சித்தர்கள் பத்துவயதுடைய வாலைப் பெண் என்கின்றனர். மேலும் வெளி எனும் மனத்தின் உள்வெளியாகவும், சோதியுட் சோதியாகவும்

நிற்பவளே வாலை. அவளை தன்னை அறியும் அறிவால் அறிந்து காண வேண்டும். கண்டபின் அவள் திருவடியே சிவகதி என்று பற்றிக்கொண்டு அவள் திருநாம மந்திரங்களை சொல்லி பூசைகள் செய்ய வேண்டும். அதன் பின்னரே யோக ஞான சாதனைகள் செய்து தவம் புரியவேண்டும். இதுவே அன்னையின் அருளை அடையும் வழி.

தன்னை அறிந்த தத்துவ ஞானிகளுக்கு முத்தியையும் சித்தியையும் அருள்பவள் வாலை அன்னையே ஆவாள். அன்னையின் துணையின்றி எல்லாம் அறிந்தோம் என்று ஏமாற்றித்திரியும் எவராலும் இறையருளை அடையமுடியாது. நல்லவர்க்கும் தீயவர்க்கும் பொதுவாக நடுவில் நின்று அழகே வடிவாய் விளங்கும் நடமாடும் வல்லி அவள். இவளே நாம் செய்யும் பூசைதனில் மகிழ்ந்து அவரவர் வேண்டிய வரங்களை அருள்பவள். இவளே யோக சமாதியை தந்து அமுர்தம் வழங்கும் மனோன்மணித்தாய் ஆவாள்.இவளே மெய்ஞானமாகி இறைவனுடன் இணைத்து வைத்து இறவாநிலை தருபவள். அவள் அருள் இன்றி தவமும் சித்தியாகாது, சிவமும் கூடிடாது சிவனுக்கும் சக்திக்கும் கண்களாகி மூல சக்தியாய் நிற்பவள்தான் வாலை. அவளை அறியவும் அடையவும் சித்தர்கள் சொன்ன மணி, மந்திரம், ஔஷதம் என்பதின் உண்மைகளை உணர்ந்து யோகஞான சாதனைகளை செய்ய வேண்டும். முப்பொருளும் ஒன்றதே என்றார் வெண்ணிலாவே, அந்த மூன்றும் ஒன்றாய் முடிந்ததென்ன வெண்ணிலாவே என்பார் வள்ளலார். இவ்வாறு நம்மில் மணி மந்திரம் மருந்து என்னும் முப்பொருளும் ஒன்றான மெய்ப்பொருளே வாலை என்பதை அறிந்து அவள் அருளை அடைய அவள் திருவடி ஒன்றையே பற்றி தவம் செய்வதே அன்னையின் உயர்ந்த வழிபாடாகும்.

அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி யூர்புகு மாறறி யேனே.

-திருமந்திரம்-

மெய்யன்பர்களின்உள்ளமேவாலைகுடியிருக்கும்கோயிலாகும் எல்லாம் படைத்து எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல அப்பராசக்தி எல்லா உயிரிலும் ஒளிந்திருந்தாலும் பூர்வ ஜென்ம புண்ணியம் நிறைந்த உயிர்களைத் தவிர வேறு எந்த உயிராலும் வாலையை அறிந்துணர முடியாது. ஆயிரமாயிரம் என்று கோடா கோடி நாமங்கள் அன்னைக்கு இருந்தாலும் இந்த வாலை என்ற பெயரை விட்டகுறை உள்ள உயிர்களே அறியும். அந்த நல்லுயிர்களே வாலை தன்னுள் நிற்பதை உணர்ந்து அவள் அருளை அடையும் வழியை நாடி வாலையைப் பூசிப்பார்கள். அவர்களின் உண்மை அன்பை அறிந்து அவ்வுத்தமர்களின் உள்ளத்தில் புகுந்து அதையே தன் கோயிலாகக் கொண்டு குடியிருப்பாள் வாலை. உத்தமமான மெய் அன்பர்களே வாலையை தனக்குள் அறிந்து தன் உள்ளத்திலேயே வைத்து பூசிப்பார்கள்.

ஓம் என்னும் ஓங்காரம்

ஓம் என்பதே அன்னையின் நாதவடிவம். ஓம் என்பதே சக்தியின் மந்திரம். ஓம் என்பதே அனைத்திற்கும் தலையாய மந்திரம். இந்த வாலையின் மந்திரத்தின் அட்சரங்கள் எனும் எழுத்துக்கள் மூன்றாகும். இந்த அட்சரங்களின் சப்தமே நாதமாக விரிந்து ஓங்காரமானது. இந்த ஓம் எனும் ஓங்காரத்தை விரித்துப் பார்த்தால் அது ஆகாயத்தைவிட பெரிதாக விரிந்துகொண்டே போகும். அதையே நுணுக்கி ஆராய்ந்து பார்த்தால் அணுவுக்குள் அணுவாகி சுருங்கிக் கொண்டே இருக்கும். ஓம் என்னும் ஓங்காரத்தினுள் அகரம், உகரம், மகரம் என்ற அ, உ, ம் என்னும் எழுத்துக்கள் அடங்கியுள்ளது. ஓங்காரத்தில் உள்ள இந்த மூன்று அட்சரங்களே நாதம் என்ற சப்தமாகி அணுமுதல் அண்டம் வரை அனைத்திலும் இயங்கி இயக்கிக் கொண்டுள்ளது. எங்கும் எதிலும் எதுவும் இயங்குவதற்கு அடிப்படைக் காரணம் நாதம் எனும் சப்தம். சத்தமின்றி அணுவும் இயங்காது அகண்டமும் இயங்காது. வேதங்களின் மூலமும் சித்தாந்தங்களின் சாரமும் இந்த ஓம் என்ற ஓங்காரமே. ஓங்காரத்தில் அகரமாக சிவனும் உகரமாக சக்தியும் சிகரமாக சிவமும் அமைந்தே உள்ளது. இதில் ஆதியும் அந்தமும் ஆகி விளங்குபவளே வாலை எனும் ஆதிசக்தி. அனாதியாகி

நடுவாய் நிற்பது சிவம். ஓம் என்று சக்தியை நினைந்து வணங்குவது தானாகவே சிவனைச் சேரும். ஓம் என்றே சிவனை துதிப்பது சக்தியை சேரும். ஆகையினால் சக்தியும் சிவனும் ஒன்றான சிவமான வாலையை தனியாகப் பிரித்து பார்க்கக் கூடாது என்று திருமூலர் உணர்த்தி உபதேசிப்பார்.

ஆதியாய் நின்றது வெளி. அவ்வெளியில் விந்து என நின்றது ஒளி. விந்தில் இருந்து வருவது நாதம் என்ற ஒலி. இவ்வாறு வெளி, ஒளி, ஒலி ஆகிய மூன்றும் சேர்ந்த ஓங்காரமே வாலை. அந்த ஓங்காரத்தத்துவத்தோடே உடல், உள்ளம், உயிர் என்ற மூன்றிலும் பொருந்தி நிற்கின்றாள். வாலையே அகாரமான அறிவாகவும், உகாரமான உணர்வாகவும், மகாரமான மனம் ஆகவும் நம் ஆன்மாவின் உள்நின்று ஆட்சி செய்கின்றாள். அவள் அருள் வடிவே ஓம் என்னும் ஓங்காரமாகும். அதனை தன்னை அறியும் அறிவினால் அறிந்து ஓங்காரத்தை துணையாகக் கொண்டு உயிர்க்காற்றை வாசியில் நாதமாக்கி விந்து என்னும் சோதி ஒளியில் கூடி இறவாநிலை கண்டவர் சித்தர்கள். ஆதலின் அனைத்து சித்தர்களும் ஓங்காரத்தின் உண்மையை உணர்த்தி உபதேசித்து வாலையின் அருளை அடையவே வழி காட்டுகின்றனர்.

ஓங்காரத்தையும் அதனுள் நின்ற ஓரெழுத்தையும் அறிந்தவனே சித்தன் என்று பேர் பெறுவான். ஓம் எனும் மந்திரத்தின் உட்பொருளாய் நின்றிருப்பவளே வாலை. எல்லாம் வல்ல தெய்வமாய் எங்கும் நிறைந்து நின்ற அம்மாபெரும் சக்தியை தன்னுள்ளே வாலையைக் கண்டு அவள் திருவடி சேர்ந்து உய்வடையும்வழியாகஓங்காரத்தைஉணர்த்தியேசொல்கின்றனர். அவளை பத்து வயதே உடைய பாப்பாவாக வாலை என்று சொல்லி நமக்கு அடையாளம் காட்டுகின்றனர். அப்பராசக்தியை வாலை, கன்னி, மனோன்மணி என்று எடுத்துரைத்து ஓம் எனும் ஓங்காரத்தினால் அவள் திருவடி ஒன்றையே பற்றி தவம் புரிந்து மெய்நிலை அடைந்து வாழ்ந்து வரும் சித்தர்கள் அதை நமக்கு போதித்தார்கள். அவளையே அனைவர்க்கும் குரு என்றும் மெய்குரு என்றும் சற்குரு எனவும் காட்டி அவள் திருவடியைப் பற்றிக்கொள் என்கின்றனர். அதையே திருமூலர் பதி, பசு, பாசம்

என விவரிக்கின்றார். இவ்வாறு முப்பொருள் தத்துவமாய் நின்ற ஓங்காரத்தை அறிந்து வாலையை தனக்குள் உணர்ந்து தவ முயற்சியில் ஈடுபடுங்கள்.

ஓரெழுத்து

"ஆஹிஹீ என்றுரைத்த அட்சரத்தில் ஆனந்தம்
யோகி யோகி என்பர் கோடி உற்றறிந்து கண்டிலார்"
- சிவவாக்கியர்

ஓங்காரத்தையும் அதனுள் ஒளிந்துநின்ற ஊமை எழுத்தையும் அறிந்தவனே சித்தனாவான். "ஓரெழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே அது ஊமை எழுத்தாய் நின்ற தென்ன வெண்ணிலாவே" என்று பாடுவார் வள்ளலார், "ஏகமெனும் ஓரெழுத்தின்பயனைப்பார்த்தேஎடுத்துரைக்கஇவ்வுலகில்எவரும் இல்லை" என வருந்துகிறார் அகத்தியர். "ஓம் எனும் அட்சரந்தானு முண்டு அதற்குள் ஊமை எழுத்து இருக்குதடி" எனக்கும்மிப் பாடுவார் கொங்கணச்சித்தர். ஓம் என்பதை அ உ ம் என்று மூன்று எழுத்தாய் பிரித்து சொல்வார்கள். இதில் அ உ என்பது சிவனும் சக்தியுமாய் நிலையாக நிற்பது. ம் என்பது இருளும் ஒளியும் சேர்ந்தே இருப்பது. அதில் 'ம' என்ற இருளான மாயையை நீக்கி விட்டால் எஞ்சி நிற்கும் வட்டப்புள்ளி (.) தான் ஊமை எழுத்து. அந்த ஊமை எழுத்துக்குள் சோதியாக விளங்குபவளே வாலை என்ற சிவம் ஆகும். இதனைத்தான் சிகாரம் என்றும், ஓரெழுத்து என்றும், பேசாமந்திரம், மௌனம் என்றும் கூறி சித்தர்கள் தங்கள் பாட்டினில் விளக்குகின்றனர்.

இந்த ஓரெழுத்தை தன் தேகத்தில் கண்டு அதையே வாலை என உணர்ந்து அந்த ஓரெழுத்தைக் கொண்டே வாலை பூசை செய்பவரே சித்தராவார். அன்னையைப் பூசிக்க ஆயிரமாயிரம் மந்திரங்கள் இருந்தாலும் இந்த ஊமை எழுத்தே அவளது மூல மந்திரம். இதுவே வேதங்கள் சொன்ன பிரமமும், சித்தர்கள் சொன்ன மௌன மந்திரமும் ஆகும். இதனை அறிந்து பயன் படுத்துபவன் அனைத்து உண்மைகளையும் உணர்ந்து ஞானம் அடைவான்.

வாலை பூசை

இந்த ஓம் எனும் ஓங்காரத்தை மந்திர அட்சரமாக உச்சரிக்க அம், உம், இம் என்றும், வாசிக்கலையில் இயக்க அ உ இ என்றும், ஞானத்தில் இம் என்று மௌன நிலையில் இருப்பதும் வாலையின் அருளை பெறும் வழியாகும். பேசா மந்திரமான அன்னையின் மூ லமந்திரத்தின் ஒலியாக நின்றிருப்பது 'இ' என்ற சப்தமே ஆகும். இ என்பதே ஓரெழுத்தான சிகாரம் ஆகும். அந்த ஒலியைக் கொண்டே சோதியாக விளங்கும் வாலையை வணங்கிப் பூசை செய்ய இம் என்று கண்டத்தில் வைத்து ஓதி மூலாதாரத்தில் நின்ற குண்டலினி சக்தியுடன் சேர்க்க வேண்டும். பின் இயல்பாகவே மூச்சை மேலேற்றி வாலையின் திருவடியில் கொண்டுவந்து இம் மந்திரத்தை தொடர்ந்து ஓதியவாறே நீண்டு ஒலித்தபடி மூலாதாரத்தில் சேர்க்க வேண்டும். இதுபோல் இடைவிடாது இருபத்தோருமுறை தொடர்ந்து செய்வதே வாலை பூசை. இதனை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக செய்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு தெய்வபலம் நம்முள் கூடிக் கொண்டே இருக்கும். இம்மந்திரமே மூலாதாரத்தில் தூங்கிக்கொண்டே இருக்கும் குண்டலினி சக்தியை எழுப்பி உடம்பின் பலத்தை அதிகரிக்கும். இம்மந்திரமே மனதை அசையவிடாது அன்னையின் திருவடியில் நிலை நிறுத்தும்.

இதுவே சித்தர்கள் நமக்கு சொன்ன வாலை பூசையாகும், இதுவே அன்னையை வழிபடும் பூசைகள் யாவிலும் உயர்ந்த பூசையாகும். இந்த பூசை செய்வதற்கு அறிவு, உணர்வு, மனம் என்ற மூன்றைத்தவிர வேறு எந்த வித சடங்கு சம்பிராதயங்களும் இல்லை. மனமும் உணர்வும் அறிவில் ஒடுங்கி ஒன்றாவதே வாலை பூசை. இந்த வாலை பூசையை நம்வாழ்நாள் இறுதிவரை கைவிடாது செய்ய வேண்டும். வாலை அன்னை இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்று பிரியும் போது ஒவ்வொரு சக்திக்கும் ஏழு சப்த கன்னிகள் தோன்றி செயலாற்றுகின்றனர். இம் மந்திரம் சப்தஸ்வரங்களான நாதமாகி அந்த இருபத்தோரு கன்னிகளையும் அடைய வேண்டும் என்பதால் இம் மந்திரத்தை இருபத்தொரு முறைக்கு குறையாமல் கட்டாயமாக உச்சரித்து வாலை பூசை

செய்யவேண்டும் என்பார்கள்.

தன்னை அறிந்தால் தனக்குள் நின்ற வாலையை அறியலாம். பின் அவள் திருவடி தாமரைகளில் மனம் பற்றி அதைவிட்டு விலகாது அசையாது மனம் ஒடுங்குவதே வாலை பூசை. அதற்கு தனித்த இடத்தில் ஆசனத்தில் அமர்ந்து முதுகுத்தண்டு வளையாமல் தலை கழுத்து சாயாமல் நிமிர்ந்திருந்து கண்டத்தில் இம் என்று சொல்லி இப்பூசையை செய்ய வேண்டும். இதை வள்ளலார் நல்ல மருந்து இம் மருந்து என்று சொல்வார். மாணிக்க வாசகர் இம்மையே தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் என்று உணரச் செய்வார். வாலை அன்னையே இந்த உண்மையை எழுத பணித்தமையால் இந்த இம் மந்திரத்தை இந்நூலில் விளக்கிச் சொல்லியுள்ளேன். இதை நல்ல உயிர்களே அறிந்து பயன் பெறும். இந்த உண்மையை அவரவர் அனுபவத்தாலும் அறிந்து கொள்ள முடியும். கனமான பொருளைத் தூக்கும் போது இம்மென்று தன்னை அறியாமலேயே சொல்லும் போது அது இயல்பாகவே இலகுவாகத் தூக்கமுடியும். இந்த எளிய முறையை எவரும் அறிந்து உலகினர்க்கு சொல்வதில்லையே என வருந்துவார் அகத்தியர். ஆதலால் தன்னை அறியும் அறிவை அறிந்து அவ்வறிவினால் செய்யும் வாலை பூசையே ஞான பூசை என்பதை உணர்ந்து செய்யுங்கள். இதுவே பிறிவியில் புண்ணியத்தை சேர்த்து நற்கதியைக் கொடுக்கும். இதனை தொடர்ந்து செய்பவர்க்கு கனவிலும் நனவிலும் வாலையின் தரிசனம் கிடைக்கும். நினைத்த காரியங்கள் யாவும் நடக்கும். யோகமும் ஞானமும் தானாகவே கூடும். இவ்வாறு ஓங்காரமாகவும். ஓரெழுத்தாகவும் நின்ற வாலை அன்னையை அறிந்து அவளை அன்பால் நிறைந்து வாலை பூசையை செய்து உய்வடைவோம்.

மணி மந்திர ஔஷதம்

"தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே.
ஓர் தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே"

- என்று வள்ளலாரும்

"தன்னை அறியும் அறிவே மெய்யறிவு
பின்னை அறிவது எல்லாம் பேயறிவு"

- என்று திருமூலரும்

அறிவிக்கும் அறிவை அறிந்து கொண்டால் வேதமும் சன்மார்க்கமும் கூறும் மணி, மந்திரம், மருந்து என விளங்குவது வாலையே என்பதை அறியலாம். நமது உடலில் ஆன்மா நின்றிருக்கும் அழியாத உடம்புதான் மணி. அது இவ்வுடம்பில் மணியாக நின்றிருப்பதால் அதனை மெய்ப்பொருள் என்று கூறி மணி என்றார்கள். இப்படி மெய்ப்பொருளாக நின்றிருப்பவள் வாலை. மந்திரம் என்பது எல்லா மந்திரங்களுக்கும் மூலமாய் நின்றிருக்கும் ஓரெழுத்து. அதனை ஊமை எழுத்து, பேசாத மந்திரம், மௌன அட்சரம் என்பார்கள். அது ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம் என்று உணர்த்துவார் திருமூலர். இப்படி மந்திர உருவாய் உள்ளவளும் வாலையே. மருந்து அல்லது ஔஷதமாக இருப்பது வாசி. அதனை ஓங்காரத்தில் உள்ள அகர உகரத்தால் இயக்கி ஓரெழுத்து நாதமாக்கி மெய்ப்பொருளில் நின்ற சோதி ஒளியில் சேரும் தவத்தால் வாலை மனோன்மணித்தாயாகி அமுர்தம் என்ற சாகா மருந்தை அருள்கின்றாள். அதனால் மருந்தாக இருப்பவளும் வாலைதான். இவ்வாறு மணி மந்திர மருந்தாக இருக்கும் வாலையை அறிவதே அறிவை அறியும் மெய்ஞானம்.

மணி

நமது உடலில் அழியாத்தன்மையுடன் விளங்கும் மெய்ப்பொருளே மணி என்பதாகும். அதனை யாராலும் தொடவும் முடியாது, அழிக்கவும் முடியாது. அம்மணி இன்றி எதையும் காணவும் முடியாது. அது ஆகாயவெளியினில் நீராக நின்றுள்ளது. அதனுள்ளேதான் காற்றாக ஆன்மாவும், தீயாக ஒளியும் அமைந்துள்ளது. அதனால் சித்தர்கள் சாகாக்கால் என்று உயிர் காற்றையும், வேகாத்தலை என்று சோதி ஒளியையும், போகாப்புனல் என்று இவற்றைத் தாங்கி நின்ற மணியான நீரையும் நமக்கு உபதேசித்தார்கள். இப்படி அனைத்துமாகவும்

அனைத்திற்கும் அப்பாலாகவும் விளங்கும் அப்பராசக்தி இவ்வுடம்பில் பனித்துளி போல் நீராகி மணியாக நின்றுள்ளாள். எவராலும் எதனாலும் அறிய இயலாத அவ்வாலை அணுவுள் அணுவாய் இருந்து ஆட்சி செய்கின்றாள். ஓயாத கடல் அலைகள் போல் தொடர்ந்து கொண்டே இருக்கும் பிறப்பு இறப்பு எனும் பிறவித்துன்பத்தை ஒழிக்க வேண்டுமென்றால் மெய்ப்பொருளை வாலை அன்னையை வழிபட்டு வணங்க வேண்டும். வாலையைப் பூசிக்க சித்தரானார், ஆத்தாளை பூசித்தோன் அவனே சித்தன் என்று சித்தர்கள் சொல்வதை அறிந்து வாலையை பணிந்து வணங்குங்கள். வாலையின் அருள் பெற்று சித்தராக மாறுங்கள்.

மந்திரம்

“ஓரெழுத்தில் ஐந்துண்டு என்பார் வெண்ணிலாவே-அது
ஊமை எழுத்தாய் ஆவது என்ன வெண்ணிலாவே”

- என்று பாடுகிறார் வள்ளற்பெருமான்.

இவ்வாறு இவ்வுடலில் ஊமை எழுத்தாய் நின்றிருப்பவளே வாலை. அவள் அருளை அடைவதற்கு வேதாந்தமும் சித்தாந்தமும்,ஞானிகளும் சித்தர்களும் காயத்ரி மந்திர உபாசனையைத்தான் சிறந்த மந்திரமாக சொல்லி சந்தியாவந்தன காலங்களில் தவறாமல் செய்யச் சொல்கின்றனர்.

காயத்ரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸ்வஹ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
த்யோயோ ந ப்ரசோதயாத்!

இதுவே விசுவாமித்ர முனிவர் தன் உடலையே ஐந்து திரியாக எரித்து தவம்செய்து அன்னையின் அருள் பெற்ற காயத்ரி மந்திரம். “எது எல்லா ஒளிச்சுடர்களுக்கும் ஒளி கொடுக்கும் பேரறிவோ அந்த மூலமான சோதி ஒளியைத் தியானித்து வணக்கம் செய்வோம்” என்பதே காயத்ரி மந்திரத்தின் பொருளாகும்

ஸ்ரீ கிருஷ்ணபகவான் நான் மந்திரங்களில் காயத்ரியாக இருக்கின்றேன் என்கிறார். இந்த மந்திரத்தை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளில் இருப்பவர்களும் ஓதி பயன் பெறலாம். இந்த மந்திரத்தை தினசரி அப்பியாசம் செய்பவர் தம் வாழ்வில் எல்லா நலன்களையும் அடைவர். காயத்ரி மந்திரம் உச்சரித்து யாகம் செய்பவர்கள் எண்ணிய காரியங்கள் நிறைவேறும். இந்த மந்திரத்தை தொடங்கி முடிக்கும் வரை மூச்சு வெளியேறாமல் உபாசிப்பதே யோகமாக மாறும். இந்த மந்திரத்தை மனதால் உச்சரித்து மனதிலேயே நிறுத்துவதே தியானம் ஆகும். இதை மனதால் உச்சரிப்பதை விட வாசியினால் சொல்லி அவள் திருவடியில் சேர்வதுவே அன்னைக்கு செய்யும் ஆத்மநிவேதனம் ஆகும். இதுவே உடலையும் உயிரையும் கவசம் போல் சூழ்ந்து நின்று பாதுகாத்து வலுப்படுத்தும். இந்த மந்திரத்தை உச்சரிக்கும் போதில் அது உடலில் உள்ள ஆறு ஆதார சக்கரங்களிலும் சேர்ந்து அங்குள்ள தெய்வசக்திகளைத் தூண்டி நலன்களை கொடுக்கும். உடல் உயிர் உள்ளம் என்ற மூன்றையும் ஒன்றாக்கி அன்னையின் திருவடியில் சேரும் இம் மகா மந்திரத்தை யோக ஞான சாதகர்களும் வாசியினால் ஓதி சிவம் என்ற மங்களமான சோதியினில் கலந்து தவம் புரிவார்கள். அன்னை பராசக்தி நம் காயம் என்ற உடம்பில் திரியாக ஒளி வீசித் திகழ்பவள். அவளே வாலை என்பதை உணர்ந்து இக்காயத்திரி மந்திரத்தால் செபமும் தவமும் செய்து உண்மை ஞானத்தைப் பெற்று உய்வடைவோம். அன்னையை காயத்ரி மந்திரத்தால் போற்றி வணங்கி உங்கள் பிறவியை உன்னதமான புண்ணியப் பிறவியாக மாற்றுங்கள். காயத்ரி மந்திரத்தை இரவு பகல் என எந்த நேரத்திலும் உளத்தூய்மையுடன் உச்சரித்து உருவேற்றி அன்னையின் திருவடியே பற்றி அவள் அருளைப் பெறுவோம்.

பாலா மந்திரம்

வேதங்கள் வாலையை சின்னஞ்சிறு பெண்ணாகிய சிற்சக்தி என்று கூறி அவளை காண்பது அரிது என எடுத்துரைக்கின்றது. அவளைப் போற்றி வணங்க ஸ்ரீ வித்தை எனும் பாலா மந்திரத்தை போதிக்கின்றது. இந்த பாலா மந்திரம் ஓதியே ரிஷிகளும்

முனிவர்களும் மகத்தான பேறு பெற்றார்கள். பாலா மந்திரம் என்பது ஐம் க்லீம் சௌம் என்ற மூன்றான அட்சரங்கள். இதனை அறிந்து முறையாகச் சொல்லி உச்சரித்து பாலாவை தொழுது அன்னையின் அருள் பெறுவோம்.

பாலா மந்திரம்

ஐம் க்லீம் சௌம்

சௌம் க்லீம் ஐம்!

ஸ்ரீவித்யா பஞ்சதசாக்ஷரி மந்திரம்

வேதம் அன்னையை வணங்க இரகஸ்ய மந்திரமாக இந்த பஞ்சதசாக்ஷரி மந்திரம் என்று விளம்புகின்றது. இது அன்னைக்கு மகிழ்வளிக்கும் மந்திரம் என்று சௌந்தர்யலஹரியில் ஆதிசங்கரர் உபதேசிக்கின்றார். அது

ஸ்ரீ வித்யா பஞ்சதசாக்ஷரி மஹா மந்த்ரஸ்ய
ஆனந்த பைரவருஷி காயத்ரீச் சந்த
பஞ்சதசாக்ஷரிய திஷ்டாத்ரி
லலிதா மஹாத்ரிபுர சுந்தரி தேவதா

க ஏ ஈ ல ஹ்ரீம்	-	**பீஜம்**
ஸகல ஹ்ரீம்	-	**சக்தி**
ஹஸகஹல ஹ்ரீம்	-	**கீலகம்**


ஸ்ரீலலிதா மஹா த்ரிபுர சுந்தரி பிரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக

பஞ்சதசாக்ஷரி மந்திரம்

க ஏ ஈ ல ஹ்ரீம்
ஹஸக ஹல ஹ்ரீம்
ஸகல ஹ்ரீம்!

பாலா மந்திரத்தில் நடுவாக இருப்பது க்லீம். பஞ்சதசாக்ஷரியில் அந்தமாக இருப்பது ஹ்ரீம். இவையாவுமே வாலையின் ஊமை எழுத்தில் இருந்தே நாதமாக விரிந்து ஒலிக்கின்றது. அன்னையைப் போற்றிப் புகழும் ஸ்ரீலலிதா சகஸ்ர நாமம் ஆயிரமும் ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் எனும் அட்சரங்களை முன்னிறுத்தியே உச்சரிக்க சொல்லும். அன்னையைப் போற்றி சொல்லச் சொல்லும் ஸகஸ்ரநாம மந்திரங்களில் சிறப்பானவை கங்கா, காயத்ரி, சியாமளா, லக்ஷ்மி, காளி, பாலா, லலிதா, ராஜராஜேஸ்வரி, சரஸ்வதி, பவானி என்பவை பத்தாகும். அதில் வாக்கு தேவதைகளால் இயற்றப்பட்ட ரஹஸ்ய-நாம-ஸாஹஸ்ரம் என சொல்லப்படுவது ஸ்ரீ லலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரம் ஆகும். இதனைப் பாராயணம் செய்யும் தன் பக்தர்களுக்கு எல்லா பாக்கியமும் அன்னை அளிக்கின்றாள்.

இவ்வாறு வரும் கோடானு கோடி மந்திரங்கள் எல்லாம் ஓரெழுத்தில் இருந்தே உருவாகி ஓரெழுத்தாய் நின்ற வாலையையே போற்றிப் புகழ்கின்றது என்ற உண்மையை உணர்ந்து ஓதுங்கள். ஓரெழுத்து ஒருபொருள் என்று உணர்த்தும் திருமூலர் அதனை இன்னும் விரிவாக்கி அன்னையை தொழ திருமந்திரத்தில் நவாக்கரி மந்திரம் என்ற அரிய மந்திரத்தை சொல்லுகின்றார்.



நவாக்கரி மந்திர சக்கரம்

ஓம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	சிவயநம
ஓம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	சிவயநம
ஓம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	சிவயநம
ஓம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	சிவயநம
ஓம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	சிவயநம
ஓம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	சிவயநம
ஓம்	ஐம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	சிவயநம
ஓம்	ஹ்ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	சிவயநம
ஓம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஆம்	க்ரீம்	கௌம்	ஐம்	ஹ்ரீம்	சிவயநம

இதுதான் திருமூலர் சொன்ன நவாக்கரி மந்திர சக்கரமாகும். இம்மந்திரத்தை சக்கரம் போல் திரும்பத்திரும்ப உச்சரித்து அன்னையை வணங்கினால் நீ கேட்ட வரம் அனைத்தையும் அருள்வாள் அன்னை என்று உறுதி கூறுகிறார். மேலும் இம்மந்திரத்தால் எல்லாப்பகைவர்களையும் விரட்டி அடித்து வெல்லலாம் என்கிறார் திருமூலர். அன்னை அவளைப் பாடும் ஸ்தோத்திரங்களிலும், அவளைப்போற்றிச் சொல்லும் மந்திரங்களிலும் மகிழ்வுற்று அருள்பவள். நாமப்பிரியை என பேர் விளங்கும் அவள் எல்லா மந்திரங்களிலும் மூலமாக நின்று அவரவர் செய்யும் பூசைகளை ஏற்று தக்கவாறு தக்க பலனை அடையச் செய்கின்றாள். வேதம் சொல்லும் இந்த நல்ல மந்திரங்களை உச்சரித்து செய்யும் பூசைகளும் யாகங்களும் அவரவர் இஷ்டப்பிரப்தியை அடையச் செய்யும். சித்தர்கள் சொல்லும் வாலைப் பூசை மெய்ஞானத்தைக் கொடுத்து இறைநிலை அடையச் செய்யும். இப்படி மந்திரமாய் இருப்பவளும் வாலையே. வேதம் சொல்லும் பாலாவும் சித்தர்கள் போற்றும் வாலையும் ஒன்றான பிரமமே ஆகும்.

ஔஷதம் என்னும் மருந்து

“கற்பம் என்று அண்டமெல்லாம் சுற்ற வேண்டாம்
கனிவாக உன்னிடத்தில் இருக்குதப்பா”

என்று சொல்லி உகாரமும் அகாரமுமே மேலான கற்பம் என்று எடுத்துரைப்பார் காகபுசுண்டர். மருந்து என்று சித்தர்கள் சொன்னது வாசி எனும் கலையாகும். ‘வ’ என்பது காற்றின் ஒலி. ‘சி’ என்பது நெருப்பான ஒளி. ஒலியை ஒளியுடன் கூட்டுவதே வாசி எனும் கலையாகும். இதுவே நம் உடலையும் உயிரையும் காக்கும் உயர்ந்த மருந்தாகும். வாசி என்பது காற்றைப் பிடிக்கும் உயிர் வளர்க்கும் உன்னதக் கலை உயிர் மெய்ப்பொருளில் நீருக்கும் நெருப்புக்கும் நடுவில் இருக்கும் காற்று. அவ்வுயிர் காற்றை இயக்கி ஏற்றி இறக்கி சோதி ஒளியினில் சேர்க்கும் உண்மையான யோகம் வாசி. ஊழ்வினைகளால் உடம்பினில் வரும் நோய்களை மருந்தாகி விரட்டி உடம்பை உறுதியாக்குவது

வாசி. உயிரைப் பற்றி வரும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி ஆன்மாவை பரிசுத்தமாக்குவது வாசி. சஞ்சிதகர்மா, கிஞ்சிதகர்மா, பிராரத்தகர்மா எனும் மூவினைகளை ஒழிப்பது வாசி. ஆன்மாவை ஆண்டவனோடு ஐக்கியப் படுத்தி இறவாநிலை அடையச் செய்யும் சாகாக்கல்வி வாசி. சிவனே சித்தர்களுக்கு உபதேசித்து காட்டிக் கொடுத்தான். சிவா வாசியாக அதனை சித்தர்கள் தங்களின் இரகசியக்கலையாக வைத்து வாசியை நமக்கு சாகாக்கல்வி என போதிக்கின்றனர். வாசி எனும் இச்சாகாக்கலைக்கு எல்லா சக்திகளும் கட்டுப்பட்டு அடங்கும் என்பார் பெருநூல் காவியத்தில் ஸ்ரீகாகபுசுண்டர்.

வேதம் வாசியை பிராணா என்று சொல்லி அதன் வழியே பிரமத்தை அடைய போதிக்கின்றது. ஆன்மாவால் ஆகாத காரியம் ஏதும் இல்லை என்கிறார் ஸ்ரீ கிருஷ்ணபகவான். வாசியே உண்மையான மருந்தாகும். அந்த மருந்தாக இருப்பவள் வாலையே ஆவாள். இதை எல்லோரும் எளிதில் அடைய முடியாது. கிட்டுமோ ஞானயோகம், கிடைக்குமோ குருவின் பாதம், கட்டுமோ மூலவாசி எனப்பாடுகின்றார் கணபதிதாசர். விட்ட குறை உள்ள பூர்வஜென்ம புண்ணியம் நிறைந்த உயிர்களுக்கே வாசி வாய்க்கும். வாசியாகிய மருந்து வாலையின் அருளை அடைந்தவர்க்கே கிடைக்கும். இதுவன்றி எவ்வளவு தான் கற்றிருந்தாலும், கோடானு கோடி மந்திரங்களை உச்சரித்து அப்பியாசம் செய்திருந்தாலும், எண்ணாயிரம் ஆண்டுகள் வாசியை அறியாது யோகம் செய்தாலும் வாசி எனும் இம்மருந்தை உணரமுடியாது. சித்தர்கள் சொல்லும் சாகாக்கல்வியை கற்று பயில்வதற்கு வாலை பூசையை

விடாமல் செய்து தெய்வபலம் பெற்றிருக்க வேண்டும்.

வாசியின் உண்மை அறியாமல் இறைவனைத் தேடும் இப்பூமியில் வரும் நல்ல உயிர்களும் மூச்சுப் பயிற்சியையே பிராணாயாமம் என்று எண்ணி பலகாலமாக யோகம் என்று செய்து கொண்டிருக்கின்றனர்.

“மூச்சென்ன செய்யுமடா நரகிற்தள்ளும்” என்கிறார் கருவூர்சித்தர். எத்தனை காலம் மூச்சுக்காற்றால் யோகம்

செய்தாலும் மூச்சின் வழியே நான்கு அங்குல அளவு உயிர்க்காற்று சேர்ந்து வெளியேறிக்கொண்டே இருந்து கடைசியில் உயிர் உடலைவிட்டுப் போய் எமனிடம் அகப்பட்டு நரகம் போகும் என எச்சரிக்கின்றார் கருவூர் சித்தர். இறைவனுக்குரிய சக்தி நம் ஆன்மாவுக்குள் அடங்கி வாசியாக இருக்கின்றது. ஆதலால் ஆன்மா எனும் உயிர்காற்றை இயங்கச் செய்வதே வாசி என்பதை அறியுங்கள். மூச்சுக்காற்றினால் செய்யும் பயிற்சி நாடி சுத்தி ஆகுமேயன்றி உயிரை வளர்க்கும் வாசிக்கலை ஆகாது. நாசி எனும் உண்ணாக்கால் உயிர்காற்றை இயக்குவதே வாசியோகம் ஆகும். இப்படி உண்ணாக்கு வழியாக உயிர் காற்றை மூலாதாரத்தில் இறக்கி அங்கே உறங்கும் தனஞ்செயன் காற்றை எழுப்பி மேலேற்றும் போது அது குண்டலினி சக்தியாக உருமாறும். அவ்வாறு மாறிய சக்தியை வாலையிடம் சேர்ப்பதுவே வாசியாகும். கனலாக மூலாதாரத்தில் இருந்த குண்டலினியை அனலாக மேல் மூலத்தில் விளங்கும் சோதி ஒளியில் கூட்டுவதே இறவாநிலை அடையச் செய்யும் மருந்தாகும். இதனைப் பயிற்சி செய்வதால் உடம்பில் வந்த வருகின்ற நோய்களை யாவும் நீக்கி வலுவாக்குமே அன்றி நோயை உண்டாக்காது. வாசி பிறவியில் உள்ள வல்வினைகளை ஒழிக்குமே அன்றி இதனால் வினைத் துன்பங்கள் நேராது. இதுவே நம்பிறவியில் இறைவன் வகுத்து வைத்து மாமருந்தாகும்.

வாசி என்பது நம் ஆன்மாவே என்ற உண்மையை ஆராய்ந்து அனுபவித்து உணராமல், அது உடலையும் உயிரையும் காக்கும் மருந்து என்றறியாமல் அது கஷ்டமான செயல் என்று சொல்லி பின்வரும் சந்ததியினர் அறியா வண்ணம் மறைத்து விட்டனர் பல பொய் குருமார்கள். வாசி யோகத்தை பிரமச்சர்யம் கடைப்பிடிப்பவனே செய்ய வேண்டும். அதனைச் செய்தால் இல்லற வாழ்வை தொடர முடியாது. வாசி யோகம் செய்பவனுக்கு குழந்தையே பிறக்காது என்றெல்லாம் சொல்லி பிராணாயாமம் என்று மூச்சுப் பயிற்சியே யோகம் என்று சீடர்களுக்குப் போதனைகள் செய்து விட்டு நோய் நொடிகளுக்கு ஆளாகி செத்துதான் போனார்கள். இதனை அறிந்து யோகிகளும் வாசியைச் சொல்லிக் கொடுத்தால் பாவம் வந்து சேருமென்று

மற்றவர்க்கு காட்டி உபதேசிக்கவும் மாட்டார்கள். உலகோர் காணும் சிற்றின்பமும், யோக ஞானியர் காணும் பேரின்பமும் அடையச் செய்வது வாசியே என்ற உண்மையை உணரா உன்மத்தர்களே ஆவார்கள். இந்த அரிய கலையான வாசியை எடுத்துரைத்த சித்தர்கள் அனைவரும் இல்லற தர்மத்தில் வாழ்ந்தவர்களே. ஒவ்வொரு சித்தருக்கும் எத்தனை மனைவி மக்கள் இருந்தார்கள் என்பதை போகர் சொல்லியுள்ளதை படித்துப் பாருங்கள். எந்த சித்தராவது சீக்கில் சிக்கி செத்துப்போனார் என்ற வார்தையாவது கேட்டிருக்கின்றீரா. ஆதலால் வாசியோகம் செய்தால் சீக்குவரும். குழந்தையே பிறக்காது என்று பிதற்றி வாய்ஞானம் பேசுவோர் கூற்றை நம்பாதீர்கள். தன்னை அறிந்து வாலையின் அருளால் வரும்வாசியே அனைத்திலும்மேலானமருந்துஎனும்உண்மையை உணர்ந்து உண்மையுடன் பாடுபடுங்கள். சித்தர்கள் சந்ததியில் விட்ட குறையுடன் பிறவி எடுக்கும் உத்தமர்கள் வாசியை எப்பாடு பட்டாவது அடைந்து விடுவர். யாரும் சொல்லாததை வாலையே மெய்குருவாக வந்து அனைத்தையும் காட்டிக் கொடுப்பாள்.

பாடுபட்டாரே பலனடைந்தார் எனப்பாடுவார் காகபுசுண்டர். பாடுபடாமல் இச்சாகாக்கல்வியில் தேர்ச்சிபெற முடியாது. கஷ்டப்படாமல் இறவாநிலையோ பேரின்பமோ காணமுடியாது. ஆகையினால் வாசியை அறிந்து வாலையின் திருவடியில் இஷ்டப்பட்டு வாசிப் பயிற்சியை கஷ்டப்பட்டு விடாமுயற்சியுடன் செய்து மெய்ப்பாடுபடுங்கள். வாசி கைவல்யமாகி நாதமானதும் எல்லா வல்லமைகளையும் கொடுத்து மருந்தாகி வாசியே வாலை குருவாகி வழிகாட்டுவதை உணர்ந்து கொள்வீர்கள். உலகில் உள்ள எல்லா யோக ஞானக் கலைகளுக்கும் மூலமாக இருப்பது வாசியே ஆகும். இதனை சிவனிடம் இருந்து உபதேசம் பெற்று அதை உலகிற்கு சாகாக்கல்வி என எடுத்துரைத்தவர்கள் சித்தர்கள். இந்த வாசிக் கலையையே பலப்பல புதுவகையான பெயர்களை சூட்டி தாங்களே இதைக் கண்டு பிடித்ததாகக் கூறி தானே குரு என வருவார்கள் அப்பனே இவ்வுலகில் அனேகங் கோடி வார்த்தையால் பசப்புவார் திருடர்தானே என திட்டுவார் அகத்தியர். ஸ்ரீ காகபுசுண்டர் "வாசிக்கலைக்கு நிகரான உயிர் வளர்க்கும் கலை வேறெதுவும் இல்லையப்பா. இதுவே இவ்வுலகில் நீ அடைய

வேண்டிய உண்மையான செல்வம். அதை நீ பாடுபட்டே அடைய வேண்டும். வாசி இறைவன் உனக்களித்த கொடை. அதுவே உன் சொந்த சொத்து. அதை நீ யாருக்கும்கொடுக்கவோ உன் சந்ததிகளுக்கு எழுதிக் கொடுக்கவோ முடியாது. அதை நீ தான் பாதுகாத்து வளர்க்க வேண்டும்" என்கிறார். வள்ளற்பெருமானோ இதனை சத்தியம் சொல்லிப்பாடி உணர்த்துவார்.

நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து
நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண்ணீரதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும் நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே.

வாலையை நினைந்து வாசியை உணர்ந்து அன்பினால் நிறைந்து நெகிழ்ந்து கண்ணீர் விட்டு அழுது மணியாகிய சூட்சம உடம்பு முழுதும் நனைந்து நின்று போற்றுங்கள். சாகா மருந்து எனும் அமுர்தம் தரும் அருளாகிய அன்னையே, நன்மையைத்தரும் செல்வமே, ஞான நடம்புரியும் அரசே, என் உயிருக்கு உரிமையான நாயகனே என்று அந்த ஒன்றான மெய்ப்பொருளைப் பற்றியே குனிந்தும் நிமிர்ந்தும் வனைந்து வனைந்து நாம் வாசியை ஏற்றி இறக்கி நடத்தி வாருங்கள். உலகோரே அதனால் மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் என்ற உண்மையை அனுபவப்பூர்வமாக கண்டிடலாம். இதை கற்பனையாக புனைந்து உரைக்கவில்லை, பொய் ஏதும் சொல்லவில்லை. இதுவே சத்தியம் என்று உறுதியிட்டு சொல்கின்றேன். இதனால் மட்டுமே சிற்றம்பலத்தின் உள்உள்ள பொன்னம்பலத்தில் புகமுடியும். இதற்கு காலம் பார்க்காமல் இப்போதே பழகி பாடுபட்டு பலனடையுங்கள் என்று வள்ளலார் வார்த்தைகளை வாசித்து

பார்த்திடுங்கள். இந்த உண்மைகளை அனுபவத்தில் உணர்ந்து பார்க்க அறியாமல் தாருகாவனத்து முனிவர்கள் போல் குருவாக வரும் சிலர் வள்ளலார் சோதி ஒன்றையே சொல்லியுள்ளார். பிராணாயாமம், வாசி போன்ற யோகக்கலைகள் நமக்குத் தேவையில்லை என்று உபதேசம் செய்து அறியமுயலும் அன்பர்களையும் அறிய விடாமல் செய்கிறார்கள். சுட்டிக்காட்ட வொண்ணாத சூனியத்தை, இதுதான் அது என்று சொல்லமுடியாத பிரமத்தை கண்தான் அது என்று படம் போட்டு நோட்டீஸ் அடித்து விளம்பரம் செய்து சாகாக்கல்வி என்று தியானம் செய்து வர கற்றுத்தருகிறார்கள். இதுவே மரணமிலாப் பெருவாழ்வை அடையும் வழி என்று வள்ளலார் பேர் சொல்லி உபதேசம் செய்து வளமுடன் வாழ்ந்து வந்த குருநாதர் ஒருவர் பாதியிலேயே மாரடைப்பு வந்து மரணமடைந்தார். அவர் மரணமடையும் போதும் ஏசுநாதர் போல் பத்து சீடர்களை தயார்செய்து இதை பாரெங்கும் பரப்புங்கள் என்று சொல்லி விட்டே செத்துப் போனாராம். அதை அந்த சீடர்கள் கடமையாக செய்து கொண்டு வருகிறார்கள். வள்ளலார் பாடல்களை படித்தும் பாடியும் வந்தாலும் ஏன் இன்று வரை வள்ளலார் அடைந்த நிலையை அடையவில்லை.

சிற்சபையில் இருந்து பொற்சபைக்குள் புகும் வழி என்ன? எப்போதும் தியான சமாதியில் இருப்பது மூடம் வரும் என்றும், வாசி என்ன பேசக்கண்டாய் என்றும், எட்டு இரண்டு, அகரம் உகரம், ஆகுதி என்றும் எதனை நமக்கு எடுத்தியம்புகின்றார். என் போல் பாடுபடுபவன் யார் உளர் என்று வாசி எனும் மெய்ப்பாடுபடவே வள்ளலார் வலியுறுத்துகிறார். ஆதலால் வள்ளலார் சொன்ன இம்மருந்தான வாசியே சோதியில் கூட்டி வைக்கும் வழி என்பதை அறிந்து மெய்ப்பாடு படுங்கள். வாசியிலும் வாலையே சோதிஒளியாக வந்து அருள் செய்வாள்.

இப்படி வாலையே மணி மந்திர மருந்தாக என்றும் இருந்து வருகின்றாள். மருந்தாக விளங்கும் வாசியை உபதேசம் பெற்றோரும் தொடர்ந்து செய்ய முடியாமல் வினையால் அவதிப்படுகின்றார்கள். இது கோடியில் ஒருவருக்கே கிட்டும் அரிய கலை. இதையும் ஆயிரத்தில் ஒருவரே முறையாகப் பயிற்சி

செய்கின்றனர். அதிலும் கோடியில் ஒருவரே இறவாநிலை பெற்று சித்தராவார். ஆதலின் கிடைத்தற்கரிய மருந்தான வாசியை பயன்படுத்தி, வாலை மனோன்மணியின் அருளமுர்தம் கிட்டிட வாலையின் திருவடியை வாசியால் பற்றி தவம் புரிந்திடுங்கள். வாலை என்றதும் சிவம் என்றதும் சோதி என்றதும் ஒன்றே என்பதை உணர்ந்து சாதனை செய்யுங்கள். சாதனம் இன்றி சாதிப்பார் இல்லை என்று கைவல்யம் கூறுவதை படித்து உணர்ந்திடுங்கள். வாசியை தவறுதலாகச் செய்து இறந்தவரும் உண்டு. அதையே தவறாகப்பயன் படுத்தி மாண்டவரும் உண்டு ஆதலால் வாலை பராசக்தியையே எப்போதும் வணங்கியபடி அவள் அருளுடன் வாசியை முயற்சியுடன் பயிற்சி செய்யுங்கள். வாசியே யோகத்தின் எல்லாப் பயிற்சிகளையும், அதனால் அடையும் பலன்களையும் "சித்தர்கள் வழிகாட்டும் வாசி யோகம்"என்னும் நூலில் விளக்கமாக எழுதியுள்ளேன். அதனையும் படித்துப் பார்த்து வாசியின் உண்மைகளை அறிந்து கொள்ளுங்கள்.

எத்தனையோ அருட்செயல்களைச் செய்த வள்ளலார் அதனை நிகழ்த்திய போதெல்லாம் வாசியை ஏற்றி ச்சீ என்று சொல்லியே இது திருவருட்செயலே என செத்தாரைக்கூட எழுப்பிக்காட்டினார். திரு என்பது சிவம், அருள் என்பது சக்தி. மண்ணை பொன்னாக்கிய போதும், இரும்பு வெள்ளி போன்றவைகளை தங்கமாக மாற்றிய போதும் ரசவாதம் செய்தா செய்து காட்டினார். சி என்ற ஓரெழுத்தால் அல்லவா சித்துக்களை எல்லாம் செய்து காட்டினார். இது புரியாமல் அவர் எதற்கெடுத்தாலும் பிச்சென்றே சொல்லி செய்வார் என்று அவர் கூட இருந்தவர்களே சொல்கிறார்கள். வாசியே மருந்தாக இருப்பதை அறியாமல் இது மிகவும் கஷ்டமான செயல் என்று அனுபவித்துப் பாராமல் மருந்தை வெளியில் தேடி முப்பு கற்பம் செய்து உண்டால் சித்தர்களைப் போல் மரணமிலாப் பெருவாழ்வை இலகுவாக அடையலாம் என்கின்றனர் சிலர். நீரை நெருப்பால் ஊதி ஊதி உப்பெடுத்து அதை கற்பமருந்தாக புடம் போட்டு முப்பு செய்து அதை உட்கொண்டு செத்துப் போனார்களே தவிர இதுவரை இறவாநிலை கண்டவர்கள் ஒருவர் கூட இல்லை. அதுபோன்று இரும்பை தங்கமாக்கும் சித்திகளை அடையவும் பராசக்தியின் அருள் பெற வேண்டும் என்றே சித்தர்கள்

அனைவரும் போதிக்கின்றனர். ஆதலால் மருந்தாக இருப்பவளும் இந்த வாலையே ஆவாள், அவளே மனோன்மணியாகி அமுர்தம் அருள்பவள்.

வாலை பராசக்தியே தெய்வங்கள் முதற்கொண்டு நம்மையும் படைத்த தாய் ஆவாள். அவள் திருவடி துணை அடைவதுவே நம் பிறவியை கடைத்தேற்றும் ஒரே வழி. அவளை வணங்குவதே இகவாழ்வில் இன்பங்களை அடைந்து மறுபிறப்பிலும் புண்ணியப் பலன் கொடுத்து பரவாழ்வை அடையச் செய்யும். அவள் திருவடி பற்றி தொழுவதே பரம்பொருளை அடையச் செய்து பேரின்பப் பெருவாழ்வை அடையச் செய்யும். அவளைத் தவிர உய்வடைய நமக்கு வேறு கதி இல்லை. அவளே மணி மந்திர மருந்தாகவும் இருப்பதை அறிந்து போற்றுங்கள். வாலையே ஓரெழுத்து என்றும் ஓம் என்றும் உணர்ந்து அன்னையை வணங்குங்கள். அவளை அறியவும் அடையவும் உள்ள உண்மை வழிகளில் உழைத்திடுங்கள். வாசியும் சோதியும் ஒன்றாவதே உண்மையான தவம். தவத்தில் மகிழ்ந்து சாகா மருந்து கொடுத்து இறவாநிலை அருள்பவளே வாலை. அவள் திருவடி நம்மில் நிற்பதை அறிந்து அவளையே பணிந்து நல்வாழ்வை அடைவீர்.

அன்னையின் மீது அளவிடா அன்புகொண்டு வாழும் அன்பு உள்ளங்களே! இறைநிலையடைய இறைவனைத்தேடும் ஆன்மிக நெஞ்சங்களே! யோக ஞான சாதனைகளில் வாழ்ந்து வரும் சாதகர்களே! பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் அன்னை பராசக்தியை போற்றி வணங்குவதும், மந்திரங்களை உச்சரித்து பூசை, யாகம், யோகம், தியானம் செய்வது எல்லாம் அன்னையை மகிழச் செய்து தமது இஷ்டப் பிராப்தியை அடையச் செய்து நல்வாழ்வைக் கொடுக்கும். ஆனால் இறைவனை அடைய வேண்டும் என்றால் இறவாநிலையில் சித்தர்களைப் போல் நிலையாக மரணமிலாப் பெருவாழ்வை அடைய வேண்டும் என்றால் எங்கும் நிறைந்த அப்பராசக்தி நம்முள் வாலைப் பெண்ணாய் இருப்பதை அறிந்து கொண்டு அவள் திருவடி பற்றி தவம் புரிய வேண்டும். தவத்தினால் தான் வாலையின் அருளை அடையமுடியும். அவள் துணையுடன் தான் பரம்பொருளை

சேர இயலும். பின் அவளே பரம்பொருளில் பராபரையாய் நின்றிருப்பதை அறியலாம். ஆதலால் வாலையை தன்னுள் தேடிக் கண்டுபிடித்து அவளையே மெய்குருவாக அடைந்து சற்குருவான சிவத்துடன் சேர்வதே பேரின்பமும் இறவாநிலை அடையும் வழியாகும். அவளைத்தவிர வேறு எவராலும் சிவத்துடன் சேர்க்க இயலாது. ஆதலால் வாலைத்தாயை தன்னில் அறிந்து தவம் முயலுங்கள்.

அவள் நம் உடம்பில் ஆகாயமாய் நின்ற மனத்தின் உள்ளேதான் வெளியாக நின்றுள்ளாள். அவ்வெளிக்கு உள்ளேதான் சோதி ஒளி விளங்குகின்றது. அச்சோதி ஒளிக்குள் நுணுக்கமான வெளியாக வாலை இருக்கின்றாள். ஒளிக்குள் நின்ற சோதி ஒளி தான் வாலை. அதனை தன்னை அறிந்து தன் அறிவினால் ஆராய்ந்து கண்டு கொள்ளுங்கள். வெளியில் நின்றிருக்கும் அன்னையின் திருவடியைப் பற்றித் தவம் செய்யுங்கள். வாலையே குருவாகி வழிகாட்டி உள்வெளிச்சோதியில் சேர்த்து அங்கே மனோன்மணித் தாயாகி நமக்கு அமுர்தம் வழங்கிடுவாள். வாலையை பூசித்தோன் சித்தன் என்று பேரடைவான். வாலையை அறிந்தவனே மெய் ஞானி ஆவான். வாலையின் அருள் பெற்றவனே மரணமிலாப் பெருவாழ்வை அடைவான். அடியவன் "தசசீட்சை" நூலில் வாலையின் உண்மைகளை எழுதியுள்ளேன். இருப்பினும் அன்னையே வாலை எனும் நூலை தனியாக எழுதி வெளியிடச் சொன்னதால் அன்னையின் பக்தர்கள் அனைவரும் தெரிந்து பயன்பெற சித்தர்கள் வழியில் இந்நூல் வெளிவந்து தங்கள் கைகளில் தவழ்கின்றது. படித்தும் பக்கம் நின்றுகேட்டும் வாலையின் உண்மையை உணர்ந்து அவள் திருவடி பற்றி நின்று அன்னையின் பேரருளைப் பெற்று உய்வடையுங்கள்.

அன்புடன்,

பாட்டுச்சித்தர் ஓம்சக்தி நாராயணசாமி
ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீடம், பதிவு எண். 15/2018
சீர்காழி - 609 110. செல்: 9843650639
www.srimanonmanisiddharpeedam.com

கொங்கணச்சித்தர்

"கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா" எனும் கூற்று இந்த கொங்கணரைத்தான். இவர் முற்பிறவித் தொடர்பால் இளம்பிராயத்திலேயே இறைவனை நாடி யோக ஞானம் தேடி அலைந்தார். அதனால் கானகம் சென்று தவம் புரிய ஆவலுற்று அங்கு தவம் புரிந்த யோக ஞானிகளை சந்தித்து தவ சாதனைகளை அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டார். பின் அதனை இயம் நியமம் தவறாமல் பயிற்சி செய்து காட்டிலேயே தங்கி வாழ்ந்து வந்தார். ஒருசமயம் கொங்கணர் தியானம் செய்ய வேண்டி அங்கு ஓடிய காட்டாற்றில் நீராடி விட்டு ஆசனத்தில் அமர்ந்த போது வானில் பறந்து சென்ற கொக்கு ஒன்று எச்சமிட்டு கழித்த மலம் இவர் தலையில் பட்டு அருவருப்படையச் செய்தது. அதனால் கொங்கணர் அக்கொக்கை கோபம் கொண்டு முறைத்துப் பார்த்தார். பறந்துகொண்டிருந்த கொக்கு தீப்பற்றி எரிந்து கருகி செத்து வீழ்ந்தது. அதனைக் கண்ட பின் மீண்டும் நீராடிவிட்டு தியானம் செய்தார் கொங்கணர்.

காட்டில் தவமிருந்த மற்ற யோகிகள் கொங்கணரிடம் அனுபவ ஞானம் பெற தேசாந்திரம் செல்லவேண்டும் என்று வலியுறுத்திக் கூறினர். அதனால் கொங்கணர் தேசாந்திரம் செல்ல விரும்பி பல ஊர்களுக்கும் சென்று கோயில்களைச் சேவித்து பிச்சை எடுத்து உண்டு சுற்றி வந்தார். இதுபோல் திருமயிலை வந்து இறைவனை வணங்கிய பின் பசி வருத்த வள்ளுவர் வீட்டின் முன் நின்று பிச்சைக் கேட்டார். இல்லறமே நல்லறம் என்று வாழ்ந்து தவயோகத்தில் இருந்து வரும் வள்ளுவரும் வாசுகியும் வசிக்கும் அவ்வீட்டின் உள்ளிருந்து வெளிவந்து பிச்சை கேட்டு நின்ற இளம் துறவியைக் கண்ட வாசுகி அம்மையார் அவரை இன்முகத்துடன் வரவேற்று ஆசனத்தில் அமரச் சொன்னார். கொங்கணர் தன் பசியைக் கூறி பிச்சையிடுமாறு வேண்டினார். வாசுகி அம்மையார் சுவாமி சற்று நேரம் பொறுங்கள் இதோ ஒரு நொடியில் சமைத்து உங்களுக்கு அன்னம் பாலிக்கின்றேன் என்று கூறிவிட்டு வீட்டினுள் செல்ல முற்பட்டார். கொங்கணர் அம்மா நான் எதிரில் இருக்கும் மரத்தடியில் அமர்ந்திருக்கின்றேன். சமைத்த பின்

எனக்கு சாப்பாடு போடுங்கள் என்று சொல்லி எதிரில் சென்று பசிக்கொடுமையுடன் அமர்ந்திருந்தார்.

வாசுகி அம்மையார் சமைத்து முடித்த நேரத்தில் வெளியில் சென்றிருந்த வள்ளுவர் வீட்டிற்குள் வந்தார். கணவரின் குறிப்பறிந்து பணியாற்றும் குணவதி தன் கணவரைக் கண்டவுடன் அவருக்குத் தேவையான சேவைகளைச் செய்து உணவு பரிமாறினாள். வள்ளுவர் சாப்பிட்டு முடித்தவுடன் உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்பதால் அவர் படுக்கையில் படுத்ததும் கண்ணயரும்வரை அவர் பாதங்களை அமுக்கி விட்டார். வள்ளுவர் உறங்கியதும் தான் பசியோடு அமர்ந்திருக்கும் இளந்துறவியின் நினைவு வந்து உடனே சாப்பாடு எடுத்துக்கொண்டு எதிரில் அமர்ந்திருந்த துறவியிடம் வந்து சாப்பிட அழைத்தார். ஆனால் துறவியோ இவ்வளவு நேரம் தன்னை பசிக்கொடுமையில் தவிக்க வைத்த வாசுகி அம்மையாரை கோபக் கணல் கொண்டு முறைத்துப் பார்த்தார். துறவியின் கோபாக்கினியை புரிந்துகொண்ட வாசுகி அம்மையார் அவரைப் பார்த்து “கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா” என்றார். இதைக் கேட்டவுடன் கொங்கணர் துணுக்குற்று பலநாட்கள் முன் காட்டில் நடந்த நிகழ்ச்சியையும் தன் பெயரையும் கூறிய அம்மையாரைக் கண்டு இவர் சாதாரண பெண் இல்லை என்று உணர்ந்து தாயே என்னை மன்னியுங்கள் என்று அவர் காலில் வீழ்ந்து வேண்டினார். மேலும் அம்மா நான் பலகாலம் காட்டில் தவம் இருந்தவனாயினும் இன்னும் பக்குவம் அடையவில்லை என்பதை அறிகிறேன். எனக்குத் தாங்களே குருவாகி ஞானத்தை போதிக்க வேண்டும் என்றார்.

அம்மையார் அதைக் கேட்டு புன்முறுவல் செய்தபடியே மகனே முதலில் பசியாற சாப்பிடு எனக்கூறி அன்னம் பரிமாறினார். பின் அவரிடம் அப்பா! எனக்கு என் கணவனே கண் கண்ட தெய்வம். அவரால் எனக்கும் எல்லா ஞானமும் விளங்குகின்றது. இல்லற தர்மத்தில் வாழும் கணவன் மனைவியரில் கணவனாக இருப்பவன் செய்யும் தானமும் தவமும் ஆகிய புண்ணியப்பலனில் சரிபாதி மனைவிக்கு தானாகவே சேரும் ஆனால் அவன்

செய்யும் பாவப்பலன்கள் அவனையே சேருமேயன்றி அவன் மனைவிக்கு கிடையாது. அது போல் மனைவியாக இருப்பவள் செய்யும் தான தர்மங்கள் யாவும் முழுமையாக அவனையே அடையும். ஆனால் அவள் செய்த பாவ கர்மங்கள் சரிபாதியாக கணவனைச் சேர்ந்து விடும். இதுவே இல்லறத்தில் இறைவன் வகுத்த தர்மநியதி அதன்படி என் கணவன் செய்யும் தவம் என்னை சேர்ந்ததால் தான் எல்லா உண்மைகளையும் நான் அறிகின்றேன். உனக்கு குருவாக வழிகாட்டுதற்கு என்னிலும் மேலான ஒருவர் வீரப் பெருமாள் என்ற பெயருடன் காசியில் இருந்து வருகின்றார். அவரைத் தேடி கண்டுபிடித்து மெய்குருவை அடைந்து கொள் என்றுகூறினார்வாசுகிஅம்மையார். கொங்கணரும்தெளிவடைந்து வள்ளுவரையும் கண்டு ஆசிபெற்று மெய்ஞ்ஞானம் அடைய காசி நோக்கி நடக்கலானார்.

இப்படி பலநாள் நடந்து காசி நகரை அடைந்து வாசுகி அம்மையார் சொன்ன குருவைத் தேடி கண்டுபிடித்தார். அவரோ அந்நகரில் கசாப்புக்கடை வைத்து தொழில் செய்து கொண்டிருந்தார். தன்னைத் தேடிவந்த துறவியைக் கண்ட அவ்வீரப் பெருமாள், கொங்கணரே வாரும் என்று வரவேற்று அக்கடையில் இருந்த பெஞ்சில் அமரச் சொன்னார். கொங்கணர் அங்கு அமர்ந்ததும் தங்களை என் தங்கை வாசுகி அம்மையார் தானே இங்கு அனுப்பி வைத்தார் எனக்கேட்டார். கொங்கணரும் இவையாவையும் வியப்புடன் பார்த்தவாறே ஆமாம் என்றார். சற்று பொறுங்கள் நான் செய்யும் தொழிலை முடித்தபின் வீடு சென்று பேசலாம் என்று கூறிவிட்டு தன் வியாபாரத்தைச் செய்தார் வீரப்பெருமாள். கறி எல்லாம் விற்று முடித்தபின் கடையைக் கட்டிவிட்டு கொங்கணரை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கும் அவரை அமரச் சொல்லிவிட்டு வீட்டினுள் படுக்கையில் படுத்திருந்த தன்வயதான தாய் தந்தையருக்கு தேவையான பணிவிடைகளை எல்லாம் செய்து முடித்தபின் அவர்கள் கால்களில் வீழ்ந்து வணங்கினார். அவர்களுக்கு உண்ண உணவு சமைத்து அதனை ஊட்டி விட்டு அவர்கள் வயறு நிறைந்த பின் கொங்கணரிடம் பேசவந்தார்.

இதுவரை நடந்ததை எல்லாம் பொறுமையாக அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கொங்கணரிடம் தங்கியிருந்த கோபம் அறவே அழிந்து போனது. உண்மையான அன்பு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பெருகியது. தான் எனும் ஆணவம் ஒழிந்து அக்குருநாதரின் கால்களைப் பற்றிய வண்ணம் தனக்கு ஞானம் போதிக்குமாறு வேண்டி நின்றார். கொங்கணரின் பக்குவ நிலையை உணர்ந்து கொண்ட அக்குருநாதர் அவருக்கு மெய்ப்பொருளை உபதேசித்தார். மேலும் அவரிடம் தம்பி விட்ட குறை தொட்ட குறையால் விளைவதே ஞானம். "பின்னை நின்றென்னே பிறவி பெறுவது, முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்" என்று திருமந்திரம் கூறும். ஆதலால் முற்பிறவியில் முயன்று தவம் செய்தவர்க்கே இப்பிறப்பில் ஞானம் கிட்டும். அந்த ஞானத்தைக் கொண்டு தொடர்ந்து வரும் பிறப்பிறப்பை அறுத்து இறவாநிலை அடைந்து இறைவனுடன் சேர வேண்டும். அதற்கு முதலில் ஒரு நல்ல குருவை அடைய வேண்டும்.

சொல்லக்கூடாத பொருளைத் தொட்டுக்காட்டி உபதேசிப்பவர் சொற்குரு. அவர் காட்டிக் கொடுக்கும் இவ்வுடம்பிலேயே நின்ற குருவே மெய்குரு. இப்படி அனைவருக்கும் உண்மையான குருவாக விளங்குபவளே வாலை பராசக்தி. அவள் திருவடி ஒன்றையே பற்றி நின்று தவம் செய். அவள் அருள் கிட்டிவிட்டால் சற்குருவாகிய சர்வேஸ்வரனுடன் சேர்த்து உன்னையும் சித்தனாக்கி மரணமிலாப் பெருவாழ்வை அடையச் செய்வாள். அதுவே நீ அடைய வேண்டிய மெய்ஞ்ஞானம். உனக்கு உன் மெய் குருவை காட்டிக்கொடுத்து விட்டேன். இனி அவள் திருவடி பற்றி உன் தவசாதனைகளைத் தொடர்ந்து செய்து வா. நீயும் சித்தன் என்று பேர்பெறுவாய் என ஆசி கூறி அனுப்பி வைத்தார். உண்மை ஞானத்தை உபதேசம் பெற்ற கொங்கணர் அங்கிருந்து திரும்பி திருமயிலை அடைந்தார். வள்ளுவரையும் வாசுகி அம்மையாரையும் சேவித்து, இனி தாய்தந்தை இல்லாத எனக்கு நீங்களே தாய் தந்தையாகி வழிகாட்ட வேண்டும். அடியவன் செய்யும் சேவைகளை அன்புடன் ஏற்க வேண்டும் எனக்கூறி பாதபூசை செய்து வணங்கினார். வள்ளுவரும் வாசுகியும் அதனை ஏற்று கொங்கணா நீ சித்தர்களில் ஒருவனாகிச் சிறப்பாய் என ஆசி வழங்கினர்.


கொங்கணர் அங்கேயே தங்கி சேவை செய்தபடி தியானம் பழகிவந்தார். வள்ளுவர் அவருக்கு சித்தர்களின் இரகசியக் கலையான வாசியைக் கற்றுக் கொடுத்தார். அக்கலையிலும் மிகச்சிறந்த வல்லுனராகத் திகழ்ந்து தன் தவ வாழ்வைத் தொடர்ந்து வந்தார். மேலும் அவருக்கு ரசவாதம் கற்க வேண்டும் என்ற ஆவல் வந்தது. அதனால் வள்ளுவரிடமும் வாசுகியிடமும் விடைபெற்று சித்தர்கள் வாழும் மலைகள் எல்லாம் சென்று சித்தர்களை சந்தித்து அளவலாவி அவர்கள் ஆசி பெற்று ரசவாதம் எனும் இரும்பைத் தங்கமாக மாற்றும் வித்தையை கற்றுக் கொண்டார். அக்கலையிலும் வல்லமை பெற்று சிறந்து விளங்கினார். ரசவாதத்தில் சித்தி பெற்ற பின் ஏழ்மையில் வாழும் வள்ளுவரைக் காணும் ஆவல் கொண்டு திருமயிலை திரும்பினார்.

வள்ளுவர் ஒவ்வொரு நாளும் தமக்குத் தேவையான அளவே துணிகள் நெய்து அதை சந்தையில் கொடுத்து வரும் வருமானத்தைக் கொண்டே வாழ்க்கை நடத்தி வருபவர். இதனை கொங்கணரும் அறிவார். இருப்பினும் அவர்கள் வறுமையே இல்லாது வாழ வகை செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் வள்ளுவரின் வீட்டிற்கு வந்தார். வள்ளுவர் சந்தைக்கு சென்றிருந்ததால் வாசுகி அம்மையார் மட்டுமே இருந்தார். அன்னையின் காலில் பணிந்து வீழ்ந்து ஆசிபெற்றார். பின் அம்மா நான் ரசவாதவித்தையிலும் சித்தி பெற்று விட்டேன். நம் வீட்டில் ஏதாவது இரும்போ செம்போ இருந்தால் எடுத்து வாருங்கள் என்றார். அம்மையார் இங்கு ஏதப்பா இரும்பும் செம்பும். மண்சட்டி பானைகளைத் தவிர வேறெதுவும் இல்லை என்றார். கொங்கணரோ விடாது இல்லையம்மா ஏதேனும் கிடக்கும் தேடிப் பாருங்கள் என்றார். அவர் எழுதும் எழுத்தாணியைத் தவிர வேறு ஒன்றும் இல்லையப்பா என்றவுடன் அம்மா அதையாவது எடுத்துத் தாருங்கள் என வலுக்கட்டாயாமாக வாங்கி அதனை சில நிமிடங்களில் தங்க எழுத்தாணியாக மாற்றிவிட்டார். இதனை அதிசயமாகப் பார்த்த வாசுகி அம்மையாரிடம் அம்மா நான் தவம் செய்ய ஏதுவான இடம் பார்க்க ஏழுமலைக்குச் செல்கின்றேன். குருநாதரிடம் கூறி விடுங்கள். திரும்பி வந்து அவர் ஆசி பெறுகின்றேன் எனக் கூறிவிட்டு சென்று விட்டார்.

சந்தையிலிருந்து வீடு திரும்பிய வள்ளுவரிடம் கொங்கணர் வந்து சென்ற விபரத்தையும் அவர் எழுத்தாணியைத் தங்கமாக்கிக் கொடுத்ததையும் கூறினார் வாசுகி அம்மையார். எங்கே அதை எடுத்து வா பார்க்கலாம் என்றார் வள்ளுவர். வாசுகி அம்மையார் தங்க எழுத்தாணியைக் கொடுத்ததும் வள்ளுவர் அவன் எங்கே செல்கின்றான் என்று கேட்டதும் அம்மையார் ஏழுமலை செல்வதாகக் கூறிச் சென்றான் என்றார். உடனே வள்ளுவர் ககன மார்க்கத்தில் பறந்து ஏழுமலை நோக்கி சென்று கொண்டிருந்த கொங்கணர் முன்னே வழி மறித்து நின்றார். குருவைக் கண்டு ஆச்சரியமடைந்த கொங்கணர் ஐயனே என்று அவர் பாதங்களில் வீழ்ந்து வுணங்கினார். கொங்கணவா நீ வாதவித்தையில் சித்திபெற்ற சேதி கேட்டு மகிழ்ச்சி. நீ மாற்றித்தந்த தங்க எழுத்தாணி எனக்கு எழுதுவதற்கு உதவாது. அதனால் அதை மீண்டும் இரும்பு எழுத்தாணியாக மாற்றிக்கொடு எனக் கேட்டார்.

கொங்கணரோ திகைத்துப் போய் ஐயனே எனக்கு மீண்டும் இரும்பாக்கும் வழி தெரியாதே என்றார். வள்ளுவர் அவரைப் பார்த்து நகைத்தபடியே கொங்கணா அப்பாறையில் ஏறிநில் என்றார். அவர் கற்பாறையில் ஏறி நின்றவுடன் தன் கமண்டலத்தில் இருந்த நீரை கையில் எடுத்து அவர்மேலும் பாறையின் மேலும் தெளித்தார். அடுத்த கணம் பாறையும் அவரும் தங்கமாக மாறியது. கொங்கணர் பதை பதைத்து ஐயனே நான் தவறு செய்து விட்டேன். அடியவனை அருள் கூர்ந்து மன்னியுங்கள் என வேண்டினார். வள்ளுவர் மீண்டும் நீரை எடுத்து தெளித்தவுடன் பாறையும் அவரும் பழைய நிலைக்கு வந்தது. தன் நிலைக்கு வந்த கொங்கணர் இவ்வளவு வல்லமை உடைய வள்ளுவரா குடிசை வீட்டில் தன் வாழ்வை நடத்துகிறார் என்று ஆச்சர்யப்பட்டபடியே அவர் கால்களில் வீழ்ந்து வணங்கினார். நிறைகுடம் நீர் தழும்பாது என்ற உண்மையை நேரில் உணர்ந்த கொங்கணரிடம் மகனே! எதையும் முழுமையாக தெரிந்து கொண்டபின்னரே பரீட்சை செய்து பார்க்கவேண்டும். அரைகுறையாக அறிந்து கொண்டதை அவசரப்பட்டு செய்யாதே. அதனால் உலகில் உனக்கு அல்லல்கள் நேரிடும். அனைத்தையும் முழுமையாக கற்று அஷ்டமாசித்தியை அடைவாய் என்று அறிவுரையும் ஆசியும் வழங்கி அனுப்பி வைத்தார் வள்ளுவர்.

இன்னும் இதுபோல் பல செவிவழிக் கதைகள் கொங்கணச் சித்தரைப் பற்றி இருக்கின்றது. கொங்கணச் சித்தரை அனைத்து சித்தர்களும் புகழ்ந்து போற்றுகின்றார்கள். அயராது பாடுபட்டு இளமையிலேயே சித்தர்நிலை அடைந்தவர் கொங்கணர். போகரிடம் சீடராய் இருந்து நவபாசாணத்தையும் கட்டும் அரிய கலையையும் கற்று அதனை காங்கேயம் நகர் அருகிலுள்ள ஊதிமலையில் தங்கி முடித்தவர் கொங்கணர். பின் அதையும் கூட்டி பதினோரு பாசாணங்களைக் கொண்டு கற்சிலையாக வடிவமைத்து திருப்பதியில் வெங்கடேசப் பெருமானை செய்து அமைத்து அதன் கீழேயே இன்று வரை ஜீவசமாதியில் இருந்து வருகின்றார். அவர் தமிழில் பல்லாயிரம் பாடல்கள் எழுதி நூல்கள் படைத்துள்ளார். கொங்கணர் வாத காவியம் 3000, கொங்கணரின் முதற்காண்டம், நடுக்காண்டம், கடைக்காண்டம் போன்ற நூல்கள் எழுதியுள்ளார். அவர் அட்டமாசித்திகளும் பெற்று அழியாநிலையுடன் சித்தரானது வாலை அன்னையின் பேரருளினால் தான். ஆதலினால் வாலை அன்னையைப் போற்றி இந்த வாலைக்கும்மி பாடல்களையும் கொடுத்து அவ்வாலையை வணங்கி அருள்பெற வழி காட்டியுள்ளார்.



கொங்கணர்

ஸ்ரீ கொங்கணச்சித்தர் அருளிய
வாலைக் கும்மி

காப்பு

கல்வி நிறை வாலைப்பெண் காதலியென் றோதுகின்ற
செல்வியின் மேற் கும்மிதனைச் செப்புதற்கே - நல்விசய
நாதனின் சொல்வேதனஞ்சு போதன் மிஞ்சிமானகஞ்சு
பாதம் வஞ்ச நெஞ்சினில் வைப்போம்.

கற்கும் கல்விகளில் எல்லாம் நிறைந்து நிற்பவளான பராசக்தியை வாலைப் பெண்ணாகக் கண்டு அவளை விட்டு அகலாத மெய்யன்பினால் துதித்து ஓதுகின்ற அழகே வடிவாய் விளங்கும் அருந்தவச் செல்வியின் மேல்பாடும் இந்த கும்மியை நாம் கற்றுப் பாடுவதற்கு நல்லருளை நல்கும் நாதனாகிய ஈசனின் வேதங்கள் சொல்லிப் போற்றுகின்ற நமசிவய எனும் நாமத்தை ஓதி ஞானம் பெறுவோம். ஞான சொரூபமான ஐந்தெழுத்தே அவன் திருவடியாக அமைந்திருப்பதை அறிந்து அதையே பற்றி நம் வஞ்சமில்லா நெஞ்சினில் வைத்து வணங்கிடுவோம்.

கும்மி

சத்தி சடாதரி வாலைப்பெண் ணாமந்த
உத்தமி மேற் கும்மிப் பாட்டுரைக்க
வித்தைக் குதவிய வொற்றைக்கொம் பாம்வாலை
சித்தி விநாயகன் காப்பாமே.

பராசக்தி என்றும் சடாதரி என்றும் போற்றுகின்ற வாலைப் பெண்ணாகிய அந்த உத்தமியின் மேல் இந்த கும்மிப்பாட்டைப் படிப்பதற்கும் சொல்லுவதற்கும் வித்தைகள் யாவிற்கும் தலைவியான வாலையின் அருளை அடைவதற்கு உதவியாய் முந்தி நின்ற ஒற்றை தந்தமுடைய கொம்பை உடைய சித்தி விநாயகன் காப்பாம்.

வாலையின் அருளால் சித்தி அடைவதற்கு உறுதுணையாய் இருப்பவர் கணபதியே. அவர் ஒற்றைக் கொம்புடைய தத்துவமாய் முந்திநின்று வாலையை அடைவதற்கு உதவி புரிகின்றார். ஆதலால் வாலையைப் போற்றும் இக்கும்மிப் பாடலுக்கு இக்காப்புச் செய்யுளை சித்தி விநாயகனைப் போற்றி பாடுகின்றார்.

சித்தர்கள் போற்றிய வாலைப்பெண் ணாமந்த
உத்தமியின்மேற் கும்மிப் பாட்டுரைக்கத்
தத்தமி தோமென ஆடுஞ் சரஸ்வதி
பத்தினி பொறற்பதங் காப்பாமே.

சித்தர்கள் யாவரும் தனக்குள் தரிசித்து போற்றி வணங்குவது வாலைப் பெண்ணாகி விளங்குகின்ற அந்த சின்னஞ்சிறு பெண்ணாகிய சிற்சக்தியையே. ஆதலால் சித்தர்கள் அனைவருக்கும் அருள் செய்யும் தாயாகவும் தலைவியாகவும் விளங்குபவள் அந்த பராசக்தியே ஆவாள். அப்பெருந்தேவியின் மேல் அவளையே போற்றும் இந்த வாலைக்கும்மிப் பாட்டு பாடுவதற்கு அவளிடமிருந்தே நாதமாகவும் சொல்லாகவும் விரிந்து தத்திமிதோம் என்று ஓங்கார நர்த்தனம் ஆடும் சரஸ்வதி பத்தாம் வாசலில் யாரும் தொடமுடியாத அப்பத்தினியின் பொற்பாதம் காப்பாமே.

எங்கும் நிறைந்தவள் வாலைப்பெண்ணாம் மாலின்
தங்கையின் மேற்கும்மிப் பாடுதற்குக்
கங்கையணி சிவசம்புவாஞ் சற்குரு
பங்கயப் பொற்பதங் காப்பாமே.

எங்கும் நிறைந்த மகாசக்தியே வாலைப் பெண். அவள் திருமாலாம் நாராயணனின் தங்கையான நாராயணி. அவள் மீது இந்தக் கும்மியைப் பாடுவதற்கு கங்கையை தன் தலைமீது சூடிய சிவசம்புவாம் நடராஜனின் குஞ்சிதப் பங்கயப்பொற்பாதமே காப்பாகும்.

ஞானப்பெண் ணாமருள் சோதிப் பெண் ணாமாதி
வாலைப்பெண் மேற் கும்மி பாடுதற்கு
மானை பெண்ணாக்கிய வள்ளிக் கிசைந்திடும்
மால் முரு கேசனுங் காப்பாமே.

ஞானம் தருபவளும் அருளை அருள்பவளும் சோதிஒளியாக நின்றவளும் ஆதியாக விளங்கும் வாலைப்பெண்ணே. அந்த வாலையின் மேல் கும்மிப் பாடுவதற்கு மானின் பெண்ணாகப் பிறந்து மலையரசன் மகளாக வளர்ந்து அக்குற வள்ளியின் மேல் காதல்கொண்டு மணம் புரிந்த திருமால் மருகனாகிய முருகனே காப்பாமே.

ஆண்டிப்பெண் ணாம்ராச பாண்டிப்பெண் ணாம்வாலை
அம்பிகை மேற்கும்மிப் பாடுதற்குக்
காண்டீப னால்பணி பூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன் பொற் பதங் காப்பாமே.

தன்னந்தனியாக நின்றிருக்கும் ஆண்டிப் பெண்ணாம் வாலை. பாண்டிய நாட்டை ஆட்சி செய்யும் மீனாட்சி என்றவளும் வாலை பெண்ணாம். அந்த எல்லாம் வல்ல அம்பிகையின் மேல் கும்மிப்பாடுவதற்கு போர்க்களத்தில் காண்டீபம் தாங்கி போர்செய்த அர்ஜுனனுக்கு தேரோட்டியாக பணி பூண்ட கண்ணனாம் வைகுந்தம் ஆண்ட விஷ்ணுவின் பொற்பதம் காப்பாமே.

அந்தரி சுந்தரி வாலைப்பெண் ணாமந்த
அம்பிகை மேற்கும்மிப் பாடுதற்குச்
சிந்தையில் முந்திநல் விந்தையாய் வந்திடும்
நந்தீசர் பொற்பதங் காப்பாமே.

ஆதியும் அந்தமும் ஆன அந்தரி, அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத சுந்தரி வாலைப் பெண். அந்த அம்பிகையின் மேல் இந்த கும்மியைப் பாடுவதற்கு சிந்தையில் முதலாகத் தோன்றி நல்ல அதிசயமாய் நின்றுள்ள நந்தீசர் பொற்பதம் காப்பாமே.

நூல்

தில்லையில் முல்லையி லெல்லையு ளாடிய
வல்லவள் வாலைப்பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் தமிழ்பாட வரும்
தொல்லை வினை போக்கும் வாலைப்பெண்ணே!

தில்லை எனும் வெட்டவெளி எல்லையுள் நின்றாடிடும் வல்லவள் வாலைப் பெண்ணாவாள். அவளே அனைத்திற்கும் ஆதியாவாள். அவளே அனைவருக்கும் உண்மைக் குருவுமாவாள். அவளை சல்லாபமாக உழலுகின்ற தன் உடம்பில் அறிந்து பற்றிக் கொள்ளுங்கள். அதற்கு வாசி எனும் குதிரையில் ஏறி சல்லாபமாக ஓட்டத் தெரிந்து கொள்ளுங்கள். கும்மி என்பது குனிந்து நிமிர்ந்து கைகளைத்தட்டி சத்தம் ஏற்படுத்தி ஆடிப்பாடும் ஆட்டம். அதுபோல் வாசி என்பது குனிந்து நிமிர்ந்து அகர உகரத்தால் ஒலி எழுப்பி ஒளியில் கூடும் சாதனை. அதனை அறிந்து சாதனைகள் செய்து வருவீர்களானால் பிறவியில் வரும் துன்பங்களும் வினைகளையும் போக்கி வைத்திடுவாள் வாலைப் பெண்ணாகிய பராசக்தி, இந்த உண்மையைச் சொல்லும் இவ்வாலைக் கும்மித் தமிழைப்பாடி வாலையின் அருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்திடுங்கள்.

மாதா பிதாகூட இல்லாமலே வெளி
மண்ணும் விண்ணுமுண்டு பண்ண வென்று
பேதைப்பெண் ணாமுதல் வாலைப் பெண்ணாளென்று
புகுந்தா ளிந்தப் புவி யடக்கம்.

அனாதியான ஈசன் உள்ளும் சிற்சக்தியாக இருப்பவள் வாலை. இவள் எப்போது தோன்றினாள் என்று எவராலும் இயம்ப இயலாது. இவளுக்கு தாயும் இல்லை தந்தையும் இல்லை. இவளே அனைத்தையும் தோற்றுவித்து அதில் ஆதியாக நின்றிருப்பவள். மண்ணாலான உலகங்களையும் விண்ணாலான மேலுலகங்களையும் உண்டு பண்ணியவள் வாலைபராசக்தியே.

அவளே ஒன்றும் தெரியாத பேதைப் பெண்போல உடலிலும் உலகிலும் புகுந்து அடங்கி இருக்கின்றாள். அவ்வாலைப் பெண்ணை அறிந்து அவளே சரண் என்று பற்றிக் கொள்ளுங்கள்.

வேதமும் பூதமுண் டானதுவும் வெளி
விஞ்ஞான சாத்திர மானதுவும்
நாதமுங் கீதமுண் டானதுவும் வழி
நான் சொல்லக் கேளடி வாலைப் பெண்ணே!

நான்கு வேதங்களும் பஞ்ச பூதங்களும் தோன்றியதுவும், வான சாஸ்த்திரங்களும், விஞ்ஞான அறிவு ஆனதுவும், நாதமும் கீதமும் உண்டானதுவும் முறையாக இக்கும்மியில் வழியாக நான் சொல்கின்றேன். அதனைக் கேட்டுத் தெளிவடைந்து வாலையை வணங்கிடுங்கள். அவளிடம் இருந்தே அனைத்தும் உண்டானதை உணர்ந்து கொள்ளுங்கள்.

முந்தச் செகங்களுண் டானதுவும் முதல்
தெய்வமுந் தேவருண் டானதுவும்
விந்தையாய் வாலையுண்டானதுவும் ஞான
விளக்கம் பாரடி வாலைப் பெண்ணே!

எல்லா உலகங்கள் உண்டானதுவும், முதல் தெய்வமாக கணபதியும் நவகிரக தேவர்களும் உண்டானதுவும் இதற்கெல்லாம் காரணமாகிய வாலை தோற்றமானதுவும் நான் இக்கும்மியில் சொல்லியுள்ள ஞானவிளக்கத்தை நன்றாக ஆராய்ந்து படித்து அறிந்து கொள்ளுங்கள்.

அரிக்கு முந்தின தவ்வெழுத்தாம் பின்னும்
அரிக்குள் நின்றதும் அஞ்செழுத்தாம்
தரிக்கு முந்தின தஞ்செழுத்தாம் வாசி
பரிக்குள் நின்றது மஞ்செழுத்தாம்.

அகரம் என்ற ஆனாவிற்கு முந்திவந்து உதித்தது அவ்வெழுத்தாகும். பின்னும் அகாரத்தில் நின்றதுவே

அஞ்செழுத்தாம். தரிக்கும் உயிர்க்குள் முதல் எழுத்தாகி அஞ்செழுத்தால் தான் உடம்பு வருகின்றது. உயிரையும் உடம்பையும் ஒன்றிணைக்கும் வாசி எனும் குதிரையாய் ஓடுவதும் அஞ்செழுத்தே ஆகும்.

ஆதியிலைந் தெழுத் தாயினாள் வாலைப்பெண்
ஐந்தெழுத்து மென்று பேரானாள்
நாதியி னூமை யெழுத்திவள் தானல்ல
ஞான வகை யிவள் தானானாள்.

ஆதி எனும் முதல் எழுத்தில் இருந்தே நமசிவய எனும் ஐந்தெழுத்தாய் ஆனவளே வாலைப்பெண். ஆதலால் அவளே ஐந்தெழுத்து என்று பேரானாள். அனைத்திற்கும் அனாதியான ஊமை எழுத்து இவள். நான் என்ற ஆணவத்தால் அவளை அறிய இயலாது. ஞானம் என்ற அறிவே இவள். தானாகி நின்ற அவளை அறிவினால் தான் அறியமுடியும். அவ்வாறு அறிவால் அவளை அறிந்து கொண்டால் ஞானமே வடிவாய் தோன்றி நின்று ஞானத்தாய் என்றாவாள்.

ஊமை யெழுத்தே யுடவாச்சு மற்றும்
ஓமென் றெழுத்தே யுயிராச்சு
ஆமிந் தெழுத்தை யறிந்து கொண்டு
விளையாடிக் கும்மி யடியுங்கடி

ஊமை எழுத்தே உடம்பாகி வந்துள்ளது. அவ்வுடம்பில் ஓம் என்ற எழுத்தே உயிராகி நிற்கின்றது. இந்த அகரம் உகரம் மகரம் என்ற எழுத்தை அறிந்து கொண்டு அவ்வெழுத்தைக் கொண்டே வாசியில் விளையாடி யோக சாதனையில் நின்றிடுங்கள்.

செகம் படைத்ததும் அஞ்செழுத்தாம் பின்னும்
சீவன் படைத்ததும் அஞ்செழுத்தாம்
உகமுடிந்தது மஞ்செழுத்தாம் பின்னும்
உற்பன மானது மஞ்செழுத்தாம்.

இவ்வுலகத்தை உண்டாக்கியது அஞ்செழுத்து பின்னர் உயிர்கள் உண்டானது அஞ்செழுத்தால் தான். அவையாவும் அழிந்து முடிவதும் அஞ்செழுத்தால் பின்னர் உற்பத்தியாகி வருவதும் அஞ்செழுத்தே ஆகும். நாதம் அல்லது ஒசையின் ஸ்தூலத் தோற்றமே இப்பிரபஞ்சம் ஆகின்றது. அண்டமும் பிண்டமும் அஞ்செழுத்தால் உண்டானதே. இயற்கையில் பஞ்சபூதங்கள் இயங்கும் ஓசையே அஞ்செழுத்தாகும். 'ய' எனும் ஆகாய ஓசையில் இருந்து 'வ' எனும் காற்று ஓசை தோன்றி இயங்கும். அக்காற்றின் இயக்கத்தில் இருந்து 'சி' எனும் ஓசை தோன்றி தீயாக விளங்கும். அத்தீயில் இருந்து 'ம' எனும் ஓசையுடன் நீர் வெளிவரும். அந்நீரில் இருந்து 'ந' எனும் ஓசையுடன் மண் உற்பத்தியாகும். இவ்வாறு இப்பிரபஞ்சம் உண்டானது நமசிவய எனும் ஐந்தெழுத்தால் தான். அதுபோல் இப்பூமியில் சீவர்கள் தோன்றியதும் ஐந்தெழுத்தால் தான். நினைவு எனும் ஆகாயத்தில் உயிர் எனும் காற்று இயங்கி தீ எனும் உஷ்ணத்தால் நீர் எனும் சுக்கில சுரோணிதக் கலப்பால் மண் எனும் உடம்பு உண்டானது. ஊழிக்காலத்தில் எல்லாம் அழிந்து போவதும் பின்னர் யுகம் முடிந்து உற்பத்தி ஆவதும் இந்த "நமசிவய" எனும் அஞ்செழுத்தால் தான்.

சாத்திரம் பார்த்தாலுந் தானுமென்ன வேதந்
தானுமே பார்த்திருந் தாலு மென்ன
சூத்திரம் பார்த்தல்லோ ஆளவேணும் அஞ்சு
சொல்லை யறிந்தல்லோ காண வேணும்

சாத்திரநூலானதிருமந்திரத்தை ஆராய்ந்து பார்த்தாலும், நான்கு வேதங்களைக் கற்று ஆராய்ந்து பார்த்தாலும் அவை சொல்லும் உண்மை நமசிவய எனும் அஞ்செழுத்து தான். ஆனாலும் அவை சொல்லும் சூத்திரமாகிய மெய்ப்பொருளை தன்னை அறிந்து பார்த்தல்லவா அறிய வேண்டும். நமசிவய அஞ்செழுத்தே பிரமம் எனும் மெய்ப்பொருள் என்பதை அறிந்தல்லவா அதையே கண்டு அதிலேயே உபாசித்து இறை உண்மையை உணர வேண்டும்

காணாது கிட்டாதே எட்டாதே அஞ்சில்
காரிய மில்லை யென்றே நினைத்தால்
காணாதுங் காணலா மஞ்செழுத் தாலே
காரிய முண்டு தியானஞ் செய்தால்

அஞ்செழுத்தை ஓதுவதால் ஒருபயனும் இல்லை என்று நினைத்தால் காணாத மெய்ப்பொருளை அறியவே முடியாது. அது எவருக்கும் எளிதில் கிடைக்காது. அஞ்செழுத்தை உணராத பாவிகளுக்கு எட்டாதபொருளாகிவிடும். அஞ்செழுத்தாய் நின்ற மெய்ப்பொருளை அறிந்து அஞ்செழுத்தையே ஓதி உணர்ந்து கொண்டால் அதுவே காணாத அனைத்தையும் காணலாம். அதையே பற்றி அஞ்செழுத்தை ஓதி தியானம் செய்தால் பிறவியின் பயனைப் பெற்றுய்யலாம். அஞ்செழுத்தே எல்லாக் காரியங்களையும் நடத்தித் தரும்.

ஆயனு மைந்தா மெழுத்துக்குள்ளே யறி
வாயனு மைந்தா மெழுத்துக் குள்ளே
வாயனு மைந்தா மெழுத்துக் குள்ளேயிந்த
வாலையு மைந்தா மெழுத்துக் குள்ளே.

ஆயன் என்ற விஷ்ணுவும் அறிவான பிரமனும் பேரறிவான சிவனும் இந்த அஞ்செழுத்துக்குள்ளேயே அமர்ந்துள்ளார்கள். எல்லாம் வல்ல இந்த வாலையும் அஞ்செழுத்துக்குள்ளே தான் இருந்து அருளாட்சி புரிகின்றாள்.

அஞ்செழுத் தானதும் எட்டெழுத்தாம் பின்னும்
ஐம்பத்தோர் அட்சரந் தானாச்சு
நெஞ்செழுத் தாலே நினையாம லந்த
நிசந் தெரியுமோ வாலைப் பெண்ணே!

அஞ்செழுத்தாகிய மெய்ப்பொருள் உள்ளது அகாரமாகிய எட்டெழுத்தாம். அதுவே நமசிவய எனும் ஐம்பத்தோர் அட்சரம் ஆகியது. அதனை நெஞ்செழுத்து எனும் உள்ளத்தில் நின்ற ஓரெழுத்து எனும் சிகாரத்தையே நினைந்து பார்த்து தியானம்

செய்யாது போனால் இந்த உண்மைகள் தெரியவே தெரியாதே. அஞ்செழுத்தானதே ஓம் நமசிவய எனும் சக்தியின் அட்சரம் அஉம் என்ற மூன்றும் சேர்ந்து எட்டெழுத்தானது. அது எட்டு எனும் அகாரத்தில் நிற்பதால் அகரத்தையே எட்டெழுத்தென்பர். அதையே அகரம் முதல் க்ஷகாரம் வரை ஐம்பத்தோர் அட்சரம் என்றுரைப்பார். உண்மையில் நமசிவய எனும் ஐந்தெழுத்தே ஐம்பத்தோர் அட்சரம் ஆகும். தமிழ் எழுத்துக்களான உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்கள் உள்ள அட்ட வணையில் அ முதல் ன வரை மேலிருந்து கீழாக எழுத்துக் கட்டங்களில் ந என்பது 9-ம் கட்டத்தில் வரும். எனவே அதற்கு 9 என்ற எண்ணும், ம என்பது 11-ம் கட்டத்தில் வருவதால் அதற்கு 11 என்ற எண்ணும், சி என்பது 4-ம் கட்டத்தில் வருவதால் அதற்கு 4 என்ற எண்ணும், வ என்பது 15-ம் கட்டத்தில் வருவதால் அதற்கு 15 என்ற எண்ணும், ய என்பது 12-ம் கட்டத்தில் வருவதால் அதற்கு 12 என்ற எண்ணும், அமைத்து அந்த எண்களின் கூட்டுத் தொகையையே 51 அட்சரம் என்றாகியது. இதனையே சிதம்பர சக்கரத்தில் அமைத்து அதனை குறுக்கு, நெடுக்கு என எப்பக்கம் கூட்டினாலும் ஐம்பத்தொன்று வருவதாக அமைத்து ஈசன் அருள் அடையும் வழியாக ஆக்கினர். இந்த உண்மைகளை நெஞ்சத்தில் நின்ற ஓரெழுத்தை உணர்ந்து அதுவே வாலையாக இருப்பதை அறிந்து கொண்டு தெரிந்து கொள்ளச் சொல்கின்றார் கொங்கணச்சித்தர்.


ஏய்க்கு தேய்க்கு தஞ்செழுத்து வதை
எட்டிப் பிடித்துக் கொளி ரண்டெழுத்தை
நோக்கிக்கொள் வாசியை மேலாக வாசி
நிலையைப் பாரடி வாலைப் பெண்ணே!

இவ்வாறு அஞ்செழுத்தாக உள்ள மெய்ப்பொருளை அறியாது போனால் அது வாசியை காட்டாது ஏய்க்கும். ஆதலால் அஞ்செழுத்தின் மூலமாக இருக்கும் அ இ உ எ ஒ என்பதில் எட்டு இரண்டு எனும் அகரத்தையும் உகரத்தையும் உணர்ந்து பிடித்துக் கொள். அதைக் கொண்டு வாசியை இயக்கி மேலாக நின்ற மெய்ப்பொருளையே பார்த்தபடி அதுவே ஈசன் திருவடி நிழல் என பற்றிக் கொள். அப்போது வாசி நாதமாக ஓடுவதை

உனக்குள்ளேவே உணர்ந்து கொள்வாய்.வாசியே மெய் நிலையை அடையச்செய்யும் மா மருந்தாகும்.

சிதம்பர சக்கரந் தானறி வாரிந்தச்
சீமையி லுள்ள பெரியோர் கள்
சிதம்பர சக்கர மென்றால் அதற்குள்ளே
தெய்வத்தை யல்லோ அறிய வேணும்.

<u>சிதம்பர சக்கரம் (ஐம்பத்தோர் அட்சரம்)</u>



இந்த சிதம்பரசக்கரத்தை இந்த பூமியில் உள்ள பெரியோர்கள் இதுவே சிறந்த மந்திரம் என்பதை அறிந்து பூசையில் வைத்து வழிபாடு செய்து வணங்குவார்கள். அதே சிதம்பரசக்கரம் தனக்குள் வெட்டவெளியாய் நிற்பதையும் அதற்குள்ளே இறைவனாக ஈசன் இருப்பதையும் அறிந்து கொண்டு அங்கே இம்மந்திரத்தை சொல்லி வணங்கிவந்தால் அல்லவோ தெய்வத்தை உணரமுடியும்.

மனமு மதியு மில்லா விடில்வழி
மாறுதல் சொல்லியே யென்ன செய்வாள்?
மனமு றுதியும் வைக்கவேணும் பின்னும்
வாலை கிருபை யுண்டாக வேணும்.

தூய மனமும் தெளிந்த அறிவும் இல்லாவிட்டால் இந்த வழியே இறைவனை அடையும் நல்வழி என்று எவர் சொன்னாலும் ஏற்காமல் மாறுதலாகவே நடப்பார்கள். மனத்தில் இறைவனை அடைய வேண்டும் என்ற கொள்கையை உறுதியாய் வைக்க வேண்டும். மனமே இறைவனை அடையும் கருவி என்பதை உணர்ந்து மனத்தில் இறைவனையே நினைந்து தியானம் செய்யவேண்டும். அதனால் அறிவு தெளிந்து அவ்வறிவால் வாலையின் அருளை அடைந்து விட்டால் இறைவனுடன் கூடி இன்புறலாமே.

இனி வெளியினிற் சொல்லாதே யெழில்
தீ மட்டு திந்த வரி விழிக்கே
கனிமொழி ச்சியீர் வாருங்கடி கொஞ்சங்
கருவைச் சொல்லுவேன் கேளுங்கடி

இந்த வரிகள் வரை நான் சொன்ன உண்மை வழி பார்க்கும் விழிகளில் ஒன்றான கண்ணே என்பதை புரிந்து கொண்டால் இனி வெளியினில் சொல்லாதே. அழகே வடிவாக விளங்கும் அங்குதான் அருட்பெருஞ்சோதியாக இறைவன் ஒளிர்கின்றான். கனிவான மொழிபேசும் பெண்ணாக வாலையும் அங்கு தான் நின்றுள்ளாள். அதன் கருவை கொஞ்சம் சொல்கின்றேன். கவனமாகக் கேளுங்கள்.

ஊத்தைச் சடலமென் றெண்ணாதே யிதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே
பார்த்த பேருக்கே ஊத்தையில்லை யிதைப்
பார்த்துக் கொள் உன்ற னுடலுக்குள்ளே.

நாறும் பிணமாகி அழிந்து போகும் உடம்புதானே இது என்று எண்ணாதே. உப்பால் பூத்து மண்ணால் வந்த உடம்புதானே

இது என்றும் எண்ணாதே. இந்த உடம்பின் உள்ளே நாறாத இடத்தில்தான் அழியாத்தன்மையுள்ள வாலை அமர்ந்துள்ளாள். அவளையே குருவாகக் கண்டு தவம் செய்வார்க்குத்தான் அழியாத இறவாநிலை கிடைக்கும். அவருடம்பும் ஊத்தையாகி அழிவதில்லை. இந்த உண்மையை உன் உடம்புக்குள்ளே நின்ற வாலையை உணர்ந்து அவளையே பார்த்து தவம் செய்.

உச்சிக்கு நேராயுண் ணாவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி
அச்சுள்ள விளக்கு வாலையடி அவி
யாம லெரியுது வாலைப் பெண்ணே!

உச்சி எனும் சகஸ்ரதளமலருக்கு நேர் உள்ளே, கண்டத்தில் உள்ள உண்ணாக்கு மேலே வைத்த விளக்கு நித்தம் ஒளிவீசி எரிகின்றது. அச்சு போல் நடுவாக விளங்கும் அவ்விளக்கொளியே வாலையாகும். அணையாவிளக்கான அந்த சோதி ஒளியே அழியாத தன்மையுடையது. அப்படி எரிந்து கொண்டிருக்கும் அவ்வொளியே வாலை என்றறிந்து பற்றிக் கொள்ளுங்கள்.

எரியுதே அறு வீட்டினிலே யதில்
எண்ணையில்லை யமிழ் தண்ணீ ரில்லை
தெரியுது போக வழியுமில்லை பாதை
சிக்குது சிக்குது வாலைப் பெண்ணே

சந்திரனில் மூன்றும் சூரியனில் மூன்றுமாக ஆறுவீடுகள் அகார உகாரமாக நின்று விளங்குகின்றது. அச்சூட்சம அறுவீட்டினிலே ஒளி எரிந்து விளக்காக நின்றுள்ளது. அதில் அத்தீ எண்ணையாலோ, தண்ணீராலோ எரியவில்லை. தன்னந் தனியாக தானே தற்பரமாய் அங்கு சோதி ஒளி நின்று விளங்குகின்றது. அது வெட்ட வெளியாக தெரிந்தும் அங்கு போகும் பத்தாம் வாசல் எனும் அறுத்தடைத்த வாசலில் செல்ல வழியும் இல்லை. அப்பாதையிலே உள் நுழைவதற்கு ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்கள் தடையாய் நின்று தடுக்கின்றதே.

சிலம்பொலி யென்னக் கேட்குமடி மெத்த
சிக்குள்ள பாதை துடுக்க மடி
வலம்புரி யச்சங்க மூது மடிமேலே
வாசியைப் பாரடி வாலைப் பெண்ணே!

அப்பத்தாம் வாசல் பாதையிலே சிலம்பொலியோடு தச நாதங்களும் கேட்கும். அந்த மயிர்ப் பாலம் என்ற சிக்கல்கள் உள்ள பாதையின் அளவு அணுவிலும் அணுவாக நுணுக்கமான துடுக்கமாக உள்ளது. அதற்கு வலம்புரி சங்காக நின்ற அகாரத்தில் வாசியை சங்குபோல் ஊதி சேர்க்க சேர்க்க வாசியே சிவா என ஓதி சிவன் திருவடியில் கூட்டும். ஆதலால் வாசியைப் பார்த்து அதை மெய்ப்பொருளில் சேர்த்து நின்று தியானம் செய்யுங்கள்.

வாசிப் பழக்கம் அறியவேணும் மற்று
மண்டல வீடுகள் கட்ட வேணும்
நாசி வழிக்கொண்டு யோகமும் வாசியும்
நாட்டத்தைப் பாரடி வாலைப் பெண்ணே!

வாசி என்பது சித்தர்கள் கூறும் உயிர் வளர்க்கும் கலை. அதுவே சித்தர்கள் அனைவரும் உபதேசிக்கும் சாகாக் கல்வி. அதனை நல்ல குருநாதரிடம் சென்று சரணடைந்து கற்றுக் கொள்ள வேண்டும். பின் வாசியை தினசரி பயிற்சி செய்து வாசியின் உண்மையை அறிய வேண்டும். இவ்வாறு செய்யும் வாசிப்பழக்கத்தால் வாசி இலயமாகி நாதமாக இயங்கி கைவல்யமாகும். அதைக் கொண்டு சூரிய சந்திர அக்கினி எனும் மூன்று மண்டல வீடுகளையும் கட்ட வேண்டும். மூக்கின் வழியாக செய்யும் யோகம் உயிர்க்காற்றை நட்டப்படுத்தவே செய்யும். நாசி எனும் உண்ணாக்கின் வழியே செய்யும் யோகமே உயிர்க்காற்றை விரயமாக்காது உயிரை வளர்க்கும். உண்ணாக்கின் வழியே வாசியை ஓட்டி நாட்டமிடும் கண்ணையே பார்த்து தவம் செய்து பார்த்தால் வாலையின் வல்லபத்தை உணரலாம்.

முச்சுடரான விளக்கி னுள்ளே மூல
மண்டல வாசி வழக்கத் திலே
எச்சுடராகி யந்தச் சுடர் வாலை
இவள்விட வேறில்லை வாலைப் பெண்ணே!

சூரிய சந்திர அக்கினி என்ற முச்சுடரும் சோதிவிளக்கின் ஒளியால் தான் சுடர்வீசித் திகழ்கின்றது. இவ்வாறு மூல ஒளியான சோதியின் உள்ளே வாசியினால் மூன்று மண்டலங்களையும் கடந்து வாசியைக் கொண்டே பற்றி நிற்க வேண்டும். இதுவே உண்மையான யோக ஞான சாதனை ஆகும். இப்படி எல்லோரிடமும் சுடர் ஒளியாக விளங்கும் அச்சுடரான மூல ஒளியே வாலை ஆகும். இவளைத் தவிர வேறு எவராலும் இறவா நிலை அருள முடியாதே. நம்மை இறைவனிடம் சேர்க்கவும். இனிய அமுர்தம் வழங்கி இறவாநிலை அருள்பவள் வாலைத்தாயே.

சூடாமல் வாலை யிருக்கிறதும் பரி
சுத்த சிவனுக்குள் ளானத னால்
வீடாமல் வாசிப் பழக்கத்தைப் பாருநாம்
மேல்வீடு காணலாம் வாலைப் பெண்ணே!

தீக்குள் தீயாய் எவராலும் தொடமுடியாமல் நம்முள் சூடாமல் சூடி வாலை இருப்பது பரிசுத்த சிவனுக்குள் ஆனதனால் அவளை வாசி ஒன்றினால் தான் அடையமுடியும். ஆதலினால் வாசியை கை விடாமல் தொடர்ந்து செய்து பாரு. நாம் மேல் வீடு எனும் முத்தி நிலையைக் காணலாம். அதனால் வாலையின் அருளையும் பெற்றுய்யலாம்.

மேல்வீடு கண்டவன் பாணியடி விண்ணில்
விளக்கில் நின்றவள் வாணி யடி
தாய்வீடு கண்டவன் ஞானியடி பரி
தாண்டிக் கொண்டான் பட்டாணி யடி.

மேல்வீடு கண்டவன் வாசியினால் அமுர்த பாணம் அருந்துவான். விண்ணாகிய வெட்ட வெளியில் எரியும் விளக்கில்

நின்றிருப்பவளே வாலை குருவாக வரும் சரஸ்வதி ஆவாள். மனோன்மணித்தாய் இருக்கும் வீட்டைக் கண்டவனே ஞானி ஆவான். வாசி எனும் குதிரையில் ஏறி அனைத்து தத்துவங்களையும் கடந்து ஒன்றான மெய்ப்பொருளில் கலந்து சீவனை சிவம் ஆக்கிக் கொண்டவனே சித்தன் ஆவான்.

அத்தியிலே கரம் பத்தியிலே மனம்
புத்தியிலே நடு மத்தியிலே
நெற்றி சதாசிவ மென்று சொன்னேனுன்றன்
நிமையைப் பாரடி வாலைப் பெண்ணே!

அகாரமாகிய எண்சாண் உடம்பினிலே ஆறு ஆதாரங்கள் அமைந்துள்ளது. மனத்தை பக்தியில் செலுத்தி அறிவினால் நெற்றி நடுமத்தியில் நின்ற ஆஞ்ஞா எனும் ஆதாரசக்கரத்தில் சதாசிவன் இருக்கின்றான் என்பதை அறிந்து கொள் என்று சொன்னேன். இதனை உன்றன் இமை மத்தியில் நின்று பார்த்து அச்சதா சிவனை வணங்கிடுவாய்.

அழுத்திலே சொல்லஞ் செழுத்திலே நானும்
வழுத்தினேன் ஞானப் பழுத்திலே
கழுத்திலே மயேஸ்வரனு முண்டு கண்
கண்டு பாரடி வாலைப் பெண்ணே!

ஞானப் பழம் என்ற மெய்ப்பொருளில் நின்று அழுத்தியே சொல்லும் அஞ்செழுத்திலே உள்ள வகாரத்தினால் நானும் கழுத்திலே நின்ற மகேசுவரனை கண்டு வணங்கினேன். கண்டம் எனும் விசுத்தியில் வாசிக் காற்றாய் இயங்கும் உண்ணாமுலை எனும் உண்ணாக்கை கண்ணால் கண்டு மகேசுவரனைப் பார்த்து வணங்கிடுவாய்.

அஞ்சிலே பிஞ்சிலே வஞ்சியரே நிதம்
கொஞ்சி விளையாடும் வஞ்சியரே
நெஞ்சிலே ருத்திரன் சூழிருப் பானவன்
நேருடனா மடி வாலைப் பெண்ணே.

அஞ்செழுத்திலே பிஞ்செழுத்தாய் நின்றது 'சி' எனும் சிகாரமே. அது அனாகத சக்கரத்தில் நின்று உஷ்ணமாக இயங்குகின்றது. அங்கே நித்தம் கொஞ்சி விளையாடும் பெண்களைப் போல் இதயம் துள்ளித்துடித்துக் கொண்டே இயங்குகின்றது. அதுவே உடல் முழுவதும் இரத்தசக்தியை செலுத்துகின்றது. அந்த நெஞ்சுப்பள்ளம் எனும் இடத்தில் ருத்திரன் சூழ்ந்து இருக்கின்றான். அவன் ஆட்டம் அங்கு நின்றுபோனால் உயிரும் உடலைவிட்டுப் பிரிந்து போய்விடும். இந்த உண்மையை உணர்ந்து அனாகத சக்கரத்தில் சிகாரத்தை ஓதி ருத்திரனை வணங்கிடுவாய்.

தொந்தியிலே நடுப் பந்தியிலே திடச்
சிந்தையிலே முந்தி யுன்றனுடன்
உந்தியில் விஷ்ணுவுந் தாமிருப் பாரிதை
உண்மையாய் பாரடி வாலைப் பெண்ணே!

தொப்புள் இருக்கும் இடத்திலே நடுவாக இருப்பது மணிபூரகச்சக்கரம் அந்த இடத்தில் உறுதியான மனத்துடன் மகாரத்தை ஓதி வந்தால் உந்தன் உடலில் நின்ற அந்த உந்திக் கமலத்தில் விஷ்ணுவும் வீற்றிருப்பார். இதை உண்மையாய் உணர்ந்து பார்த்து 'ம' எனும் மகாரத்தால் விஷ்ணுவை வணங்கிடுவாய்.

ஆலத்திலே யிந்த ஞாலத்திலே வருங்
காலத்திலே யனு கூலத்திலே
மூலத்திலே ப்ரமன் தானிருந்து வாசி
முடுக்கிறான் பிண்டம் பிடிக்கிறானே.

அகாரமானதே அண்டமும் பிண்டமும் ஆனது. இவ்வுலகிலே உடம்பெடுத்து வரும் காலத்திலே அனுகூலமான நன்மைகள் அடைவதற்கு மூலாதாரத்தில் குண்டலினிசக்தி நீறு பூத்த கனலாக நின்றுள்ளாள். எருவாய்க்கும் கருவாய்க்கும் இடையில் இருப்பதே மூலாதாரம். அங்கிருந்து நான்குவிரற்கடை மேலே இருப்பது சுவாதிஸ்டானம். அது மண்தளம் ஆனதால் பிரமன் அங்கிருந்த படியே வாசியை முடுக்கி எழுப்பி அதனால் சுக்கில

சுரோணித நீர்களை கலந்து மண்ணாலான இப்பிண்டத்தை உண்டாக்குகின்றான். ஆதலால் அங்கே ந எனும் நகாரத்தினால் பிரமனை வணங்கிடுவாய். இவ்வாறு ஆறு ஆதாரங்களிலும் உள்ள தெய்வசக்திகளை அதனதன் எழுத்தைக் கொண்டே ஓம் நமசிவய எனும் அஞ்செழுத்தை சொல்லி வணங்குவோர்க்கே வாலை அருளும் கிட்டும்.

தேருமுண்டு அஞ்நூறாம் ஆணியுண்டே அதில்
தேவரு முண்டு சங்கீத முண்டே
ஆருண்டு பாரடி வாலைத் தெய்வம் அதில்
அடக்கந் தானடி வாலைப் பெண்ணே!

இவ்வுடம்பினில் தேர்போல் சூட்சம உடம்பும் பொருந்தி நின்றுள்ளது. அங்கேயே அஞ்சும், ஆயுள் என்ற உயிரும், ஆணிப் பொன்னம்பலமும் அமைந்துள்ளது. அதில் தேவர்களும் எல்லா தெய்வங்களும் உண்டு. அங்கேதான் நாதம் என்ற சங்கீதம் உண்டே. ஆறு ஆதாரங்களையும் கண்டு கடந்து அகாரத்தில் நின்ற சகஸ்ரதளத்தையே பார்த்து தவம்செய். அதிலேயே வாலை பராசக்தியும் பரம்பொருளான ஈசனும் அடங்கி இருப்பதை அறிந்து கொள்வாய்.

ஒன்பது வாயில்கொள் கோட்டையுண்டே அதில்
உள்ளே நிலைக்கார ரஞ்சு பேராம்
அன்புடனே பரிகாரர்க ளாறு பேர்
அடக்கந் தானடி வாலைப் பெண்ணே!

ஒன்பது வாசல் கொண்ட இந்த உடம்பின் உள்ளே அழிவே இல்லாத கோட்டையாக மெய்ப்பொருள் உள்ளது. அதன் உள்ளேயே அஞ்சு பூதங்களும் நிலையாக நின்றுள்ளது. அதுவே ஈசனின் ஐந்து முகங்களாகவும் ஆறாவதான அதோ முகமாகவும் அமைந்து அதற்குள்ளே வாலையும் அடங்கி அருளாட்சி செய்கின்றாள்.

இந்த விதத்திலே தேகத்திலே தெய்வம்
இருக்கையில் புத்திக் கறிக்கையினால்
சந்தோட வாலையைப் பாராமல் மனிதர்
சாகிற தேதடி வாலைப் பெண்ணே!

இந்த விதத்திலே இந்த உடம்பிலே இறைவன் இருப்பதை புத்தியினால் அறிந்து கொண்டு மெய் ஞானத்தால் மெய்ப்பொருளை அடைய வேண்டும். உடலை விட்டு உயிர் பிரியும் நேரத்தில் மெல்லிய நுணுக்கமான பத்தாம் வாசலை விட்டு வாலை விலகிப் போவதை பார்த்த பின்பே மனிதர் உயிரும் உடலும் செத்து அழிந்து போகின்றது. ஆதலால் மனிதர்கள் வாலையை பார்க்காமல் உணராமல் சாவது இல்லை.

நகார திட்டிப்பே ஆனதனால் வீடு
வான வகார நயமாச்சு
உகார முச்சி சிரசாச்சே இதை
உற்றுப் பாரடி வாலைப் பெண்ணே!

நகாரம் என்ற மண்ணாலான உடம்பால் வரும் இன்பம் திகட்டிப் போய் நிலையற்றதாகிவிடும். ஆதலால் நிலையான வீடு உடம்பிலுள்ள வானாகிய அகாரத்தில் தான் உள்ளது. அங்கே உகாரத்தினால் வாசி உட்புகுந்து மேலேறி சிகாரம் என்ற உச்சியில் சேரும். இதனை உற்றறிந்து உணர்ந்து பார்த்து அத்தீ நின்ற தலையான உச்சியை சேர்ந்து தியானம் செய்.

வகார மானதே ஓசையாச்சே அந்த
மகார மானது கர்ப்ப மாச்சே
சிகார மானது மாய்கையாச்சே இதைத்
தெளிந்து பாரடி வாலைப் பெண்ணே

ஆகாயத்தில் இருந்து வகாரம் காற்றாகி ஓசையாக வெளிவந்து காற்றில் இருந்து சிகாரம் எனும் தீ உருவாகி அத்தீயில் இருந்தே நீர் மகாரமாய் தோன்றுகின்றது. அந்நீரே நகாரம் எனும் மண்ணில்

கலந்து தாய் வயிற்றில் கருவாக உயிர் வளர்ந்து இப்பூமியில் உடலெடுத்து வருகின்றது. அதில் சிகாரமான தீயை மனமான மாய்கை அறிய விடாது மறைத்து நிற்கின்றது. அம்மாய்கையை அகற்றி அறிவினால் ஆராய்ந்து சிகாரமாக நின்றிருக்கும் சோதியை தெளிவாகத் தெரிந்து கொள்.

ஓமென்ற அட்சரந் தானுமுண் டதற்குள்
ஊமை யெழுத்து மிருக்கு தடி
நாமிந்தெழுத்தை யறிந்து கொண்டே நம்வினை
நாடிப் பாரடி வாலைப் பெண்ணே!

ஓம் என்பதே சக்தியின் மந்திரமாகும். அதற்குள் ஊமை எழுத்து இருக்கிறது. அதுவே கோடானு கோடி மந்திரங்களுக்கும் மூ லமந்திரமாகும். அந்த ஊமை எழுத்தை அறிந்து கொண்டாலே நம் பிறவியில் சேர்ந்திருக்கும் சஞ்சித கர்மாவினைகள் அனைத்தும் அழிந்து போய்விடும். ஆதலால் இந்த ஊமை எழுத்தை நம் உடம்பிலேயே கண்டு அதுவே வாலையாக வருவதை உணர்ந்து அதையே பார்த்து தவம்செய்.

கட்டாத காளையைக் கட்டவேணு மாசை
வெட்ட வேணும் வாசியொட்ட வேணும்
எட்டாத கொம்பை வளைக்க வேணுங்காய
மென்றைக் கிருக்குமோ வாலைப் பெண்ணே!

கட்டாமல் திரியும் திமிர்பிடித்த காளையைப் போல் காம வேட்கையில் தவிக்கும் உடம்பை அடக்கிக் கட்டுப் படுத்த வேண்டும். மனதில் எழும் ஆசைகளை வேரோடு வெட்டி அழிக்க வேண்டும். உயிரோடு வாசி ஒட்டி நின்று இயங்க வேண்டும். அகாரத்தில் விளங்கும் எவருக்கும் எளிதில் எட்டாதப் பொருளான ஈசன் திருவடியில் வாசியை இணைக்க வேண்டும். இதுவே அழியாத ஒளிஉடம்பைக் கொடுக்கும். எலும்பு, நரம்பு, சதை, இரத்தம் என்ற தோலால் மூடிய இவ்வுடம்பு எப்போதும் நிலைக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

இருந்த மார்க்கமாய்த் தானிருந்து வாசி
ஏற்காமலே தான டக்க வேணும்
திரிந்தே ஓடி யலைந்து வெந்துதேகம்
இறந்து போச்சுதே வாலைப் பெண்ணே!

வாசியை ஏற்றி இறக்கி மெய்ப்பொருளுடன் சேர்த்து தியானத்தில் இருக்கவேண்டும். இப்படி இருந்த ஞான மார்க்கத்தில் தான் இருந்து வாசியை இயக்காமல் மெய்ப்பொருளில் அடக்கி கும்பகம் செய்யவேண்டும். இந்த வழியை அறியாமல் அவரவர் உடம்பில் நின்ற வாசி வீணாகத் திரிந்து மூச்சோடு ஓடி அலைந்து விந்து சக்தியை இழந்து உடம்பு நோய்களினால் வெந்து இறந்து போகின்றதே என்பதை அறியுங்கள்.

பூத்த மலராலே பிஞ்சுமுண்டே அதில்
பூவில்லாப் பிஞ்சும் அனேக முண்டு
மூத்த மகனாலே வாழ்வுமுண்டு மற்ற
மூன்று பேராலே அழிவு முண்டு

உலகில் பூத்த மலராலே பிஞ்சு உண்டாகி காயாகிக் கனியாகும். அதுபோல் பூவில்லாமல் வரும் பிஞ்சுகளும் காய் கனிகளும் அனேகம் உண்டு. அதேபோல் முதலாகத் தோன்றிய அழியாத ஆதிசக்தியின் மூத்தமகனான கணேசனால் அழியாத வாழ்வு கிடைக்கும். அதிலேயே பூவில்லாமல் காய்ப்பது போல் தோன்றும் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களால் அழிவுதான் வரும்.

கற்புள்ள மாதர் குலம்வாழ்க நின்ற
கற்பை யளித்தவரே வாழ்க!
சிற்பரனைப் போற்றிக் கும்மியடி குரு
தற்பரனைப் போற்றிக் கும்மி யடி

கொண்டவனைத் தவிர வேறு ஆடவரை மனதாலும் நினையாது நெருப்பு போல வாழும் கற்புள்ள மாதர் குலம் வாழ்க. அதுபோல தன்னை ஆட்கொண்ட ஈசனையே மனதில் வைத்து எண்ணும்

அடியார்கள் உள்ளத்தில் நெருப்பாய் நின்ற எவரும் தொடமுடியாத ஒளியாய் நின்ற இறைவனே நீ என்றும் என் நெஞ்சில் நிலைத்து வாழ்க! சிற்பரனாய் விளங்கும் சிவனை போற்றி வாழ்த்துங்கள். தற்பரனாய் நின்று மெய் குருவாய் வந்து அருள் செய்யும் அவன் திருவடியைப் பணிந்து போற்றுங்கள்.

அஞ்சினிலே ரண்டழிந்த தில்லை யஞ்
சாறிலேயு நாலொழிந்த தில்லை
பிஞ்சிலே பூவிலே துஞ்சுவதாம் அது
பேணிப் போடலாம் வாலைப் பெண்ணே!

அஞ்செழுத்தான நமசிவய என்பதின் பீஜாட்சரமே அ இ உ எ ஒ என்ற எழுத்துமாகும். ஆதலால் அதிலிருந்தும் அ உ என்ற எட்டிரண்டடும் அழியாமல் ஒட்டியே இருக்கின்றது.சூட்சம உடம்பில்நின்ற அஞ்செழுத்தில்இருந்தும்தூல உடம்பினில்நின்ற ஆறு ஆதாரங்களில் இருந்தும் மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்ற நான்கு அந்தக் கரணங்களும் ஒழிந்து போவதில்லை. சூட்சம உடம்பில் நின்ற பூவிலிருந்து பிஞ்சாகி வந்த குண்டலினி தூல உடம்பில் மூலாதாரத்தில் தூங்கிக்கொண்டுள்ளது. அதனை வாசியினால் எட்டிரண்டை ஊதி மெய்ப்பொருளுடன் கூடி நின்று செய்யும் தவத்தைப் பேணி வந்தால் அவன் திருவடி சேர்ந்து இன்புறலாம்.

கையில்லாக் குட்டையன் கட்டிக்கிட்டா னிரு
காலில்லா நெட்டையன் முட்டிக் கிட்டான்
ஈயில்லாத் தேனெடுத் துண்டுவிட்டா னது
இனிக்கு தில்லையா வாலைப் பெண்ணே!

கையில்லாக் குட்டையன் என்று உகாரத்தையும், கால் இல்லா நெட்டையன் என்று அகாரத்தையும் கொங்கணச் சித்தர் சொல்கின்றார். உகரமாக உறங்கும் குண்டலியை வாசியினால் எழுப்பி அகரத்தில் விளங்கும் வாலையிடம் சேர்க்க வேண்டும். அதற்கு அகர உகரத்தினால் வாசியை நடத்தி சிகரத்தில்

கும்பகம் செய்து வாசியைக் கட்ட வேண்டும். பின் வாலையே மனோன்மணித்தாயாகி அமுர்தம் வழங்குவாள். அதுவே ஈ மொய்க்காத சுத்தமான தேன் போன்று இனிக்கும். இச்சாதனையை செய்து அமுர்தம் உண்டு விட்டால் பேரின்பநிலை கிட்டி அழியா சாகாப்பேறு அடையலாம். இதை அவரவர் அனுபவத்தால் அறிந்து இன்பநிலை எய்திடுங்கள்.

மேலூாரு கோட்டைக்கே ஆதரவாய் நன்றாய்
விளங்கு கன்னனூர்ப் பாதையிலே
காலூாரு வம்பலம் விட்டதனா லது
கடுநடை யடி வாலைப் பெண்ணே!

மேலாக விளங்கும் மெய்ப்பொருள் இருக்கும் இடமான பத்தாம் வாசல் கோட்டைக்கு ஆதரவாய் இருப்பவளே வாலைசக்தி. கண்ணிலே நின்றிருப்பதால் அவளுக்கு கன்னி என்ற பேரும் உண்டு. நன்றாக விளங்கும் கன்னி நின்ற கண்ணாகிய ஊருக்குள் போகும் பாதையாக அப்பத்தாம் வாசல் வழியிலே வாசி எனும் காலால் உட்புகுந்து சிவன் விளங்கும் அம்பலத்தில் சேர்க்க வேண்டும். அது மெத்தவும் கடினமாகும். வாசியை விட்டவர்க்கு அது இயலாத காரியமே ஆகும்.

தொண்டையுள் முக்கோணக் கோட்டையிலே யிதில்
தொத்திக் கொடிமரம் நாட்டடை யிலே
சண்டை செய்து வந்தே ஓடிப்போனாள் கோட்டை
வெந்து தணலாச்சு வாலைப் பெண்ணே!

தொண்டையுள் நின்ற உண்ணாக்கு வழியே வாசியை இயக்கி முக்கோண கோட்டையாகிய சூரிய சந்திர அக்கினி என்ற மூன்று மண்டலங்களிலும் சேர்ந்து சுழுமுனை எனும் கொடிமரத்தில் ஏறி கும்பகத்தில் நின்று தவம் புரியவேண்டும். அதனால் நம்பிறவியைப் பற்றி நின்று கெடுக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் அழிந்து ஒழிந்து போய்விடும். அப்போது கோட்டையாக விளங்கும் சூட்சம தேகத்தில் சோதி ஒளி சுடர்வீசி நிற்பதைக் காணலாம்.

ஆசை வலைக்குள் அகப்பட்டதும் வீடு
அப்போதே வெந்தே அழிந்திட்டதும்
பாச வலைவந்து மூடியதும் வாலை
பாதத்தைப் போற்றடி வாலைப் பெண்ணே!

காம ஆசை எனும் வலைக்குள் அகப்படும் போதெல்லாம் அப்போதே விந்து வெளியேறி அழிந்து போகும். அதனால் வாசியும் வீணாகி உயிர் நட்டமடையும். பந்த பாசங்களால் அந்த ஆசை வலை உனை சூழ்ந்து மூடினால் வாலையின் பாதத்தை பார்த்தபடியே பற்றி நின்று அவள் நாமங்களை சொல்லியே போற்றி வணங்கி வர காமமும் பாசமும் நமைச் சூழ்ந்திடாது விலகிப் போய்விடும்.

அன்ன மிருக்குது மண்டபத்தில் விளை
யாடித் திரிந்ததே ஆண் புலியும்
இன்ன மிருக்குமே யஞ்சு கிளியவை
எட்டிப் பிடிக்குமே மூன்று கிளி

ஒரு குளத்தில் இரு அன்ன பட்சிகள் இருப்பது போல் உடம்பில் நீராக நின்ற தடாகத்தில் ஆண்பெண் என இரண்டு அன்னங்கள் இருக்கின்றது. அதில் ஆணாக விளங்கும் அகாரத்தில் இருந்தே ஆன்மா விளையாடித் திரிந்து கொண்டுள்ளது. அதில் இருந்தே வாசி புலியைப்போல் பாய்ந்து ஓடிக்கொண்டுள்ளது. அதிலேயே ஐந்து பூதங்களும் அஞ்செழுத்தாக அமைந்திருக்கின்றது. அதனைக்கண்டுணர்ந்து ஓங்காரமான அகர உகர மகர மென்ற மூன்றெழுத்தால் வாசியைக் கொண்டு நடத்தி அந்த இடத்தில் சேர்ந்து வாலையின் பதத்தை எட்டிப் பிடித்திடலாம்.

தோப்பிலே மாங்குயில் கூப்பிடுதே புது
மாப்பிள்ளை தான் வந்து சாப்பிடவும்
ஏய்க்கு மிப்படி யஞ்சா றாந்தை
இருந்து விழிப்பது பாருங் கடி.

தோப்பில் உள்ள மாங்குயில் தன் இணையுடன் கூட கூவி அழைப்பதைப் போல் தேகத்தில் உள்ள வாசியை குயில் போல் கூவச் செய்தால் அது தன்துணை சோதி ஒளியில் கூடும். அதனால் அடையும் பேரின்பமே உண்மையான இன்பமாகும். புது மாப்பிள்ளை விதவிதமாய் சாப்பிடுவதும், சல்லாபிப்பதையும் போல் மாயை உலக இன்பங்களைத் தந்து மயக்கும். அது நிலையற்ற பொய்யான இன்பமே ஆகும். இப்படி மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து புலன்களும் அதனதன் வழியே இன்பங்களை அடையச் செய்து ஏமாற்றும். அதனால் காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாச்சர்யம் என்ற ஆறும் சேர்ந்து தீயவினையையே கொடுக்கும். இந்தஐந்தையும் ஆறையும் அடக்க ஆந்தை விழிப்பது போல் தனித்திருந்து விழியையே பார்த்து வெளிப்பார்வையற்று அகத்தில் பார்த்தபடி தவம் செய்யுங்கள்.

மீனுமிருக் குதுதூ ரணியி லிதை
மேய்ந்து திரியுங் கல சாவல்
தேனுமிருக் குது போரையிலே யுண்ணத்
தெவிட்டு தில்லையே வாலைப் பெண்ணே!

மீன் கண்ணால் பார்த்தே குஞ்சு பொறிக்கும். பின் மீன் குஞ்சுகள் மீனுடன் சேர்ந்தே திரிந்து மேயும். ஊருணியாக அமுர்தம் ஊறும் மீன் போன்ற கண்ணில் ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களும் மேய்ந்து திரிந்து கொண்டுள்ளன. அதனை உணர்ந்து வாசி எனும் வாள் கொண்டு அம்மும்மலங்களையும் வெட்டி அகற்றி விட்டால் வாசி சுழுமுனையில் உள்ள பத்தாம் வாசல் வழியே உட்புகுந்து அக்கிணற்றில் நின்ற சோதியில் கூடும். அதனால் அங்கே தேனினும் இனிய அமுர்தம் ஊறும். அதை உண்ண உண்ண தெவிட்டாத பேரின்பத்தைத் தரும்.

காகமிருக்குது கொம்பிலே தான் கத
சாவ லிருக்குது தெம்பிலே தான்
பார்க்க வெகுதூர மில்லை யிதுஞானம்
பார்த்ததால் தெரியுமே வாலைப் பெண்ணே!

ஒடிந்து போய் விழக்கூடிய மரத்தின் உச்சியில் உள்ள கொம்பில் காகம் அமர்ந்து இருப்பது தன்னிடம் பறக்கும் சக்தி இருக்கும் தைரியத்தால் தான். அதுபோல் உயிர் இருக்கும் பலத்தில் தான் உடம்பு இயங்குகின்றது. உடம்பு தானல்ல என்பதை அறிந்து உடலுக்குள் உள்ள உயிரே தான் என்பதை உணர்ந்து அவ்வுயிர்க்குள் உயிராய் விளங்குபவனே ஈசன் என்பதால் அவன் திருவடி சேரும் ஞானமே மனிதப் பிறவி அடையும் பயன் ஆகும். அதற்கு வாலையின் குருவருளைப் பெற வேண்டும். இது பார்ப்பதற்கு வெகு தூரம் இல்லை. அது ஞானம் என்ற அறிவை அறிந்து அவ்வறிவைக்கொண்டு பார்த்தால் இந்த உண்மையை தெரிந்து கொள்ளலாமே.

கும்பிக் குளத்திலே யம்பலமா மந்தக்
குளக் கருவூரில் சேறு மெத்த
தெம்பிலிடைக் காட்டுப் பாதைகளாம் வந்து
சேர்ந் தாராய்ந்து பார் வாலைப் பெண்ணே!

குளத்தில் இருந்து களிமண்ணை எடுத்து வந்து நீர் கலந்து சேறாக்கி பானை செய்யும் குயவன் போல் இறைவன் வினைக்கேற்ப மண்ணாலான உடம்பை இரத்தத்தில் கலந்து செய்து படைக்கின்றான். அவனே குளம் என்ற நீரில் கோயில் கொண்டு தீயாய் அமர்ந்துள்ளான். அது இவ்வுடம்பில் சகஸ்ரதளம் என்ற உச்சியின் நடுவே பத்தாம் வாசல் பாதையில் சோதி ஒளியாக நின்றுள்ளது. அடர்ந்த காட்டுப் பாதை வழியில் வாசியினால் வந்து அங்கு விளங்கும் மெய்ப்பொருளில் சேர்ந்து அறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்ளுங்கள்.

பண்டுமே ஆழக் கிணற்றுக்குள்ளே ரண்டு
கொண்டை யிருந்து பகட்டுதடி
கண்டிருந்து மந்தக் காக்கையுமே யஞ்சி
கழுகு கொன்றது பாருங் கடி.

பழமையிலிருந்தே இந்த உடம்பில் ஆழக்கிணறு போல் உள்ள நீரினில் இரண்டு கொண்டைமீன் போல் சூரிய சந்திர

ஒளி இருந்து பகட்டிக் கொண்டுள்ளது. அதனைக் கண்டு கொண்டு காக்கை போல ஒரு கண்ணால் மட்டுமே கண்டு பற்றிக் கொள்ளுங்கள். அங்கேயே ஐந்து பூதங்களும், ஐந்து புலன்களும், ஐந்து அவத்தைகளும் அடங்கி இருப்பதை அறிவீர்கள். அதனை கழுகுபோல் பார்வையை கூர்மையாக்கி பார்த்தபடி இருந்தால் ஐந்து புலன்களும் அடங்குவதை உணர்வீர்கள். இவ்வாறு அங்கே இறைவன் திருவடியே பற்றி தவம் செய்துவந்தால் நம்பிறவியில் உள்ள எல்லா பொல்லாவினைகளும் ஒழிந்து போகும்.

ஆற்றிலே யஞ்சு முதலையடி யரும்
புற்றிலே ரண்டு கரடி யடி
கூற்றனு மூன்று குருடனடி பாசங்
கொண்டு பிடிக்கிறான் வாலைப் பெண்ணே!

ஆறு ஆதாரங்கள் அமைந்த ஐந்து பூதங்களால் ஆன இவ்வூடம்பில் ஐம்புலன்களும் முதலையைப் போல் ஆசை கொண்டு அலைந்து ஆன்மாவைக் கெடுக்கின்றது. புற்று போன்று இரண்டு துவாரங்களில் கரடியைப் போல் கருமையாக மனம் இருக்கின்றது. இவ்வுடம்பில் குருடனைப் போல் மூன்று வாதம், பித்தம், கோழை என்ற பிணிகளும் இருக்கின்றது. அதைக் கொண்டே மாயை எனும் பாசத்தை ஊட்டி எமன் உயிரைக் கொண்டு செல்கின்றான். மண்டையில் நின்ற கோழை நீரே கீழிறங்கி மூக்கிலும் தொண்டையிலும் அடைத்து மூச்சு நின்று உயிர் போகின்றதே.

முட்டையிடுகு தொருபறவை முட்டை
மோசம் பண்ணு தொரு பறவை
வட்டமிட் டாளுர் கண்ணியி லிரண்டு
மானுந் தவிக்குது வாலைப் பெண்ணே!

உலகினில் கூடுகட்டி முட்டையிட்டு அடைகாக்கும் காகம். காகம் இரைதேடச் சென்ற போது கழுகு அங்கு வந்து அம்முட்டையை உடைத்து உண்ணும். உடலினில் முட்டையைப் போன்று அண்டக்கல் இரண்டு உள்ளது. அதில் ஒன்றின் வழி

சென்றால் பரம் பொருளுடன் கூடி பிறவிப்பயனைக் கொடுக்கும். மற்றொன்றின் வழி சென்றால் ஆசைகளையும் காமத்தையும் தூண்டி பிறவியைக் கெடுக்கும். இரண்டு கண்களிலும் வட்டமிட்டு இருந்தவாறு உயிர் நின்றுள்ளது. அவ்வட்டத்தில் இரண்டு மான்போல துள்ளிக் கொண்டே இருக்கின்றது. இதில் எது உண்மைவழி என்பதை வாலை அருளும் அறிவால் அறிந்து கொள்ளுங்கள்.

அட்டமாவின் வட்டம் பொட்டலிலே ரண்டு
அம்புலி நிற்குது தேர் மேலே
திட்டமாய் வந்து அடிக்குதில்லை தேகம்
செந்தண லானதே வாலைப் பெண்ணே!

எண்சாண் அளவு அமைந்த இவ்வுடம்பில் உள்ள வெட்ட வெளியில் இரண்டு வட்ட நிலவுபோல் ஒளி நிற்கின்றது. அதுவே தேர்போல அசைந்து கொண்டு வரும் சூட்சமதேகம். தேர்மேலே நிற்கும் சூரிய சந்திரனாகிய அவ்வொளியும் நிலையான நித்திய ஒளி இல்லை. அதற்கும் திடமான ஒளி தரும் செந்தணலாக விளங்கும் ஒளிக்குள் ஒளியாக நிற்கும் திடமான சோதியே வாலையாகும்.

முக்கோண வட்டக் கிணற்றுக்குள்ளே மூல
மண்டல வாசிப் பழக்கத்திலே
அக்கோண வட்டச் சக்கரத்தில் வாலை
அமர்ந்திருக்கிறாள் வாலைப் பெண்ணே!

மூன்று வட்டக் கோணமாக இருக்கும் கிணற்றுக்குள்ளே மூன்று மண்டலமான சூரிய சந்திர அக்கினி கலைகள் மூன்றும் நின்றுள்ளது. அங்கே இருக்கும் அக்கலைகளை இயக்கவும் அதனை மூலாதாரத்தில் இறக்கி முதுகுத்தண்டின் வழியாக மேலே ஏற்ற வாசிப் பழக்கம் உள்ள யோகிகளுக்கே முடியும். வாசியைத் தவிர வேறு எதனாலும் அந்த வட்டக் கிணற்றுக்குள் இருக்கும் நீரைக் கடக்க முடியாது. இவ்வாறு ஏற்றி இறக்கி செய்யும் வாசி அகாரம் என்ற அக்கோண வட்டத்தில் போய் சேர்ந்து நிற்கும்.

அகாரமான வட்டச் சக்கரத்தின் உள்ளே தான் வாலை பராசக்தி அமர்ந்திருக்கின்றாள். அவள் அருளால் தான் நீராகி நின்ற அக்கோண வட்டச் சக்கரத்தில் உள் நிற்கும் சோதி ஒளியில் சேர முடியும்.

இரண்டு காலாலொரு கோபுரமாம் நெடு
நாளா யிருந்தே அமிழ்ந்து போகும்
கண்ட போது கோபுரமிருக்கும் வாலை
காணவு மெட்டாள் நிலைக்க வொட்டாள்.

அகாரம் உகாரம் ஆகிய இரண்டும் வாசிக்காலாகி கோபுரமாக உச்சியில் இருக்கும் சுழுமுனையில் சேர்ந்திடும். நாள் தவறாமல் தொடர்ந்து செய்யும் ரேசகம், பூரகம், கும்பகம் எனும் பயிற்சியினால் வாசியானது சுழுமுனையின் உட்புகுந்து அங்கு காணும் ஆனந்தத்தில் அமிழ்ந்து போகும். அங்கே விழிப்புடன் இருந்து கண்டபோது உச்சியில் சோதி ஒளி நின்றிருக்கும். அதற்குள் உள்ள வாலையை காண்பதற்கு எளிதாக எட்டவும் மாட்டாள். வாசியிலே நிலைத்து சோதியோடே ஒட்டி நின்றால் உன்னோடே நிலைத்து நிற்பாள்.

அஞ்சு பூதத்தை உண்டுபண்ணிக் கூட்டி
ஆறாதாரத்தை யுண்டு பண்ணிக்
கொஞ்சு பெண்ணாசை யுண்டு பண்ணிவாலை
கூட்டுகிறாள் காலனை மாட்டுகிறாள்

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களையும் படைத்து அந்த ஐம்பூதங்களையும் கூட்டி இந்த மனித உடம்பை உண்டுபண்ணி அதில் ஆறாதாரங்களில் தெய்வங்களை அமர்த்தி வைத்தவள் வாலை பராசக்தி. அவளே இவ்வுடம்பில் பெண்ணாசையை உண்டு பண்ணி காமத்தீயை கூட்டுகிறாள். இவ்வாறு எல்லாம் செய்பவள் வாலையே என உணராது பெண்ணாசையில் வீழ்ந்து கிடப்போரை எமனிடம் மாட்டிவைக்கின்றாள்.

காலனைக் காலா லுதைத்தவளாம் வாலை
ஆலகால விட முண்டவளாம்
மாளாச் செகத்தைப் படைத்த வளாமிந்த
மானுடன் கோட்டை இடித்தவளாம்.

மரணத்தை கொடுக்க வரும் காலனை தன் காலால் எட்டி உதைத்தவளாம் இந்த வாலை சக்தி. ஈசனோடு இருந்து ஆல கால விஷத்தை உண்டு ஈசனையே காத்தவளாம். எண்ணற்ற உலகங்களையும் படைத்த அப்பராசக்தி இந்த மானுட உடம்பில் இருப்பதை அறிந்து பற்றிக் கொள்ளுங்கள்.

மாதாவாய் வந்தே அமுதந்தந் தாள்மனை
யாட்டியாய் வந்து சுகங் கொடுத்தாள்
ஆதரவாகிய தங்கை யானாள் நமக்
காசைக் கொழுந்தியு மாமியானாள்.

நம் தாயாய் வந்து பாலும் உணவும் ஊட்டி வளர்த்தவள் வாலையே. நம் மனைவியாய் வந்து இன்பசுகம் கொடுத்தவளும் வாலையே. நமக்கு ஆதரவாகி பாசம் நிறைந்த தங்கையாகவும் வருபவளும் வாலையே. நாம் ஆசைப்படும் கொழுந்தியாகவும், மாமியாகவும் வருபவள் வாலையே ஆவாள். இவ்வாறு நம்மைச் சுற்றி நிற்கும் பந்தங்களாக பெண்ணாகி வரும் அத்தனையும் வாலைத்தாயே என்பதை உணர்ந்திடுங்கள்.

சிரித்து மெல்லப் புரமெரித்தாள் வாலை
செங்காட்டுச் செட்டியைத் தானுதைத் தாள்
ஒருத்தியாகவே சூரர் தமை வென்றாள்
ஒற்றையாய்க் கஞ்சனைக் கொன்று விட்டாள்.

ஈசனின் கண்களில் மெல்லச்சிரித்து திரிபுரங்களையும் எரித்தவள் வாலை. செங்காட்டு செட்டிக்கதை பேசும் பொய் ஞானிகளை எட்டி உதைப்பாள். இவள் ஒருத்தியே எல்லா தெய்வங்களிலும் நின்று அசுரர்களையும் வென்றாள். இவள் ஒருத்தியே காமம், கோபம், லோபம், மோக, மத, மாச்சரிய, இடம்ப,

அகங்காரம் என்ற கரும வினைகளை சேர்க்கும் விராக குணங்கள் அனைத்தையும் கொன்று ஒழித்திடுவாள்.

இப்படியல்லோ இவள் தொழிலா மிந்த
ஈனா மலடி கொடுஞ் சூலி
மைப்படுங் கண்ணியர் கேளுங்கடி அந்த
வயசு வாலை திரிசூலி!

இப்படியெல்லாம் அனைத்திலும் செயலாற்றும் இவள் யாரையும் பெற்றெடுக்காத மலடி. அனைத்தையும் ஆட்டுவிக்கும் கொடுஞ்சூலி. இருப்பினும் இவளே யாவிற்கும் மேலான கருணைத்தாய். மை போன்று கண்ணினுள் ஊமை எழுத்தாய் விளங்கும் வாலையை சொல்கின்றேன். நன்கு கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அந்த வாலையின் வயது பத்தாகும். அந்த வாலையே, கன்னியாகவும், மனோன்மணியாகவும் விளங்கும் திரிசூலி.

கத்தி பெரியதோ யுறை பெரிதோ விவள்
கண்ணு பெரியதோ முகம் பெரிதோ
சத்தி பெரிதோ சிவம் பெரிதோ நீதான்
சற்றே சொல்லடி வாலைப் பெண்ணே!

கத்தி பெரியதா அல்லது அக்கத்தி பொருந்தி நிற்கும் உறை பெரியதா? இவள் இருக்கும் கண்ணு பெரியதா அல்லது முகம் பெரியதா? சத்தி பெரியதா சிவம் பெரியதா? இதை அறிவால் ஆராய்ந்து பாருங்கள். நான் சொல்லும் வாலையின் உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

அன்னம் பெரிதல்லால் தண்ணீர் பெரிதல்ல
அப்படி வாலை பெரிதானாள்
பொன்னு பெரிதல்லால் வெள்ளி பெரிதல்ல
பொய்யாது சொல்லுகிறேன் கேளுங்கடி.

பசிவந்த உடலுக்கு உண்ணும் உணவே பெரிதாகுமே தவிர தண்ணீர் பெரிதல்ல. எவ்வளவு நீர் குடித்தாலும் பசிவந்து வருத்தும். அதுபோல்தான் அனைத்திற்கும் வாலையே பெரிதானாள். உலகில் தங்கமே உயர்ந்த மதிப்புடைய பொருளாகுமே தவிர வெள்ளி அதைவிட உயர்ந்த மதிப்புடைய பொருளாகாது. ஆதலால் வாலையே அனைத்தையும் அருளும் பெரும் தெய்வம் என்ற உண்மையை பொய்யில்லாது சொல்லுகிறேன். கேட்டு வாலையின் அருள்பெற தன்னுள் கண்டு தவம் செய்யுங்கள்.

மாமிசமானா லெலும்பு முண்டு சதை
வாங்கி ஓடு கழன்று விடும்
ஆமிச மிப்படிச் சத்தியென்றே விளை
யாடிக் கும்மி அடியுங் கடி.

மாமிசமான இவ்வுடம்பில் எலும்பும் உண்டு. தோல், சதை, நரம்பு, எலும்பு, முடி ஆகிய மண்ணால் செய்த உடம்பில் சக்தி இல்லாது போனால் எல்லாம் கழன்று போய் எலும்புக் கூடாகி உடைந்த ஓடாகிப் போய்விடும். சக்தியை வணங்காது சென்ற பிருங்கி முனிவரிடம் சினங்கொண்ட பராசக்தி தன் சக்தியை அவர் உடலில் இருந்து எடுத்தவுடன் சதையெல்லாம் கழன்று எலும்பாகிப் போனார். அவ்வெலும்புக் கூட்டை சிவன் தன் சக்தியின் தண்டம் கொண்டே தாங்கி நிறுத்தினார். ஆதலால் எவ்வளவு தவசக்தி இருந்தாலும் அன்னையின் அருள் இல்லாது எவரும் நிலை அடைய முடியாது. உடல் இயங்குவதும், எல்லா உலகங்கள் இயங்குவதும், தவம் கூடி சித்தியாவதும் வாலையின் சக்தியே என்பதை உணர்ந்து அவளைப் போற்றிக் கொண்டாடுங்கள்.

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் விளையாதென்று
கண்டு கொண்டு முன்னே அவ்வை சொன்னாளது
வுண்டோ வில்லையோ வாலைப் பெண்ணே!

பழமையில் இருந்தே பூமியில் விளையும் நெல்லில் வரும் அரிசியையே நாம் உண்டு வருகின்றோம். அவ்வரிசியை மூடி நின்ற உமி இல்லாது போனால் அது விளையுமா? இதனைக் கண்டுகொண்டே ஔவைப்பாட்டி அரிசியை சிவன் என்றும் உமியை உமை என்றும் இவ்வுலகுக்கு எடுத்துரைத்தாள். அவள் சொன்னது உண்மையா பொய்யா என்பதை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள்.

மண்ணு மில்லாமலே விண்ணுமில்லை கொஞ்சம்
வாச மில்லாமலே பூவு மில்லை
பெண்ணு மில்லாமலே யாணு மில்லையிது
பேணிப் பாரடி வாலைப் பெண்ணே!

விண்ணிலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து மண்ணும் தோன்றியே பிரபஞ்சம் வந்தது. மண் இல்லை என்றால் விண்ணும் இல்லை. கொஞ்சம் வாசம் கூட இல்லாத பூவும் இல்லை. இப்பூமியில் பெண் இல்லாமல் ஆண் இல்லை. இது போல்தான் சக்தி இல்லாமலே சிவனும் இல்லை. சிவன் இல்லாது சக்தி இல்லை. ஆதலால் வாலையையே வழிபட்டு அவள் அருளால் சிவனை அடையும் வழியான வாசி யோகத்தையும் ஞான தியானத்தையும் பேணி இருந்து தவம் செய்து பலனடையுங்கள்.

நந்த வனத்திலே சோதியுண்டு நிலம்
நத்திய பேருக்கு நெல்லு முண்டு
விந்தையாய் வாலையைப் பூசிக்க முன்னாளில்
விட்ட குறைவேணும் வாலைப் பெண்ணே!

தன்னை அறிந்தவர்க்கு இவ்வுடம்பிலே பூவாகபூத்து நிற்கும் நந்தவனத்தில் சோதி ஒளி விளங்குவதை அறிந்து வாசியினால் பாடுபட்டு சோதியினில் சேர்ந்திடுவார்கள். தன் நிலத்தில் பாடுபட்டு விவசாயம் செய்பவர்க்கு நெற்பயிர் காய்த்து பலன் கொடுக்கும். அதுபோல் தனக்குள் விந்தையாய் நின்றிருக்கும் வாலையை பூசை செய்வதற்கு முன் சென்மத்திலேயே விட்டகுறை

எனும் புண்ணியம் இருக்க வேண்டும். முற்பிறவி செய்த தவபுண்ணியமே வாலையைக் காட்டும்.

வாலையைப் பூசிக்கச் சித்தரானார் வாலைக்
கொத்தாசை யாய்ச் சிவகர்த்த ரானார்
வேலையைப் பார்த்தல்லோ கூலிவைத் தாரிந்த
விதந் தெரியுமோ வாலைப் பெண்ணே!

வாலை பூசை செய்து அவள் அருள் பெற்றவரே சித்தரானார். வாலை குருவாக வந்து வழி காட்டினதால் தான் சிவத்துடன் கலந்து தான் சிவம் ஆனார். இவ்வுலகில் அவரவர் வேலையைப் பார்த்தல்லவா அதற்குத் தகுந்த கூலி தருவார். அதுபோல் அவரவர் செய்யும் தவ சாதனைகளைக் கண்டே புண்ணியப்பலனை வாலை தருகின்றாள். இந்த உண்மைகளை உணர்ந்து வாலையின் அருள் வேண்டி மெய்த்தவ சாதனைகளை செய்து இறைவியைப் போற்றிடுங்கள்.

வாலைக்கு மேலான தெய்வமில்லை மானங்
காப்பது சேலைக்கு மேலு மில்லை
பாலுக்கு மேலான பாக்கியமில்லை வாலைக்
கும்மிக்கு மேலான பாடலில்லை.

வாலை பராசக்திக்கு மேலான தெய்வம் ஒன்றுமில்லை, மானத்தைக் காப்பது சேலையைப் போல் மேலானது ஏது மில்லை. பாலுக்கு மேலான பாக்கியம் வேறில்லை. அது போல் நான் சொல்லும் இந்த வாலைக்கும்மிக்கு மேலான பாடல் இல்லை.

நாட்டத்தை கண்டா லறியலாகு மந்த
நாலாறு வாசல் கடக்க லாகும்
பூட்டைக் கதவைத் திறக்கலாகு மிது
பொய்யல்ல மெய்யடி வாலைப் பெண்ணே!

நாட்டம் என்ற பார்ப்பதையே பார்த்து தவம் இருந்தால் எல்லா இரகசியங்களையும் அறிந்து கொள்ளலாம். இத்தவ சாதனையால்

பத்தாம் வாசல் என்ற சுழுமுனையைக் கடக்கலாகும். வாசி சாதனையால் அங்கிருக்கும் புருவப் பூட்டை உடைத்து கதவைத் திறந்து இறைவன் திருவடி சேரலாகும். அதுவே மெய்ப்பொருளாகி பேரின்பத்தைக் கொடுக்கும். இது பொய்யல்ல உண்மையே என்பதை அறிவினால் அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

ஆணும் பெண்ணும் கூடியானதனாற் பிள்ளை
ஆச்சு தென்றே நீரும் பேசுகின்றீர்
ஆணும் பெண்ணும் கூடியானதல்லோ பேதம்
அற்றொரு வித்தாச்சு வாலைப் பெண்ணே!
ஆணும் பெண்ணும் கூடிய சிற்றின்பத்தில் வரும்

சுக்கில சுரோணிதத்தால் பிள்ளை உருவாச்சு என்றே நீங்கள் பேசுகின்றீர். அதனால் மட்டும் உயிர் கருவாவது இல்லை. ஆணும் பெண்ணும் சேர்ந்து கூடும் போதில் பேதம் இல்லாத பிரமமாய் ஒன்றாகி நின்ற வாலையே உயிருக்கு வித்தாய் கூடியதால் தான் உயிர் கருவாகி தாய்வயிற்றில் பிள்ளை உருவாகி வளர்கின்றது என்ற உண்மையை அறிந்திடுங்கள். உயிரின் வித்தே வாலை என்றுணர்ந்து வணங்கிடுங்கள்.

இன்றைக் கிருப்பதும் பொய்யல்லவே வீடே
என் வாழ்க்கை யென்பதும் பொய்யல்லவே
அன்றைக் கெழுத்தின் படிமுடியும் வாலை
ஆத்தாளைப் போற்றடி வாலைப் பெண்ணே!

இன்றைக்கும் நான் இறவா நிலையுடன் இருப்பது பொய்யல்லவே. என்றைக்கும் அழியாத வாலையின் வீடே என் வாழ்க்கை என்பதும் பொய்யல்லவே. அதனால் வாலையின் அருளால் சிவலோகம் சேர்ந்து பேரின்பம் அடைந்து உயிர் சிவம் ஆவதே இறுதி நிலை. அதற்கு வாலை பராசக்தியையே தாயாகப் போற்றி வழிபட்டு வந்தால் உங்கள் உயிர் கருவாகும் அன்றைக்கே இறைவன் இதை விதியாக எழுதிவைப்பான்.

வீணாசை கொண்டு திரியாதே யிது
மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க் கூடு
காணாத வாலையைக் கண்டு கொண்டாற் காட்சி
காணலா மாகாய மாளலாமே.

உடம்பே நீ என்று நினைந்து இவ்வுடல் சுகத்திற்காக வீணாசை கொண்டு திரியாதே. இந்த உடம்பு மெய்யல்ல. இதனால் வரும் வாழ்வு பொய்யே, இது அழிந்து போகும் பொய்யான கூடுதான். இவ்வுடம்பில் அழியாத நித்திய உடம்பில் நின்றிருக்கும் வாலையைக் கண்டால் காணாத காட்சி எல்லாம் காணலாம். இருந்த இடத்தில் இருந்தபடியே உலகமெங்கும் நடப்பதை கண்டு கொள்ளலாம். ஆகாய வெளியைப் பறந்து சென்று அவளருளால் ஆளலாம்.

பெண்டாட்டி யாவதும் பொய்யல்லவோ பெற்ற
பிள்ளைக ளாவதும் பொய்யல் லவோ
கொண்டாட்டமான தகப்பன் பொய்யே முலை
கொடுத்த தாயும் நிச மாமோ?

மனைவியாக வந்தவளும் பொய்யான மாயை அல்லவோ. அவளுடன் கூடி பெற்ற பிள்ளைகளாக வருவதும் பொய்யிலே பிறந்த பொய்யல்லவோ. நீ கேட்பதெல்லாம் வாங்கிக் கொடுத்து சந்தோஷப்படுத்தும் தகப்பனும் பொய்யே. தன் முலை சொரிந்து அமுதப்பால் கொடுக்கும் தாயாவது உண்மையா என்றால் இல்லையே. உன்னோடு வந்த வாலை ஒருத்தியே நிசமாவாள்.

தாயும் பெண்டாட்டியுந் தான்சரியே தன்னியம்
தாமே யிருவருந் தாங் கொடுத்தார்
காயும் பழமுஞ் சரியாமோ உன்றன்
கருத்தைப் பார்த்துக்கொள் வாலைப் பெண்ணே!

உலக வாழ்வில் நம் தாயும் நம் மனைவியும் தான் சரிபாதியே தாய் தன் முலையால் பால் கொடுத்து உயிர் வளர்த்தாள். மனைவியும்

அதுபோல் அதனால் சுகங்கொடுத்து உணர்வை வளர்த்தாள். இப்படி இருவருமே தன் பொருளை நமக்குத்தந்து இவ்வுடம்பை வளர்த்தார்கள். அதனால் இருவரும் ஒன்றாக எண்ண முடியுமா? காயும் பழமும் ஒரே சுவையைத் தருமா? அதுபோல் இவ்வுடலில் மனம் தாய் போலும் உணர்வு மனைவி போலும் அமைந்துள்ளது. அதற்குள் அறிவாக விளங்குபவளே வாலை. அந்த வாலையை ஆராய்ந்து அறிந்து அறிவே அவள் என உணர்ந்து அவ்வறிவையே பார்த்து தெளிந்து கொள். வாலை ஒருத்தியே நித்தியம், மற்றவை எல்லாம் அநித்தியமே என்பதை அறிந்து உன்னில் பதிந்து கொள்.

பெண்டாட்டி மந்தை மட்டும் வருவாள் பெற்ற
பிள்ளை மசானக் கரையின் மட்டும்
தெண்டாட்டுந் தர்மம் நடுவினிலே வந்து
சேர்ந்து பரகதி தான் கொடுக்கும்.

எமன் உன் உயிரைக் கொண்டு போனபின் உடலை சுடு காட்டிற்கு எடுத்துப் போகும் போது கூட்டத்தோடு கூட்டமாக தெருவீதி மட்டும் வருவாள். உன் பிள்ளைகள் ஈமச் சடங்கு செய்வதற்கு சுடுகாடுவரை வருவார்கள். அதன்பின் உன் ஆன்மாவோடு கூட வருவதற்கு ஒருவரும் இல்லை. நீ இறைவனைப் பணிந்து வணங்கி தொண்டுகள் செய்து யோகத்திலும் ஞானத்திலும் தேர்ந்து செய்யும் தவமும் தர்மமுமே உன் ஆத்மாவோடு வந்து சேர்ந்து ஆத்மா விரும்பும் பரகதியைக் கொடுக்கும்.

பாக்கியமும் மகள் போக்கியமும் ராச
போக்கியமும் வந்த தானாக் கால்
சீக்கிரந் தருமஞ் செய்யவேண்டுங் கொஞ்சம்
திருப்பணிகள் முடிக்க வேண்டும்.

பூர்வ புண்ணிய பாக்கியமும், மனைவி மக்கள் சுற்றம் என நல்ல வருவாயுடன் வாழும் போக்கியமும். அரசு பதவிகளும் பணமும் உனக்கு வந்ததென்றால் சீக்கிரமாக அதனை நல்ல வழிகளில் தர்மம் செய்ய வேண்டும். கோயில் திருப்பணிகள்

கொஞ்சம் கொஞ்சமாக செய்து உன் கருமவினைகளை கழித்து கும்பாபிஷேகம் நடத்தி முடிக்க வேண்டும்.

திருப்பணிகளை முடித்தோருஞ் செத்துஞ்
சாகாத பேரிலொருவ ரென்றும்
அருட் பொலிந்திடும் வேதத்திலே யவை
அறிந்து சொன்னாளே வாலைப் பெண்ணே!

இவ்வாறு அரும்பாடுபட்டு திருப்பணிகளை முடித்தவர் உடலை விட்டு செத்துப் போனாலும் அவர் பெயர் இவ்வுலகினில் நிலைத்த புகழோடு நின்றிருக்கும். ஆதலால் அவரும் சாகாத பேர்களில் ஒருவர் என்று சிவன் அருளால் சொல்லப்பட்ட நான்கு வேதங்களும் சொல்கின்றது. அதை அறிந்தே வாலையும் நம்மை திருப்பணிகளை செய்துமுடி என்று நமக்கு சொல்லிடுவாள்.

மெத்தை தனிலே படுத்திருந்து நாமும்
மெல்லிய ரோடு சிரிக்கும் போது
யுத்தகாலன் வந்து தான்பிடித்தால் நாமும்
செத்த சவமடி வாலைப் பெண்ணே!

பஞ்சு மெத்தையிலே படுத்திருந்து நம்மனைவியோடு கூடி பேசிச் சிரித்துக் கொண்டிருக்கும் போது எமன் எருமையுடன் வந்து தன் பாசக்கயிற்றால் பிடித்து நம் உயிரை உடலிலிருந்து எடுத்து விட்டால் நாமும் செத்துப் போய் பிணமாகிப் போய்விடுவோம். ஆதலால் உடலில் உயிர் இருக்கும் போதே வாலையின் அருளைப் பெற முயற்சி செய்யுங்கள்.

ஏழை பனாதிக ளில்லையென்றா லவர்க்
கிருந்தா லன்னங் கொடுக்க வேண்டும்
நாளை யென்று சொல்லலாகாதே யென்று
நான் மறை வேத முழங்குதடி.

ஏழைகளும் அனாதைகளும் எதுவும் இல்லாமல் பசியால் வாடுவதைக் கண்டால் அவர்களுக்கு அன்னதானம் அளிக்க

வேண்டும். திருப்பணிகளுக்கும் தர்ம காரியங்களுக்கும் உதவ வேண்டும் என்று கேட்டு வரும் அன்பர்களுக்கு உன்னால் இயன்றதை கொடுத்து அனுப்ப வேண்டும். தானத்தையும் தர்மத்தையும் தடை சொல்லாது செய்ய வேண்டுமே தவிர நாளைக்கு வாருங்கள் என்று சொல்லி காலம் தாழ்த்தக் கூடாது என்றே நான்மறை வேதங்களும் நமக்குச் சொல்லி அறிவுறுத்துகின்றது.

பஞ்சை பனாதி யடியாதே யந்தப்
பாவந் தொலைய முடியாதே
தஞ்ச மென்றோரைக் கெடுக்காதே யார்க்கும்
வஞ்சனை செய்ய நினைக்காதே.

பஞ்சத்தால் வாடி பனாதியாய் நிற்கும் எளியவரை கைநீட்டி அடித்திடாதே. அந்த பாவத்தை தொலைக்க முடியாதே. எளியாரை வலியார் அடித்தால் வலியாரை தெய்வம் அடிக்கும். இறைவனே தஞ்சம் என்று வாழ்வோரைக் கெடுக்காதே. யாருக்கும் வஞ்சனை செய்ய நினைக்காதே. இவையாவும் உனக்கே பாவமூட்டையாகி வல்வினையாகத் தொடரும்.

கண்டதும் கேட்டதுஞ் சொல்லாதே கண்ணில்
காணாத வுத்தரம் விள்ளாதே
பெண்டாட்டிக் குற்றது சொல்லாதே பெற்ற
பிள்ளைக் கிளப்பங் கொடுக்காதே.

கண்ணால் கண்டதையும் காதால் கேட்டதையும் தீர விசாரியாமல் எவருக்கும் சொல்லாதே. கண்ணில் காணாத உத்தரமாய் நின்றிருக்கும் மெய்ப்பொருளைக் கண்டு விட்டால் வெளியில் எவருக்கும் வெளியாகச் சொல்லி விடாதே. பெண்டாட்டியாய் வந்தவளிடம் எல்லா உண்மைகளையும் சொல்லாதே. பெற்ற பிள்ளைகளுக்கு உன்மீதுள்ள மதிப்பைக் கெடுத்து இளக்காரமாய் நடந்து கொள்ளாதே.

சிவன் றடியாரை வேதியரைச் சில
சீர்புல ஞானப் பெரியோரை
மவுன மாகவும் வையாதே யவர்
மனத்தை நோகவும் செய்யாதே.

அன்பே சிவம் என்றிருக்கும் சிவனடியாரை, நான்கு வேதங்களையும் தவறாது ஓதிவரும் வேதியரை உலகில் பெருமையான தவம் செய்து வாழ்ந்திருக்கும் சில ஞானப் பெரியோரைக் கண்டு வணங்கக் கற்றுக்கொள் அவர்களை மவுனமாகக் கூட வார்த்தையால் சுட்டு திட்டிவிடாதே. அவர்கள் மனத்தை வருந்தச் செய்தால் அது இறைவனையே வருந்தச் செய்யும்.

வழக் கழிவுகள் சொல்லாதே கற்பு
மங்கையர் மேல் மனம் வையாதே
பழக்க வாசியைப் பார்த்துக்கொண்டு வாலை
பாதத்தைப் போற்றடி வாலைப் பெண்ணே!

வீணான வாதங்களைப் பேசி வதந்திகளைப் பரப்பாதே. கற்பு மங்கையர் மேல் மனத்தில் ஆசை வைக்காதே. வாசிப் பழக்கத்தை செய்து கொண்டே வாலையின் திருவடியைப் பார்த்து பற்றிக் கொண்டு வாலை மந்திரத்தை சொல்லி அவளையே போற்றி வணங்கிய வண்ணம் தியானத்தில் இருந்திடுங்கள்.

கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலை களவுகள் செய்யாதே
ஆடிய பாம்பை யடியாதே யிது
அறிவு தானடி வாலைப் பெண்ணே!

அதிகமான பொய்களைச் சொல்லி பேசிடாதே. பொல்லாத கொலைகளையும், மற்றவர் பொருள்களை திருடுவதும் செய்யாதே. பாம்பு போல் படம் எடுத்து ஆடிக் கொண்டிருக்கும் இடத்தில் நின்ற சோதியை அணைய விட்டிடாதே. இது அறிவைக் காண்பதுவே அறிவு என நிற்கும் உண்மையாகும். அறிவே வாலையாய் நிற்பதை அறிந்து அவள் பாதத்தைப் பற்றிடுங்கள்.

காரிய னாகினும் வீரியம் பேசவும்
காணா தென்றவ்வை சொன்னாளே
பாரினில் வம்புகள் செய்யாதே புளிப்
பழம் போலுதிர்ந்து விழுந்தானே.

உன்னால் நடக்கும் எல்லாக் காரியங்களுக்கும் காரணமாய் இருப்பவன் ஈசன். இதை அறியாமல் தானே எல்லாக் காரியங்களையும் செய்ய வல்லவன் என்றும் வீரியம் பேசுவது கூடாது என்று உலகுக்கு சொல்லுகின்றாள். இவ்வாறு வீரியம் பேசுவோர்க்குவாலைகாணவேமாட்டாள்.இவ்வுலகினில்சண்டை சச்சரவுகள் என்று செய்து வாழ்ந்து கொண்டிராதே. கத்தியை எடுத்தவன் அதே கத்தியால் சண்டையில் சிக்கி சாவதையும் புளியம்பழம் போல் இப்பூமியில் உதிர்ந்து விழுவதையும் பார்த்து நல்வழியில் நடவுங்கள்.

காசார்கள் பகை செய்யாதே நடுக்
காட்டுப் புலி முன்னே நில்லாதே
தேசாந்திரங்களுஞ் சொல்லாதே மாய்கைத்
தேவடியாள் தனம் பண்ணாதே.

பணக்காரர்களிடம் பகை வளர்த்துக் கொள்ளாதே. அது நடுக்காட்டில் புலி முன்னே நிற்பதற்கு ஒப்பாகும். தேசாந்திரம் செல்கிறேன் என்று பல ஊர்களுக்கும் சுற்றித் திரிந்து இறைவனைத் தேடி அலையாதே. ஆசைவலைவீசி பணம் சம்பாதித்து உன்போதப் பொருள் பறிக்கும் தேவடியாளைப் போல பல தெய்வங்களையும் தேடிச் சென்று அருள் பெறலாம் என்று மாய்கையின் வழியில் செல்லாதே.

தன் வீடிருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே
உன்வீட்டுக் குள்ளேயே யூக மிருக்கையில்
ஓடித் திரிகிறாய் வாலைப் பெண்ணே!

தன் வீட்டில் தன்மனைவி இருக்க அடுத்தவன் மனைவியை நாடி அசல் வீட்டுக்குள் நுழையாதே. பெற்ற தாய் தந்தையரை வாயக்கு வந்தபடி ஏசாதே. உன் உடலுக்குள்ளேயே பேரின்பம் தரும்வீடாக அறிவு இருக்கையில் தன்னை அறியாமல் எங்கெங்கோ இன்பம் இருப்பதாக எண்ணி ஓடி ஓடித் திரிகிறாயே.

சாதி பேதங்கள் சொல்லுகிறீர் தெய்வம்
தானென் றொரு வுடல் பேதமுண்டோ?
ஓதிய பாலதி லொன்றாகி யதிலே
உற்பத்தி நெய் தயிர் மோராச்சு.

சாதி பேதங்கள் சொல்லி பேசுகின்றீர்களே. மனிதர்களில் தான் என்று நின்ற தெய்வம் இருக்கும் சூட்சம உடல் மனிதர்க்கு மனிதர் பேதமாகவா இருக்கின்றது. அந்த ஒன்றான மெய்ப்பொருள் எல்லா சாதியினருக்கும் பேதமில்லாது ஒரே வடிவில் தானே உள்ளது. அதை உணர்ந்தவர்க்கு சாதி மத பேதமில்லையே. ஒன்றாகிய பாலில் இருந்தே உற்பத்தியாகி நெய், தயிர், மோர் வந்தது போலவே பிரமம் ஒன்றிலிருந்தே உயிரும் உடம்பும் உலகும் வந்தது.

பாலோடு முண்டிடு பூனையு முண்டது
மேலாக காணவுங் காண்ப தில்லை
மேலந்த வாசையைத் தள்ளிவிட் டுள்ளத்தில்
வேண்டிப் பூசையைச் செய்திடுங்கள்.

பாலில் உள்ள மோர், தயிர், வெண்ணெய், நெய் போல பால் போன்று விளங்கும் திருப்பாற் கடலின் உள்ளேயே மனம், புத்தி, சித்தம், ஆற்றல் என நான்கு அந்தக் கரணங்கள் இருக்கின்றது. அதிலேயே திருட்டுப்பூனை போல் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் மறைந்து நின்றுள்ளது. இதனை எல்லாம் அங்கு மேலாகப் பார்த்தால் தெரியாது. பாலை காய்ச்சி உரை ஊற்றி தயிராக்கி தயிரைக் கடைந்து மோரைப் பிரித்து வெண்ணெய் எடுத்து அவ்வெண்ணெயை உருக்க நெய் காணும். அதுபோல் உள்ளம் என்ற பாற்கடலின் மேல் நின்ற

மூவாசைகளையும், மும்மலங்களையும் அகற்றி எரிந்து விட்டு உள்ளத்தில் இறைவனை வைத்து அங்கு வாலையை வேண்டிப் பணிந்து பூசை செய்திடுங்கள்.

கோழிக்கறு காலுண்டென்று சொன்னேன் கிழக்
கூனிக்கு மூன்று காலென்று சொன்னேன்
கூனிக் கிரண்டெழுத் தென்று சொன்னேன் முழுப்
பானைக்கு வாயில்லை யென்று சென்னேன்.

உயிர் இருக்கும் கோழி முட்டை போன்ற அண்டத்தில் ஆறு வட்டம் உண்டென்று சொன்னேன். அதில் ஒன்றான ஓங்கார வட்டத்தில் இருந்தே சூரிய, சந்திர, அக்கினி என்ற மூன்று கலைகளும் இயங்குகின்றது என்று சொன்னேன். அங்கு வாசியை அகரம் உகரம் என்ற எட்டிரெண்டு எழுத்தால் சேர்க்கும் வகையைச் சொன்னேன். அதில் ஒன்றில் முழுப்பானை போல் வாயில்லாமல் உள்ளது என்று சொன்னேன். வாசல் உள்ள பானை வழியே வாசியால் உட்புகுந்து சோதியில் கலப்பதே உண்மை என்பதை உணருங்கள்.

ஆட்டுக்கிரண்டு காலென்று சொன்னே னம்
மானைக்குப் பானைக்கு நிற்குமேல் சூல்
மாட்டுக்குக் காலில்லை யென்று சொன்னேன் கதை
வகையைச் சொல்லடி வாலைப் பெண்ணே!

ஆடிக்கொண்டே இருப்பதால் அதை ஆடு என்றும் அங்கே அதற்கு அகாரம் உகாரம் என்று இரண்டு கால் என்று சொன்னேன். அதில் அகாரத்தில் கருவாக சிகாரமாய் இருப்பவனே ஈசன். பானை போன்ற உடம்பில் அவனை மறைத்து நிற்கும் மேலேயுள்ள முட்டை போன்று மூடி நிற்கும் மாடாகிய மனத்திற்கு கால் இல்லை என்று நான் சொன்ன விடுகதையின் வகையை ஓங்கார உண்மையையும் மெய்ப்பொருள் இருப்பிடத்தையும் உணர்ந்து கொண்டு சொல்லுங்கள்.

கோயிலு மாடும் பறித்தவனுங் கன்றிக்
கூற்று மேகற் றிருந்தவனும்
வாயில்லாக் குதிரை கண்டவனு மாட்டு
வகை தெரியுமோ வாலைப் பெண்ணே!

உள்ளத்தையே கோயிலாகக் கொண்டு வீற்றிருக்கும் இறைவனையும், அவனை அறியவிடாது மாடுபோல் மறைந்து நின்ற மனதையும், மேகநீர் போல் மண்டையில் இருந்து இறங்கும் கோழை நீரே எமன் என்பதை அறிந்து வாசியினால் கோழையை அகற்றி எமனை வென்று மனம் என்ற மாயையை நீக்கி இறைவனுடன் இரண்டறக் கலந்து மரணமிலாப் பெருவாழ்வில் இருப்பவனே சித்தன். ஆதலால் வாயில்லாக் குதிரையாகிய வாசியில் ஏறி அண்டக்கல் என்னும் பிரமப்பொருளில் சேர்ந்து இறையருளைப் பெற்று இறவாநிலை அடைந்திடுங்கள். இதுவே குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவான் என்பது. இந்த வகையை அறிந்து வாசியினை கைவல்யப் படுத்துங்கள்.

இத்தனை சாத்திரந் தான்படித்தோர் செத்தார்
என்றா லுலகத்தோர் தாம் சிரிப்பார்
செத்துப் போய்க் கூடக் கலக்கவேண்டுமவன்
தேவர் களுடனே சேர வேண்டும்

இந்த வகையில் தவசாதனை செய்யாது எத்தனையெத்தனை சாஸ்த்திர வேதங்களைக் கற்றிருந்தாலும் எமனிடம் சிக்கி செத்துதான் போவார். ஆனால் தவத்தில் இருந்தவர் செத்தார் என்றாலும் உலகத்தவர் அவரைப் போற்றிக் கொண்டாடுவார். இச்சாதனையில் இருந்தவன் செத்துப்போனால் கூட அவன் ஆன்மா சிவத்தோடே கலந்து அவனருளால் தேவர்களுடனே சேர்ந்து இருந்து பின் மீண்டும் ஞானப்பிறப்புடன் பூமிக்கு வருவான்.

உற்றது சொன்னாக் காலற்றது பொருந்தும்
உண்டோ உலகத்தி லவ்வை சொன்னாள்

அற்றது பொருந்து முற்றது சொன்னவன்
அவனே குருவடி வாலைப் பெண்ணே!

உற்றது சொன்னால் காலற்றது பொருந்தும் என்று உலகத்திற்கு அவ்வை சொன்னாள். உண்மைப் பொருளை குரு சொன்னவுடன் அலைந்து திரியும் காலே இல்லாத ஐம்புலன்களும் அங்கேயே பொருந்தி நிற்கும். இந்த உடலில் பொருந்தி நிற்கும் மெய்ப்பொருளின் இரகசியங்கள் அனைத்தையும் முழுமையாக எடுத்து உபதேசிப்பவனே உண்மையான குரு ஆவான்.

பூரண நிற்கும் நிலையறியான் வெகு
பொய் சொல்வான் கோடி மந்திரஞ் சொல்வான்
காரண குரு அவனுமல்ல இவன்
காரிய குரு பொருள் பறிப்பான்.

பூரணமாகிய மெய்ப்பொருள் தன்னுள் நிற்கும் நிலை அறியான். கற்றதைக் கொண்டு வெகுவான பொய்களை சொல்லித்திரிவான். அனேகவித மந்திரங்களையும் மனப்பாடம் பண்ணி கோடிக் கணக்கான மந்திரங்களைச் சொல்வான். இதுபோல் கோடிக்கணக்கான பேர்கள் இப்பூமியில் பொய்வேடம் பூண்டு வருவார்கள். இவன் காரணகுரு அல்ல. அவன் தன் காரிய குரு. அவனை குரு என்று நம்பிவிட்டால் உன் பொருளையும் பணத்தையும் தான் பறிப்பான்.

எல்லா மறிந்தவரென்று சொல்லி யிந்தப்
பூமியிலே முழு ஞானி யென்றே
உல்லாசமாக வயறு பிழைக்கவே
ஓடித் திரிகிறார் வாலைப் பெண்ணே!

எல்லாம் அறிந்தவள் வாலை ஒருத்தியே பொய் வேடம் போட்டுக் கொண்டு தானே எல்லாம் அறிந்தவன் என்று சொல்லிக் கொண்டு இப்பூமியிலே நான் ஒருவனே முழு ஞானி என்று வாய் ஞானம் பேசிப் பேசி உல்லாசமாக உழைக்காமல் சொகுசாக வாழ்வதற்கும் வயறு வளர்ப்பதற்கும் ஓடித்திரிகிறார்கள்.

வாலையைத் தவிர மெய் குரு என்று வேறொருவர் இல்லையே.

ஆதிவாலை பெரிதா னாலும் மவள்
அக்காள் பெரிதோ சிவன் பெரிதா?
நாதி வாலை பெரிதானாலும் அவள்
நாயக னல்ல சிவம் பெரிது.

ஆதியில் வந்த வாலையே பெரிய தெய்வம் என்றாலும் அவளே கன்னியாகவும், மனோன்மணியாகவும் வந்தருள் புரிகின்றாள். இப்படி வந்த சக்தி பெரிதா சிவன் பெரிதா என்றால் சக்தியே பெரிதாவாள். ஆனாலும் அவள் நாயகனாகிய சிவன் அல்ல சிவமே யாவிலும் பெரிய தெய்வமாம்.

ஆயுசு கொடுப்பாள் நீரிழிவு முதல்
அண்டாது மற்ற வியாதி யெல்லாம்
பேயும் பறந்திடும் பில்லி வினாடியில்
பத்தினி வாலைப்பெண் பேரைச் சொன்னால்.

வாலையை வணங்கி வந்தால் நிறைந்த ஆயுளைக் கொடுப்பாள். சர்க்கரை நோய் முதல் மற்ற எல்லா வியாதிகளும் அவளைத் தொழுது வருவோரை அண்டாது. பேய் பில்லிபோன்ற துர்சக்திகளும் பத்தினி வாலைப் பெண் பெயரைச் சொன்னாலே ஒருவினாடியில் பறந்து போய்விடும்.

நித்திரை தன்னிலும் வீற்றிருப்பா ளெந்த
நேரத்திலும் வாலை முன்னிருப்பாள்
சத்துரு வந்தாலும் தள்ளி வைப்பாள்வாலை
உற்ற காலனையுந் தானு தைப்பாள்.

அயர்ந்துதூங்கும்போதும்அவள்தூங்காதுஉனக்குள்விழித்தபடி வீற்றிருப்பாள். ஆபத்தோ ஆனந்தமோ எந்த நேரத்திலும் வாலை தான் முன்பாக இருப்பாள். எதிரிகள் உன்னைத் தாக்க வந்தாலும் வாலையே உன் முன்னிருந்து அவர்களை விலக்கித் தள்ளி வைப்பாள். உற்ற உயிரைக் கொண்டு போக வரும் எமனையும் தன் காலால் உதைப்பாள்.

பல்லாயிரங் கோடி யண்டமுதல் பதி
னான்கு புவனுமும் மூர்த்தி முதல்
எல்லாந் தானாய் படைத்தவளாம் வாலை
எள்ளுக்கு ளெண்ணெய் போல் நின்றவளாம்.

பல்லாயிரங்கோடி அண்டங்கள் முதல், பதினான்கு புவனங்களும், மும் மூர்த்திகளையும், எல்லாற்றுக்கும் தானே முதலாய் நின்று நினைத்த மாத்திரத்தில் படைத்தவளாம் வாலை பராசக்தி. அவள் எள்ளுக்குள் எண்ணெய் போல் எல்லா உயிரிலும் நின்றிருக்கின்றாள்.

தேசம் புகழ்ந்திடும் வாலைக்கும்மித் தமிழ்
செய்ய எனக்குப தேசஞ் செய்தாள்
நேசவான் வீரப் பெருமாள் குருசாமி
நீள் பதம் போற்றிக் கொண்டாடுங்கடி.

இத்தேசம் புகழ்ந்து போற்றிடும் இந்த வாலைக் கும்மியை செந்தமிழில் நான் எழுத வாலையே எனக்கு உபதேசம் செய்தாள். அவள் குருவாக வந்து சொன்ன உண்மை அன்பே சிவம் என்பதும் அது பெரும் பொருளாகவும், மெய்குருவாகவும், வீரப்பிரமமாகவும் நம்முள் இருக்கும் இறைவன் திருவடியே என்பதுவே. அந்த பெரும் திருவடியையே பற்றி போற்றி கொண்டாடுங்கள்.

ஆறு படைப்புகள் வீடு கடைசூத்ர
அஞ்செழுத்து க்கும் வகை யறிந்து
கூறு முயர் வலவேந்த்ரன் துரைவள்ளல்
கொற்றவன் வாழக் கொண்டாடுங்கடி.

ஆறு ஆதாரங்களையும் அதில் நின்ற தெய்வங்களையும் மேலான சகஸ்ரதளம் என்ற சூட்சமவீட்டையும் நன்கு அறிந்து கொள்ளுங்கள். நமசிவய என்ற அஞ்செழுத்தின் உண்மைகளை நன்கு அறிந்து உச்சரிக்கும் வகையுடன் வாசியில் ஓதிடுங்கள். உடம்பில் நிற்கும் உயர்ந்த பொருளில் வலதில் நின்ற பத்தாம்வாசல் உள் வாழும் வள்ளல் நமை ஆளும் கொற்றவன் ஈசன் அங்கே நிறைந்துவாழ போற்றிக் கொண்டாடுவோம்.

ஆடுங்கள் பெண்டுக ளெல்லோரு மந்த

அன்பான கொங்கணர் சொன்ன தமிழ்

பாடுங்கள் சித்தர்க ளெல்லோரும் வாலை

பதத்தைப் போற்றி கொண்டாடுங் கடி.

பெண்களே! எல்லோரும் சேர்ந்து அந்த அன்பான கொங்கணர் சொன்ன இந்தவாலைக் கும்மியைப் பாடி கும்மி அடித்து ஆடுங்கள். உங்கள் வாழ்வில் வளம் வந்து சேரும். இத்தமிழ் பாடலை எல்லோரும் பாடுங்கள். வாலையின் அருள் பெறலாம். சித்தன் ஆகவேண்டுமென்றால் சித்தர்கள் எல்லோரும் சொன்ன வாலையின் திருவடியையே பற்றிப் போற்றிக் கொண்டாடுங்கள். ஆனந்தம் அடையலாம்.

சித்தர்கள் வாழி சிவன்வாழி முனி

தேவர்கள் வாழி ரிஷி வாழி

பத்தர்கள் வாழி பதம்வாழி குரு

பாரதி வாலைப் பெண் வாழியவே.

சித்தர்கள் வாழ்க! சிவன் நாமமான நமசிவய வாழ்க! முனிவர்கள், தேவர்கள், ரிஷிகள் வாழ்க வாழ்க! அன்னையை வணங்கும் பக்தர்கள் வாழ்க! எல்லா உயிரிலும் நின்ற திருவடி வாழ்க! குருபாரதியாய் வரும் வாலைப் பெண் வாழிய வாழியவே!

வாலைக்கும்மி முற்றிற்று



கொங்கணர்

கருவூர் சித்தர்

கருவூர் தலத்தில் சிவசேவை செய்தபடியே தவம் புரிந்து வாழந்திருந்தவரே கருவூர் தேவர் என்னும் சித்தர். இவர் காளியின் பரம பக்தர். சித்தர்களின் தவசாதனைகளில் நிலைத்து நின்று வாலை அன்னையின் அருள் பெற்று அட்டமா சித்திகளையும் அடைந்தவர். எந்நேரமும் சித்தன் போக்கு சிவன் போக்கென்று திரிந்து கொண்டிருப்பவர். ஆச்சாரம் அனுட்டானம் மிகுந்த சிவன் கோயிலுக்குள் குளிக்காது சுத்தமில்லாது கருவறைக்குள் புகுந்து சிவலிங்கத்தை தொட்டு வணங்குவார். பின் அங்கேயே அமர்ந்து தியானம் செய்வார். அதேபோல் அங்குள்ள பெருமாள் கோயில் கருவறையிலும் புகுந்து பெருமாளைத் தொட்டுவணங்கி தியானம் செய்வார். இதை எவராலும் தடுக்க இயலாது. அவர் உள்ளே வரும் போதே எந்தத்தடையும் ஏற்படாவண்ணம் இறைவனே பார்த்துக் கொள்வான். இதனைக் கண்டு பொருக்காத அந்தணர்கள் இதை அரசரிடம் முறையிட வேண்டும் என்று ஆலோசித்து ஸ்ரீரங்கம் வந்து அங்குள்ள அந்தணர்களுடன் கூடிப்பேசினர்.

இதை அறிந்த கருவூர் தேவர் உடனே வானில் பறந்து ஸ்ரீரங்கம் வந்தார். அவ்வந்தணர்கள் கண்ணில் படும் வண்ணம் அந்தப் பக்கமாய் நடந்து சென்று கொண்டிருந்தார். அதைக்கண்ட கருவூர் அந்தணர்கள் அதோ போகிறானே அவன் தான் கருவூர் தேவன். இங்கும் கருவறையில் நுழையவந்து விட்டான், அனாசாரம் பிடித்தவன் என்று அடையாளம் காட்டி அவன் பின்னே சென்று பார்ப்போம். இங்கும் அது போல் நடந்தால் நாம் அனைவரும் ஒன்று கூடி தடுப்போம் என்று கூறி அவர் பின்னேயே அவருக்குத் தெரியாமல் தொடர்ந்து வந்தனர். இதை அறிந்தும் அறியாதவர் போல் நடந்துசென்ற கருவூர்தேவர் அங்கிருந்த ஒரு வேப்பமரத்தின் அடியில் நின்றார். அம்மரத்தின் உச்சியை பார்த்து காளி எனக்கு ஒரு மொந்தை நிறைய கள்ளும், மீன்குழம்பு சோறும் வேண்டும் தா என்று வேண்டினார். அடுத்த கணம் அவர்கையில் மொந்தை நிறைய கள்ளும், மீன்குழம்புடன் சோறும் கிடைத்தது. அந்தணர்கள் ஆச்சர்யமாய் அதைப் பார்த்தனர். அங்கேயே அமர்ந்து போதை நிறைந்த கள்ளை குடித்து விட்டு மீன்குழம்பையும் ருசித்து உண்டார்.

பின் அங்கிருந்து எழுந்து நகரின் வீதிகளிலே நடந்து சென்று கொண்டிருக்கும் போது ஒரு வீட்டின் வெளியே நின்றிருந்த தாசியைப் பார்த்தார். அழகிய நங்கையான அவளும் சித்தரின் திருமேனி அழகில் மையல் ஆனாள். உடனே கருவூரார் அத்தாசியின் வீட்டிற்குள்ளே அவளுடன் சேர்ந்து உள் நுழைந்து கதவை மூடி தாழ்ப்பாள் போட்டார். அந்தணர்கள் அனைவரும் இதை அரசரிடம் சொல்லி இவன் கயவன் என்பதை கையும் களவுமாக நிரூபிப்போம் என்று கூறி அரண்மனைக்கு ஓடினர். கருவூரான் இரவு முழுதும் அத்தாசியுடன் கூடிக் களித்து விட்டு அதிகாலையில் அங்கிருந்து கிளம்பினார். போகும் போது அத்தாசிக்கு பரிசுப்பொருளாக ஒரு அழகிய நவரத்தின மாலையைக் கொடுத்துச் சென்றார். காலையில் அத்தாசி அந்த நவரத்தின மாலையை கழுத்தில் போட்டுக் கொண்டு மற்றவர்க்கு பெருமையாக காட்டிக் கொள்ள வெளியில் வந்து நின்றாள்.

காலையில் ரெங்கநாதன் கருவறையைத் திறந்த அர்ச்சகர் அவன் கழுத்தில் இருந்த விலைமதிப்பில்லாத நவரத்தின மாலையைக் காணாது குய்யோ முறையோ என கூவி அழுதார். அரசவைக் காவலர்களிடம் எடுத்துக் கூறி ரெங்கநாதன் நகை திருடு போனதாக முறையிட்டார். அப்போது தன் கழுத்தில் அந்த மாலையை போட்டபடி கோயிலுக்கு வந்தாள் அத்தாசி. அதனை அர்ச்சகரும், காவலர்களும் கண்டு இந்த நகை ஏது? உனக்கு எப்படி வந்தது என விசாரணை செய்தனர். தாசி நடந்தவைகளைக் கூறி இது எனக்கு கருவூர் தேவர் பரிசளித்தது என்றாள். காவலர்கள் அவளை அழைத்துக் கொண்டு அரசவைக்கு வந்தனர். கருவூர் தேவரை குறைகூற வந்த அந்தணர்களும் அரசவைக்கு வந்தனர், அரசன் அரியணையில் வந்து அமர்ந்தவுடன் நகையை அணிந்திருந்த தாசியை அரசன் முன் நிறுத்தி, இந்த நவரத்தின மாலை ரெங்கநாதனுடையது. இது எவ்வாறு இவள் கையில் வந்தது என விசாரியுங்கள் மன்னா என வேண்டினர். மன்னா இந்தநகை கருவூர் சித்தரே எனக்கு பரிசாகத் தந்தார். இது அரங்கன் மாலை என்று எனக்குத் தெரியாது என்று அத்தாசி கூறினாள். உடனே அந்தணர்களும் அவளுடன் சேர்ந்து கொண்டு அரசே! நாங்களும் அவரைப் பற்றி கூறவே இங்கு வந்தோம். ஆச்சாராம்

அனுட்டானம் இல்லாமல் கோயில் கருவறையில் நுழைவதும் எவரையும் மதியாமல் திரிவதுவே அவர் வேலை நேற்று அவர்கள் குடித்து விட்டு மீன்குழம்பு சாப்பிட்டதையும், பின் தாசி வீட்டில் நுழைந்ததையும் நாங்கள் பார்த்தோம்.அவர்தான் கருவறைக்குள் சென்று பெருமாள் நகையை திருடி இத்தாசிக்கு கொடுத்திருக்கிறார். அவரை அழைத்து வந்து விசாரித்து நீதி வழங்குங்கள் என்று வேண்டினர்.

அரசரும் தம் படைகளை அனுப்பி அவரை மரியாதையுடன் இங்கு அழைத்து வாருங்கள் என உத்தரவிட்டார். உடனே படைகள் கருவூர் நோக்கி புறப்பட்டு கருவூர் தேவரை கண்டு அரச கட்டளையை கூறினர். சித்தரும் உடனே புறப்பட்டு சோழன் அரசவைக்கு வந்தார். அவருக்கு ஆசனமிட்டு அமரச்செய்து அத்தாசியை வரச்சொல்லி இவளை உங்களுக்குத் தெரியுமா என அரசர் கேட்டார். அவளைப் பார்த்த சித்தர் தெரியும் என கூறினார். பின் நவரத்தின மாலையை எடுத்துக்காட்டி இது நீங்கள் அவளுக்கு பரிசாக கொடுத்ததா என்றார். அதற்கும் சித்தர் ஆமாம் என்றார். இது பெருமாள் நகையல்லவா உங்களுக்கு எப்படி கிடைத்தது என்று கேட்டார். சித்தர் அதற்கு இது எனக்கு பெருமாள் தான் கொடுத்தார் என்றார். இது கேட்டு வியப்படைந்த அரசன் அது எப்படி சாத்தியமாகும். இரவில் அரங்கன் கழுத்தில் அணிந்திருந்த மாலை காலையில் நடைதிறக்கும் போது காணவில்லை. அது இத்தாசியின் கழுத்தில் இருக்கிறது. அவளைக் கேட்டாள் நீங்கள் கொடுத்தது என்கிறாள். உங்களைக் கேட்டாள் பெருமாள் கொடுத்தார் என்கிறீர்கள். இதற்கு யார் சாட்சி என்று கேள்வி கேட்டார் மன்னர்.

கருவூர் சித்தர் இதற்கு பெருமாளே சாட்சி என்று பதில் கூறினார். அதுகேட்டு அரசன் உங்களுக்காக இங்கு வந்து பெருமாள் சாட்சி சொல்வாரா? எங்கே பெருமாளை சாட்சி சொல்ல கூப்பிடுங்கள் என்றான். உடனே கருவூர் தேவர் எழுந்து நின்று ரெங்கா நீயே இங்குவந்து சாட்சி சொல் என்றார். அடுத்த கணமே ஸ்ரீரெங்க நாதன் அங்கே அனைவரும் பார்த்து அதிசயக்க வண்ணம் காட்சி கொடுத்து ஆம் யாமே அவனுக்கு அந்த நவரத்தின மாலையைக்

கொடுத்தோம் என சாட்சி கூறி மறைந்தார். இதனைக் கண்ட அவரை குறை கூறிய அந்தணர்களும் அவர் காலில் விழுந்து மன்னிக்கும் படி வேண்டினார். அரசன் அத்தாசிக்கே அந்த நகை சொந்தம் என தீர்ப்பளித்து கருவூர் சித்தரை கவுரவித்து தக்க மரியாதையுடன் அனுப்பி வைத்தான்.

போகரிடம் மாணாக்கராய் இருந்து சகல ஞானங்களையும் கற்று அம்மையின் அருள் பெற்று அட்டாமா சித்திகளையும் அடைந்து பதினென் சித்தரில் ஒருவரானார் கருவூர் சித்தர். இவர் இப்படியே பன்னெடுங்காலம் இறவா நிலையுடன் கருவூரில் தங்கியே தவம் புரிந்து தமிழில் கருவூரார் நிகண்டு, முப்பு சூத்திரம்,வைத்திய சாஸ்திரம், பூஜாவிதி போன்ற பல நன்னூல்களையும் எழுதினார். இக்கால கட்டத்தில் தஞ்சையில் இராஜராஜ சோழன் உலகமே வியக்கும் வண்ணம் பெரிய கோயிலை கட்டி முடித்து கற்ற பண்டிதர்களைக் கொண்டு கால நேரம் குறித்து கும்பாபிஷேகம் செய்ய நாள் குறித்து வைத்தான்.

கருவறையில் பெருவுடையாரை பெரிய இலிங்கமாக வடிவமைத்து அஷ்டபந்தன மருந்து சாத்தி வேத விற்பன்னர்களைக் கொண்டு பிரதிஷ்டை செய்ய முற்பட்ட போது எவ்வளவோ முயன்றும் லிங்கம் ஆவுடையில் பதியவில்லை. என்ன செய்வது என்று மன்னன் தவித்த போது நம்பியாண்டார் நம்பி அரசே! கருவூரில் சிவனுக்குப் பிரியமான ஒரு சித்தர் வாழ்ந்து வருகிறார். அவரை அழைத்து வந்தால் பிரகதீஸ்வரரை பிரதிஷ்டை செய்து குறித்த நேரத்தில் கும்பாபிஷேகம் நடத்தலாம் என்று ஆலோசனைக் கூறினார். இராஜராஜ சோழன் மகிழ்வுற்று வாருங்கள் நாமே நேரில் சென்று அவரை அழைத்து வரலாம் எனக்கூறி உடனே படைபரிவாரங்களுடன் கருவூருக்குப் புறப்பட்டார்.

கருவூர் சித்தரைக் கண்டு வணங்கி கும்பாபிஷேகம் நடத்தி வைக்க தஞ்சை நகருக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தான். மன்னரின் வேண்டுகோளுக்கிணங்கி கருவூர் தேவரும் உடனே அவர்களுடன் புறப்பட்டு தஞ்சைக்கு வந்தார். பெரியகோயிலின் மூலஸ்தானத்தில் சென்று முறையாக மருந்துகள் சாத்தி

அஷ்டபந்தனம் செய்தும் லிங்கம் ஆவுடையில் பொருந்தாமல் நின் றதைப் பார்த்து தனக்கு அன்னை பராசக்தி அன்றாடம் தரும் அமுர்தத்தை உமிழ்நீராக வெளியில் எடுத்து அஷ்டபந்தன மருந்தின் மீது துப்பினார். அடுத்த கணமே லிங்கம் ஆவுடையில் பொருந்தி பெருவுடையாராக ஈசன் கம்பீரமாக காட்சி தந்தார். அரசன் குறித்த நேரப்படி வேதம் முழங்க யாகத்தீ விளங்க கருவூர் சித்தர் முன்னிலையில் தஞ்சை பெரிய கோயில் கும்பாபிஷேகம் வெகுசிறப்பாக நடந்தது. கருவூர் தேவரும் இராஜராஜ சோழன் விருப்பப்படி அக்கோயிலிலேயே தங்கி தவம் செய்து வந்தார். அவ்விடத்திலேயே கருவூர் சித்தருக்கு சிலை வடித்து கோயில் அமைத்தான் மன்னன் இன்றும் அங்கும் சிவனடியார்களாலும், கருவூர்சித்தர் பக்தர்களாலும் சிறப்பான சித்தர் வழிபாடு நடந்து கொண்டிருக்கின்றது.

பின்னர் கருவூர் சித்தர் தன்சொந்த ஊருக்கே திரும்பி அங்கேயே தங்கி தவம் புரிந்தவாறே வாழ்ந்து வந்தார். இறைவனிடம் இருந்து தான் ஜீவசமாதி அடைவதற்கான ஆணை வந்ததும் தான் தவம் புரிந்த இடத்திலேயே ஜீவ சமாதியாகி வாழ்ந்து வருகிறார் கருவூர் சித்தர். கரூரின் நடுவில் விளங்கும் சிவன் கோயிலும், கருவூர் சித்தரின் சமாதியும் வெகு நேர்த்தியாக அவ்வூர் அன்பர்களால் பராமரிக்கப்பட்டு வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகிறது.



கருவூரார்

ஸ்ரீ கருவூர் சித்தர் பூசை விதி

காப்பு

தெளிவுதனில் தெளுவுதரு மருளுங் காணும்
க்ஷணத்திலே சிவமயமுஞ் சேரத் தோணும்
வழியதனில் நல்லவழி ஞானங் கூடும்
மகத்தான வேதாந்தஞ் சித்தி காட்டும்
ஒளிவுதனி லொளிவுதரு முறுதி சொல்வார்
உற்பனத்தி லுற்பனமா யுறுதி தோணும்
வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கி நின்ற வாலைப்பெண் ணாதி காப்பே.

தெளிவான அறிவு தெளிந்த பேரறிவாகி அருளை அடையச் செய்யும் இந்நூல், கண் இமைக்கும் கணத்தில் சிவமயத்தில் சேர்த்து வைக்கும். இறைவனை அடையும் வழிகளில் உண்மையான நல்வழிகாட்டி மெய்ஞ்ஞானத்தைக் கூட்டி வைக்கும். மிக மேன்மையான வேதாந்தமும் சித்தாந்தமும் அறிவித்து அதில் வெற்றி அடையும் சூட்சமத்தைக் காட்டும். ஒளிவு இன்றி ஒளியைக் காட்டி ஒளிக்குள் ஒளியாக விளங்கும் வாலையின் திருவடியைப் பற்றி உறுதியுடன் தவம் செய்யவே சித்தர்கள் அனைவரும் சொல்வார்கள். இவ்வுலகில் பிறப்பெடுக்கும் உயிர்களில் எல்லாம் உற்பனமாகி நிற்கும் வாலையை உறுதியுடன் பற்றும் தவத்தினை தோற்றுவிக்கும். ஆகாய வெளியான உள்ளத்துள் வெளியாகி ஓங்கார நாதத்துள்ளே விளங்கி வாலைப் பெண்ணாகிய ஆதி பராசக்தி அன்னையே இந்நூலிற்கு காப்பாவாள்.

நூல்

1. ஆதியந்தம் வாலையவ ளிருந்த வீடே
ஆச்சரியம் மெத்தமெத்த அதுதான் பாரு
சோதியந்த நடுவீடு பீட மாகிச்
சொகுசுபெற வீற்றிருந்தாள் துரைப் பெண்ணாத்தாள்

வீதியந்த ஆறுதெரு அஃமர்ந்த வீதி
விளையாடி நின்றதிரு மாளி கண்டாய்
பாதிமதி சூடியே யிருந்த சாமி
பத்துவய தாகுமிந்த வாமி தானே.

ஆதியும் அந்தமும் இல்லாத வாலை அன்னை நம்முள் ஆதியாகவும் அந்தமாகவும் இருந்த வீடே சூட்சமமாகும். அதற்குள் அதிசயப்படத்தக்க ஆச்சரியங்கள் வெகுவாகப் பொருந்தியுள்ளது. அதுதான் மெய்ப்பொருள் என்பதை அறிந்து ஆராய்ந்து பார். அதில் நின்ற சோதி ஒளியை நடுவீடாகக் கொண்டு அதையே தன் இருப்பிடமான சக்தி பீடமாக்கி அங்கே பேரழகு வடிவாய் வீற்றிருந்தாள் ஆத்தாள் என்னும் எல்லாம் வல்ல வல்லவளாகிய வாலைப் பெண். ஆறு ஆதாரங்களிலும் அமர்ந்து அதை தான் விளையாடும் தெருவீதியாகக் கொண்டு அவள் நிலையாக நின்றிருக்கும் சகஸ்ரதள தாமரை என்னும் அழகு மாளிகையாக விளங்குவதை கண்டு கொள். அங்கே பிறைச் சந்திரனை சூடியபடி இருந்த தெய்வம் பத்து வயதுடைய இந்த வாலைப்பெண்ணே ஈசன் இடபாகங் கொண்ட வாமி ஆவாள்.

2. வாமியிவள் மர்மம் வைத்துப் பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிகமாக
காமிவெகு சாமி சிவகாம ரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னி கன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்தாலு மனமடக்க மறிய வேணும்
நாமிவளைப் பூசைபண்ண நினைத்த வாறு
நாட்டிலே சொல்லவென்றால் நகைப்பார் காணே.

ஈசன் திருமேனியில் சரிபாதி கொண்ட வாமியான இவள் இருக்கும் சூட்சமத்தை அறிந்து அதிலேயே மனம் வைத்து மனம் அசையாது பூசை பண்ண உனக்கு அறிவு தெளிவாக இருக்க வேண்டும். அனைத்தையும் காண்பிப்பவள், எல்லா தெய்வங்களாகவும் இருப்பவள், சிவனோடு சேர்ந்து இணை

பிரியாது நிற்கும் சிவலிங்கரூபினி, கண்களால் காண்பதற்கு அரிதானவள், அவள் சிறுபெண்பிள்ளையாகிய வாலைக் கன்னி, கன்னிகா பரமேஸ்வரி. ஆம் என்ற அகார வெளியில் விளங்கும் மனோன்மணித்தாயான இவளை அறிந்தவர்களே சித்தர்கள். அவள் அருள் பெற்று அமுர்தம் உண்டவர்களே சித்தர்கள். இவளை அறிந்தாலும் மனம் அசையாமல் அடங்கச் செய்யும் வாலை பூசையை அறிய வேண்டும். அதனால் அவள் திருவடியில் மனம் அடங்கி ஒடுங்குவதை உணரலாம். நாம் இவளை எப்போது நினைத்தாலும் இந்தப் பூசையை செய்து அவளை வணங்கலாம். இதை இந்த நாட்டில் உள்ளவர்களிடம் வெளிப்படையாக சொல்லவென்றால் அவர்கள் உன்னைப் பார்த்து கேலியாக சிரிப்பார்களே.

3. காணப்பா இவளுடைய கற்பு மெத்த
கண்டவர்க்குப் பெண்ணரசு தானே யென்பாள்
ஊணப்பா வமிர்த மிவளூட்டி வைப்பாள்
உள்வீட்டுக் குள்ளிருந்து மேலே யேறப்
பூணப்பா மனமுறைந்து வாவா வென்பாள்
புத்திரனே யென்மகனே யென்று சொல்லி
வேணப்பா வேணதெல்லாந் தருவே னென்பாள்
வேதாந்த சூட்சமெல்லாம் விளங்குந் தானே.

ஈசனைத் தவிர வேறு எவராலும் தொடமுடியாத இவளுடைய கற்பை அறிந்து அவளைக் கண்டு கொள்ளப்பா. அவளை விட்டகுறை தொட்ட குறை உள்ள பூர்வ புண்ணியப்பிறவிகளே கண்டுஉணரமுடியும். அப்படிக்கண்டவர்களுக்கு தானேயாவிற்கும் தலைவியாக நின்ற பெண்ணரசி என்பதை குருவாகி வந்து விளக்கி உபதேசிப்பாள். அவள் திருவடியை ஊன்றிப் பற்றித் தவம் இருந்தால் அமுர்தத்தை வழங்கி அன்னையாகி ஊட்டி வைப்பாள். மூலாதாரம் என் உள்வீட்டுக்குள்ளிருந்து வாசியினால் மேலே ஏறி அவள் திருவடியில் சேர்ந்து தவத்தைப் பூணும் போதில் மனம் மகிழ்ந்து நம்மை பேரின்ப வீடு காண வா வா என அழைப்பாள். உத்தமமான பத்தாம் வாசல் புகுந்த புத்திரனே, என் மகனே என்று

சொல்லி தன் பேரருளால் உனக்கு வேண்டியது எல்லாம் கேளப்பா தருகிறேன் என்பாள். அவள் அருளும் மெய்ஞ்ஞானத்தினால் வேதாந்தம் கூறும் பிரமத்தின் சூட்சமமெல்லாம் உனக்குத் தானாகவே விளங்குமப்பா.

4. தானென்ற வாலையிவள் ரூபங் காணச்
சமர்த்துண்டோ ஆண்பிள்ளை தானுமுண்டோ
பானென்ற வாமத்துக் குள்ளே யப்பா
பராபரையாள் பலகோடி விதமு மாடித்
தேனென்ற மொழிச்சி யிவள் சித்தர்க்கெல்லாம்
சிறுபிள்ளை பத்து வயதுள்ள தேவி
ஊனென்ற வுடலுக்குள் நடுவு மாகி
உத்தமியாள் வீற்றிருந்த வுண்மை தானே.

தானாகி நின்ற வாலையான இவள் எங்கும் நீக்கமற நிறைந்தவள். அவள் தன் உடம்பில் நின்ற வடிவத்தைக் காண எவருக்கும் சாமர்த்தியம் உண்டோ. அவள் இல்லாத ஆண்பிள்ளை யாரேனும் உண்டோ. அமுர்தம் விளையும் மதிமண்டலமான வாம பாகத்துக்குள்ளே தானப்பா பராபரையாள் வீற்றிருக்கின்றாள். அவளே பலகோடி விதமான உயிர்களில் எல்லாம் வாலைப் பெண்ணாக ஆடிக்கொண்டிருக்கின்றாள். தேனினும் இனிய மொழிபேசநின்று வழிகாட்டும் இவள்தான் சித்தர்களுக்கு எல்லாம் குருவும் திருவும் ஆவாள். அவளே சிறு பெண் பிள்ளையாக பத்து வயதே உடைய வாலையான தெய்வங்களுக்கு எல்லாம் மேலான தேவி ஆவாள். உடம்புக்குள் நின்ற அழியாத சூட்சம உடலுக்குள் நடுவுமாகி நம்மைக் காக்கும் உத்தமியாள் வீற்றிருந்த உண்மையை உணர்வீர்.

5. உண்மையிவள் நாணமில்லா திருந்த வீடே
ஊருக்குள் நடுவீடே உற்றுப்பாரு
செம்மையாய்க் கண்டவர்க ளுண்டோ அப்பா
செகசால வித்தை யிவளாடும் வித்தை
உண்மையடா பஞ்ச வண்ணமாகி நின்ற

உலகுதனி லலைந்தவர்கள் கோடா கோடி

நின்மலமாய்க் கண்டவர்கள் சொல்லா ரப்பா

நேசமுடன் எனக்குரைத்த நிசங் கண்டேனே.

உண்மையில் இவள் இருக்கும் வீடு நிர்வாணமாக வெளியாக நின்ற இடமே. அதுவே நாம் போய் சேர வேண்டிய ஊராகும். அந்த ஊருக்குள் சூட்சம் என்ற நடுவீடே அவள் வீற்றிருக்கும் இடமாகும். இந்த உண்மையை உணர்ந்து அவளை முழுமையாகக் கண்டவர்கள் எவரேனும் உண்டோ அப்பா. அவள் என்றும் நிலையாக இருப்பவள். அவள் எப்போது வந்தாள் என்பதும் எங்கு போய் மறைந்தாள் என்பதும் ஈசனுக்கே தெரியாதாம். மற்றவரால் எப்படி அறிய முடியும். இவளே எல்லா உலகையும் உயிர்களையும் ஆட்டுவிப்பவள், நம்முள்ளும் நின்று ஆடுகின்றவள். அவள் திருவடி ஒன்றே நிலையான சத்தியப் பொருளாகும். அது தனக்குள் ஐந்து வண்ணமாக அமைந்துள்ளது. இதனை அறியாமல் உலகமெங்கும் தேடி அலைந்தவர்கள் கோடானு கோடி. தன்னுள் நின்ற ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் நீக்கி தன் அறிவை பேரறிவாக்கி அவ்வறிவினால் வாலை அன்னையைக் கண்டவர்கள் அதை வெளியில் சொல்லார்களப்பா. அன்புடன் எனக்கு அவளே உபதேசித்தமையால் அவள் திருவடியாகிய மெய்ப்பொருளை நான் கண்டேனே.

6. கண்டதொரு பூரணத்தின் மகிமை கேளு

கால்மேலும் தலைகீழும் நடுவு மாகி

அண்டரொடு முனிவர்களும் கண்டு போற்ற

ஆதவனு மம்புலியு மதிலே நின்று

தொண்டுபண்ணு மவர்களிலே நாலுபேர்கள்

சுகம் பெறலா மென்று சொன்ன வாசல்நாலு

கொண்டவர்கள் கண்டுவந்த தொண்ணூற் றாறு

கொள்கையெனக் காத்திருந்த குறிப்பைப் பாரே.

நான்கண்ட ஒன்றான பூரணப்பொருளின் மகிமையைச் சொல்கின்றேன், கேளப்பா. அதிலே கால் மேலாகவும் தலை

கீழாகவும் சூட்சம உடம்பு நின்று அதன் நடுவே விளங்கும் சோதி ஒளி ஆனவளே வாலை அன்னை. தேவர்களோடு முனிவர்களும் வாலையைக் கண்டு போற்றியே அவள்தாள் பணிந்து வணங்கிடுவார்கள். அவ்வொளியில் இருந்தே சூரியனும் சந்திரனும் நின்று ஒளி வழங்குகின்றார்கள். அங்கே மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் எனும் நான்கு அந்தக் கரணங்கள் வேலை செய்தபடி இயங்குகின்றது. அதிலே சேர்ந்தால் இன்பம் பெறலாம் என்று சொன்ன சுழுமுனை வாசலில் நான்கு கதவுகள் உள்ளது. அம்மெய்ப்பொருளை பற்றி தவம் செய்யும் உத்தமர்கள் தொண்ணூற்றி ஆறு தத்துவங்களையும் கண்டு, அதையும் கடந்து நின்ற ஒன்றையே கொள்கையாகக் கொண்டு நிற்பார்கள். குறியாக நின்று காத்திருக்கும் அவள் திருவடியை அடைவதையே உறுதியாக இருந்து அக்குறியையே பார்த்து தவம் செய்யே.

7. பார்த்தவர்கள் செய்தொழிலும் மனமும் வேறாய்ப்
பலநூலைப் படித்தும் படுகுழியில் வீழ்வார்
ஏற்றபடி மனம் போனாற் புத்தி போச்சே
ஏழைமதி போகாதே என்தாய் பாதம்
போற்றுதற்கே ஐவரையும் மனத்தி லொன்றாய்ப்
புத்திசித்த மோர்நிலையில் நிறுத்தி வாசம்
பூத்த மலரெடுத்து திருப்பாதம் போற்ற
பொறியைந்து கருவிகரணாதி போமே.

பலநூல்களை படித்து கற்ற அறிவைக் கொண்டு யோக ஞான சாதனைகளை செய்து பார்த்தவர்கள் செய்கின்ற செயலும் மனமும் வெவ்வேறாக இருக்குமானால் படுகுழியில் தான் வீழ்வார்கள். நினைத்தபடி எல்லாம் மனம் போனால் அறிவு வெளிப்படாதே. மனம் போன போக்கில் எல்லாம் நடந்து ஒன்றுமில்லாத ஏழையாகி அறிவை விட்டுவிடாதே. அறிவினால் அறிவை அறிந்து என் தாய் வாலையின் திருவடியைப் போற்றி வணங்குவதற்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் மனத்தினில் ஒன்றாக்கி கட்டி நிறுத்தி அங்கேயே புத்தியையும் சித்தத்தையும் ஓர் நிலையில் நிறுத்தி வாசி என்னும் வாசமிக்க பூத்தமலரை

எடுத்து அவள் திருவடியில் சாத்தி வழிபடும் யோக ஞானத்தால் ஐம்பொறிகளும் அடங்கும். அந்தக்கரணங்களும் ஒடுங்கும்.

8. போச்சுதடா மனமாய்கை வீறு போச்சு
பொறியைந்து கருவிகரணாதி போச்சு
ஏச்சுதடா வென்றுமன மிறக்க லாச்சு
எனக்கொருவ ரிணையில்லை யென்ற பேச்சு
வாய்ச்சுதடா மனமடங்க வங்கென் றோர்சொல்
வாய்பேசா மவுனத்தை யதிலே சேர்க்கக்
காய்ச்சுதடா பூத்தமலர் கருத்தை யூன்று
கனியாகு மக்கனியைக் கண்டு கொள்ளே.

வாலையின் அருளினால் மனத்தில் நின்ற மாயை விலகிப் போச்சு. நான் என்ற வீராப்பு அடங்கிப் போச்சு, ஐந்து பொறிகளும், கருவி கரணாதிகளும் அவள் திருவடியில் நின்றுபோச்சு. இத்தனைக்காலமாய் அறியாமை இருளில் இருக்கவைத்து ஏய்த்துக் கொண்டிருந்த மனம் இல்லாமல் இறக்கலாச்சு. இவ்வுலகில் எனக்கு ஒருவரும் இணையாக இல்லை என்ற பெயர் எனக்கு கிடைத்தது. மனம் இறந்து அறிவாக ஆனதனால் அல்லவோ இந்த பேரும் நிலையும் எனக்கு வாய்த்தது. ஆதலால் மனம் அடங்க 'வங்' என்று கண்டத்தில் ஊமை எழுத்தாய் நின்ற மெய்ப்பொருளில் 'ம்' என்று சொல்லி அதிலே சேர்த்தால் சோதி ஒளியில் இருந்து நாதம் ஒலியாகத் தோன்றும். பூத்து நிற்கும் சகஸ்ரதள மலரின் நடுவில் அறிவை ஊன்றி நிறுத்தி நின்றால் பேரறிவாகி ஞானக் கனியாகும். அந்த ஞானம் என்ற கனியை அடைந்து வாலை அன்னையின் திருவடியைக் கண்டு கொள்ளப்பா.

9. கொள்ளுதற் கிங் கின்னமொரு குறிப்பைக் கேளு
கோடியிடி மின்முழங்குங் கண்ணை மூடு
விள்ளுதற்கு மனமடங்காப் பூதங் காணும்
விள்ளாதே யுள்ளபடி சிங்கென் றோர் சொல்
விள்ளவுமே வுபாயமதால் நடுவே நில்லு

வேகமெல்லா மொடுங்குமடா சத்தம் போச்சு
கள்ளரைப்போல் மயங்காதே மவுனத் தூன்று
கண்ணினையும் திறக்காதே கருதிப் பாரே.

வாலை அன்னையை கண்டு கொள்வதற்கு நான் சொல்லும் இன்னும் ஒரு சூட்சமத்தை கவனமாய் கேளப்பா. வாசியும் சோதியும் சேரும் யோக ஞானத்தால் இடி முழங்கி மின்னல் ஒளி தோன்றுவது போல் நாதம் கேட்டு சோதி ஒளி மின்னிப் பிரகாசிக்கும். வெறித்திது திரியும் கண்ணை மூடு. வெளியில் நின்ற அடங்காத மனம் உள்வெளியில் வாலை வீற்றிருப்பாள் கண்டு கொள்ளு. அதை வெளியாக வேறு ஒருவருக்கு சொல்லாதே. அவளை உள்ளபடி உணர்ந்து கொண்டு வாசியினால் சிங் என்ற ஓரெழுத்தை சொல்லும் உபாயமதை அறிந்து அவ்வுள் வெளியில் நடுவே நிறுத்து. நம்பிறவியில் வீறிட்டெழும் காம கோப என்ற அட்ட விகாரமெல்லாம் அடங்கி ஒடுங்குமடா. சத்தம் என்ற நாதமும் ஒடுங்கிப் போய்விடும். திருடரைப்போல் மாயையில் மயங்கிடாதே. அங்கே ம் என்ற மவுனத்தில் மனத்தை ஊன்று. கண்ணினையும் திறக்காதே. மெய்யறிவான ஞானத்தால் அவள் அருளை அடைவதையே கருத்தாகக் கொண்டு அறிவினால் பார்த்து தவம் செய்து பாரே.

10. பாரேது புனலேது அனலு மேது
பாங்கான காலேது வெளியு மாகும்
நாரேது பூவேது வாச மேது
நல்லபுட்பந் தானேது பூசை யேது
ஊரேது பேரேது சினமு மேது
ஓகோகே அதிசயந்தா னென்ன சொல்வேன்
ஆறேது குளமேது கோயி லேது
ஆதிவஸ்தை யறிவதனா லறிய லாமே.

மண்ணாகி வந்தது எது? நீராகி நின்றது எது? தீயாக விளங்குவது எது? ஒழுங்காக இயங்கும் காற்றானது எது? எல்லாம் ஆகாயத்தில் இருந்தே வந்ததாகும். நரம்பால் பின்னிய உடம்பானது எது?

அதில் பூவாக நின்ற உயிரானது எது? பூவில் வாசமாக விளங்கும் சக்தி எது? நல்ல புஷ்பமாக விளங்கும் ஆயிரம் இதழ் கூடிய சகஸ்ரதளத்தாமரை எது? அப்பூவில் செய்யும் பூசை என்பது எது? எல்லா ஊராகவும் நின்றது எது? அனைத்து பெயர்களாகவும் விளங்குவது எது? கோபம் தோன்றும் இடம் எது? அதுவாக விளங்கும் ஓங்காரமாகிய வீட்டில் விளங்கும் அதிசயங்கள் எப்படி என்று நான் சொல்வேன். பெருகி வரும் ஆறு எது? குளமாகி நீர் நின்ற இடம் எது? கோயிலாக விளங்குவது எது? இவையாவும் ஒன்றாகி நிற்கும் ஆதிப் பொருளான அவ்வாலைப் பராசக்தியை அறிந்தால் எல்லாம் அவளே என்ற உண்மையை அறியலாம்.

11. ஆமெனவும் ஊமெனவும் மிரண்டுங் கூட்டி
அப்பனே ஓமென்ற மூன்று மொன்றாய்
நாமெனவுந் தாமெனவும் மொன்றே யாகும்
நல்லவர்க ளறிவார்கள் காமி காணான்
வாமம் வைத்து பூசைபண்ண இந்த மார்க்கம்
வந்தவர்க்குச் சத்திசிறு பிள்ளை வாலை
சோமநதி யமுதமுண்ண வாவா வென்பாள்
சுகமுனக்குப் பரமசுக மருள் செய்வாளே.

ஆம் என்ற அகாரத்தையும் ஊம் என்ற உகாரத்தையும் கொண்டு வாசியினால்இரண்டையும்கூட்டிம்என்றுசேர்க்கும்போதுமூன்றும் ஓம் என்ற ஓங்காரமாகி ஒன்றாகும். அப்பனே அதில் நாதம் என்ற ஒலியாகவும், தானாகி நின்ற ஒளியாகவும் நின்ற பரம் பொருள் ஒன்றே ஆகும். அதனை புண்ணியப்பிறவிகளான நல்லவர்களே அறிவார்கள். தீவினையில் உழலும் பெண்ணாசையில் சிக்கி திரிபவன் இதனை எக்காலத்திலும் பார்க்க மாட்டான். அழகு மிக்க அன்னை அவள் திருவடியில் மனதை வைத்து பூசை பண்ணி ஒளியில் கலந்து தவம் புரிவதே சித்தர்களின் யோக ஞானம். இந்த மார்க்கத்தில் வந்தவர்க்கு அப்பராசக்தி பத்து வயதே உள்ள சின்னஞ்சிறு பெண்பிள்ளையான வாலையாகி குருவாகி நிற்பாள். மதிமண்டலத்தில் அமுர்தம் ஊற்றெடுக்கச் செய்து மகனே வா வா என்றழைத்து உண்ணச்செய்வாள். சும்மா இருக்கும்

சுகமான சமாதி இன்பத்தைக் கொடுத்து பரம்பொருளோடு கூடி நிற்கும் நிலையான பேரின்ப வீட்டை அடைய உனக்கும் அருள் செய்வாளே.

12. செய்குவாய் பூசையது செய்யும் போது
செய்குறிகள் தவறாமல் நடக்க வேண்டும்
உய்குவாய் பெண்ணரவம் கடியா வண்ணம்
ஊமையென்ற நடுத்தீயை யதிகங் கொண்டால்
பைகுவாய் அரவுவிடம் பொசுங்கிப் போகும்
பங்கமுனக் கில்லையடா அங்க மீதில்
ஐகுவாய் உள்ளடங்கிப் பேச்சை விட்டே
அழைத்திடவே யஞ்சுமது கொஞ்சுங் காணே.

அன்னையின் அருளை அடைந்திட நாங்கள் செய்தவாலை பூசை என்ற சாதனையை விடாமல் செய்து வருவாயப்பா. இச்சாதனையை செய்து வரும் போது ஒழுக்க விதிகள் தவறாமல் நடக்க வேண்டும். காமம் என்ற சிற்றின்ப ஆசையில் வீழ்ந்து பெண் எனும் பாம்பு கடியா வண்ணம் விந்து சக்தியை காத்திட்டால் நீ உய்வடைவாய். காம ஆசை எழுந்தால் ஊமை எழுத்தான இம் என்ற மந்திரத்தால் வாசியை நாதத்துடன் எழுப்பி மெய்ப் பொருளின் நடுவில் நின்ற சோதி ஒளியில் கூட்டி கும்பகத்தில் அதிக நேரம் நின்றிருந்தால், படமெடுத்தாடி சீறும் பாம்பு பாம்புபிடாரன் பையில் அடங்கி ஒடுங்குவதைப் போல் மெல்ல மெல்ல காமம் எனும் தீ பொசுங்கிப் போய் விடும். அதன் பிறகு உனக்கு தோல்வி என்பதே இல்லையடா: உடம்பில் இருந்த மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம்பொறிகளின் சேட்டைகளும் அங்கே அடங்கி உள் நிற்கும். பேச்சை விட்டு மவுனத்தில் நின்றே இம் என்று ஊன்றி அம்மா என்று வாலை அன்னையை அழைத்திடவே அவள் அருளால் ஐந்து பூதங்களும் உனக்கு கட்டுப்பட்டு ஏவல் செய்யும். ஆதலால் வாலையின் திருவடியை பற்றி இப்பூசையை செய்து பாரே.

13. காணாத காட்சியெல்லாங் கண்ணிற் காணும்
கலங்காதே மெய்ம்மயக்கம் மெத்த வாகும்
பூணாத பணிபூண்டு சிறுபெண் ணாகப்
போதமெனும் பொருள்பதிக்க வருவாள் கண்டாய்
வாணாளை மடக்கியிவள் ரூபங் கண்டு
மயங்காதே மவுனத்தில் நில்லு நில்லு
கோணாத முக்கோணக் குறியைப் பாரு
கூசாதே கண்கூசுங் கூசுங் காணே.

காணாத அரிய காட்சி எல்லாம் உன்கண்ணில் தெரியும். எதைக்கண்டும் அச்சப்பட்டு கலங்காதே. கண்ணீர் விட்டு கலங்கி அழுது அவள் திருவருள் ஒன்றையே நினைந்து தியானித்திரு. உடலில் ஆனந்த மயக்கம் அதிகமாகும். தன்னிகரில்லாத அழகு வடிவங்கொண்டு பத்துவயதுடைய சிறு பெண்ணாக வாலைத்தாய் ஞானம் போதிக்க வருவாள். மெய்ப்பொருளை உன்னுள் பதித்து அதற்குள்ளேயே நின்றிருப்பாள், கண்டு கொள்வாய். வாழ்நாள் கணக்காக உள்ள வாசியை நாதமாக இயக்கி அன்னை அவள் திருவடியை விட்டு அகலாது பற்றிக் கொள். அவள் திருமேனி அழகைக்கண்டு மயங்காதே. அவள் ரூபமான சோதி ஒளியிலே வாசியைக் கூட்டி ம் என்னும் மவுனத்திலேயே நில்லு நில்லு. வளையாத வட்ட முக்கோண சக்கரத்தில் குறியாக நிற்கும் நடுவையே பார்த்தபடி தவத்தில் நில்லு. சோதி ஒளி பிரகாசிப்பதை பார்த்து கண் கூசும். அஞ்சாது அசையாது கண்கூசச் செய்யும் அப்பேரொளியையே கண் கூசாது கண்டு அன்னையை கண்டுகொள்.

14. கூச்சமற்றுப் பார்க்கையிலே இருள்போல் மூடும்
கொள்ளி கொண்டு கொளுத்தியதை வெளிச்சம்போடு
வாய்ச்சமர்த்துப் பேசாதே மவுனத் தூன்று
வாவா வென்றே நீயும் வருந்தக் கூவச்
சூட்சமது விருந்த விடஞ் சொல்ல லாமோ
சொல்லுதற்கு வாய்விட்டுச் சொல்ல லாமோ

தாய்ச்சமர்த்துப் பாராதே தாயைப் போற்று

சற்குரு போலுற்பனத்தைத் தாய் சொல்வாளே.

எதற்கும் அஞ்சாது மெய்ப்பொருளை பற்றி அசையாது நின்று தவம் செய்து பார்க்கும் போது அங்கே மாயை இருள்போல மூடும். உள்ளிருக்கும் சோதி ஒளியைக் கொண்டு அம்மாயையை அத்தீயினால் ஒழித்து நீக்கி விட்டு அவ்வொளியை பேரொளியாக்கி வெளிச்சமாக மாற்று. வாய் திறந்து உன்திறமையை வெளிச்சம் போட்டு பேசாதே. மவுனத்திலேயே ஸ்திரமாக ஊன்றி நில். வாசியினால் நீயும் நாதத்தை எழுப்பி கூவி சோதி ஒளியில் கூடினால் சூட்சமதுவாக வாலை அன்னை இருந்த இடம் தெரியுமப்பா. அதை யாரிடமும் வெளியில் சொல்லிவிடாதே. அதனை வார்த்தைகளினால் வாய்விட்டு சொல்வதற்கும் இயலாதே. தாயான அப்பராசக்தியின் ஆற்றல்களை எவ்வளவு என்று ஆழம் பார்க்காதே. அது வேதத்திலிருந்து ஈசன் வரையில் எவராலும் அறிய முடியாதது. அன்னை அவள் திருவடியைப் பற்றியே போற்றி நில். வாலையே சற்குருவாகி அனைத்து இரகசியங்களின் உண்மைகளையும் சொல்லிக் கொடுப்பாள்.

15. சொல்வதற்கிங் கிவளையலால் சுகம்வே றுண்டோ

சூட்சமெல்லா மிவளைவிடச் சூட்ச முண்டோ

நல்லவர்க்கு நடுவில்விளை யாடும் வல்லி

நாதவிந் தோங்கார நிலையுங் காட்டி

வல்லவர்க்கும் வல்லவளும் நானே யென்பாள்

வரமவர்க்கு வேணதெல்லாம் வழங்கு ரூபி

புல்லருக்கிங் காயுதமும் புல்லே யாகும்

புத்திகெட்ட லோபிகட்குப் புகலொ ணாதே.

சொல்வதற்கு இவள் திருவடியை சேர்வது அல்லாது வேறு இன்பம் உண்டோ? எல்லா இரகசியங்களுக்கும் மேலான சூட்சமமாய் இருக்கும் இவளைவிட சூட்சமம் ஏதேனும் உண்டோ? பூர்வ புண்ணியமுள்ள நல்லோர்கள் உள்ளத்தில் நின்று விளையாடும் ஆனந்தவல்லி. நாதஒலியாகவும் சோதி

ஒளியாகவும் ஓம் என்ற ஓங்கார நிலையையுங்காட்டி எல்லா தெய்வங்களுக்கும் வல்லமை கொடுக்கும் வல்லமை நிறைந்த மேலான தெய்வம் நானே என்பாள். அவளை வேண்டித்துதிக்கும் அடியார்களுக்கெல்லாம் வரமளித்து அவர்கள் வேண்டியதை எல்லாம் வழங்கி அருள் செய்யும் அழகு வடிவானவள். அவளை அறிந்து கொள்ளும் புத்தியுள்ளவர்களுக்கு புள்ளிக்குள் நின்ற அறிவே வல்லமை மிக்க ஆயுதமாகும். புத்தி கெட்டு மனம் போன போக்கில் வாழும் காமக்குரோத லோபிகளுக்கு இந்த உண்மையைச் சொல்லக் கூடாதே.

16. புகலுவார் வேதமெல்லாம் வந்த தென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங் கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே
அறிவுகெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை தானே.

நான்கு வேதங்களையும் முழுதாகக்கற்று ஞானம் வந்தது என்று தன்னைச் சொல்லிக் கொள்வார். சாத்திரங்கள் யாவையும் மிகவும் கற்றும் மெய்ப்பொருளை அறியாமல் எல்லாம் அறிந்தோம் என்று பொய் பேசித்திரிவார். பெண்ணாசையை தள்ளிவிட்டோம் என்று கூறி தன்வீட்டைத் துறந்து அகலுவார். இறைவன் தன்னுள் இருப்பதை உணராது அறிவு கெட்டே ஊர்கள் தோறும் சுற்றிச் சுற்றி அலைந்து ஈசனைக் கண்டோம் என்பார். சகல ஞானமும் வந்தவர் போல் வேடம் பூண்டு காவிகட்டி சடைமுடிவளர்த்து சாமியாராய் வலம் வருவார். கேவலத்தை ஏற்படச் செய்யும் மன ஆசைகள் அடங்காமல் அவர் கற்புடைய மங்கையரைப் பார்க்கும் போது நினைவு வேறாய் இருக்கும். அவர் எண்ணமெல்லாம் பெண்ணாசையே நிறைந்து இருக்கும். இவர் பூசை போடுகிறேன் என்று ஊரையே கூட்டி செய்யும் பூசைகள் உல்லாசமாக வயிறு வளர்க்கத்தானே.

17. பூசையது செய்வமென்று கூட்டங் கூடிப்
புத்திகெட்டுக் கைமுறையின் போக்கை விட்டுப்
பாசையது மிகப்பேசி பாட்டுப் பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார்
ஆசையிலே பெண்ணாசை மயக்கத் தாலே
அங்கிருந்த வாமத்தைப் பங்கு போட்டுப்
பேசையிலே மனம்வேறாய் நினைப்பான் பாவி
புரட்டுருட்டாய் நினைவு தப்பிப் பேசுவானே.

அன்னையை பூசிக்கும் வாலை பூசையை அகத்திலேயே செய்யும் முறை அறியாமல் அவரவர்க்கு பட்டறிவைக் கொண்டு புத்திகெட்டு பூசை செய்வோம் என்று கூட்டத்தைக் கூட்டி அமைதியை விட்டு வெகு ஆடம்பரமாக பூசை செய்வான். பல பாசைகளிலும் உள்ள மந்திரங்களை உரக்கக்கத்தி பூசைகள் செய்து வெகு இனிமையாகப் பாட்டுகள் பாடி அவள் தோத்திரத்தைப் படிப்பார்களே தவிர மந்திரத்தின் உட்ப்பொருளையும் பூசையின் பயன்களையும் ஒரு நாளும் காணமாட்டார்கள். ஆசைகளை அடைவதற்காக பூசை செய்து கூட்டங்கூட்டும் மந்திரங்களை கற்ற போலி சாமியார் அங்கு வரும் பெண்களின் அங்க அழகை எல்லாம் பங்கு போட்டுப் பார்ப்பான். பெண்ணாசை மயக்கத்தாலே தனித்து வரும் பெண்களிடம் பேசும் போது மனத்தில் காமத்தையே நினைப்பான் பாவி. அப்பெண்களிடம் பல பொய் புரட்டுகளையும் சொல்லி பயமுறுத்தி நினைவு தப்பி ஆபாசமாகப் பேசுவானே. நினைவில் காமத்தை வைத்தே கெட்டவார்த்தைகள் பேசுபவன் போலி சாமியாரே.

18. பேச்சென்றால் வாய்ச்சமர்த்தாய்ப் பேசிப் பேசி
பின்னுமுன்னும் பாராமல் மதமே மீறி
நீச்சென்றும் நினைப்பென்றும் ஏதுங் காணார்
நிர்மூட ரனேகவித சாலங் கற்றே
ஆச்சென்றா லதனாலே வருவ தேது
ஆத்தாளைப் பூசித்தோ னவனே சித்தன்
மூச்சென்ன செய்யுமடா நரகிற் தள்ளும்
மோசமது போகாதே முக்கால் பாரே.

பொய்களையேகதைகாவியமாகவெகுதிறமையாகவாய்ஜாலம் பேசிப்பேசி உண்மைப்பொருளை பின்னும் முன்னும் பார்த்து உணராமல் திரிகின்றார்கள். தான் என்ற ஆணவத்தால் கர்வங் கொண்டு நல்லது கெட்டது என்ற எதையும் ஆராய்ந்து காணாமல் மனம் போன போக்கெல்லாம் நடந்து நீசத்தொழில் செய்வதையே நினைக்கின்றார். அதனால் அனேகவித மந்திரங்களையும், சால வித்தைகளையும் கற்று செய்வினை செய்பவர்கள் முழுமூடர்களே. தினை விதைப்பவன் தினை அறுப்பான், வினை விதைப்பவன் வினை அறுப்பான் என்ற உண்மை உணராமல் மந்திர சால வித்தைகளை அடைந்து செய்வினை ஆற்றுவதனால் அதனாலே வருவது தனக்கு முழுக்கேடே ஆகும். அனைத்திற்கும் ஆதியாக நின்ற ஆத்தாளை பூசித்தவனே வாலையின் அருள் பெற்று சித்தன் ஆவான். மூச்சானது உன் உயிரை கொஞ்சங் கொஞ்சமாக கரைத்து வெளியேற்றி கடைசியில் உயிரும் மரணமடைந்து உன்னை நரகத்தில் தான் தள்ளும். ஆதலால் மூச்சுக் காற்றை நம்பி மோசம் போகாதே. உன்னுள் கால் என நின்ற உயிர் காற்றான வாசியை அறிந்து அதனை சந்திர, சூரிய, அக்கினி மூன்று கலைகளிலும் இயக்கி அந்தி, சந்தி, உச்சி என்ற முக்காலமும் செய்து பாரே.

19. முக்காலும் பொருந்துமென்று சொன்ன போதே
மோசமில்லை சூட்சமது மொழிந்து கூடும்
தக்காமற் போனபே ரனேக ருண்டு
சமர்த்தறிந்தா லவன்வாதி யவனேசித்தன்
எக்காலும் நடந்திருநீ காலு முன்னி
இருந்தடங்கி யுள்ளிருந்து வெளியிற் போன
அக்காலைக் காணாம லலைந்தே யோடி
அழிந்து கெட்டுப் போனவர்கள் அறிந்துகொள்ளே.

இடகலை, பிங்கலை, சுழுமுனை என்ற மூன்று கலைகளிலும் வாசி பொருந்தும்போது உயிருக்கு நஷ்டமில்லை. வாசியில் மூச்சை இயக்கத் தெரிந்தவனுக்கு எந்த மோசமும் இல்லை. சூட்சம உடம்பினில் வாசி நாதமாகப் பேசிக் கூடும். வாசி நிலைக்காமலும் நாதம் தங்காமலும் விட்டுப் போனவர்கள் அனேகருண்டு. அந்த

வாசி எனும் குதிரையை ஓட்டும் சாமர்த்தியம் அறிந்தவனே வாதி ஆவான். அவனே இறவாநிலை பெற்ற சித்தன் ஆவான். எக்காலமும் இந்த வாசியை நீ ஒட்டிக்கொண்டே இரு. அது உன்னை சோதி ஒளியில் கூட்டி வைத்து அழியாத நிலை கொடுத்து மரணமிலாப் பெரு வாழ்வை அடையச் செய்யும். உயிர்க்காற்றாக உடம்பின் உள்ளிருந்து அடங்கியிருந்த உயிர் மூச்சுக் காற்றின் இயக்கத்தால் சிறிது சிறிதாக நான்கு அங்குல அளவு வெளியில் போகும் அவ்வாசிக்காலைத்தேடி காணாமல் அலைந்தே ஓடி ஓடி அழிந்து கெட்டுப் போனவர்கள் கோடி கோடி ஆதலால் உன்னுள் இருந்து வெளியில் போன வாசிக் காலை அறிந்து கொள்ளே.

20. அறிந்தகுறி யடையாளங் காண வேண்டும்
அக்குறியிற் சொக்கிமனந் தேற வேண்டும்
அறிந்தவன்போ லடங்கிமன மிறக்க வேண்டும்
அலகையது வழிபாதை அறிய வேண்டும்
மறைந்தவரை நிறைந்தவரை நீதான் காண
மயக்கத்தைக் கண்டுனையு மதிக்க வேண்டும்
நிறைந்தமதி குறைந்தவகை அறிய வேண்டும்
நிச்சயத்தை யறிவார்க்கு முத்தி தானே.

அறிந்து கொண்ட அவ்வாசியை இயக்கி அதுபோய் அடங்கும் குறியான மெய்ப்பொருளை தெளிவாக அடையாளங் கண்டு கொண்டு பற்ற வேண்டும். அழகு வடிவாக நின்ற அக்குறியில் வாசியை நிறுத்தி மனம் தெளிவடைய வேண்டும். அறிவை அறிந்து அவ்வறிவிலேயே அடங்கி மனத்தை இறக்கச் செய்ய வேண்டும். மனமே அறிவான பின் அளவிடவே முடியாத வெகு நுணுக்கமான வழியான பத்தாம் வாசல் பாதையை அறிய வேண்டும். அதனுள்ளே மறைந்து நின்ற ஈசனை பேரறிவாக நிறைந்து நின்றவரை நீ அவனாகிக் காண வேண்டும். அறிவை மயக்கும் மாயையைக் கண்டு அதனை உன் அறிவால் சுத்த மாயையாக்கி அவளைத் தாயாக மதித்து வழிபட்டு வணங்க வேண்டும். நிறைந்த ஒளி வீசும் பவுர்ணமி நிலவு ஒளி குறைந்து இருளாகும் அமாவாசை ஆவதையும் பின் மீண்டும்

வளர்பிறையாகி முழு நிலவாகும் வகையை அறிந்து நிலையான சூரிய ஒளியில் நிற்க வேண்டும். அதில் நித்தியமாய் நின்ற சோதி ஒளியை அறிவார்க்கே நிச்சயமான முத்தி கிடைக்கும்.

21. முத்திதரு மென்று மனம் புத்தி யற்று
மோசமது போகாதே பாசங் கையில்
சித்தமதில் சந்திரனை நிறுத்திக் கொண்டு
செந்தீயி லுன்தீயை நடுவில் வாங்கிச்
சுத்தியுடன் ஆதியந்த மனத்தில் வைத்துச்
சொல்லாத மந்திரத்தின் தீயை மூட்டி
நித்யமல ரர்ச்சனைசெய் பாதம் போற்றி
நீயுமதி மதியுமதி லதிக மாமே.

முத்தி தரும் இவ்வழியை விட்டு மனம் போன போக்கெல்லாம் நடந்து புத்தி இல்லாமல் பந்த பாசங்களில் சிக்கி மோசம் போகாதே. எங்கள் சித்தர் கலையான வாசியினால் உள்ளமதில் நின்ற சித்தத்தில் சந்திரகலையால் ஏற்றி நிறுத்திக் கொண்டு செந்தீயான சூரியனில் நடுவில் விளங்கும் உன்தீயான சோதி ஒளியை வாங்கி ஒன்று கலந்து இந்த ஞானசாதனையில் நில். இந்த ஞான சாதனையினால் ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும நீங்கி உள்ளம் பரிசுத்தமாகும். ஆதி அந்தமான அன்னை பராசக்தியை மனத்தில் வைத்து சொல்லாத மௌன மந்திரமான நாதத்தால் அச்சோதியில் சேர்ந்து நித்தியமான சகஸ்ரதள மலரில் அர்ச்சனை செய்து அவள் திருவடியைப் பற்றியே போற்றி நில். அதனால் நான் என நின்ற தன் அறிவு நீ என நின்ற பேரறிவுடன் ஒன்றாகி மெய்ஞ்ஞானம் பெருகும்.

22. மதிபெருகுங் கதிபெருகும் வாதம் வாதம்
வருந்தாதே யந்தமுறை யாகா திப்போ
நிதிபெருகு மிவள்குறியே வாத மாகும்
நிர்மூட ரறியாமல் வகாரம் பேசி
நதிகள்தனை யறியாமல் சலத்தில் மூழ்கி

நானேதா னென்றுவாய் மதங்கள் பேசி
உரியபொரு ளுள்ளதெல்லாஞ் சுட்டுச் சுட்டே
உட்பொருளைப் பாராம லழிந்திட் டாரே.

இந்த மெய்ஞானசாதனையினால் தன்னொளி உள்ளொளியுடன் சேர்ந்து பேரொளியாகும். மூச்சோடு உள்மூச்சு சேர்ந்து வாசிகதியாகி நாத ஒலிபெருகும். வாதம் முடிந்தால் காயகற்பம் அடையலாம் என்றே வாதம் செய்வார்கள். அதைக் கேட்டு வருந்தாதே. அந்த முறை இப்போது நமக்குத் தேவையில்லை. நன்னிதி யாவையும் பெருகச் செய்யும் வாலை இவள் குறியாக விளங்கும் மெய்ப்பொருளே எல்லா செல்வங்களையும் தரும் உண்மையான வாதம் ஆகும். இந்த மெய்ப்பொருளை அறியாமல் தங்கம் செய்யும் வித்தையென்று வகாரம் பேசி வாதம் முடிப்போம் என்பவர்கள் முழுமூடர்கள். கங்கையாகிய சுத்த சலம் தன்னில் இருப்பதை அறியாமல் பூநீரைத் தேடி உலகமெங்கும் அலைவார்கள். பல புண்ணிய நதிகளுக்கும் சென்று மூழ்கி பாவத்தைப் போக்கினோம் என்பார்கள். இவ்வாறு தன்னை அறியாமல் நானே தான் என்று வாய்மதங்கள் பேசுவார்கள். முப்பு முடிப்போம் என்று சொல்லி உரிய பொருளாக உள்ள எல்லாவற்றையும் தீயினால் சுட்டுச் சுட்டு உப்பெடுத்தும் அதை முப்பாக மாற்ற முடியாது ஏமாந்து தன்னுள் உட்பொருளாக விளங்கும் மெய்ப்பொருளைப் பாராமல் அழிந்தே போனார்கள்.

23. இட்டகுறி நாதவிந்து ரூபங் காண
இயலறியார் சண்டாளர் சுட்டு மாய்வார்
விட்டகுறை வந்ததென்றால் தானே யெய்தும்
விதியில்லார்க் கெத்தனைதான் வருந்தி னாலும்
பட்டுமன மாய்தலல்லால் வேறொன் றில்லை
பத்தியிலார்க் குரைத்துமனம் பாழ்போக் காதே
திட்டமதாய்ப் பாணம் வைத்துத் தேவி பூசை
சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர் தாமே.

அன்னை ஆதியாக நின்ற குறிதானே மெய்ப்பொருள். அதில் நாதம் என்ற ஒலியாகவும் விந்து எனும் ஒளியாகவும் அவள் வடிவத்தைக் காண சித்தர்கள் சொன்ன யோக ஞானத்தை முயற்சியுடன் செய்ய அறியார்கள். சண்டாளர்கள் வெகுசுலபமாய் முப்பு முடித்து விட்டால் அழியாக்கற்ப தேகம் அடைந்து விடலாம் என்று சொல்லி உள்ள பொருளை எல்லாம் சுட்டு மாய்ந்து மாய்ந்து வேலை செய்வார். இதுபோல் சுட்டு முப்பெடுத்தவர்கள் அதை உட்கொண்டு மரணமடைந்தார்களே தவிர எவரும் அதனால் இறவா நிலை கண்டவர்கள் இல்லை. முன்செென்மங்களில் செய்த புண்ணியப் பலன் உடையவர்க்கு விதியில் அமைக்கப்பட்டு அந்த முப்பு தானாகவே கிடைக்கும். அவர்கள் விட்டகுறை இப்பிறவியில் கூடி தொட்ட பொருளெல்லாம் மனதில் எண்ணிய நேரத்திலேயே தங்கமாக மாறும். இந்த விதி இல்லாதவர்க்கு எத்தனைதான் கஷ்டப்பட்டு வருந்தி செய்தாலும் முப்பு முடியவே முடியாது. இவ்வாறு பலமுறை முயற்சித்து இவ்வழியில் செல்பவர்கள் மனம் வேதனைப்பட்டு நொந்து அழிந்து போனார்களே தவிர வேறு பயன் ஒன்றும் கண்டதில்லை. உனக்கும் விட்ட குறை வந்ததென்றால் நாதவிந்தாகி நின்ற வாலை அன்னையை அறிவாய். அதனை பக்தி சிறிதும் இல்லார்களுக்கு சொல்லி மனத்தை பாழாக்கி உன் புண்ணியப்பலனை இழந்து விடாதே. அந்த வாலை பராசக்தியின் திருவடிகளை உறுதியுடன் பற்றி வாசியை மலரம்புகளாகத் தொடுத்து தேவிபூசையை செய்து சிறப்பு பெற்று இறவா நிலை அடைந்தார்கள் பதினெண் சித்தர்களும் தானே.

24. எட்டிரண்டு மொன்றுமது வாலை யென்பார்
இதுதானே பரிதிமதி சுழுமுனை யென்பார்
ஒட்டிமுறிந் தெழுந்ததுமுக் கோண மென்பார்
உதித்தெழுந்த மூன்றெழுத்தை யறியா ரையோ
கொட்டுமொரு தேளுருவாய் நிற்கும் பாரு
கூட்டமிட்டுப் பாராதே குறிகள் தோன்றும்
சுட்டசுடு காடுமது வெளியு மாகும்
சொல்வதற்கு வாய்விளங்காச் சூட்சந் தானே.

எட்டு இரண்டுமான பத்து என்ற ஒன்றே பத்த வயதேயுள்ள வாலை என்பார். இதுதானே சூரிய சந்திரன் அக்கினி என்ற மூன்றும் ஒன்றான சுழுமுனை என்பார். அதில் ஒட்டிப் பிரிந்து எழுந்த இடமே முக்கோணம் என்பார். அந்த ஓங்கார முக்கோண வட்ட சக்கரத்தில் இருந்து உதித்தெழுந்த அகர உகர மகரம் என்ற மூன்றெழுத்தின் உண்மைகளை அறியார்களே. அது கொட்டும் தேள் கொடுக்கைப் போல் கொட்டிக் கொண்டே நிற்கும். அதனை அறிவினால் ஆராய்ந்து பார்த்துப் பற்றிக்கொள். இத்தவ சாதனையை பலபேருடன் கூடி செய்து பார்க்காதே. தனித்திருந்து பார்கையிலே அன்னையின் அடையாளங்கள் தோன்றும். சுட்ட சுடுகாடாகிய அவ்விடத்தில் சோதி ஒளி வெளியாகி உதயமாகும். இப்படி ஒலி ஒளி வெளியாக நின்ற ஓங்காரத்தின் சூட்சமமாக நின்ற மெய்ப்பொருளை வாயினால் சொல்வதற்கு இயலாதே. அது சொல்லால் விளக்க முடியாத சூட்சமந்தானே.

25. சூட்சமது வாசமது நிலைத்த வீடு
சொல்லுதற்கே எங்குமாய் நிறைந்த வீடு
தேசமதில் போய்விளங்கு மிந்த வீடு
சித்தாந்த சித்தரவர் தேடு வீடு
ஓசைமணிப் பூரமதி லுதிக்கும் வீடு
ஓகோகோ அதிசயங்க ளுள்ள வீடு
ஆசுகவி மதுரமது பொழியும் வீடு
அவனருளுங் கூடி விளையாடும் வீடே.

சூட்சமமாகிய அது பூவும் மணமும் போல் சோதியும் வாசியும் நிலையாக நின்றிருக்கும் நித்தியமான வீடாகும். அதை சொல்வ தென்றால் பார்க்கும் இடம் எங்கும் நிறைந்திருக்கும் அந்த வீடு. எல்லா தேசங்களிலும் தேகமதில் விளங்கும் இந்த வீடு. சித்தாந்தமும் வேதாந்தமும் இறுதியாக உரைக்கும் இந்த வீட்டையே சித்தர்கள் யாவரும் தேடி அடைந்த வீடு. மணியில் எழும் ஓசையாகவும் பூரணமான அறிவு உதிக்கும் வீடு. ஓகோகோ அதிசயப் பொருளாக அமைந்த வீடு. ஆசுகவிகள் உதிக்கும் அற்புத வீடு. தேனினும் இனிய அமுர்தம் பொழியும் வீடு. சிவனும்

சக்தியும் கூடி விளையாடும் அருள் வழங்கும் வீடும் அதுவே ஆகும். அது எனும் அந்த வீட்டைத் தேடிக் கண்டு பிடித்து அவன் அருளை அடைந்து கொள்ளுங்கள்.

26. வீடுமது தலைவாசல் அதுமேல் வாசல்
வெளியான சுழிக்கதவு அடைக்கும் வாசல்
தேடுகிற மூவருமே வணங்கும் வாசல்
திறமான பன்னிருவர் காக்கும் வாசல்
ஆடுகிற புலியாகி நின்ற வாசல்
அரகரா சிவசிவா வாசி வாசல்
கூடுகிற முக்கோணப் பரங்க ளாகிக்
குறுகுமதி பெருகுமதி கூறொண் ணாதே.

அது என நின்ற அச்சூட்சம வீட்டிற்கு தலையில் தான் வாசல் இருக்கின்றது. அதுவே மேலான பத்தாம் வாசல். ஆகாய வெளியில் விளங்கும் சுழிமுனையை கதவாக அடைக்கும் வாசல். சிவன், விஷ்ணு, பிரம்மா என்ற மும்மூர்த்திகளும் அன்னையைத் தேடி வணங்கும் வாசல். திறம் நிறைந்த பன்னிரு ஆதித்தர்களும் காவலாக நின்று காக்கும் வாசல். எப்போதும் ஆடிக்கொண்டே இருக்கும் அது தொட்டால் புலியைப்போல் சீறுகின்ற வாசல். அகாரமும் சிகாரமும் அரகராவாகவும் சிவசிவாவாகவும் இணைந்து விளங்கும் வாசி நின்ற வாசல். ஓங்காரம் கூடுகின்ற முக்கோணப் பரம்பொருளாகி விளங்கும் அப்பத்தாம் வாசலில் கூடும் தன்னறிவே பேரறிவாகும். அதனை வெளியாகக் கூறக் கூடாதே.

27. ஒன்னாகி இரண்டாகி விளைவு மாகி
உத்தமியா ளுட்கருத்தை யறியப் போமோ
தின்னாத விடக்கெடுத்துத் தின்னச் சொன்னாள்
செத்தசவம் போலிருந்து செபிக்கச் சொன்னாள்
பண்ணாத பணக்கோடிப் பண்ணி வைத்தாள்
பார்த்திருந்து கழுத்தறுக்கப் பார்த்தாள் பாவி
எண்ணாது மெண்ணிமனம் ஏங்கி நாளும்
எனக்கெமபய மேதெனவே யெழுந்திட்டேனே.

தாயின் கருவில் ஒன்றான கண்ணாக உற்பத்தியாகி அதுவே இரண்டு கண்களாக விளைந்து உருவாகி வந்து உடம்பினில் உத்தமியான வாலை வீற்றிருக்கும் உட்கருத்தை அறிய முடியுமா. கிட்டாத வாசியை கொடுத்து உண்ணாக்கிலிருந்து எடுத்து இயங்கச் செய்து வாசியையே உணவாக்கி உண்ணச் சொன்னாள். செத்த சவம் போல் அசையாதிருந்து அவள் நாமத்தையே செபிக்கச் சொன்னாள். அரிய செல்வங்கள் யாவையும் அடையச் செய்து அருளினாள். பார்ப்பதிலேயே நின்று அனைத்தையும் பார்த்தபடியே இருந்து தன்னை வெளிக்காட்டாது கழுத்தறுக்கப் பார்த்தாள். எண்ணாத இடத்தை எல்லாம் எண்ணி நாளும் மனம் சோர்ந்திருந்த போது என் பிறப்பின் கணக்கை அறுக்க அவள் கருணையுடன் காட்சி தந்து அருள் செய்தாள். இனி எனக்கு எமபயம் என்பதே இல்லாமல் போனது. ஆதலால் எப்போதும் வாசியை செலுத்தியே தவசாதனையில் எழுந்திட்டேனே.

28. எழுந்திட்ட திவள்பார்த்துத் தொடர்ந்து கூடி
என்னையுமே யிழுத்துமடி பிடித்துக் கொண்டு
கொழுந்து விட்டு வளர்ந்தெரியு மனலை மூட்டிக்
குடிகேடி சத்துருப்போல் கூச்ச லிட்டாள்
அழுதேனே முந்தியினி யந்த வூரில்
அரகரா துணையெனக்கே யாரு மில்லை
எழுந்திட்டா ரெல்லாரு மோடிப் போனார்
என்னசெய்வேன் தனித்திருந்தே ஏங்கி னேனே.

மெய்ப்பொருளில் எழுந்திட்ட அன்னை அவளையே பார்த்தபடி தவம் செய்து அவள் திருவடியில் வாசியினால் தொடர்ந்து கூடி நின்றேன். எமனிடம் அகப்படாவண்ணம் என்னையுமே தன் கைகளால் இழுத்து தன் மடியில் பிடித்து வைத்துக் கொண்டாள். உள்ளே கொழுந்து விட்டு பிரகாசித்து வளர்ந்தெரியும் சோதி ஒளியினில் கூட்டி நாத ஒலியாக வெளிப்பட்டு எமனிடம் எதிரியாகி விரட்டி விட்டாள். அவள் கருணையை நினைத்தபடி கண்ணீர் விட்டு அழுதேன். ஆதியென நின்ற அந்த ஊரில் அரகராவென ஈசன் இருப்பிடத்தில் கொண்டு போய் சேர்ப்பதற்கு அவளைவிட உற்ற

துணை எனக்கு வேறு யாரும் இல்லை. அவள் அருள் கிடைக்காது அவள் திருவடியில் கூடும் தவசாதனையை விட்டு விலகியவர்கள் எல்லோரும் எமனிடம் சிக்கியே மரணத்தை அடைந்தார். ஆதலால் அன்னையின் திருவடி பற்றியே தனித்திருந்தே தவம் புரிந்து ஈசனிடம் கூடிடவே ஏங்குகின்றேனே.

29. ஏங்கினேன் ஈடழிந்தேன் வீடும் அற்றேன்
என்னைத்தான் கண்டவர்கள் சீசீ யென்னத்
தூங்கினேன் காலறிந்து மடக்க மாட்டேன்
துணையெனக்கு யாருமில்லை சூழ்ச்சி யாக
வாங்கினேன் காலறிந்து மடக்க வேண்டும்
வகையான வெனக்கொருத்தி யுறுதி சொன்னாள்
தேங்கினேன் முன்னுமவள் பின்னு மாகத்
திடமெனக்குச் சொன்னதிந்தத் தெளிவு தானே.

உலக இன்பங்களை அடைவதையே எண்ணி ஏங்குவோர் ஈடில்லாத அவள் திருவடியை அறியாது இழிந்த நிலையைத் தான் அடைவார்கள். தன் வீட்டைத் துறந்து வீடுகள் தோறும் சென்று பிச்சை எடுத்து உண்பார்கள். தூங்குவதே சுகம் என்று சோம்பேறியாக இருப்பவர்களை கண்டவர்கள் சீ சீ என கேவலமாகப் பேசித் துறத்துவார்கள். வாசி எனும் காற்றை அறியவோ அதை ஏற்றி இறக்கி பிடிக்கும் கும்பகத்தை செய்யும் சாகாக்கலையை தெரிந்து கொள்ளாதவர்கள் எல்லாம் தெரிந்தது போல் சூழ்ச்சியாகப் பேசி எனக்குத் துணை நானே வேறு எவரும் தனக்கு இணையில்லை என்பார், முடிவில் இறந்தே போவார்கள். ஆதலால் இறவா நிலை எனும் பேரின்ப வீட்டை அடைய வேண்டுமென்றால் தனக்குள் நின்ற மெய்ப்பொருளை ஒரு நல்ல குருநாதரிடம் அதை உபதேசமாகப் பெற வேண்டும். அதில் நின்றிருக்கும் வாசிக் காலை அறிந்து அதனை இரேசகம், பூரகம், கும்பகம் எனும் கலையாக இயக்கத் தெரிய வேண்டும். இதை வகையாக எனக்கு வாலையாக நின்ற ஒருத்தியே காட்டி சொல்லிக் கொடுத்தாள். அதை உறுதியாகப் பிடித்துக் கொண்டு அவள் திருவடியின் முன்னும் பின்னுமாகவே நினைவை நிறுத்தி

நின்றேன். இதுவே இறவாநிலை அடையும் வழி என்று திடமாக வாலை அன்னை சொன்ன தெளிவான அறிவாகும்.

30. தெளிவதற்குச் சூட்சமிது தெளிவாய்ப் பாரு
சிவனிருந்து விளையாடுந் தெருவைப் பாரு
மொழிவதற்கிந் நூலைவிட வேறொன் றில்லை
முன்னாதி யந்தமொடு நடுவுஞ் சொன்னோம்
சுழியதற்குள் சுழியிருந்த சூட்சம் சொன்னோம்
சொல்லாத மவுனமுதற் கருவுஞ் சொன்னோம்
ஒளிபிறக்கு முறுதியிந்த வுறுதி சொன்னோம்
உற்பனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர் தாமே.

தெளிவாகத் தெரிந்து கொள்வதற்கு சூட்சமமாக விளங்கும் மெய்ப்பொருளை தெளிந்த ஞானத்தினால் ஆராய்ந்து பார். அங்கே சிவன் இருந்து விளையாடும் வீதியான சோதி ஒளியையே பார்த்து சேர்ந்து கொள். இந்த உண்மையைத் தெளிவாகச் சொல்வதற்கு இந்நூலைப்போல் வேறெதுவும் இல்லை. இந்நூலில் ஆதி முதல் அந்தம் வரை எடுத்துச் சொல்லி நடுவாக நின்ற பத்தாம் வாசல் நிலையையும் விளக்கிச் சொன்னோம். சுழுமுனைக்குள் சுழியாக நின்ற வெட்ட வெளியின் சூட்சமம் சொன்னோம். யாரும் வெளிப்படையாக சொல்லாத மவுனம் முதல் கருவாக நின்ற வாசியின் வல்லமை சொன்னோம். சோதி ஒளி தோன்றும் உறுதியான தவசாதனையின் நுட்பங்களை சொல்லி தவத்தில் உறுதியாக நிற்கச் சொன்னோம். இதில் உண்மையாய் இருந்து வாலை அன்னையின் திருவடியை உறுதியுடன் பற்றி நின்று ஈசன் திருவருளைப் பெற்று இறவாநிலையுடன் இருப்பவர்களே சித்தர்கள் ஆவார்.

<u>கருவூர் சித்தர் பூஜாவிதி முற்றிற்று</u>

அபிராமிபட்டர் எனும் சித்தர்

திருக்கடவூரில் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வந்தவர் அபிராமி சித்தர். அந்தணகுலத்தில் தோன்றி வேத ஆகமநெறிகள் அனைத்தையும் கற்று அன்னை அபிராமியின் மீது அளவற்ற அன்புகொண்டு பக்தி பூண்டவரே நம் அபிராமி சித்தர். பார்க்கும் பெண்களை எல்லாம் அபிராமியின் வடிவமே என்று அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்குவார். எந்த நேரமும் அன்னை அபிராமியின் நாமத்தையே தோத்தரித்தபடி அவள் மீது அருள் பாடல்களை பாடுவார். அன்னை அருட்கடாட்சத்தால் அங்கு ஜீவ சமாதியில் வாழ்ந்திருக்கும் பாம்பாட்டி சித்தரின் உபதேசம் பெற்று யோக ஞானத்தில் ஊன்றி தியானம் புரிவார். அவள் அருள் பெறும் நாள் எந்நாளோ என்று ஏங்கிய வண்ணம் அவள் நினைவையே நினைவில் நினைந்த வண்ணம் அவள் திருக் கோயிலையே சுற்றி சுற்றி வருவார். இல்லற தர்மத்தில் இருந்தமையால் நல்லடியார்களை கண்டால் தன் இல்லம் அழைத்து வந்து அன்னதானம் செய்து உபசரித்து அனுப்பி வைப்பார். இப்படி எந்த வேலையும் செய்யாமல் எப்போதும் அபிராமி அபிராமி என்றே அலைந்து திரியும் அவரை மற்றவர்கள் பித்தர் என்று கேலி பேசினார்கள். மற்றோரை மதியாது பெண்களை மட்டுமே வணங்கும் அவரை பெண்பித்தர் என்றும் புறங்கூறினர். அவர் பாடும் அம்பிகை விருத்தங்களை கேட்பவர்கள் அற்புத மனிதர் என்று போற்றுவார்கள். இது எதையும் லட்சியம் செய்யாது அபிராமி அன்னையை அவள் எதிரிலேயே அமர்ந்து தியானம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

திருக்கடவூர் மார்க்கண்டேயருக்காக ஈசன் எமனை எட்டி உதைத்த வீரட்டானத்தலம். இங்கே அபிராமி அன்னை நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கியும் அமுர்த கடேஸ்வரர் மேற்கு நோக்கியும் அமர்ந்து அருள் பாலிக்கின்றார்கள். எமனை உதைத்த தலமானதால் இங்கே வந்து அம்மை அப்பனை தரிசித்து வணங்குபவர்க்கு எமவேதனை இல்லாது போகும். அவர்கள் மோட்ச வீடு செல்வார்கள் என்பது ஐதீகம். அதனால் இங்கே ஆதியிலிருந்து இன்றுவரை 60 ஆம் கல்யாணம், 80 ஆம் கல்யாணம் ஆகிய சடங்குகள் அமோகமாக நடந்து வருகிறது.

ஒரு சமயம் தைமாத அமாவாசை திதியை முன்னிட்டு தஞ்சையை ஆண்ட சரபோஜ மன்னர் காவிரி கடலில் சங்கமமாகும் பூம்புகாருக்கு தனது படை பரிவாரங்களுடன் வருகை புரிந்தார். கடலில் குளித்து விட்டு பின் அபிராமி அன்னையையும் அமுர்த கடேஸ்வரரையும் தரிசிக்க திருக்கடவூர் புறப்பட்டார். அரசர் திருக்கடவூர் வரும் சேதி கோயிலுக்கு அறிவிக்கப்பட்டு திருக்கோயில் சார்பில் வரவேற்பளிக்க மேள வாத்தியங்களுடன் காத்திருந்தனர். அச்சமயம் கோயிலுக்குள் வந்த அபிராமி சித்தர் இதை எதுவும் கவனிக்காமல் அபிராமி அன்னையின் முன் வந்து நின்றார். அன்று அரசர் வருகைக்காக தங்க அங்கி சாத்தி அம்பாள் பேரழகுடன் நின்றாள். அவள் அழகைப் பார்த்த வண்ணம் அப்படியே அவள்முன் அமர்ந்து அகக்கண்ணால் காண தியானம் செய்தார். சற்று நேரத்திலேயே அம்பாள் சோதிசொரூபமாக தங்கமான ஒளி வீசி காட்சி தந்தாள். உடனே அவருக்கு யோக சமாதியானது அமைந்து சித்திரப் பதுமை போல் அசையாது அமர்ந்து விட்டார்.

இச்சமயத்தில் மன்னர் கோயிலுக்கு வரவும் யானை மாலை போட்டு பூரணகும்ப மரியாதையுடன் மேள தாளங்கள் முழங்க வரவேற் பளிக்கப்பட்டது. மன்னர் மகிழ்வுடன் கோயில் உள் சென்று அமுர்தகடேஸ்வரர் முன் நின்று பணிந்து வணங்கினார். தீபாரதனை நடந்து பிரசாத விபூதி பெற்ற பின் மன்னர் அபிராமி அன்னையை தரிசிக்க வந்தார். இவ்வளவு ஆர்ப்பாட்டங்களையும் அறியாது அபிராமி சித்தர் யோக சமாதியிலேயே ஆழ்ந்திருந்தார். மற்றவர்கள் தொட்டு எழுப்பியும் அடித்து வைத்த பாறைபோல் அசையாதிருந்தார். இதைப் பார்த்த வண்ணமே உள் வந்த மன்னர் அன்னையை வணங்கிய பின் அர்ச்சகரிடம் யார் அவர் என கேட்டார். பொறாமை கொண்ட அர்ச்சகர் மன்னா! இவர் நம் கோயில் பட்டாச்சாரியார் மகன். பெண்பித்து கொண்டவன், எப்போதும் அபிராமி அபிராமி என்று சொல்லி மற்றவர்க்கு இடையூறாக இங்கு வந்து உட்கார்ந்து கொள்வான். யாரையும் மதிக்க மாட்டான், இதையாராலும் தடுக்க இயலவில்லை என்றான். அதுகேட்டு சரபோஜி மன்னர் இவன் பித்தனா பக்தனா என்பதை நானே பரிசோதிக்கின்றேன் எனக்கூறி அவர் அருகே சென்றார்.

பின் அவர் காதருகே வாய் வைத்து சுவாமி நான் சரபோஜி மன்னன் வந்திருக்கின்றேன். இன்று என்ன திதி என்று கேள்வி கேட்டார். சமாதி நிலையில் அன்னையை சோதிஒளியாய் முழுமதிவடிவாய் கண்டு களித்திருந்த பட்டர் பவுர்ணமி என பதிலளித்தார். இது கேட்டு வியந்த அரசர் மீண்டும் அவரிடம் பவுர்ணமி திதியா வானில் முழுநிலவு வருமா எனக் கேட்டார். அபிராமி பட்டரும் இன்று பவுர்ணமி பவுர்ணமி திதிதான் நிலவு வரும் போடா என பதில் கொடுத்தார். அரசர் மிகுந்த கோபம் கொண்டு இன்று இரவு வானில் நிலவு வராவிட்டால் உனக்கு அரச தண்டனை தான் எனக்கூறிவிட்டு அங்குள்ள ராஜமாளிகையில் சென்று தங்கி விட்டார்.

இவ்வாறு நடந்தது எதுவும் தெரியாது சமாதி நிலையிலிருந்து கண்விழித்து எழுந்தார் அபிராமிபட்டர். அவரிடம் அரசர் வந்ததையும் நடந்த விபரங்களையும் எடுத்துக் கூறி இரவு நிலவு வராவிட்டால் அரச தண்டனை உண்டு என்று ஆணையிட்டு சென்றதையும் அவரிடம் அன்பு கொண்ட மற்றவர்கள் சொன்னார்கள். அது கேட்டு வியப்புற்ற அபிராமிபட்டர் எனக்கு எதுவும் தெரியாதே. என்னுள் இருந்து அபிராமிதான் இந்த பதிலை சொல்லியிருக்கின்றாள். ஆதலின் அவள் சொன்னது போல் இரவு முழு நிலவு வரும். இல்லையாயின் அரிகண்டம் ஏறி அந்தாதி பாடி நிலவை வரவழைப்பேன் என்று கூறி அபிராமி பட்டர் வீடு சென்றார்.

மாலையானதும் தான் சொன்னது போல் நீண்ட கயிறை கொண்டு நூறு ஏணிப்படிகள் அமைத்து அரிகண்டம் கட்டி கீழே தீ மூட்டி அதன் உச்சியில் ஏறிநின்றார். இதைக்கான அங்கு ஊரார்கள் திரண்டு கூடினர். உச்சியில் நின்ற அபிராமி பட்டர் எல்லோரையும் பார்த்து அரசரிடம் அம்பாளே இன்று இரவு முழுநிலவு வரும் என்று கூறியுள்ளாள். ஆதலால் நான் அரிகண்டம் ஏறி அவளுக்கு அந்தாதி பாடப்போகின்றேன். அப்போதும் வானில் நிலவு வராது போனால் கீழே எரியும் தீயில் வீழ்ந்துசாவேன் எனக்கூறி விட்டு இவ்வந்தாதியைப் பாடத்தொடங்கினார். ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் தான் ஏறிநின்ற அரிகண்டத்தை அறுத்துக் கொண்டே

கீழிறங்கி வந்தார். அந்தாதியில் 79வது பாடலான "விழிக்கே அருளுண்டு" எனத் தொடங்கிப் பாடும்போது வானில் அன்னை அபிராமி தோன்றிக் காட்சி கொடுத்தாள். தன் காதில் இருந்த தோட்டை கழற்றி வானவெளியில் எறிந்தாள். அது முழுநிலவாக வானில் ஜெகசோதியாகப் பிரகாசித்து ஒளி வீசி நின்றது. இதை அங்குள்ள பக்தர்களும், ராஜ மாளிகையில் இருந்த அரசரும் கண்குளிர கண்டனர்.

அமாவாசை இருளில் முழுநிலவை வரவழைத்த அபிராமி சித்தரை வாழ்த்தி வணங்கினர். சரபோஜி மன்னரும் அவ்விடம் வந்து அவர் பாதங்களில் பணிந்து மன்னிக்குமாறு வேண்டி நின்றார். இந்திரன் முதல் சந்திரன் வரையான வானுலக தேவர்களும் இந்த அரிய செயல் கண்டு அபிராமி பட்டரை பூ மாறி தூவி வாழ்த்தினார்கள். அபிராமி பட்டர் அன்னையின் கருணையை எண்ணி விம்மி கண்ணீர் விட்டபடியே அரிகண்டத்தை விட்டு இறங்கி அன்னையின் கோயிலுக்குள் அனைவருடன் கூடி நுழைந்தார். அங்கே அன்னை அசரீரியாக என் அன்பு பக்தனே நீ சித்தனாக உயர்வாய். நீ பாடிய அந்தாதியை 100 ஆக முழுமையாக முடித்துப் பாடு என ஆணையிட்டாள். உடனே அபிராமி சித்தரும் "கூட்டியவா" எனத் தொடங்கி அபிராமி அந்தாதியை முழுமையாகப் பாடி அன்னையின் அருளையும் முழுமையாகப் பெற்றார்.

சரபோஜி மன்னர் அவருக்கு அபிராமி பட்டர் என பட்டமளித்து சுவாமி தங்களை அறியாமல் அர்ச்சகர்கள் சொன்னதைக் கேட்டு தங்களை அவமதித்து விட்டேன். என்னை அருள் கூர்ந்து மன்னியுங்கள். தங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் செய்து தருகிறேன் என்று சொன்னார். அரசே எனக்கு அபிராமியின் அருளைத் தவிர வேறொன்றும் தேவை இல்லை. எல்லாம் அவளே செய்து கொடுக்கின்றாள் என்று பதிலுரைத்தார். இருப்பினும் மன்னர் தங்கள் சந்ததிகள் இருக்கும் வரை இறைத்தொண்டு செய்து வறுமை இல்லாது வாழ வற்றாத செல்வங்களையும், வளமான நிலங்களையும் தங்களுக்கு பட்டயம் எழுதி சாசனம் செய்து கொடுக்கின்றேன். மறுக்காது ஏற்றுக் கொள்ளுங்கள் எனக்

கூறி அன்புப்பரிசாக அவர் கையில் கொடுத்தார். அதனை தன் மனையாளிடம் கொடுத்து விட்டு பற்றற்ற நிலையில் அபிராமி திருவடி பற்றியே தவம் செய்யலானார்.

அதன்பின் தன் மனைவியையே அபிராமித் தாயாக பாவித்து இல்லறத்தில் இருந்து விலகினார். அபிராமி அந்தாதியுடன் மேலும் இருபது பாக்கள் கொண்ட அம்மைப் பதிகத்தையும் இயற்றி அன்னைக்கு பாமாலை சாற்றினார். எப்போதும் அவள் சன்னதியில் சமாதி யோகத்தில் இருந்து பேரின்ப நிலை கண்டார். இந்த யோக ஞான தவத்தினால் அன்னையின் அருள் கூடி தன் தேகத்தை அழியா சுத்த தேகமாக்கி அவள் திருவடியில் சேர்ந்து அக்கோயில் உள்ளேயே ஜீவசமாதியில் வாழ்கின்றார். அதனாலேயே அவரை அபிராமி சித்தர் என்று போற்றுகின்றோம். அவர் இறந்து போனதற்கு எந்த ஆதாரமும் இன்று வரை இல்லை. அவர் சித்தர்களைப் போல் பஞ்ச பூதங்களில் கலந்து கரைந்து போனாரேயன்றி மறையவில்லை. அதற்கு அபிராமி அந்தாதி ஒன்றே சிறந்த ஆதாரமாகும்.

வடமொழியில் அம்பாளை தோத்தரித்து வணங்க சௌந்தர்ய லஹரி இருப்பது போல் செந்தமிழ் மொழியில் அன்னையை தோத்தரிக்க சிறந்த நூலாக இருப்பது அபிராமி அந்தாதி ஆகும். அதன் சொல்லும் பொருளும் அபிராமி அன்னையே ஆவாள். நான் திருமணமான சமயத்தில் 20வயதில் திருக்கடவூர் சென்று என் மனைவியுடன் இந்த அம்பிகையை தரிசித்தேன். அன்றே தடுத்தென்னை ஆட்கொண்டு என் உள்ளம் புகுந்து விட்டாள். அப்போது அங்கு நடந்த ஒரு 60 ஆம் கல்யாணத்தில் தம்பதிகளுக்கு அபிஷேகம் செய்யும் போது ஒரு பெரியவர் இந்த அந்தாதி பாடல்களை அழகாகப் பாடியதை கண்டேன். அவரை யார் என அங்குள்ள பெரியோர்களிடம் விசாரித்தேன். அவர் காஞ்சிப் பெரியவாளிடம் வரகவி எனப்பட்டம் பெற்ற வில்லியனூர் கோவிந்தராஜீ சுவாமிகள் என்றனர். உடனே அவரிடம் நேரில் சென்று அவர் காலில் விழுந்து ஆசிபெற்று தாங்கள் பாடிய பாடல்கள் கேட்டேன். நானும் ஒரு பாடகன் தான் உங்களைப்போல் நானும் அதைப் பாட விரும்புகின்றேன். எனக்கு

அப்பாடல்களை தருவீர்களா என பணிவுடன் கேட்டேன். அவரும் என்னை அன்புடன் அரவணைத்து தம்பி நான் பாடியது அபிராமி அந்தாதி. அந்நூல் இங்கு கோயிலுக்கு தெற்கு வீதியில் திரு அமுர்த கடேசுவரர் என்னும் பெரியார் வீட்டில் கிடைக்கும். அங்கு சென்று அவரிடம் பெற்றுக்கொள் என வழிகாட்டினார் வரகவி.

உடனே நான் என் மனைவியுடன் கோயிலை விட்டு வெளிவந்து அப்பெரியார் வீட்டைத் தேடிச் சென்றேன். அது ஆச்சாரம் மிகுந்த அந்தணர் வீடு, ஆதலால் வெளியிலேயே நின்று அய்யா என்று குரல் கொடுத்தேன். வயது முதிர்ந்த பழுத்த பழமாய் இருந்த ஒரு பெரியவர் வெளிவந்து யார் நீங்கள் என்ன வேண்டும் என்று கேட்டார். நான் அபிராமி அந்தாதி நூல் வேண்டும் என்றதும் உள்ளே வாருங்கள் என்று அன்புடன் அழைத்தார். தயக்கமுடன் உள்ளே வந்த எங்களை அங்கிருந்த பெஞ்சில் அமரச் சொன்னார். இல்லை ஐய்யா நாங்கள் இங்கேயே நிற்கிறோம் என்றேன். இல்லை நீங்கள் உட்கார்ந்தால் தான் நானும் உட்கார்ந்து பேசுவேன் என கண்டித்து சொன்னார் நாங்கள் அங்கு அமர்ந்தவுடன் அவரும் ஒரு நாற்காலியில் அமர்ந்து நான்தான் அமுர்தகடேசன். எனக்கு 90 வயதாகிறது. எதற்காக என்னைத் தேடி வந்தீர்கள் என்று கேட்டார். நானும் கோயிலில் ஒரு பெரியவர் அந்தாதி பாடக் கேட்டேன். அந்நூல் தங்களிடம் கிடைக்கும் என்றதால் தேடி வந்தேன் என்றதும் அப்பெரியவர் எழுந்து வீட்டினுள் சென்று ஒரு அழகிய அபிராமி அம்மன் படம், அவரே பிரசுரித்த அபிராமி அந்தாதி பாடல்கள், அபிராமி பதிகம் ஆகிய நூல்களையும் எடுத்து வந்து என் கையில் கொடுத்தார். நான் நன்றியுடன் அவைகளைப் பெற்று அதற்கு விலை கொடுக்க முயன்றேன். அவரோ வேண்டாம் என மறுத்து அபிராமி அந்தாதியை பாராயணம் செய்து பாடு என்று சொல்லி எங்களை ஆசீர்வதித்து அனுப்பினார்.

அன்றிலிருந்தே நான் அன்றாடம் அன்னைக்கு செய்து வந்த ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்தோத்திரத்தோடு இந்த அபிராமி அந்தாதியையும் பாடி பூசை செய்து வந்தேன். அந்தாதி எனக்கு ஒரே வாரத்தில் முழுதுமாக மனப் பாடம் ஆகிவிட்டது. அதனை நான் தினமும் திருக்கடையூர் சென்று அபிராமி அன்னையின் முன்

நின்று பாடிப் பரவசமாவேன். அதன் பலன்தான் இச்சிறியேனுக்கும் சித்தன் என்று பேர் வாய்த்தது. நான் இளமையில் விரும்பிப் பாடிய இந்த அபிராமி அந்தாதியை பொருளுணர்ந்துப் பாடி அவள் அருளைப் பெற வேண்டும் என்றே விளக்கவுரை எழுதியுள்ளேன். அபிராமி பட்டரின் தவத்தால் உருவாகி அருளிய இந்நூலை அனைவரும் தெளிவாகக் கற்று அன்னை அருள் பெற்று உய்வடைய வேண்டுகின்றேன்.

அபிராமி அந்தாதி

விநாயகர் காப்பு

தாரமர் கொன்றையும் சண்பகமாலையும் சாத்தும் தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகேழும்பெற்ற
சீரபிராமி அந்தாதி எப்போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே!

கொன்றைமலர் மாலையும் சண்பகமலர் மாலையும் சாத்தி அலங்கரிக்கும் தில்லை எனும் ஆகாயத்தலத்தில் மாதொரு பாகனாக விளங்கும் ஈசன் இடபாகம் வீற்றிருக்கும் உமையம்மையின் மைந்தனே! ஏழு உலகங்களையும் படைத்த பேரழகு வடிவான அபிராமி அன்னையை துதிக்கும் இந்த அந்தாதி பாடல்கள் எப்போதும் என் உள்ளத்தில் ஒலித்திருக்க, கரிய மேகம் போன்ற மேனி கொண்ட கணபதியே நிலைத்து நிற்க அருள் செய்து கட்டுரையாக எடுத்து தருவாய். உனக்கே என் முதல் வணக்கம்.

1. உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்குமதோய மென்ன
விதிக்கின்ற மேனி அபிராமியென்றன் விழுத்துணையே.

காலையில் உதிப்பது சூரியன், மாலையில் உதிப்பது சந்திரன், இவ்வாறு உதிக்கின்ற செஞ்சூரியனில் உச்சியில் திலகம் போல்

இருப்பவளேவாலைஅபிராமி.இந்தஉண்மையைஉணர்ந்தவர்கள் எப்போதும் அவளையே மதித்திருந்து அம்மாணிக்க மணியையே பற்றி சந்தியாவந்தணம் என்ற காயத்ரி செபம் செய்து அபிராமி அன்னையை வணங்குவர். மாதுளம் பூ போன்ற நிறமுடைய திருமகளும், வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் கலைமகளும் துதிக்கின்ற மின்னல் கொடிபோல் ஒளிவீசித்திகழும் அபிராமியின் திருமேனி குங்குமம் போல செம்மையான திருமேனியாக என்னுள் திகழ்கின்றது. அவ்வன்னையே என்றன் விழியில் சோதி ஒளியாகி என் வாழ்வின் விழுத் துணையாக நின்று விளங்குகின்றாள்.

2. துணையும் தொழுந்தெய்வமும் பெற்றதாயும் சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதிகொண்டவேரும் பனிமலர்ப்பூங்
கணையும் கருப்புச்சிலையும் மென்பாசாங்குசமும் கையில்
அணையும் திரிபுரசுந்தரி ஆவது அறிந்தனமே.

என் உயிர்க்குத் துணையாகவும் நான் அன்றாடம் தொழும் தெய்வமாகவும்என்னைப்பெற்றதாயினும்மேலானகருணையுள்ள தாயாகவும் இருப்பவள் வாலை அபிராமியே. வேதச்சுருதிகளின் கிளையாகவும், கொழுந்து போல் முடிவாகவும், பதிந்து உள்நிற்கும் ஆனிவேர்போல் மூலமாகவும் இருக்கும் வேதமாதாவே அபிராமி. அந்த அன்னை தன்கைகளில் பனிபோன்ற மென்மையான மலர்களால் ஆன அன்பு எனும் அம்புகளையும், கரும்பு வில்லையும், வலிமையான பாசம், அங்குசமும் கொண்டு திரிபுரசுந்தரியாகக் காட்சி தருகின்றாள். அபிராமியே பாலா எனும் வாலையாகவும், கன்னிகா பரமேஸ்வரியாகவும், மனோன்மணித்தாயாகவும் வந்து திரிபுர சுந்தரி ஆவதை அறிந்து கொண்டேனே.

3. அறிந்தேன் எவரும் அறியா மறையை அறிந்துகொண்டு
செறிந்தேன் உனதுதிருவடிக்கே திருவே வெருவிப்
பிறிந்தேன் நின்அன்பர் பெருமைஎண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்கு உறவாய மனிதரையே!

தன்னை அறியும் அறிவை அறிந்தேன். அதனால் எவரும் அறியமுடியாத வேதங்கள் கூறும் சிற்சக்தியான வாலை எனும்

வேதநாயகியை அறிந்து கொண்டு உனது திருவடியே கதி என்று பற்றிக்கொண்டேன். நின் திருவருளையே நாடி நிற்கும் உண்மை அன்பர்களுடன் கூடி அன்பினில் கரைந்து உனைவிட்டு விலகாமல் இருந்தேன். உன் அருளால் உன் பக்தர்கள் சித்தர் என்றும் முனிவர் என்றும் ரிஷிகள் என்றும் ஆகி பெற்ற பெருமைகளை எண்ணாமல் தீய வினைகளை செய்து பாவங்களை சேர்க்கும் மனிதர்களை வெறுத்து விலகினேன். உன் திருவடி பற்றி நின்புகழையே பாடி வணங்கியதால், பாவங்களை சேர்த்து எமனிடம் மாட்டி நரகத்தில் வீழும் மனிதர்களை போல் அல்லாது உன் திருவருள் கிருபையால் இறவாப் பேரின்பம் அடைந்தேன்.

4. **மனிதரும் தேவரும் மாயாமுனிவரும் வந்துசென்னி**
குனிதரும் சேவடிக்கோமளமே கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி எந்நாளும் பொருந்துகவே.

மனிதர்களும் தேவர்களும் இறவாநிலைபெற்ற முனிவர்களும் எல்லோரும் வந்து தலைகுனிந்து வணங்கிப் பணியும் உன் அழகுத் திருவடியை நான் பற்றிக் கொண்டேன். கொன்றை மலர் மாலை சூடிய சடாமுடியில் குளிர்ச்சியுடைய சந்திரனையும், படமெடுத்தாடும் பாம்பையும், கங்கையையும் கொண்டு விளங்கும் புனிதமான ஈசனும் நீயும் என்புந்தியாகிய உள்ளத்தில் எந்நாளும் பொருந்தி இருக்க வேண்டும்.

5. **பொருந்திய முப்புரை செப்புரைசெய்யும் புணர்முலையால்**
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி வார்சடையோன்
அருந்திய நஞ்சுஅமுது ஆக்கிய அம்பிகை அம்புயமேல்
திருந்திய சுந்தரி அந்தரி பாதம்என் சென்னியதே.

என்னுள் பொருந்தி நின்ற வாலை அபிராமியையே இச்சாசக்தி கிரியாசக்தி ஞானசக்தி ஆகிய திரிபுரசுந்தரி என்று வேதம் விரிவாக எடுத்துரைக்கும். அவள் நிமிர்ந்த கொங்கைகளையும் மெல்லிய கொடி போன்ற இடையையும் கொண்ட கன்னிகாபரமேஸ்வரி. அவளே தாயாகி அமுர்தப்பால் கொடுக்கும் மனோன்மணியும்

ஆவாள். நீண்ட சடாமுடிகளை உடைய ஈசன் தேவர்களைக் காக்க திருப்பாற் கடலில் எழுந்த ஆலகாலவிஷத்தை அருந்தினார். உடனே அன்னை அவர் கண்டத்திலேயே அவ்விஷத்தை நிறுத்தி அமுதாக மாற்றிவிட்டாள். அந்த அபிராமி அம்பிகை சகஸ்ரதளம் என்ற ஆயிரம் இதழ் தாமரையின் மேல் ஈடில்லாத அழகு சுந்தரியாய் ஆகாயவெளியில் விளங்கும் அந்தரியாய் அவள் திருப்பாதத்தை என் தலையில் வைத்த கருணை வடிவானவள்.

6. **சென்னியது உன்பொற் திருவடித்தாமரை சிந்தையுள்ளே**
மன்னியது உன்திருமந்திரம் சிந்தூரவண்ணப் பெண்ணே
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது என்றும் உன்றன் பரமாகமப் பத்ததியே.

என்தலையில்பதித்தஉன்பொன்வண்ணதிருவடித்தாமரையை என் உள்ளத்தின் உள்ளேயே பொருத்தி தியானித்திருந்தேன். அங்கு நிலைத்து நின்று உன் திருமந்திரமான ஓங்காரநாதத்தை ஒலித்திட ஒளிவடிவாக அங்கே சிவந்த வண்ணத்தில் வாலைப் பெண்ணாய் தாய் தோன்றி நின்றாள். நின் அருள்பெற்ற உன்னடியார்களுடன் கூடி உன்அருள் பெறும் வழியை அறிந்து அதை முறையாக பயிற்சி பண்ணியது, வேத ஆகமங்கள் கூறும் உன் நாமங்க ளையே உச்சரித்து பாராயணம் பண்ணியது என்று, என்றும் உன் திருவடி நினைவிலேயே மனம் பதித்து நின்றேன்.

7. **ததியுறுமத்தில் சுழலும் என்ஆவி தளர்விளதோர்**
கதியுறுவண்ணம் கருது கண்டாய் கமலாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய் சிந்துரானன சுந்தரியே.

தயிர்கடையும் மத்தில் வெண்ணெய் எடுக்க தயிர் சுழல்வது போல் என் ஆன்மா இப்பூமியில் பிறப்பு இறப்பு என்று சுழன்று கொண்டே இருந்தது. அபிராமி அன்னையின் திருவடி பற்றியதால் என் உயிர் பிறப்பு இறப்பு எனும் உலக துன்பங்களை அடைந்து தளர்வுறாத வண்ணம் என்னை சிவகதியில் சேர்த்து வைத்து மெய்யறிவு தந்தாய். தாமரைக் கமலத்தில் வீற்று படைப்புத்

தொழில் புரியும் பிரமனும், சந்திரனைச் சூடி நிற்கும் சக்தி மகிழும் சிவனும், காத்தல் தொழில் புரியும் விஷ்ணுவும் நின் திருவடி பற்றி வணங்கியே துதிக்கின்றார்கள். அவ்வாறு யாவரும் போற்றும் உன் செவ்வண்ணமான திருவடியையே யானும் பற்றித் தொழுது வந்ததால் பேரழகு சுந்தரியான உன்னைக் காணும் பாக்கியமும் பெற்றேன்.

8. **சுந்தரி எந்தை துணைவி என்பாசத் தொடரையெல்லாம்**
வந்தரி சிந்துரவண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாதகன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என்கருத்தனவே.

சுந்தரியான அபிராமி என் தந்தையான ஈசனுக்கு துணைவி. அவளே எனக்குத் தலைவியாகி என் பாசங்களையும் பந்தங்களால் வரும் ஆசைகளையும் வேரோடு அறுத்து எறிந்தாள். கோபம் கொண்ட சிவந்த கண்களால் மகிஷாசூரனை வதம் செய்து அவன் தலைமேல் தன் கால்களை வைத்து நிற்கும் மகிஷாசூரமர்த்தினி. ஆகாயவெளியில் நீல வண்ணமாய் நின்றிருக்கும் நீலி. அழிவே இல்லாத மெய்ப்பொருளான கன்னி. வேதநாயகனுடன் கலந்துநிற்கும் வேதநாயகி. அத்தாயையே என் உயிர்த்துணை என்றுணர்ந்து அவள் மலரினும் மெல்லிய திருவடியை என் உள்ளத்தில் வைத்தே வணங்குகின்றேன்.

9. **கருத்தன எந்தைதன் கண்ணன வண்ணக் கனகவெற்பிற்**
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கினபேரருள் கூர்
திருத்தன பாரமும் ஆரமும் செங்கைச்சிலையும் அம்பும்
முருத்தன மூரலும் நீயும்அம்மே வந்தென்முன் நிற்கவே.

கருத்தில் நின்ற அபிராமி அன்னையும் எந்தையாகிய ஈசனும் என் கண்ணினில் தீ வண்ணமாய் இருப்பதை அறிந்து கொண்டேன். ஞானப் பசி கொண்டு அழுத ஞான சம்பந்தருக்கு ஈசன் கண்காட்டியவுடன் பராசக்தி பொன்மலை போன்ற தன்பெருத்ததனங்களில் இருந்து ஞானப்பால் சுரந்து கொடுத்து உன் பேரருளை நல்கிய நாயகியே! அடியவனுக்கும் உன்

அருளைத்தந்திட திருத்தமுடன் கூர்மையான பாசாங்குசமும், சிவந்த கைகளில் கரும்பு வில்லும் அம்பும் தாங்கி உயர்ந்த மணி மாலைகளைச் சூடி உன் அழகிய வெண்பற்களில் புன்னகை புரிந்தபடி நீயும் என் தாயாகி வந்தென் முன் நிற்கவேண்டும்.

10. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை
என்றும் வணங்குவது உன்மலர்த்தாள் எழுதாமறையின்
ஒன்றும் அரும்பொருளே அருளே உமையே இமையத்து
அன்றும் பிறந்தவளே அழியா முத்தி ஆனந்தமே.

நான் நின்றிருக்கும் போதும், அமர்ந்து இருக்கும் போதும், படுத்து உறங்கும் போதும், நடந்து கொண்டிருக்கும் போதும் உன்னையே நினைத்தபடி உன் நாமத்தையே ஓதி வருகின்றேன். நான் என்றும் வணங்குவது உன் மலர்த்திருவடிகளையே. எழுதா எழுத்தாய் விளங்கும் வேதங்கள் கூறும் பிரமம் என்ற மெய்ப்பொருளில் ஒன்றி நிற்கும் அருட்பெரும் சோதியே, அருளே வடிவான உமையே, இமயத்துவன் மகளான பார்வதிதேவியாய் அன்று பிறந்தவளே! நீயே அழியாத முத்தி எனும் நிலையான பேரின்பவீட்டைக் கொடுத்து ஆனந்தம் அருளும் அன்னையான அபிராமி என்பதால் உன் திருவடியைப் பற்றியே எப்போதும் இருக்கின்றேன்.

11. ஆனந்தமாய் என் அறிவாய் நிறைந்த அமுதமுமாய்
வானந்தமான வடிவுடையாள் மறை நான்கினுக்கும்
தானந்தமான சரணாரவிந்தம் தவள நிறக்
கானந்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக்கண்ணியதே.

அபிராமியே என் நிலைத்த ஆனந்தமாய் என் அறிவைத் தன் பேரறிவாய் ஆக்கிவைத்து அவ்வறிவால் பூரணநிலை அடையும் அமுர்தம் வழங்கும் தாயும் ஆவாள். ஆகாய வெளியின் முடிவில் அனைத்திற்கும் அப்பாலாய் நின்ற ஆனந்தமான வடிவுடையவள் அபிராமி. வேதங்கள் நான்கினுக்கும் தானே முடிவான தத்துவமாய் விளங்குபவள். அப்பரம்பொருளான அன்னையை சுடுகாட்டு சாம்பலை தன் மேனி எங்கும் பூசி அழித்தல் செயலைச் செய்யும்

எம்பிரானாகிய சிவபெருமான் தம்திருமுடி தாழ்த்தி அவள் பாதங்களில் சரணடைந்து வணங்கும் பெருமை பெற்றவள் அபிராமி.

12. கண்ணிய துன்புகழ் கற்பதும் உன்நாமம் கசிந்து பத்தி
பண்ணிய துன்னிரு பாதாம்புயத்தில் பகல் இரவா
நண்ணிய துன்னை நயந்தோர் அவையத்துநான் முன்செய்த
புண்ணிய மேது என்அம்மே புவிஏழையும் பூத்தவளே.

யாவிலும் மேலான கண்ணியமான உன்புகழை கற்பதுவும், உன்நாமம் ஒன்றையே உள்ளம் உருகி கண்ணீர் கசிந்து பத்திபண்ணி வழிபட்டதும், உன் இரு திருவடிக்கமலங்களையே பற்றி பகல் இரவாய் உன் பக்கத்திலேயே இருந்ததுவும், உன் மீது அன்பு பூண்டு உன் அடியார்களாக வாழும் அன்பர்களுடன் கூடி உன் அன்பனாக நான் இப்பூமியில் இருப்பதற்கு நான் முன்சென்மத்தில் செய்த புண்ணியமே தவிர வேறில்லை. ஏழு உலகங்களையும் படைத்த என் அன்னையே உன் திருவருள் ஒன்றையே விரும்பும் அடியேனுக்கு அருள் செய்வாய்.

13. பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

ஈரேழு பதினான்கு உலகங்களையும் படைத்தவள் பராசக்தி. படைத்த அனைத்தையும் பேணிப் பாதுகாத்து வளர்ப்பவளும் அவளே. பின் யாவையும் அழித்து மறையச் செய்பவளும் அவளே. இந்த வாலை அபிராமியாகிய பராசக்தி நீலகண்டனாகிய சிவனுக்கு மூத்தவள். எக்காலத்தும் மூப்பே இல்லாத முகுந்தராம் விஷ்ணுவுக்கு இளையவள். மாதவம் புரியும் தாயே நான் உன்னையன்றி மற்றோர் தெய்வத்தை வணங்கி வழிபடுவதில்லையே.

14. வந்திப்பவர் உன்னை வானவர் தானவர் ஆனவர்கள்
சிந்திப்பவர் நற்திசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப்பவர் அழியாப் பரமானந்தர் பாரில் உன்னைச்
சந்திப்பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி நின் தண்ணளியே.

உன்னை வந்தனை செய்து வணங்கிய படியே காத்து நிற்கிறார்கள் வானுலக தேவர்கள். அதுபோல் அசுரர்கள் ஆனவர்களும் உன் அருள்பெற்று வல்லமையடைய உன்னையே வணங்கி நிற்கின்றார்கள். நான்கு முகங்களையுடைய பிரமனும் நாராயணனாகிய விஷ்ணுவும் உன்தரிசனம் காண உன்னையே தங்கள் சிந்தையின் உள்ளே வைத்து சிந்தித்திருப்பார். உன்னடியார்கள் உன்னையே தன் உள்ளத்தில் பதிந்து உன் திருவடிப் பற்றி தவம் இருந்து உன் அருள் பெற்று சிவத்துடன் கலந்து பரமானந்தம் கண்டு அழியா நிலை பெற்றார். ஆனால் இவ்வுலகிலுள்ளோர் உன்னை எளிதாக சந்திப்பதற்கு உண்மையான பக்தி ஒன்றே எளிதான வழியாம். அன்பிற்கே என் அன்னை மனமுவந்து கருணையுடன் அருள் செய்து காட்சி தருவாளே.

15. தண்ணளிக்கு என்று முன்னே பலகோடி தவங்கள் செய்வார்
மண்ணளிக்கும் செல்வமோ பெறுவார் மதிவானவர் தம்
விண்ணளிக்கும் செல்வமும் அழியா முத்தி வீடுமன்றோ
பண்ணளிக்கும் சொல்பரிமள யாமளைப் பைங்கிளியே.

அபிராமியே தன் கருணை எனும் மழையால் அருள் செய்யக் கூடியவள் என்று அறிந்து முன் பலசென்மங்களில் பலகோடி காலங்கள் தவம் செய்தவர் மீண்டும் இப்பூமியில் பிறந்து வரும் போது இப்பூமியில் உள்ள செல்வங்கள் அனைத்தையும் பெறுவார். தம் அறிவால் மேலானவர் செய்யும் தவத்தால் விண்ணுலக வாழ்வை அடையச் செய்து என்றும் அழியாத முத்தி வீட்டில் சேர்த்து அன்னை பேரின்பநிலையை அருளிடுவாள். பைங்கிளி போன்ற பச்சை நிறங்கொண்ட யாமளையாகிய பரிமள வாசம் நிறைந்த பார்வதியை இசை நாதத்துடன் அவள் நாமத்தை சொல்லியே போற்றிப் பாடி வணங்கிடுவேன்.

16. கிளியே கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்தொளிரும்
ஒளியே ஒளிரும் ஒளிக்கிடமே எண்ணில் ஒன்றுமில்லா
வெளியே வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே
அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே!

கிளிமொழி பேசி ஞானம் போதிக்க குருவாக வந்த என்தாயே! உன்மீது அன்பு மிகுந்த அடியார்கள் உள்ளத்தில் அமர்ந்து சுடர்வீசி எழும்பும் ஒளியே, அவ்வொளிக்கு ஒளி கொடுக்கும் சோதி ஒளியே அன்னை. எனக்குள் அச்சோதி ஒளி இருக்கும் இடத்தை நினைத்துப் பார்த்தால் அது ஒன்றுமே இல்லாத ஆகாயவெளியில் தான் நின்றுள்ளது. ஆகாயமே முதல் பூதமாகி அதிலிருந்து காற்று, அக்கினி, நீர், மண் என்று ஐந்து பூதங்களாகி விரிந்த என் அம்மையே! எளியேனாகிய உன் அடியேன் அறிவு பெருகி உன் பேரறிவாகி விரிந்து சமமானது உன் பேரருளின் அதிசயமே அம்மா.

17. அதிசயமான வடிவுடையாள் அரவிந்தமெல்லாம்
துதிசயமானன சுந்தரவல்லி துணையிரதி
பதிசயமானது அபசயமாகமுன் பார்த்தவர்தம்
மதிசயமாக வன்றோ வாம பாகத்தை வவ்வியதே!

அதிசயமான சோதிஒளி வடிவுடையவளாய் ஆயிரம் இதழ் தாமரை எனும் சகஸ்ரதளமலரில் எல்லாம் அன்னை அமர்ந்துள்ளாள். பரிசுத்தமான அத்தலத்தில் விளங்கும் அபிராமவல்லியின் திருவடியே துணையாகக் கொண்டு துதித்து வணங்குபவர்க்கு வெற்றியை தருவாள் அன்னை. எல்லோரையும் தன் அரவிந்தம் எனும் கணையால் வீழ்த்தி வெற்றி கண்ட ரதியின் பதியாகிய மன்மதன் சிவன் முன் தொடுக்கும் போது அவர் நெற்றிக்கண்ணால் எரிந்து சாம்பலாகித் தோற்றுப் போனான். இதனை அறிந்து அறிவே அன்னை எனக்கொண்டு அவளருளும் ஞான வழியில் சென்றவர்க்கன்றோ ஈசனைக்கூடும் இன்பம் கிட்டும். ஈசனையும் தன்பேரழகால் வெற்றி கொண்டு அவன் உடம்பில் சரிபாதியாகி இடபாகத்தில் இணைந்திருந்தாளே எம் இறைவி.

18. வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்விய உங்கள் திருமணக்கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும்போது வெளிநிற்கவே.

இவ்வாறு ஈசன் இடபாகத்தில் இடங்கொண்ட நீயும் என் இறைவனும் மகிழ்ந்திருக்கும் சிறப்புகள் யாவும் பொருந்திய உங்கள் திருமணக் கோலத்தையே நினைந்து சிந்தையுள்ளே தியானம் செய்து வருகின்றேன். என் மனத்தில் நின்ற காமம் கோபம் வெகுளி என்னும் அழுக்காறுகளை அறவே அகற்றி என்னை ஆண்ட உன் திருவடிகளையே பற்றி தவம் புரிகின்றேன். கொடிய மரணத்தை தரும் எமன் என் உயிரை எடுத்துப் போக வரும்போது என் உடம்பில் ஆகாயவெளியில் இருந்து நீ வெளிப்பட்டு நிற்கவேண்டும்.

19. வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து என்விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை கருத்தின் உள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே.

ஆகாயவெளியில் நின்ற நின்திருமேனி வடிவழகைப் பார்த்து என் விழியிலும் மனத்திலும் எழுந்த மகிழ்ச்சி எனும் ஆனந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடியதற்கு எல்லையே இல்லை. உன் தரிசனத்தால் கண்ட ஆனந்தநிலையை உன் தரிசனம் கண்டவரே உணர்வார். மனத்தின் உள்ளே உன்னையே சிந்தனையில் நிறுத்தி தவம்புரிவார்கள் உன்திருவருள் கருணையினால் தெளிந்த ஞானம் பெற்று இப்பூமியில் ஞானிகளாய் திகழ்வார்கள். அத்தெளிந்த ஞானத்தினால் இறைவனை அடைவதற்கு அன்னை திருஉளம் வைத்தால் தான் முடியுமே அன்றி வேறு எதனாலும் ஆகாது. சோதி ஒளியாக நின்று ஒன்பது கோணங்களிலும் சுடர்வீசி விளங்குபவளே அன்னை அபிராமி.

20. உறைகின்ற நின்திருக்கோயில் நின்கேள்வர் ஒருபக்கமோ
அறைகின்ற நான்மறையின் அடியோ முடியோ அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ கஞ்சமோ என்றன் நெஞ்சகமோ
மறைகின்ற வாரிதியோ பூரணாசல மங்கலையே!

நீ இருக்கின்ற உனது திருக்கோயில் என்பது உன் கணவராகிய ஈசனின் இடது பக்கமே என்பதை அறிந்து கொண்டேன். அங்கே நீயும் இறைவரும் பிரியாது கோயில் கொண்டு விளங்குவதை உணர்ந்து கொண்டேன். நான்கு வேதங்களும் ஓங்கி உரைக்கின்ற ஆதியும் அந்தமும் அவளே என்பதையும் அவ்வன்னை அமுர்தம் பொங்கிவழிகின்ற சந்திரமண்டலத்தில் நிறைந்து மனோன்மணியாய் நிற்பதையும் அறிந்தேன். அது ஆயிரம் இதழ்கள் கூடிய சகஸ்ரதளம் என்பதையும் அதுவே என்றன் அன்பால் நிறைந்த உள்ளம் எனும் உன் கோயில் என்பதையும் உணர்ந்து கொண்டேன். அது என் உடலில் கடல்நீர் போல் நீலநிறமாய் அனைத்தையும் மறைத்து நிற்பதையும் அந்த நீரே பூரணமாகிய வஸ்து என்றும் அங்கு இருப்பவளே நித்திய சுமங்கலியாகிய அன்னை அபிராமி என்பதை உணர்ந்து அவள் திருவடி பற்றிக் கொண்டேன்.

21. மங்கலை செங்கலசம் முலையாள் மலையாள் வருணச்
சங்கலை செங்கை சகலகலாமயில் தாவுகங்கை
பொங்கலை தங்கும் புரிசடையோன் புடையாள் உடையாள்
பிங்கலை நீலிசெய்யாள் வெளியாள் பசும்பெண் கொடியே.

மங்களவடிவான சுமங்கலி, எவராலும் தொடமுடியாத செங்கலசம் போன்ற கொங்கைகள் கொண்டவள், கயிலை மலையில் சிவனோடு வீற்றிருப்பவள், தன் சிவந்த கைகளில் சங்குபோன்ற வளையல்களை அணிந்திருப்பாள். சகல கலைகளையும் தோற்றுவிக்கும் அன்னை சகல கலா மயில் என போற்றப் படுகின்றாள். வேகமாய் தாவி பொங்கி வரும் கங்கையை தன் சடாமுடியில் தாங்கி நிற்கும் ஈசனின் இடபாகங் கொண்டு விளங்கும் உரிமையுடையவள். பிங்கலை என்ற பின் நிற்கும் மஞ்சள் நிறமும், நீலி என்ற நீல நிறமும், செய்யாள் என்ற

செம்மைநிறமும் வெளியாள் என்ற வெண்மைநிறமும், பசுமை நிறைந்த பச்சைநிறமும் கொண்டு ஐவண்ணமாக விளங்கும் என்றும் இளமை மாறாத பெண் கொடியே என் அன்னை அபிராமி.

22. கொடியே இளவஞ்சிக்கொம்பே எனக்குவம்பே பழுத்த
படியே மறையின்பரிமளமே பனிமால் இமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்து இங்கு இனிப்பிறவாமல் வந்து ஆண்டுகொள்ளே.

கொடி போன்ற மென்மையானவளே, என்றென்றும் இளமையுடன் திகழும் பேரழகு வடிவான பெண்ணே, எனக்கு மகிழ்ந்தருள் வழங்கி என் அறிவைப் பக்குவப்படுத்தி பழுக்கவைத்த குருவே, மறைவேதங்களின் உட்பொருளாகி ஒப்பற்ற மணமாகி வேத மாதாவாக விளங்குபவளே, பனிசூழ்ந்த இமையமலையில் பார்வதியாக அவதரித்து விளையாடிய கன்னியே, பிரமன் முதலாக எல்லா தேவர்களையும் படைத்த என் தாயே உன்பக்தனாகிய அடியேன் இப்பூமியில் இறப்பதும் மீண்டும் பிறப்பதும் இல்லாமல் உன்திருவடி பற்றிய என்னை இனி இங்கு பிறவாமல் செய்து பிறவாத பேரின்ப நிலை தந்து ஆண்டு கொள்ள வேண்டும் அம்மா.

23. கொள்ளேன் மனத்தில்நின் கோலமல்லாத அன்பர்கூட்டந்தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன் மூவுலகுக்கு
உள்ளே அனைத்தினுக்கும் புறம்பே உள்ளத்தே விளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியஎன் கண்மணியே.

மனத்தில் எப்போதும் உன் அழகு வடிவத்தையே நினைத்திருப்பேனே அல்லாது வேறொன்றை நான் கண்டது இல்லை. எப்போதும் முப்போதும் நின் திருவடிவையே கண்டு உன்னையே வணங்கி வாழும் உன் அன்பர் கூட்டத்தில் இருந்து ஒருபோதும் விலக மாட்டேன். உன் சன்மார்க்க வழியைத் தவிர பிற சமயங்களை கனவிலும் விரும்ப மாட்டேன். பிரம்மலோகம், விஷ்ணுலோகம், சிவலோகம் என்ற மூன்று உலகங்களுக்கு உள்ளே முப்பெரும் சக்திகளாகவும் இருக்கின்றாள். அனைத்து

உலகங்களுக்கும் வெளியாக நிற்கின்றாள். அவளே என் உள்ளத்தில் நின்று அமுர்த மழையை பொழிகின்றாள். அதை உண்டதால் விளையும் ஆனந்த போதையே, இந்த ஆனந்தத்தை அருளும் ஆனந்த வடிவே, என் கண்மணியில் நின்ற அருள்வடிவே என் அன்னை அபிராமி.

24. மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த
அணியே அணியும் அணிக்கு அழகே அணுகாதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியேன் ஒருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.

மணியாக நின்ற தாயே, அம்மணிக்குள் விளங்கும் ஒளியே, ஒளிப் பிரகாசிக்கும் உயர்ந்த மணிமாலைகள் ஆன ஆபரணமாகவும், அணியும் ஆபரணங்களின் அழகாக பேரழகும் பேரொளியாகவும் இருக்கின்றாள் அன்னை அபிராமி. அவளை அறிந்து அவள் அருளைப் பெற முயலாதவர்களுக்கு கடும்பிணிகளை உண்டாக்கிடுவாள். அவளே கதி என வாழும் அன்பர்களுக்கு வினைப்பயனால் வரும் நோய்களை நீக்கி காப்பாற்றிடுவாள். பிறவி எனும் பெரும் பிணியைப் போக்கிவைக்கும் மருந்து ஆவாள். அழியாநிலை அடைந்திடவே தேவர்கள் அனைவருக்கும் அமுர்தம் வழங்கும் பெரும் விருந்தாவாள். அவள் கமலமலர்த்திருவடி பணிந்து வணங்கும் வழியை அறிந்தபின்னே வேறொருவரைப் பணிந்து வணங்கேன்.

25. பின்னே திரிந்து உன்அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான் மறவாமல் நின்று ஏத்துவனே.

உன் அருள் பெற்ற அடியார்கள் பின்னேயே திரிந்து அவர் மனங்குளிர தொண்டுகள் செய்து என் பிறப்பை அறுக்கவும் மெய்ப்பொருளை சேரவும் உள்ள தவவழியை அறிந்து கொண்டேன். நான் முன்சென்மத்தில் முயன்று செய்த தவத்தின் பயனே உன் திருவடி பற்றும் பாக்கியம் எனக்கு வாய்த்தது என்பதை

நான் உணர்ந்து கொண்டேன். முதல் மும்மூர்த்திகளுக்கும் நீயே அன்னை என்பதை அறிந்தே இவளே என்பிறவிப்பிணி தீர்க்கும் அரு மருந்து என கண்டு கொண்டேன். என் தாயே அபிராமியே என்று இனி உன்னை யான் ஒருபோதும் மறவாமல் உன் திருவடி பற்றி நின்றே உன் புகழ்பாடி தவம் செய்வேனே.

26. ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ்பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம்நாறும் நின்தாள் இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே.

பதினான்கு உலகங்களையும் படைக்கும் பிரமனும், அவற்றைக் காக்கும் விஷ்ணுவும், அனைத்தையும் அழிக்கும் ருத்திரனும் உன் அடியவராகி உன்னையே போற்றித் துதிப்பவர்களாம். மணம் வீசும் கடம்பமலர்களை தன் கூந்தலில் சூடிநின்று அருள் மணம் வீசுகின்றாள். பெண்ணில் நல்லாள் என விளங்கும் என் அபிராமி அம்மையே, மணம் வீசும் நின் மலர்த்திருவடியில் என் நாவினால் உன் தமிழ் மொழியை முழுதுமாகக் கல்லாமல் நான் பாடிய புன்மையான பாடல்களை பொன்மொழியாக்கி பாமாலை என ஏற்று குருநகை புன்சிரிப்பால் தன்னருள் புரிந்தாயே.

27. உடைத்தனை வஞ்சப்பிறவியை உள்ளம் உருகும் அன்பு
படைத்தனை பத்மபதயுகம் சூடும்பணி எனக்கே
அடைத்தனை நெஞ்சத்து அழுக்கை எல்லாம் நின்அருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்அருள் ஏதென்று சொல்லுவதே.

வல்வினைகள் மலைபோல் குவிந்துள்ள என் வஞ்சப்பிறவியை புனிதப்பிறவியாக்கி என் கர்மவினைகளை எல்லாம் தூள் தூளாகப் போகும்படி உடைத்தெறிந்தாய். உன்னையே நினைந்து பக்திசெய்து என் உள்ளம் உருகும் அன்பைக் கொடுத்தாய். உன் பத்ம பாத மலர்த்திருவடிகளை என் தலையில் சூட்டி அதையே பணிந்து வணங்கும் உயர் தவத்தை செய்யும் பணியை எனக்களித்தாய். என் மனதில் எழுகின்ற காமம், கோபம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடம்பம், அகங்காரம் என்ற அழுக்கை

எல்லாம் நின் அருள் என்னும் பெருவெள்ளத்தால் துடைத்து எறிந்தாய். அம்மா அபிராம சுந்தரியே நின் அருளால் விளையும் நன்மைகளை நான் எது எதுவென்று சொல்லுவதோ அத்தனையும் உன் அருளே.

28. சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின்புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுபவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

சொல்லும் பொருளும் போல் இணைபிரியாது சக்தியும் சிவமும் நடனமாடிக் கொண்டு சேர்ந்தே இருக்கின்றார்கள். பூவும் மணமும் போல் தன் துணைவருடன் தழுவியபடியே நிற்கும் பூங்கொடியே, நறுமணம் வீசும் நின் புது கமலமலர் திருவடிகளை உள்ளத்தில் வைத்து இரவும் பகலும் தொழுது வணங்கி வருபவர்க்கு அழியாத அரசபோக வாழ்வும், இறவாத நிலைக்கு செல்லும் தவநெறியும் கிட்டி சிவலோகத்தில் சிவத்துடன் சேர்ந்திருக்கும் சித்தியும் அடைவாரே.

29. சித்தியும் சித்திதரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும் சத்திதழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தை அன்றே.

நினைத்த காரியத்தில் வெற்றிபெறும் சித்தியும், எல்லா சித்திகளையும் தரும் தெய்வமாகித்திகழும் பராசக்தியும், சக்தியினால் தழைத்து மேலோங்கி விளங்கும் சிவமும், முயன்று செய்யும் தவத்தால் அடையும் முத்தியும், அம்முத்திக்கு மூலமான வித்தாக நிற்கும் மெய்ப்பொருளும், அதிலே முளைத்து எழுகின்ற மெய்ஞானமும், அந்த ஞானத்தின் உள்ளே ஞானசொரூபிணியாய் அனுக்கிரகம் செய்யும் அன்னை அபிராமியை அறிந்து அவள் திருவடி பற்றிக் கொண்டால் சிவபுரத்தில் சேர்த்திடுவாள். சத்தியாகவும் சிவமாகவும் விளங்குபவள் அபிராமியே ஆவாள். அவள் திருவடி பற்றி நிற்கும் தவத்தால் ஞானநிலையில் இருந்து நம்மைப் பிறழாமல் காப்பவளும் அன்னை அபிராமியே.

30.அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்டதல்ல என்கை
நன்றே உனக்கு இனி நான் என்செயினும் நடுக்கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகை நின் திரு உளமே
ஒன்றே பல உருவே அருவே என் உமையவளே.

அம்மா, நான் உலகவாழ்வில் திண்டாடி திசை தெரியாது திகைத்து நின்றேன். அப்போது உன் அருள் வடிவைக்காட்டி என்னை தானே வலிய வந்து தடுத்தாட் கொண்டாய். அன்றே நான் உன் அடிமையாகி விட்டேன். இனி நான் உன் அருள்வழியில் நன்றான திருப்பணிகள் செய்வதற்கு ஆளாகி விட்டேன். நான் நன்றோ தீதோ எது செய்தாலும் அதனால் நடுக்கடலுள் வீழ்ந்து தவிக்கும் நிலை வந்தால் என்னைக் கரையேற்றிக் காப்பது நின் திரு உளக் கருணையே. ஒன்றாகவும், பல உருவங்களாகவும், அருவாகவும் விளங்கும் தாயே! நீயே என்னை இமைபோல் காக்கும் உமையவள்.

31. உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில் வந்திங்கு
எமையும் தமக்கன்பு செய்யவைத்தார் இனி எண்ணுதற்குச்
சமயங்களும் இல்லை ஈன்றெடுப்பாள் ஒருதாயும் இல்லை
அமையும் அமையுறு தோளியர்மேல் வைத்த ஆசையுமே.

சக்தியும் சிவனும் ஒரே உருவில் மெய்ப்பொருளாக வந்து எனக்குள் நின்று தம்மைப்பாடிப்பணிந்து பக்தி செய்யுமாறு பணித்து அன்பு வழியில் இருக்க வைத்தார். அப்பெரும் பாக்கியமான பாடும் பணியை அன்னையே எனக்கு அளித்தாள். இனி எனக்கு அன்பைத்தவிர எண்ணுவதற்கு ஒரு சமயங்கள் வழியும் எனக்கில்லை. அவள் திருவருளால் எனக்கு மறுபிறவியோ மற்றொரு தாய்வயிற்றில் பிறக்கும் பிறவித்துன்பமும் இல்லை. அவளைத்தவிர எனக்கு வேறொரு தாயும் இல்லை. அவளைப் போன்றே அமைந்திருக்கும் பெண்களின் மேல் வைத்த ஆசையும் அடியோடு அழிந்து பெண்களை தாயாய் எண்ணும் அன்பே என்னுள் நிலைத்ததுவே.

32. ஆசைக்கடலில் அகப்பட்டு அருளற்ற அந்தகன் கைப்
பாசத்தில் அல்லற்பட இருந்தேனை நின்பாதமெனும்
வாசக்கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டு கொண்ட
நேசத்தை என்சொல்லுவேன் ஈசர்பாகத்து நேரிழையே.

உலகத்தில் உள்ளவர் போல் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை எனும் ஆசைக்கடலில் அகப்பட்டு உன் அருளை அறியாது கருணையே இல்லாத கொடுமையான எமனின்கைப் பாசக்கயிற்றில் சிக்கி மரணம் என்ற மீளாதுன்பத்தை அடைய இருந்தேன். இந்த இழிநிலையைப் போக்க என்தாயே அபிராமி நீயே வலிய வந்து என்னை உன் அடியவனாக ஆண்டு கொண்டாய். என் உள்ளக்கமலத்தில் நின்ற உச்சி எனும் தலைமேல் உன் திருவடியை வைத்து எமனிடம் இருந்து என்னை காப்பாற்றி விட்டாய். ஈசரின் உடலில் சரிபாதியாக இடபாகம் கொண்டு விளங்கும் பேரழகியே என் அபிராமி அன்னையே இச்சிறியேனிடமும் அன்பு காட்டி அருள் செய்வதை என்னவென்று சொல்லுவேன்.

33. இழைக்கும் வினைவழியே அடுங்காலன் எனை நடுங்க
அழைக்கும்பொழுதுவந்துஅஞ்சேல்என்பாய்அத்தர்சித்தமெல்லம்
குழைக்கும் களபக்குவிமுலை யாமளைக் கோமளமே
உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடிவந்தே.

செய்த வினைவழியே விதி முடியும் போது விடாப்பிடியாக கொடுங்காலன் என் உயிரை நடுங்கவைத்து எடுத்துப் போக வரும் போதும், நான் அஞ்சாமல் உன்னை அம்மா என்று அழைக்கும் பொழுது பயப்படாதே மகனே என்று சொல்லி எமன் முன்னே நிற்பாய். காமனை எரித்து கோபக்கனலுடன் எழுந்த ஈசனின் சித்தத்தில் நிறைந்தவளான நீயே உன் அழகால் குளிர வைத்தாய். சுண்ணாம்பு கலவையால் செய்த பெண்வடிவில் குவிந்து நிற்கும் முலைபோல நிமிர்ந்த கொங்கைகளையுடைய பத்ரகாளியே அழகுக் கோமளமே உன்னை வணங்கிப் பணிவதை ஒருநாளும் மறவேன். பொருளீட்ட வெளிதேசம் சென்று நான் உழைக்கும் போதும் திரும்ப ஓடி வந்தே உன்னையே என் உயிர் காக்கும் தாய் என்றுணர்ந்து உன்பாதம் பணிந்திடுவேன்.

34. வந்தே சரணம் புகும் அடியார்க்கு வானுலகம்
தந்தே பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்
பைந்தேன் அலங்கல் பருமணி ஆகமும் பாகமும் பொன்
செந்தேன் மலரும் அலர்கதிர் ஞாயிறும் திங்களுமே.

அபிராமி அன்னையை அறிந்து அவள் திருவடியில் சரணம் அடைந்து வழிபட்டு வரும் அடியார்களுக்கு தேவலோகப் பதவி தந்து மோட்சம் அடையச் செய்கின்றாள் அன்னை. அவள் திருவடி பற்றியே தவம் புரியும் உத்தமர்க்கு அவளே பரி எனும் வாசிக்குதிரையாகி தான் வீற்றிருக்கும் சகஸ்ரதளத்தில் சேர்ந்து அருள் புரிகின்றாள். சதுர்முகனான பிரமனுக்கு பசுந்தேன் நிறைந்த வாச மிக்க மலர் மாலையாகவும், அவன் நாவில் சரஸ்வதியாக விளங்குகின்றாள். திருப்பாற்கடலில் பள்ளி கொண்ட நீலமணிவண்ணனான விஷ்ணுவின் மார்பில் லெட்சுமியாக விளங்குகின்றாள். ஈசன் இடபாகங் கொண்டு உமையவளாக விளங்குகின்றாள். அவரவர் புரியும் தொழில்களும் அன்னையின் திருவருள் செயலே. செந்தேனினும் இனிய அமுர்தம் வழங்கும் பொன்மேனி கொண்ட மனோன்மணி ஆயிரம் இதழ் தாமரையாகிய சகஸ்ரதளத்தில் நீருள் விளங்கும் சோதி ஒளியாக நின்று சூரியனுக்கும் சந்திரனுக்கும் ஒளி கொடுக்கின்றாள்.

35. திங்கட் பகவின் மணம் நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத்தவம் எய்துமோ தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே.

சந்திரனாகிய மதிமண்டலத்தில் அமர்ந்து அமுர்தப்பால் சொரியும் மனோன்மணித்தாயே! மணங்கமழும் உன் சிறப்புமிகு திருவடியை தலையில் வைத்து எங்களுக்கு அத்திருவடி ஒன்றையே பற்றி தவம் செய்யும் ஞானத்தை பெறவைத்தாய். உன்னை எண்ணாது இறந்துபோகும் எண்ணிலாத பெரியோர்க்கும், வானுலகத்தேவர்களுக்கும் இந்த மெய்த்தவம் கிடைக்குமோ! அலைபாயும் மனம் என்ற கடலின் உள் படமெடுத்தாடும் பாம்பையே மெத்தையாகக் கொண்டு

அதன்மேல் தன் பெரியகண்களை மூடித் தூங்கும் என்தாயை கூர்மையான ஞானத்தால் அறிந்து கொண்டால் அவளே என்னுள் மேன்மையான மெய்ப்பொருளாய் விளங்கி நின்றாளே.

36. பொருளே பொருள் முடிக்கும் போகமே அரும்போகம் செய்யும்
மருளே மருளில் வரும் தெருளே என்மனத்து வஞ்சத்து
இருளேதும் இன்றி ஒளிவெளியாகி இருக்கும் உன்றன்
அருளேது அறிகின்றிலேன் அம்புயாதனத்து அம்பிகையே.

என்றும் அழியாத நிலையான மெய்ப்பொருளே, அப்பொருளோடு பெண்ணிடம் கூடும் போகத்தின் முடிவினில் கிடைக்கும் இன்பமே, ஈசனோடு இணைபிரியாது அரும் போகம் செய்யும் மாயையே, அம்மாயையாகிய மயக்கம் நீங்கியபின் வரும் தெளிந்த அறிவே, அத்தெளிந்த ஞானத்தால் என் மனத்தில் மாயையால் விளையும் காமம், கோபம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடம்பம், அகங்காரம் என்ற அறியாமை இருள் அத்தனையும் விலகி உன் சோதி ஒளி பிரகாசித்து என் உள்ளம் எனும் வெளியில் எப்போதும் நிலையாக நிலைத்து நிற்கும். இதைவிட நான் அடையவேண்டிய பெருஞ்செல்வம் வேறு என்ன உள்ளது. அதுவும் உன்றன் அருளேயன்றி என்செயல் ஏதுமில்லை என்பதை நான் அறிகின்றேன் என்தாயே. இந்த ஞானத்தை எனக்களித்து உன் திருவடி தாமரையைப் பற்றி தவம் செய்வார்க்கு பெருகி வரும் கங்கை நீரைப்போல் வற்றாத செல்வங்கள் யாவும் தந்து அருள்புரிந்தவள் என் அன்னை அபிராமி அப்பிகையே.

37. கைக்கே அணிவது கன்னலும்பூவும் கமலம் அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்துமாலை விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக்கோவையும் பட்டும் எட்டுத்
திக்கே அணியும் திருவுடையான் இடஞ் சேர்பவளே.

அன்னை தன்கைகளில் கரும்பும் பூவும் அணிந்து நிற்கிறாள். தாமரைக்கொப்ப மென்மையான தன்மேனியில் மார்பில் வெண்முத்துமாலை அணிந்துள்ளாள். விஷம் கொண்ட நல்லபாம்பின் படம் போன்ற யோனியை மறைத்து

பட்டுப்புடவையை அணிந்துள்ளாள். இடையில் பலவிதமான இரத்தின மணிகளையும் கோர்த்து அணிந்துள்ளாள். பேரழகும் பேரருளும் நிறைந்த அபிராமி அன்னை எட்டுத்திசைகளையும் ஆடையாக உடுத்தியுள்ள திருஉடையானாகிய ஈசன் இடபாகத்தில் சேர்ந்திருக்கின்றாள்.

38. பவளக் கொடியில் பழுத்த செவ்வாயும் பனிமுறுவல்
தவளத்திருநகையும் துணையாம் எங்கள் சங்கரனைத்
துவளப்பொருது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப்பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே.

பவளக்கொடியில் பழுத்த பவளமணிபோல் செக்கச்சிவந்த இதழ்களையுடைய செவ்வாய் அழகும் குளிர்ச்சியான முறுவல் காட்டி அன்புடன் அன்னை புன்னகை புரிந்தாள். அவள் துணைவராம் எங்கள் சங்கரனார் அவள் அழகில் மயங்கி தன்னை விட்டுப்பிரியா வண்ணம் தன் உடலின் இடபாகத்தைக் கொடுத்து எப்போதும் அவளுடன் இணைந்திருந்தார். இயல்பிலேயே எம்மலமும் இல்லாத இறைவனையே தன் அழகுப் புன்னகையால் சாய்க்கும் மெல்லிய இடையுடன் சாயாத மென்முலைகளை உடைய அன்னை அவளைப் பணிந்து போற்றுங்கள். அவள் திருவடிகளையேதுணைஎன்றுபற்றித்தவம்செய்யுங்கள்.அதனால் அன்னை அமராவதி என்னும் தேவலோகப் பட்டிணத்தை ஆளும் இந்திரபதவியையும் வானுலக இன்பத்தையும் தந்தருள்வாள். அபிராமியை வணங்கி அவள் அருளைப் பெற்றுய்யுங்கள்.

39.ஆளுகைக்கு உன்றன் அடித்தாமரைகள் உண்டு அந்தகன்பால்
மீளுகைக்கு உன்றன் விழியின்கடை உண்டு மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று முப்புரங்கள்
மாளுகைக்கு அம்புதொடுத்த வில்லான் பங்கில் வாணுதலே.

உன் அருளைப் பெறுவதற்கென்றே உன் திருவடித் தாமரையை என் தலையில் பதித்து ஆட்சி செய்கின்றாய். உன்றன் விழியின் கடைக்கண் பார்வையே மீளமுடியாத எமனையும் விரட்டி நம்மை மரணத்தில் இருந்து காக்கும். அன்னையின்

திருவிழிப்பார்வையையே நோக்கி அவள் திருவடியையே பற்றி தியானதவம் செய்ய அறியாமல் அவளிடம் அன்பு செலுத்தி அவளருளை பெற வழி தெரியாமல் இருந்தது நம் குற்றமே தவிர உன்குறை ஏதுமில்லை என்தாயே. அன்று முப்புரங்களையும் வில்லோ அம்போ இல்லாமல் ஈசன் தன் சிறு புன்னகையாலேயே அழித்த செயல் உன் அருள்விழி பார்வையால் அல்லவோ. ஈசன் இடபாகத்தில் நின்றருள் செய்யும் என் அபிராமி அன்னையே! என் வான்வெளியில் விளங்கும் பேரொளியே.

40.வாணுதல் கண்ணியை விண்ணவர் யாவரும் வந்துஇறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெருமாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணமன்றோ முன்செய் புண்ணியமே.

வெளிக்குள் ஒளியாய் திருக்கடையூர் தலத்தில் வாழும் என் அபிராமி அன்னையை வானுலகத் தேவர்கள் அனைவரும் வந்து இறைஞ்சி வேண்டுகின்றனர். அன்பில்லா நெஞ்சங்களில் என் தாய் அணுகவே மாட்டாள். பக்தியுடன் அவள் நாமங்களை பாடி அழும் அன்பு உள்ளங்களில் தங்கி தன் அருளை வழங்கி நிற்பாள். எல்லாப் பெருமைகளும் உடைய எவராலும் காணுவதற்கு இயலாத கன்னிகா பரமேஸ்வரியை என் கண்ணிலேயே கண்டு மெய்யன்புடன் என் உள்ளத்தில் வைத்து பூசை செய்வதற்கும், அவள் நாமங்களையே எண்ணியபடி தியானம் செய்வதற்கும் உன்னை நான் முன்சென்மத்திலும் வழிபட்ட புண்ணியத்தால் தான். அம்மா அபிராமியே உன்னை தரிசிக்க வேண்டும் என்று நினைப்பதுவே முன்செய் புண்ணியம் உள்ளவர்க்கே கிடைக்கும்.

41. புண்ணியம் செய்தனமே மனமே புதுப்பூங்குவளைக்
கண்ணியும் செய்ய கணவரும் கூடி நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து தம் அடியார்கள் நடுவிருக்கப்
பண்ணிநம் சென்னியின் மேல் பத்மபாதம் பதித்திடவே.

அம்மா உன்னைக்காணும் பாக்கியம் பெற்றதே நான் செய்த புண்ணியமே என் உள்ளத்தில் பூத்துக்குலுங்கும் நீல

குவளை மலர் போன்ற கண்களையுடைய அன்னை அபிராமி தன் கணவரான இறைவருடன் கூடி அருள் சோதிவடிவாக இருப்பதையே நினைந்து தவம் செய்து வருகின்றேன். எப்போதும் உன் மெய்யடியார்களுடன் கூடி உன் புகழைப் பாடியே போற்றி வணங்குகின்றேன். இப்புண்ணிய நற் செயலின் காரணத்தால் அம்மா என்னையும் உன் அடியவனாக்க விரும்பி வந்து என் தலையின் மேல் உன் பத்மபாதம் பதித்து நான் நடுவு நிலையில் உன் திருவடியை விட்டு விலகாதிருக்க செய்வாய் என் அபிராமித்தாயே.

42. இடங் கொண்டுவிம்மி இணைகண்டு இறுகி இளகிமுத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலியநெஞ்சை
நடங் கொண்ட கொங்கை நலம்கொண்ட நாயகி நல்லரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி வேதப் பரிபுரையே.

அம்மா நீ இருக்கும் இடத்தைக் கண்டுகொண்டு உனையே அன்பால் நினைந்து விம்மி விம்மி அழுது, உன் திருவடி மலர்களை கண்டு இறுகப் பற்றிக் கொண்டு தவம் செய்தேன். வெண்முத்து மணிபோல் வலம் நின்ற கொங்கையைக் கொண்டு மலை உச்சியில் விளங்கும் இறைவராம் எம் ஈசனின் எதற்கும் அசையாத வலிய நெஞ்சையும் தன் விருப்பப்படி நடமாடச் செய்து நல்லருள் வழங்கும் நாயகி அன்னை அபிராமி. நல்லபாம்பு எடுத்தாடும் படம் போல் யோனியில் நின்ற அவளையே வேதங்கள் குளிர்ச்சியான மொழிகளால் புகழ்ந்து போற்றும். ஆதலால் அபிராமி வேதங்களையே தன் பாதத்தில் சிலம்பாக அணிந்து ஒலியாகி நாத சொரூபிணியாக விளங்குகின்றாள்.

43. பரிபுரச் சீறடி பாசாங்குசை பஞ்சபாணி இன்சொல்
திரிபுரசுந்தரி சிந்துரமேனியாள் தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக்குனி பொருப்புச் சிலைக்கை
எரிபுரைமேனி இறைவர் செம்பாகத்து இருந்தவளே.

பாதச்சிலம்பணிந்த புகழ் மிகுந்த திருவடிகளை உடைய என் அன்னை அபிராமி பாசமும் அங்குசமும் கைகளில் தாங்கி

நிற்கின்றாள். பஞ்சபூதங்களையும் படைத்து ஆட்சி செய்கின்றாள். தன் இனிய சொற்களால் ஞானத்தை ஊட்டும் திரிபுர சுந்தரி. சிவந்த பொன்மேனியுடன் சோதி ஒளி வீசி அறியாமையாகிய தீய இருளை நெஞ்சில் இருந்து அகற்றிவைக்கின்றாள். ஆணவம், கன்மம், மாயை, எனும் மும்மலங்களையும் மூன்று கோட்டையாகக் கொண்டு போரிட வந்த கொடிய அசுரர்கள் அஞ்சித்தலை குனியும் படி மேருமலையை தன்கை வில்லாகக் கொண்டு அத்தீய கோட்டைகளை தூள் தூளாக உடைத்து தன் சிரிப்பினால் எரித்து அசுரர்களை அழித்த இறைவர் மேனியில் சரிபாதியாக இருந்தவளே.

44. தவளே இவள்எங்கள் சங்கரனார் மனைமங்களமாம்
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவருக்கும் மேலை இறைவியுமாம்
துவளேன் இனிஒரு தெய்வம் உண்டாக மெய்த்தொண்டுசெய்தே.

ஈசர் இடபாகம் இருந்தவளான இவள் எங்கள் சங்கரனாகிய ஈசனுக்கு மனைவியும் மங்களப் பொருளுமாவாள். அவளே அவ்வீசனைப் படைத்தவளானதால் அவருக்கு அன்னையும் ஆயினாள். ஆகையினால் அபிராமி அன்னையாகிய இவளே கடவுளாக இருக்கும் அனைவர்க்கும் மேலான தெய்வங்களே இறைஞ்சி வணங்கும் இறைவி ஆவாள். அவளை வணங்கும் நான் எதிலும் தோல்வி அடையேன். வறுமையில் வாடி வதங்கேன். இவளே அனைத்தையும் உண்டாக்கும் ஓரே தெய்வம் என உணர்ந்த பின் இனி என் உடலாலும் உள்ளத்தாலும் அவளுக்கே உண்மை தொண்டு செய்தே வாழ்ந்திருப்பேன்.

45.தொண்டு செய்யாது நின்பாதம் தொழாது துணிந்து இச்சையே
பண்டுசெய்தார் உளரோ இலரோ அப்பரிசு அடியேன்
கண்டுசெய்தால் அதுகைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கை நன்றே பின் வெறுக்கையன்றே.

அம்மா அபிராமியே, உனக்குத் தொண்டு செய்ய எண்ணாது பெண்களுக்கு அடிமையாகி தொண்டு செய்து உழல்கின்றனர்.

உனது பத்மப் பாதம் பற்றும் வகையறியாது காம இச்சையினால் பெண்களின் காலைப் பற்றி சிற்றின்பத்தில் வீழ்ந்து கிடக்கின்றனர். இவர்களில் முற்பிறவிகளில் புண்ணியம் செய்தவர்கள் உள்ளனரோ, அல்லது புண்ணியம் செய்யாதவர்களோ என்பதை நான் அறியேன். ஆனால் அத்தன்மைகளில் அடியேன் சிற்றின்ப நாட்டத்தில் ஈடுபட்டாலும் அது பொய்யான கபடநாடகமே தவிர அப்போதும் உன் திருவடிப் பற்றியே தவம் செய்தபடி இருப்பேன். உலகில் வரும் இன்ப துன்பங்கள் என அனைத்திலும் உன்திருவடி பற்றும் தவத்தையே செய்து வாழ்ந்து கொண்டிருப்பேன். சிற்றின்பத்தை பேரின்பமாய் மாற்றும் தவச்செயலை நான் அதிகப்படியாகச் செய்தாலும் என்னை உன் குழந்தையாக ஏற்று பொறுத்தருள் புரிதல் வேண்டும். அடியவனை எக்காரணத்தைக் கொண்டும் வெறுத்து ஒதுக்கிவிடாமல் உன் அடியார் கூட்டத்தில் ஒருவனாக ஆக்குத்தாயே.

46. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடபாகம் கலந்தபொன்னே
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே.

அம்மா சிறுபிள்ளைபோல் வெறுக்கும் படியான தவறுகளை நான் செய்தாலும் அதைக்குற்றமாகக் கருதாது அடியவனை மன்னித்து என்னை உன் அடியாரில் சிறந்தவனாக உயர்த்த வேண்டும். தம் அடியார்கள் செய் குற்றங்களை பொறுத்து அவர்களை மேலான சித்தர், முத்தர், முனிவர், ரிஷி என்று ஆக்கிய தன்மைகள் உனக்குப் புதியதல்லவே. ஆதலால் அடியவனையும் உன் திருவருளால் மேலான ஒருவனாக உயர்த்த வேண்டும். ஆல கால விஷத்தை உண்டு தேவர்களை காத்த கறுக்கும் கண்ட முடைய திருநீலகண்டனின் இடபாகம் கலந்த பொன்னொளியான என் அபிராமி அன்னையே! மன்னிக்க முடியாத நான் அறியாமல் செய்த தவறுகளை கண்டு நீ என்னை தண்டித்தாலும், நீயே வந்து இனி என்னை வேண்டாதே என்று மறுத்தாலும் யான் நீ விரும்பும் இசைப்பாடல்களால் உன்னை வாழ்த்தியபடியே வாழ்ந்திருப்பேனே.

47. வாழும் படிஒன்று கண்டுகொண்டேன் மனத்தேயொருவர்
வீழும் படியன்று விள்ளும் படியன்று வேலைநிலம்
ஏழும் பருவரை எட்டும் எட்டாமல் இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே.

நிலையாக வாழும் உன் திருவடியைக் கண்டு கொண்டேன். அது ஒன்றான மெய்ப்பொருளாய் என் மனத்தின் உள்ளே நின்றுள்ளது. அதை மனத்தால் ஒருவர் அறிய முடியாது. அது அழியும் பொருள் இல்லை. சொல்லால் சொல்லி விளக்கும் பொருளும் இல்லை. அது சொல்லாமல் சொல்லி உணர்த்தும் நித்தியப் பொருள். அது ஏழுகடல்களுக்கும் அப்பால் எட்டாகிய அகாரத்தில் விளங்கும் மலை உச்சியில் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாமல் இராப்பகல் அற்ற இடத்தே இரவு பகல் எந்நேரமும் ஒளிச் சுடர்வீசுகின்றது. அவ்வாறு சூழ்ந்து நிற்கும் ஒளிச்சுடரின் நடுவே அம்மா அபிராமி உன்திருவடி சோதி ஒளியாகச் சுடர் வீசுவதை நான் உணர்ந்து கொண்டேன்.

48. சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில் ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்து நெஞ்சில்
இடரும் தவிர்த்து இமைப்போதிருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே.

சுடர்வீசும் சூரியனில் சந்திரகலையை சேர்த்து சூரியனின் நடுவே நின்ற சுழுமுனை வழியே நுணுக்கமாக வாசியினால் உட்புகுந்து உச்சியான மலையில் நின்ற சடாமுடியுடன் விளங்கும் ஈசனிடம் ஒன்றிப் படர்ந்திருக்கும் பச்சை வண்ணமான வாசமிகு மணமாக நின்ற பராசக்தியுடன் இணைக்க வேண்டும். அப்போது சோதி ஒளியாக சிவசக்தியின் அருள் தரிசனம் தோன்றும். அதையே நெஞ்சில் பதித்து தியானித்திருக்க ஆணவ கன்ம மாயை என்னும் பிறிவியைப் பற்றும் இருள் யாவும் விலகும். அதனால் சோதி ஒளி பிரகாசித்து மெய்த்தவம் கூடி சும்மா இருக்கும் சுகம் வாய்க்கும். இந்த தவசாதனையில் இமைப்போதும் பிரியாது இருப்பார்க்கு அன்னை அருளமுர்தம் ஊட்டிடுவாள். அதன் பின்னர் சுத்ததேகம் பெற்று இறவாநிலையுடன் என்றும் இருப்பார். குடலும்,

கொழுப்பும், இரத்தமும் கூடி எலும்பும் சதையுமான இவ்வுடம்பை எடுத்து மீண்டும் இப்பூமியில் பிறவி எடுக்க மாட்டார்கள்.

49. குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி வெங்கூற்றுக்கு இட்ட
வரம்பை அடுத்து மறுகும் அப்போது வளைக்கை அமைத்து
அரம்பை அடுத்த அரிவையர் சூழவந்து அஞ்சல் என்பாய்
நரம்பை அடுத்த இசைவடிவாய் நின்ற நாயகியே.

எலும்பு, நரம்பு, தசை, இரத்தம் என்ற இவைகளைக் கொண்டு தோலால் மூடி வந்த இந்த உடம்பில் உயிரானது புகுந்து தங்கியுள்ளது. உயிர் இவ்வுடம்பில் இறைவன் வகுத்த விதிப்படி தங்கி இருந்தது. விதி முடிந்து உடலிலிருந்த உயிரைக் கொண்டுபோக கொடிய எமன் வரும் பொழுது உயிர் கலங்கித் தவிக்கும். அப்போது அந்த உயிர் அன்னையின் திருவடியில் சரணாகதி அடைந்ததென்றால் சப்தகன்னிகளும் சூழ வந்து தன்வளையலணிந்த வலக்கையால் அபயம் அளித்து அஞ்சேல் என்று சொல்லி அபிராமி அவ்வுயிரைக் காப்பாற்றிடுவாள். வீணையின் நரம்பில் இருந்து எழும் இசையிலும் இனிய நாதவடிவாய் நின்ற நாயகியே அன்னை அபிராமி. ஆதலால் இனிய இசையால் அவளையே பாடி பற்றுமின்கள். இசையில் மகிழ்ந்து தன்னருளை தந்து எமனையும் வென்றிடச் செய்வாள்.

50. நாயகி நான்முகி நாரயணி கைநளின பஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கிஎன்று
ஆயகி யாதி உடையாள் சரணம் அரண் நமக்கே.

அனைவருக்கும் தலைவியாக விளங்கும் ஆதிபராசக்தி என நின்ற நாயகி. நான்முகனாகிய பிரமன் நாவில் சரஸ்வதியாக நின்ற நான்முகி. மகாவிஷ்ணுவாகிய நாராயணன் தங்கையாக விளங்கும் நாராயணி. தன் கைகளில் பஞ்சபூதங்களையும் மலர்களாக தாங்கிநிற்கும் பஞ்சசாயகி. சம்புவாகிய ஈசனின் இடபாகம் நின்றருளும் சாம்பவி. சங்கரனாகிய சிவனுடன் சேர்ந்து அனைவர்க்கும் அருள்புரியும் சங்கரி. பச்சை நிறங்கொண்டு பேரழகாய் திகழும் சாமளை. நச்சுப் பாம்புகளை ஆபரணமாய்

அணிந்து நிற்கும் வாசிநாதமாக விளங்கும் வாலை அம்பிகை. திருமாலின் மார்பில் லெட்சுமியாக விளங்கும் மாலினி. வராக முகம் கொண்டு துஷ்டர்களை வதம் செய்யும் வாராகி. சூலத்தை தாங்கி காளியாக வரும் சூலினி. மாதங்க முனிவரின் மகளாக வளர்ந்து மாதவம் புரிந்த மாதங்கி என்று மங்கள நாமங்களுடன் விளங்கும் ஆதிபராசக்தியென நின்ற அபிராமி அன்னையிடம் சரணம் அடைவது ஒன்றே நம் உயிருக்கு தகுந்த பாதுகாப்பாகும்.

51. அரணம் பொருள் என்று அருள்ஒன்று இலாத அசுரர் தங்கள்
முரண் அன்று அழிய முனிந்த பெம்மானும் முகுந்தனுமே
சரணம் சரணம் எனநின்ற நாயகி தன் அடியார்
மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே.

அசுரர்கள் தாங்கள் பெற்ற வரமும் தங்கள் பலமுமே தங்களுக்கு பாதுகாப்பு என்று இருமாந்திருந்தார்கள். தவசிகளுக்கும் வானுலக தேவர்களுக்கும் துன்பங்களை கொடுத்தனர். தங்கம், வெள்ளி, இரும்பு என மூன்று கோட்டைகளைக் கட்டி அரணாகக் கொண்டு எங்கும் பறந்து சென்று அழிவை ஏற்படுத்திய விதியுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்ற மூன்று அசுரர்களையும், அவர்களின் அரணாக இருந்த முப்புரங்களையும் ஈசன் தன் பார்வையால் பார்த்து புன்சிரிப்பாலேயே அழியச் செய்தான். மகாவிஷ்ணு இரண்யன், இராவணன் போன்ற பல கொடிய அசுரர்களையும் கொன்று அழித்தார். இந்த சிவன், விஷ்ணு ஆகிய இருவருமே தாங்கள் வெற்றிபெற ஆதிபராசக்தியான அன்னையையே சரணம் சரணம் என்று அவள் திருவடியில் பணிந்தே போற்றி வணங்குவர். அப்பேர்பட்ட பெருமை வாய்ந்த எம் அன்னையின் திருவடிப் பற்றிப் பணிந்து தவம் புரியும் அவள் மெய்யடியார்கள் இப்பூமியில் மரணத்தை அடைய மாட்டார்கள். மீண்டும் பிறக்கவும் மாட்டார்கள். அவள் அருளால் என்றென்றும் இறவாநிலையும் திருவடிப் பேறும் பெற்று நிலைத்த புகழுடன் இப்பூமியில் இருப்பார்கள்.

52. வையம் துரகம் மதகரி மாமகுடம் சிவிகை
பெய்யும் கனகம் பெருவிலை ஆரம் பிறைமுடித்த

ஐயன் திருமனையாள் அடித்தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடையார்க்கு உளவாகிய சின்னங்களே.

தேர், குதிரை, யானை போன்ற பயணம் செய்யும் வாகனங்களையும், தலையில் மணிமகுடங்களையும், சுமந்து செல்லும் பல்லாக்கு சிவிகையும், வற்றாது சேர்ந்து கொண்டிருக்கும் பொன், பணம் ஆகிய செல்வங்களையும், விலைமதிப்பில்லாத வைரமணி மாலைகளையும் இவை எல்லாம் அன்னை அபிராமி தம் அடியார்களுக்கு வழங்கி அருளிடுவாள். இதனை உடமையாகக் கொண்டவர்களை காணும்போது அது அவர்கள் முன்சென்மங்களில் பிறைசூடிய பெம்மான் சிவபெருமானின் திருமனைவியான பராசக்தியின் திருவடித்தாமரை மலர்களை பற்றி தவம் புரிந்து அன்பு செய்தவர் என்பதை அறிந்து கொள்ளலாம். இவைகள் அன்னையிடம் அன்புவைத்து அவள் திருவடி பற்றித் தவம் செய்வார்க்கு உள்ளனவாக அன்னை அருளும் அடையாளங்களாம்.

53. சின்னஞ்சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்
பென்னம் பெரிய முலையும் முத்தாரமும் பிச்சிமொய்த்த
கன்னங்கரிய குழலும் கண்மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனி இருப்பார்க்கு இதுபோலும் தவம் இல்லையே.

அம்மா, மெல்லிய சின்னஞ்சிறு இடையினில் சாத்திய செம்மையான பட்டுப்புடவையும், அழகிய மிகப்பெரிய முலைகளையும், அதன் மீது அணிந்துள்ள வெண்முத்து மாலையையும், வாசமிகு பிச்சிப்பூ சூடிய கன்னங்கரிய கூந்தலையும், சந்திர சூரிய அக்கினி

என நின்ற கண்மூன்றும் எப்போதும் தன் மனத்தில் வைத்து அவையாவும் உன் ஒன்றான அழகு வடிவமே என்பதை அறிவினால் அறிந்து அந்த மெய்ப்பொருளையே பற்றி தன்னந்தனியாக தனித்திருந்து அதையே பார்த்து மகிழ்ந்து இருப்பார்க்கு இதைவிட பெரிய தவம் ஏதும் இல்லையே.

54. இல்லாமை சொல்லி ஒருவர்தம்பால் சென்று இழிவுபட்டு

நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல் நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர் தம்பால் ஒருகாலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே.

அம்மா உன்னை தன் உள்ளத்தில் வைத்து நினைப்பவர்க்கு இல்லாமை என்ற வறுமை நிலை ஏற்படாது. உன் திருப்பணி செய்யும் பொருட்டோ என் பொருட்டோ ஒருவரிடம் சென்று உதவி கேட்டு நின்று அவர் இல்லையென்று சொல்லி அவமானப் பட்டு கூனிக்குறுகி நிற்கும் அவல நிலை எனக்கு ஏற்படாவண்ணம் நான் கேட்கும் அனைத்தையும் அருள்பவள் அன்னை அபிராமி. ஆதலால் எவரிடமும் சென்று இழிவுபட்டு நில்லாமை எனக்கருளி நித்தமும் மறவாமல் நீண்ட தவம் செய்யும் வழியை குருவாகவந்து உபதேசித்தாள் அன்னை. தன் உள்ளத்தையும் உணராது மெய் தவத்தையும் கல்லாது கற்றறிந்த கல்வி அறிவைக் கொண்டு பெரிய ஞானிபோல் குருவாகி எல்லாம் அறிந்தவர் போல் பேசி ஏமாற்றும் கயவர்களிடம் என்னை ஒரு காலத்திலும் செல்லா வண்ணம் மெய் ஞானத்தை தந்த வாலை, கன்னி, மனோன்மணி என விளங்கும் திரிபுரை திருவடிகளை அறிந்து சேர்த்து கொள்ளுங்கள்.

55. மின் ஆயிரம் ஒருமெய் வடிவாகி விளங்குகின்ற
அன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுஎங்குமாய் முடிவாய முதல்விதன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே.

ஆயிரம் மின்னல் ஒளிகள் ஒன்று திரண்டு ஓரொளி ஆனது போல் ஒளிமயமான ஒரே மெய் வடிவாகி விளங்குகின்றாள் அன்னை. அத்தன்மை கொண்டவள் அவள் பக்தர்கள் உள்ளங்களில் எல்லாம் ஆனந்த வல்லியாக அமர்ந்து அவர்கள் செய்யும் வழிபாட்டை அகம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்கின்றாள். அரும் வேதங்கள் அனைத்திற்கும் முதலாகவும் நடுவாகவும் முடிவாகவும் இருப்பவள் ஆதி பராசக்தியே. அம்முதல்வியான அன்னையை நீங்கள் நினைக்காது போனாலும், அவளையே நினைந்து வழிபட்டாலும் அவளுக்கு வேண்டுவது என்று ஒன்றும் இல்லையே.

56. ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகு எங்குமாய்
நின்றாள் அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்றன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

ஒன்றான மூலப் பொருளாக இருந்த ஆதிபராசக்தியே பலப்பல தெய்வ வடிவங்களாக விரிந்து இவ்வுலக முழுதும் நிறைந்து நின்றாள். ஒன்றான மெய்ப்பொருளே பலவாகப் பிரிந்து அனைத்து உயிரிலும் அமைந்து இவ்வுலகம் எங்கும் நிறைந்து நின்றுள்ளது. அவள் அணுவில் அணுவாயும் இருப்பாள். இவ்வண்டங்கள் அனைத்தையும் நீங்கி அப்பாலுக்கப்பாலாயும் இருப்பாள். என்றன் நெஞ்சின் உள்ளே என்றும் அழியாது நின்று அருள்புரிபவள் அன்னை அபிராமியே. என்றும் அழியாத மெய்ப்பொருளே அபிராமி என்று அறிந்தவர்கள் அன்று ஆல் இலையில் துயில் கொண்ட கண்ணனும் என் ஐயனாகிய நீலகண்டனும் ஒன்றே என்ற உண்மையை அறிவார்.

57. ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு அண்டம் எல்லாம்
உய்ய அறம் செய்யும் உன்னையும் போற்றி ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய் இதுவோ உன்றன் மெய்அருளே.

ஐயன் அளந்து கொடுத்த இரண்டுபடி அரிசியை ஒரு நாழிகைக்குள் அண்டங்கள் அனைத்திலும் உள்ள எல்லா உயிர்களுக்கும் கிடைக்க அறம் செய்யும் அறம் வளர்த்த நாயகியே அபிராமி. அப்படிப்பட்ட உன்னை பசுந்தமிழ்ப் பாமாலைகள் சூட்டி போற்றி வணங்குவதே என்பணி என்று எனக்கருளிச் செய்தாய். என் உலகவாழ்வுக்காக பொருள் வேண்டி உன்னால் பெரும் செல்வம் படைத்தவர் பால் சென்று அவரைப் புகழ்ந்து தமிழ் பாடல்கள் செய்யவும் என்னைப் பொய்யும் மெய்யும் பேச வைத்தாய். இதுவோ உன்றன் அருட்செயல். என்னை அவ்வழி செல்லாது உன்புகழ் ஒன்றையே பாடவும் உன்திருவடி பற்றியே தவம் செய்யவும் உன் உண்மையான அருளை அடையவும் எனக்கு வழிகாட்டு தாயே.

58\. அருணாம் புயத்தும் என்சித்தாம் புயத்தும் அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல்நல்லாள் தகைசேர் நயனக்
கருணாம் புயமும் வதனாம் புயமும் காராம்புயமும்
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன் ஒருதஞ்சமுமே.

சூரியனில் நின்ற தாமரைமலரான சகஸ்ரதளத்திலும், என் அறிவு விரிந்து தெளிந்து விளங்கும் சித்தம் நின்ற இடத்திலும் அமர்ந்திருக்கும் என் அன்னை அபிராமி தாமரை மொட்டு போன்ற அழகிய முலைகளை உடைய பெண்ணின் நல்லாள். அதுபோலவே அவள் அருள் விழிகளும் தமாரை மலர் போன்ற அழகிய கண்களாம். ஆதலால் அவள் கருணை காட்டும் தாமரை மலர் போன்ற கண்களையும், அவள் அழகிய செந்தாமரை போன்ற முகத்தையும், அவள் அருள் செய்யும் தாமரை மலர் தாங்கிய கரங்களும், அவள் தாமரை மலர் போன்ற மென்மையான திருவடி மலர்களை அல்லால் நான் வேறெதுவும் கண்டிலேன். அவள் தாமரைத் திருவடியில் சரணம் என்று தஞ்சமடைவதே அபிராமி அன்னையின் அருளைப் பெறும் வழியாகும்.

59\. தஞ்சம் பிறிது இல்லை ஈதல்லது என்று உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றிலேன் ஒற்றை நீள் சிலையும்
அஞ்சு அம்பும் இக்கு அலராக நின்றாய் அறியார் எனினும்
பஞ்சு அஞ்சும் மெல்லடியார் பெற்ற பாலரையே.

உன் திருவடியைத் தவிர வேறு புகலிடம் உயிர்களுக்கு இல்லை என்பதால் உன் திருவடியே சரண் என்று தஞ்சமாகக் கிடக்கின்றேன். இது அல்லாமல் உன் அருளை அடையும் தவநெறியை அறிந்து பயிற்சி செய்ய என் நெஞ்சத்தில் நினைக்காமல் இருந்து விட்டேன். அன்னையே அபிராமித்தாயே! நீண்ட தனி வில்லும் ஐந்து அம்புகளும் உனது கைகளில் கரும்பும், மலர்களாகவும் கொண்டு நின்றிருக்கின்றாய். பஞ்சை மிதித்தாலும் அதற்கு நோகுமே என்று அஞ்சும் மென்மையான பாதங்களை உடைய தாய்மார்கள் தாங்கள் பெற்ற மைந்தன் அறியாமல் தவறு செய்தாலும் தண்டிக்க மாட்டார்கள்.அதுபோல் அறியாமல் அடியவன் தவம் செய்யாது இருந்தாலும் அபிராமி தண்டிக்க

மாட்டாள். மாறாக மெய்த்தவத்தைக் காட்டி தவநெறியில் கூட்டி வைப்பாள் அத்தாய்.

60. பாலினும் சொல் இனியாய் பனி மாமலர் பாதம் வைக்க
மாலினும் தேவர் வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும் கீழ்நின்று வேதங்கள் பாடும் மெய்ப்பீடம் ஒரு
நாலினும் சாலநன்றோ அடியேன் முடை நாய்த்தலையே.

பாலை விட இனிமையான சொல்லால் அமுர்த மழை பொழிபவளே அன்னை அபிராமி. அவளுடைய குளிர்ச்சியான அழகிய தாமரை மலர் பாதங்களை என் தலையில் வைத்தாள். திருமாலும் மற்றும் தேவர்களும் வணங்க நீண்ட சடாமுடியில் கொன்றை மாலை சூடி நின்றான் இறைவனாகிய ஈசன். அவனையே வேதங்கள் நான்கும் மேலானவனாக கீழ் நின்று பாடுகின்றது. அந்த வேதங்கள் நான்கையும் தனது பிரணவ பீடமாக கொண்டு அன்னை தன் தாமரை பாதங்களை வைத்து நிற்கின்றாள். அப்பெருமை வாய்ந்த வேதநாயகியான அபிராமி நாற்றமுடைய நாய்த்தலையான அடியேன் தலையில் தன் தாமரைமலர் திருவடிகளை வைத்து அருள் செய்தாள். வேதங்களைக் காட்டிலும் அடியேன் உள்ளத்தை மிகவும் நல்லதாக ஏற்றுக் கொண்டாயோ.

61. நாயேனையும் இங்கு ஒருபொருளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி ஆண்டுகொண்டாய் நின்னை உள்ள வண்ணம்
பேயேன் அறியும் அறிவுத்தந்தாய் என்னபேறு பெற்றேன்
தாயே மலைமகளே செங்கண்மால் திருத் தங்கச்சியே.

நாயினும் கீழானவனாக இருந்த என்னையும் ஒரு பொருளாக மதித்து தானாகவே வலிய வந்து காட்சிதந்து அருள் செய்தாய். உன்னைத்தவிர வேறு நினைவு இன்றி இருக்கும்படி ஆண்டு கொண்டாய். அறியாமை இருளில் பேயனாக அலைந்த எனக்கும் உன்னை உள்ளவண்ணம் அறியும் அறிவு தந்தாய். இந்த மெய் ஞானம் அடைவதற்கும்,தேவர்களாலும் காணமுடியாத உன் அருட்காட்சியை கண்டதற்கும் நான் பெற்ற பெரும் பேறை என்ன வென்று சொல்வேன். தாயே அது உன் கருணை அல்லவா.

மலைத்துவஜன் மகளே! செந்தாமரை கண்களை உடைய திருமாலின் அழகு மிகு தங்கையை.

62. தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கட் கரியுரி போர்த்த செஞ்சேவகன் மெய் அடையக்
கொங்கைக் குரும்பை குறியிட்ட நாயகி கோகனகச்
செங்கைக் கரும்பும் மலரும் எப்போதும் என் சிந்தையதே.

பொன்மலையான மேருவை வில்லாகக் கொண்டு கொடிய அசுரர்களின் முப்புரங்களையும் அழித்து, தன்னை எதிர்த்து வந்த மதம்பிடித்த கொடிய யானையைக் கொன்று அதன் தோலை ஆடையாகப் போர்த்திக் கொண்டவன் சிவபெருமான். அச்செம்மையான மாவீரனின் உடம்பை அடைய அன்னை காமாட்சி மணலால் அவன் திருமேனியை லிங்கமாகச் செய்து பூசித்து வந்தாள். ஆற்றில் வெள்ளம் வந்ததால் அச்சிவலிங்கத்தை தன் மார்ப்போடு அணைத்துக் கொண்டாள். அதற்கு அடையாளமாக சிவன் திருமேனியாகிய லிங்கத்தில் அம்மையின் அழகிய திருமுலைகளின் முத்திரை பதிந்து விட்டன. அவ்வாறு தன் கொங்கைகளை ஈசன் உடம்பில் குறியாக இட்ட நாயகியின் இருப்பிடத்தையே சகஸ்ரதள மலர் என்னும் செந்தாமரை என அறிந்து பற்றிக் கொண்டேன். ஆதலால் எப்போதும் என் உள்ளத்தில் அவள் சிவந்த கரங்களில் ஏந்திய கரும்பு வில்லும் மலர் அம்புகளும் பதிந்தே இருக்கின்றதே. என் உள்ளத்தை விட்டு அவள் நினைவு ஒரு கணமும் விலகவே விலகாதே.

63. தேறும்படி சிலஏதுவும் காட்டி முன்செல் கதிக்குத்
கூறும் பொருள் குன்றிற் கொட்டுந்தறி குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்று கொண்டாடிய வீணருக்கே.

பிறவிகடைத்தேறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சில வழிகளைக் காட்டி முன்னோர்கள் சிவகதி என்னும் நற்பேறடைய மெய்ப்பொருளை அடைய வேண்டும் என்று கூறிச் சென்றார்கள். அது குன்றான மலை உச்சியில் ஆடியபடி குறியாக நின்றுள்ளது.

யோக ஞான சாதனையால் ஆறு ஆதாரசக்திகளையும் உணர்ந்து கடந்து ஏழாம் தளமான சகஸ்ரதளமலரில் துரிய அதீதத்தில் சேர்ந்து நின்றால் அங்கே தலைவியாய் விளங்கும் அன்னையை அறிந்து கொள்ளலாம். கணாபத்யம், சாக்தம், சைவம், வைணவம், கௌமாரம், சௌரம் என்ற ஆறு சமயங்களுக்கும் இறைவியாய் இருப்பவள் இவளே என்பதை அறிந்து தவம்செய்யாமல் வெவ்வேறு சமய வழிகளில் சென்று அவ்வழியே நற்கதி அடைய உயர்ந்த வழி என்று பேசும் வீணர்கள் அறிவீலிகளே. அவ்வகைப்பட்ட அஞ்ஞானிகளுக்கு சில ஆதாரங்களை காட்டி மெய்ப்பொருளை உரைப்பது கல்லாலான குன்றினில் மரத்தாலான ஆப்புகளை அடிப்பது போலாகும். ஆதலின் அன்னை அபிராமி சமயமே உயர்ந்தது உன்மையானது என்பதை உணர்ந்து அவள் திருவடியே நற்கதி அடையும் வழி எனப்பற்றி கொள்ளுங்கள்.

64. வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று மிக்க அன்பு
பூணேன் உனக்கு அன்பு பூண்டுகொண்டேன் நின்புகழ்ச்சி அன்றிப்
பேணேன் ஒருபொழுதும் திருமேனிப் பிரகாசம் அன்றிக்
காணேன் இருநிலமும் திசைநான்கும் ககனமுமே.

வீணாகவே உயிர்பலி வாங்கும் தெய்வங்களை நம்பி அதன் கவர்ச்சியில் மயங்கி என் பக்தியை செலுத்த மாட்டேன். உன்னிடமே என் பக்தியைப் பெருக்கி மிக்க அன்பை மேலோங்கச் செய்வேன். உன் புகழை அல்லால் வேறு எவரையும் புகழ்ந்துப் பாடேன். உன் புகழ் ஒன்றையே பாடி வாழ்ந்திருப்பேன். கண்இமைக்கும் பொழுது கூட உன் சோதி ஒளிப்பிரகாசமான நின் திருமேனி அழகை விட்டு விலகமாட்டேன். இப்பெரிய பூவுலகிலும், நான்கு திசைகளிலும், அகண்ட வெளியிலும் உன் காட்சியைத் தவிர வேறு எதையும் காணேன். அன்னையே அபிராமியே அருள் செய்.

65. ககனமும் வானும் புவனமும் காணவிற் காமன் அங்கம்
தகனம் முன்செய்த தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்
முகனும் முந்நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ வல்லி நீ செய்த வல்லபமே.

அகண்டாகாரமும், வானுலகத்தேவர்களும், இந்த மண்ணுலகமும் காணும்படி காமன் தன் வில்லைக் கொண்டு காமமலர் அம்புகளை தவம் புரிந்து கொண்டிருந்த ஈசன் மீது எய்தினான். சிவன் தன் நெற்றிக் கண்ணைத் திறந்து காமன் உடலை எரித்து சாம்பலாகச் செய்தான். அச்சிவனின் தவத்தை தன் அழகால் களையச் செய்து மணம் புரிந்து கொண்டாள் அன்னை பார்வதிதேவி. மேலும் அச்சிவனோடு சேர்ந்து நெற்றிக் கண்ணில் இருந்தே அழகே உருவான முகம் கொண்ட முருகன் தேன்றினான். பன்னிரு கரங்களும், ஆறு அழகிய உருவங்களும் கொண்டு பேரறிவாக முருகன் மகனாகத் தோன்றியதும், அவன் கைகளில் வெற்றியைத் தரும் வேலையும் அருளியது அபிராமவல்லியான நீ செய்த வல்லபம் அல்லவோ.

66. வல்லபம் ஒன்றறியேன் சிறியேன் நின்மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றொன்றிலேன் பசும் பொற் பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய் வினையேன் தொடுத்த
சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே.

அபிராமி அன்னையே, உன் அடியவனாகிய எனக்கென்று எந்த ஆற்றலும் இருப்பதாக ஒன்றும் அறியேன். ஏதாவது இருக்குமாயின் அது உன் வல்லபமேயன்றி என் செயல் ஏதும் இல்லை. இச்சிறியேன் இளந்தளிர்போன்ற நின் திருவடியான செம்மையான மலர்களை பற்றிப் பணிவது அல்லாமல் வேறு ஒன்றிலும் பற்று வைக்க மாட்டேன், பொன்னாலான மேரு மலையை தன் வில்லாகக் கொண்ட ஈசருடன் அமர்ந்திருக்கும் என் அபிராமி அம்மையே! வினைகளுடன் கூடிப் பிறந்த உன்அடிமையான இவன் தொடுத்து பாடிய இவ்வந்தாதி நூலில் உள்ள சொற்கள் தவறாக இருந்தாலும் உன்னுடைய திருநாமங்களை சொல்லி பாடியுள்ளதால் அதுவும் உன் புகழையே சொல்லும் தோத்திரங்களாகும்.

67. தோத்திரம் செய்து தொழுது மின்போலும் நின்தோற்றம் ஒரு
மாத்திரை போதும் மனத்தில் வையாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம் குன்றி நாளும் குடில்கள் தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்கு உழலா நிற்பர் பாரெங்குமே.

அம்மா அபிராமியே, உன் மந்திரங்களை தோத்திரம் செய்து உன் திருவடிகளை பற்றி தொழுது வணங்குபவர்கள் உன் அருளாள் நல்வாழ்வைப் பெறுவார். மின்னல் போல சுடர் வீசும் சோதி ஒளியான நின் வடிவழகை ஒரு மாத்திரைப் போது மனதில் நிறுத்தி தியானித்தால் போதும். அவள்தன்னருளை வழங்கி பாதுகாப்பாள். இவ்வாறெல்லாம் இல்லாமல் ஒரு நொடிப் போது கூடி அம்மாபெரும் சக்தியை மனத்தில் வைத்து நினையாதவர்கள் வலிமை மிக்க பலமும், உயர்ந்த குலப்பிறப்பும், வம்சத்தின் பெருமையும், கற்ற கல்வியும், நல்லகுணங்களும் குறைந்து போய் சிறப்புகள் அனைத்தும் சீர்குலைந்து போய் விடும். சோற்றுக்கே வழியில்லாது தினந்தோறும் பிச்சை பாத்திரம் ஏந்தி வீடுகள் தோறும் அலைந்து பிச்சை எடுத்து இவ்வுலகில் வாழ்ந்து வருவார்கள்.

68. பாரும் புனலும் கனலும் வெங்காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவைஒளி ஊறு ஒலி ஒன்று படச்
சேரும் தலைவி சிவகாம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம் இல்லையே.

மண்ணும், நீரும், நெருப்பும், வீசும் காற்றும், படர்ந்து நிற்கும் ஆகாயமும் ஆகிய பஞ்ச பூதங்களால் இந்த உலகம் அமைந்து இயங்குகின்றது. அந்த பஞ்ச பூதங்களால் தான் உடம்பும் உற்பத்தியாகி இயங்குகின்றது. உடம்பில் நாற்றம், சுவை,ஒளி, ஊறு,ஒலிஎன்றதன்மாத்திரைகள்ஐம்புலன்களாகஇயங்குகின்றது. இந்த பஞ்ச பூதங்களும், ஐம்புலன்களும் ஒன்றுபடச் சேரும் இடம் மெய்ப்பொருளாக நின்றிருக்கும் அம்பிகையின் திருவடியே ஆகும். தலைவியாக நின்ற சிவகாம சுந்தரியின் பெருமை மிகு திருவடியில் ஐம்பூதங்களையும், ஐம்புலன்களையும் அடக்கி தவம் செய்பவர் இவ்வுலகில் எல்லா செல்வங்களையும் அடைவார்கள். தவம் செய்வார் அடையாத பொருள் ஒன்றும் இல்லையே.

69. தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா

இனம்தரும் நல்லனஎல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

நிறைந்த பொருளான பணம் தருவாள், சிறந்த கல்வியைத் தருவாள். துன்பங்களைக் கண்டு ஒருநாளும் துவண்டுபோகாத உறுதியான மனம் தருவாள். தெய்வம் இவர் என்று பார்த்தோர் வணங்கும் தெய்வ வடிவும் தருவாள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் உலகில் நெஞ்சில் வஞ்சகம் இல்லாத அன்பு நிறைந்த உறவையும் நட்பையும் தருவாள். நல்லவைகள் எவை யோ அவை அனைத்தையும் தருவாள். தன்பக்தர் என்பவர்களுக்கு இவ்வுலகில் உயர்ந்த மதிப்பைத் தருவாள். பூங்குழலால் எங்கள் அபிராமி அன்னையின் கடைக்கண் பார்வை கிடைத்தவர்க்குத்தான் சிவகதி கிடைக்கும்.

70. கண்களிக்கும்படி கண்டு கொண்டேன் கடம் பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக்கும் பச்சை வண்ணமுமாகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெருமாட்டி தன் பேரழகே.

கண்கள் மகிழ்ந்து களிக்கும்படி அம்மா உன்னை கடம்பவனம் என்னும் மதுரையில் மீனாட்சியாக நின்றருள்வதை நான் கண்டு கொண்டேன். இசையின் இனிய ராகங்களே மகிழ்ந்து கேட்கும் அன்னையின் அமுத மொழி பேசும் குரலையும், கையில் வீணையை தாங்கி மீட்டும் பேரழகையும், கூர்மையுடன் பருத்து நிற்கும் இரு திருத்தனங்களும், மண்ணில் செழித்து விளங்கும் பச்சை வண்ணமும் கொண்டு மதங்கமாமுனிவரின் மாதவச் செல்வியாக பெண்ணில் நல்லாள் என தோன்றிய எம்பெருமாட்டியின் ஈடற்ற பேரழகை என் கண்களில் கண்டு தவம் செய்தேன்.

71. அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பாதாம் புயத்தாள் பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே இரங்கேல் உனக்கு என்குறையே.

ஈடு இணை இல்லா அழகுடன் விளங்கும் அபிராமவல்லியின் அழகுக்கு நிகராக ஒருவரையும் ஒப்பாக கூற முடியாது. அப்பேர்பட்ட பேரழகி அரிய வேதங்களான நான்மறைகளுடன் பழகியபடியே இருப்பதால் சிவந்த திருவடிகளை வெளியிலும் ஒளியிலும் பதித்து நின்றுள்ளாள். குளிர்ச்சியுடைய பிறைச்சந்திரனை தன் திருமுடியில் தாங்கி அருள் வழங்கும் கோமளவல்லியாய் யாமளை எனும் வாலைத்தாயாக இமைபோல் நம்மைக் காத்து காவலாக நின்றுள்ளாள். அவளே பிறவிகள் பற்றிக் கொள்ள வேண்டிய மெய்குரு ஆவாள். அவள் திருவடியே பூங்கொம்பாக நம்மை கரையேற்ற சகஸ்ரதள மலரில் நின்றுள்ளது. இப்பிறவிப் பயனை அடையாது செத்தும் பிறந்தும் மீண்டும் மீண்டும் மனிதப் பிறவியை எடுக்கும் மனமே கலங்காதே. அவள் திருவடி தன்னுள் நிற்பதை அறிந்து அதையே இடைவிடாது பற்றி இறைஞ்சி அழும் உள்ளத்தில் அன்னை அபிராமி நிறைந்து நிற்பாள். அவளையே நினைந்து தவம் புரியும் அன்பர்கள் நெஞ்சத்தில் ஒருகுறையும் இல்லாமல் நீக்கி தன் திருவடிப்பேறை அருளிடுவாள் அன்னை.

72. என்குறை தீர நின்று ஏத்துகின்றேன் இனியான் பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண் இருநீள் விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்
தன்குறை தீரஎங்கோன் சடைமேல் வைத்த தாமரையே.

என் பிறவியில் சேர்ந்திருந்த குறைகள் யாவும் அகன்று அழிந்து போக உன் தவநெறியில் நின்று உன் திருவடியைப் பற்றி வணங்கி வழிபடுகிறேன். இத்தோடு என் பிறப்பின் கணக்கைத் தீர்த்து வைத்திடம்மா. இனியும் நான் மீண்டும் இப்பூமியினில் பிறந்தால்! அது நின் திருவருட் கருணையின் குறையாகிவிடும். உன் திருவடி பற்றி நிற்கும் என்னிடம் எமன் வருவானாயின் அதில் வேறு யார்குறையை நான் காண்பது. என்னுள் இருக்கும் வெளியிலும், நீண்ட ஆகாய வெளியிலும் மின்னலைப் போல் ஒளிவீசி அவ்வொளிக்கும் ஒளிகொடுக்கும் சோதி ஒளியாகித் திகழும், மெல்லியதான வாசல் வழியில் நடுவே விளங்கும் மென்மையான மெய்ப்பொருளாய் நின்ற கருணைமிகுந்தாயே என் குறைகள் யாவும் தீர்த்துப் பிறவாநிலையை அருள்வாய்.

எம் பெருமானாகிய சிவபெருமான் கையில் ஒட்டிக் கொண்டு விலகாதிருந்த பிரம்ம கபாலம் நீங்க அவன் சடைமுடியில் மேல் வைத்த நின் திருவடித்தாமரைகளையே அடியேனும் பற்றி நின்று பணிந்து வணங்குகின்றேன்.

73. தாமம் கடம்பு படை பஞ்ச பாணம் தனுக்கரும்பு
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள் நான்கு ஒளி செம்மை அம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு இரண்டு நயனங்களே.

அபிராமி அன்னை மணம் வீசும் கடம்பமலர் மாலையை அணிந்திருக்கின்றாள். தன் கைகளில் ஆயுதங்களாக ஐந்து மலர் அம்புகளையும், கரும்பு வில்லையும் தாங்கி நிற்கின்றாள். அட்ட பைரவர்களும் அன்னையை நடு இரவினில் வழிபட்டு வணங்குவர். எம்மை ஆட்கொண்டு அருள் செய்யும் பொழுது எமக்கென்று தலையில் வைத்த திருவடிகள் இரண்டு. அவளது சிவந்த திருக்கரங்கள் நான்கு. அவள் திருமேனியின் ஒளி செம்மையான பொன்நிறம். அவளுடைய திரு நாமமே திரிபுரை. அவை யாவுமாய் ஒன்றான மணியாக இரண்டு கண்களில் ஒன்றாகி மூன்று கண்களாக முக்கண்ணி அமர்ந்திருந்தாளே.

74. நயனங்கள் மூன்றுடை நாதனும் வேதமும் நாரணனும்
அயனும் பரவும் அபிராம வல்லி அடி இணையைப்
பயனென்று கொண்டவர் பாவையர் ஆடவும் பாடவும் பொற்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே.

மூன்று கண்களை உடைய நாதனாகிய சிவனும், நான்கு வேதங்களும், விஷ்ணுவாகிய நாராயணனும், பிரம்மதேவனும் பணிந்து வணங்குவது அபிராம வல்லியின் திருவடியையே. அவளது இரண்டு திருவடிகளை பற்றித் தவம் செய்வதையே பிறவிப்பயனாக அடைந்தவர் இம்மண்ணுலகில் தாம் எண்ணியதை எல்லாம் அடைவார். மேலும் விண்ணுலகை ஆளும் இந்திரப் பதவி பெற்று தேவலோக அழகு மங்கையர்களான ரம்பை, ஊர்வசி, மேனகை போன்றவர்கள் நடனமாடவும், இன்னிசை

பாடவும் பொன்னாலான மஞ்சத்தில் வீற்றிருந்து பார்த்தும் கேட்டும் மகிழ்ந்திருப்பர். எண்ணியதை எல்லாம் தந்தருளும் கற்பகச் சோலையில் எப்போதும் தங்கி இருப்பார்கள். இவ்வாறு அன்னை அபிராமியிடம் அன்பு கொண்டவர்கள் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் எப்போதும் மகிழ்ச்சியுடன் தங்கி இருப்பார்களே.

75. தங்குவர் கற்பகத் தாருவின் நீழலில் தாயர் இன்றி
மங்குவர் மண்ணில் வழுவாப் பிறவியை மால்வரையும்
பொங்குவர் ஆழியும் ஈரேழ் புவனமும் பூத்த உந்திக்
கொங்கிவர் பூங்குழலாள் திருமேனி குறித்தவரே.

இந்திரலோக பதவி இன்பத்தையும் அடைந்த நிழல் நிறைந்த கற்பகச் சோலையில் தங்கி களித்திருப்பார்கள். மீண்டும் மண்ணுலகிலே ஒரு தாயின் வயிற்றில் பிறக்கும் பிறவித்துன்பத்தை மங்கச்செய்து பிறவாப் பேரின்பவீடு அடைவார்கள். எட்டுத்திக்குகளிலும் உள்ள பெரியமலைகளையும், அலைகள் பொங்கி எழும் கடல்களையும், பதினான்கு உலகங்களையும் படைத்த சகஸ்ரதள மலரின் நடுவே மணம் வீசி நிற்கும் பூங்குழலால் அன்னை அபிராமியின் அழகிய திருவடியைப் பற்றித் தியானம் செய்பவர்க்கு இவை அனைத்தையும் கொடுத்து இறவாநிலை தந்தருள்வாள் அபிராமி.

76.குறித்தேன் மனத்தில் நின்கோலமெல்லாம் நின்குறிப்பு அறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப்பிரான் ஒரு கூற்றை மெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்சபாண பயிரவியே.

அம்மா என் உள்ளத்தில் உனது பாதாதிகேசம் முழுதுமான வடிவழகையே குறித்தபடி தியானம் செய்தேன். அதனால் நின் திரு உளக் குறிப்பு அறிந்து நினதுதிருவடியை விடாது பற்றி தவம் இருந்தேன். தவத்தால் என் விதியை மாற்றி எமன் வருகின்ற நேர்வழியை நேர்நின்று தடுத்தேன். வண்டு போல் வாசியினால் ஓங்கார நாதத்தை எழுப்பி உன் சோதி ஒளியில் கூடி தேனினும் இனிய அமுர்தம் அருந்தி மரணத்தை வென்றேன். அபிராமி

அன்னையே இவையாவும் உன் திருவருளாலன்றோ அடையப் பெற்றேன். கொன்றை மாலை அணிந்த சடாமுடியுடைய எம்பிரானாகிய சிவபெருமானது உடம்பில் சரிபாதியை தன் பேரழகால் கவர்ந்து ஒன்றி நின்ற அர்த்த நாரியே! நீயே என் உள்ளத்தில் குடி புகுந்து ஐந்து மலர் அம்புகளை ஏந்தி பயிரவியாக வீற்றிருக்கின்றாய்.

77. பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணி வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி காளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூரி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே.

பைரவரின் சக்தியான பைரவி, பஞ்ச பூதங்களுடன் கூடி நிற்கும் பஞ்சமி, அங்குசமும் பாசமும் கொண்ட பாசாங்குசை, ஐந்து மலர் அம்புகளை ஆயுதமாக தாங்கி நிற்கும் பஞ்சபாணி, வஞ்சகர்களான அசுரர்களின் உயிரை பலியாக உண்ட உயர்ந்த சண்டிகாதேவி, கரிய வடிவம் உடைய காளி, வைரமணி ஒளிபோல் பிரகாசித்து கலைகள் யாவையும் ஆபரணமாகக் கொண்ட வைரவி, பாம்பு ரூபமான குண்டலினி சக்தியான மண்டலி, ஓங்கார வடிவமாகி அட்சரங்களை மாலையாக அணிந்துள்ள மாலினி, சூலத்தை கையில் கொண்ட சூலி, பன்றி முகங்கொண்ட வராகி என்றே அபிராமி அன்னையின் திரு நாமங்களை ஓதுவார்களின் குற்றங்கள் அனைத்தையும் போக்கி வைத்து அருள் புரிவாள் அன்னை. இந்த அன்னையின் திருநாமங்களையே நான்கு வேதங்களும் சொல்வதை உணர்ந்தே உனது அன்பர்களும் உச்சரித்து உயர்வார்கள்.

78. செப்பும் கனகக் கலசமும் போலும் திருமுலை மேல்
அப்பும் களப அபிராம வல்லி அணி தரளக்
கொப்பும் வயிரக் குழையும் விழியின் கொழுங் கடையும்
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என்துணை விழிக்கே.

செம்புச்சிமிழ் போலும், தங்கக்கலசம் போலும் உள்ள அபிராமி அன்னையின் திருமுலைகளின் மேல் சாத்திய நறு மணங்கமழும்

சந்தன வாசம் வீசும் அபிராம வல்லி அணியும் முத்து மாலையும், வைரத்தால் ஆன தோடாகிய காதணியும், அவள் கடைக்கண் விழிப் பார்வையும், பவளம் போன்ற சிவந்த இதழ்களும், அந்த இதழ்களில் விரியும் நிலவு போன்ற மலர்ந்த புன்னகையும் என் இரு விழிகளிலும் அழியா வண்ணம் எழுதி வைத்தேன். அதையே என் துணை எனக்கொண்டு அபிராமி அன்னையின் திருவடியைப் பற்றியே தவம் செய்தேன்.

79. விழிக்கே அருள் உண்டு அபிராமவல்லிக்கு வேதம் சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு அவ்வழி கிடக்கப்
பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டு இனியே.

அபிராமி அன்னையின் கடைக்கண் பார்வைக்கு தான் அருள் வழங்கும் ஆற்றல் உண்டு. வேதம் சொல்லும் பிரமத்தை அடையும் வழிக்கு அபிராமவல்லியை வழிபடுவதற்கே என் மனம் உண்டு. அன்னையை வணங்கவே வேதங்கள் அறிவுறுத்தி அருள் பெறும் வழியை நமக்கு காட்டுகின்றது. அந்த நல்வழியில் நடப்பதற்கு நமக்கு அன்னையின் துணை இருக்கும் போது, வீணாக பழிக்கே உழன்று கொடும் பாவங்களே செய்து அதனால் வரும் தீவினைகளை சேர்த்து இருளான நரகக் குழியில் வீழ்ந்து துன்புறப் போகும் கீழான எண்ணங் கொண்ட கயவர்களோடு நமக்கு ஒரு போதும் இனிக் கூட்டு இருக்காதே. அவள் அருளால் நல்லடியார்களுடைய நட்பும் ஞானமுமே நம்முடன் கூடி நிற்கும்.

80. கூட்டியவா என்னைத்தன் அடியாரில் கொடியவினை
ஓட்டியவா என்கண் ஓடியவா தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா
ஆட்டியவா நடம் ஆடகத் தாமரை ஆரணங்கே.

என்னையும் தன் அடியார்களில் ஒருவனாக ஆக்கி உன் அன்பர்களுடன் சேர்த்து வைத்த என் அபிராமித்தாயே! உன் அருளால்என்பிறவியில்இருந்தகொடியவல்வினைகள்யாவையும் அகற்றி வைத்தாய். என் கண்ணில் இருந்தே காட்சி கொடுத்து

வானவெளியில் நின்ற நாயகி அவள். தன் அருள் வடிவை உள்ள வண்ணமே உலகுக்கும் காட்டினாள். அன்னையின் அற்புதக் காட்சியைக் கண்ட அனைவரது கண்களுக்கும் மனங்களுக்கும் எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுத்து மகிழ்ச்சியடையச் செய்தாள். என்னை ஒரு பாத்திரமாக வைத்து ஒரு அரிய நாடகத்தை நடத்தி ஆட்டுவித்தாள். அப்பெண் தெய்வம் சகஸ்ரதளம் என்ற ஆயிரம் இதழ் தாமரையில் நின்று ஆடுகின்றாளே.

81. அணங்கே அணங்குகள் நின் பரிவாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை வாழ்த்துகிலேன் நெஞ்சில் வஞ்சகரோடு
இணங்கேன் எனது உனது என்றிருப்பார் சிலர் யாவரொடும்
பிணங்கேன் அறிவொன்றிலேன் என் கண் நீ வைத்த பேரொளியே.

ஒரே இறைவியாகிய பெண் தெய்வமே அபிராமி அன்னை. பெண் தெய்வங்களாக விளங்கும் யோகினிகள், யாட்சனிகள், சப்த கன்னிகள் போன்ற யாவும் உன்னுடைய பரிவார தேவதைகள். அடியேன் உன் அன்பன் ஆகியதால் அத்தெய்வங்களின் துணை எப்போதும் எனக்கு இருக்கும். ஆகையினால் நான் வேறு தெய்வங்களை போற்றி வணங்க மாட்டேன். அன்னையைத் தவிர வேறு ஒருவரை புகழ்ந்து வாழ்த்த மாட்டேன். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வஞ்சக நெஞ்சம் கொண்ட தீயவர்களுடன் கூட்டுறவு வைத்துக் கொள்ள மாட்டேன். எனது உடமை எல்லாம் உன்னுடையதே என்று அர்ப்பணம் செய்து வாழ்ந்திருக்கும் உன் உண்மை அன்பர்கள் சிலரே. அவர்கள் அனைவரயும் ஞானியாக மதித்து இருப்பேனே யன்றி அவர்கள் மனம் கோண நடக்க மாட்டேன். உன் பேரறிவு வடிவம் ஒன்றைத் தவிர புற அறிவு ஏதும் இல்லாத தன்மை பெற்று தவம் இருந்தேன். இது என் கண்ணில் நீ வைத்த திருவடியின் பேரருளால் அல்லவோ.

82. அளியார் கமலத்தில் ஆரணங்கே அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திருமேனியை உள்ளுந்தொறும்
களியாகி அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின் எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே.

வண்டுகள் ரீங்காரமிட்டு மொய்க்கும் தாமரையைப்போல் நாதம் சூழ்ந்து நிற்கும் சகஸ்ரதள தாமரையில் வீற்றிருக்கும் என் அபிராமி அன்னையே! அண்ட சராசரங்கள் அனைத்தும் நின் ஒளியால் நின்றே இயங்குகின்றது. அந்த சோதி ஒளியான உன் திருமேனி வடிவழகை என் உள்ளத்தில் நிறைத்து தியானிக்கும் போது பேரானந்தத்தில் மகிழ்கின்றது. மனம், புத்தி, சித்தம், ஆங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் யாவும் பூரித்து வெள்ளம் போல் கரைபுரண்டு வெளியேறி செயலற்று சும்மா இருக்கும் சுகம் என்ற மெய்த்தவம் வாய்க்கின்றது. அப்போது நின் சோதிப்பேரொளி ஒன்றே எங்கும் எதிலும் வியாபித்திருக்கின்றது. இவ்வாறு எந்த ஓர் எல்லையும் இல்லாதபடி உள்ளம் பரவெளியாகி விட்டால் அடையும் ஆனந்த நிலையிலும் உன் திருவருளை எவ்வாறு மறக்கமுடியும். இந்த யோகசமாதி இன்பம் அடையச் செய்பவளே அன்னை அபிராமியாம்.

83. விரவும் புதுமலரிட்டு நின்பாத விரைக் கமலம்
இரவும் பகலும் இறைஞ்ச வல்லார் இமையோர் எவரும்
பரவும் பதமும் அயிராவதமும் பகீரதியும்
உரவும் குலிசமும் கற்பகக் காவும் உடையவரே.

பலவிதமான மணமிகுந்த புதுமலர்களை பறித்து வந்து நினது திருவடித்தாமரைகளை அர்ச்சித்து, அன்னை அபிராமிதன் மலரடி

பதித்து நின்றிருக்கும் சகஸ்ரதளகமலத்தில் கலந்து இரவும் பகலும் அன்னையையே நினைந்து இறைஞ்சி வழிபட வல்லவர்கள் இப்பூவுலகில் எல்லா நலன்களுடனும் வாழ்வார்கள். வானுலகில் தேவர்கள் யாவரும் அடைய விரும்புகின்ற தேவேந்திர பதவியையும், ஐராவதம் எனும் வெள்ளை யானையையும், ஆகாய கங்கையையும், வலிமை நிறைந்த வஜ்ராயுதத்தையும், நினைத்ததை அடையும் கற்பகச் சோலையையும் உடைய இந்திரனாகவும் ஆவார்கள்.

84. உடையாளை ஒல்கு செம்பட்டுடையாளை ஒளிர்மதி செஞ்
சடையாளை வஞ்சகர் நெஞ்சடையாளைத் தயங்கு நுண்ணூல்

இடையாளை எங்கள் பெம்மான் இடையாளை இங்கு என்னை இனிப்

படையாளை உங்களையும் படையாவண்ணம் பார்த்திருமே.

யாவையும் தனக்கு உடமையாகக் கொண்டவள் அன்னை அபிராமி. அழகிய செம்பட்டை ஆடையாக உடுத்தி நிற்பவள். பிரகாசிக்கும் சந்திரனை தனது செம்மையான கருங்கூந்தலின் மேல் சூடி நிற்பவள். கள்ளங்கபடு கொண்ட வஞ்சகர் நெஞ்சங்களில் ஒரு போதும் இருக்க மாட்டான். மெல்லிய நூலினும் மெல்லிய இடையை உடையவளை, எங்கள் பெருமான் ஈசன் இடபாகம் நின்றவளையே அன்னையாக வணங்கும் என் இறைவியான அபிராமி என்னை இனிபூவுலகில் பிறப்பெடுத்து வாராவண்ணம் படைத்தவளை அறிந்து உலகோரே உங்களையும் மீண்டும் மீண்டும் இப்பூமியில் பிறவாமல் இறவா நிலையுடன் வாழ அன்னையின் திருவடி பற்றிக்கொள்ளுங்கள். அவள் வடிவழகையே பார்த்தபடி தவம் புரியுங்கள்.

85. பார்க்கும் திசைதொறும் பாசாங்குசமும் பனிச்சிறை வண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும் என் அல்லல் எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திருமேனியும் சிற்றிடையும்
வார்க்குங்கும முலையும் முலைமேல் முத்து மாலையுமே.

எந்தத் திசையில் பார்த்தாலும் அந்த அந்த திசைகளில் எல்லாம் பார்க்கும் பாவையாகத் திகழ்பவள் அன்னை அபிராமி. ஆதலால் நான் எப்போதும் பார்ப்பது அன்னையின் கரங்களில் விளங்கும் பாசமும் அங்குசமும் குளிர்ந்த சிறகினை உடைய வண்டுகள் ரீங்காரமிட்டு சுற்றும் புதிய மலர்களாகிய ஐந்து கணைகளும், கரும்பு வில்லும் தாங்கியபடி நிற்கும் அவள் திருமேனி அழகையே. என் பிறவித்துன்பங்களை எல்லாம் தீர்த்து அறவே ஒழிக்கும் திரிபுரையாளின் திருமேனியான சோதி ஒளியும் அவள் சிற்றிடையில் விளங்கும் நாத ஒலியும் அவைகளை உள்ளடக்கி உயர்ந்து நிற்கும் சிவந்த அழகிய முலைகளும், அம்முலைமேல் விளங்கும் வெண்முத்து மாலையும் உள்ளத்தில் நிறுத்தி தியானம் செய்தே அபிராமியின் அருள் பெற்றேன்.

86. மால் அயன் தேட மறைதேட வானவர்தேட நின்ற
காலையும் சூடகக்கையும் கொண்டு கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும் போது வெளிநில் கண்டாய்
பாலையும் தேனையும் பாகையும் போலும் பனி மொழியே.

திருமாலும் பிரமனும் அம்மா அபிராமியே உன் திருவடியை தேடுகின்றார்கள்.நான்மறைவேதங்களும்,வானுலகத்தேவர்களும் உன் திருவடியை நாடியேத் தேடுகின்றனர். அவ்வாறு எவரும் தேடியும் காணாமல் நின்ற உன் திருவடியை என் உள்ளத்தில் பதித்து நின்றாய். ஈசன் விதித்த விதிப்படி என் உயிரைக் கொண்டு போக கொடிய எமன் சூலத்தையும் பாசக்கயிற்றையும் கையில் கொண்டு மரணவேதனையை கொடுக்கும் நெருப்பான வேலை என் மேல் செலுத்தும் போது, அன்னையே உன் திருவடியைக் காட்டியும்,சூலம் தாங்கிய வளையல் அணிந்த கைகளால் தடுத்தும் அதை வெளியில் நிறுத்தி வைத்து என்னைக் காத்தாய். பாலையும், தேனையும், வெல்லப்பாகினையும் விட இனிமையான மொழி பேசும் என் அபிராமித்தாயே! உன் திருவடியை நான் வெளியாக வெளியில் காணும்படி காட்டி அருள் செய்வாய்.

87. மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத நின் திருமூர்த்தி என்றன்
விழிக்கும் வினைக்கும் வெளி நின்றதால் விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை அண்ட மெல்லாம்
பழிக்கும் படி ஒருபாகம் கொண்டாளும் பராபரையே.

சொல்லும் மொழிகளாகிய வாக்கிற்கும், மனத்தால் நினைக்கும் நினைவுக்கும் எட்டாத ஈசனுடன் கூடி நின்ற நின் திருவடிவம் என்றன் கண்ணிற்கும் நான்உன் பொருட்டு செய்த நல்வினைக்கும் வெளியாக நின்றுள்ளதை அன்னையே எனக்குக் காட்டிக் கொடுத்தாள்.தன் தவத்தை அழிக்க மன்மதன் தொடுத்த காமமலர் அம்புகளாலும் அசையாமல் தன் நெற்றிக்கண் திறந்து மன்மதனை எரித்தான் சிவபெருமான். அப்படி எதனாலும் அழிக்க இயலாத சிவன் தவத்தை தன் பேரழகால் கலைத்து அண்ட சராசரங்கள் அனைத்தும் காணும்படி திருமணம் செய்து சிவன் மனைவியானாள் பராசக்தி. மேலும் ஈசனை விட்டு இணைபிரியாவண்ணம் அவன்

இடபாகத்தில் ஈசன் சரிபாதியாகக் கொண்டு அப்பரனையும் ஆளுகின்ற பராபரையே என் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கும் அபிராமி அன்னையாவாள்.

88. பரமென்று உனை அடைந்தேன் தமியேனும் உன் பக்தருக்குள்
தரம் அன்று இவன் என்று தள்ளத்தகாது தரியலர்தம்
புரம் அன்று எரிய பொருப்பு வில் வாங்கியபோதில் அயன்
சிரம் ஒன்று செற்ற கையான் இடப்பாகம் சிறந்தவளே.

அம்மா நீயே பரப்பிரம்மம் என்றும் அனைத்து தெய்வங்களிலும் மேலானவள் என்றும் உணர்ந்து உன் திருவடியில் சரண அடைந்தேன். உன் துணையைத்தவிர வேறு எந்தத்துணையும் இல்லாது தனியாக இருக்கும் அடியேனை எவரும் உன்பக்தருக்குள் இவன் தகுதி இல்லாதவன் என்று வெறுத்து ஒதுக்காது உன் அடியாரில் ஒருவனாய் ஆக்கி வைத்த தாயே! அன்று தருக்கித்திரிந்த கொடிய அசுரர்களின் திரிபுரங்களையும் எரித்து அழித்தவனும், மேருமலையை வில்லாகக் கொண்டு அசுரர்களை ஒழித்தவனும், பிரமனின் ஒரு தலையை கிள்ளி அறுத்த கையை உடையவனும் ஆகிய சிவபெருமான் இடபாகத்தில் சிறந்து விளங்கும் அன்னையே அபிராமி ஆவாள்.

89. சிறக்கும் கமலத்திருவே நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும் நின்துணைவரும் நீயும் துரியம் அற்ற
உறக்கம் தரவந்து உடம்போடு உயிர் உறவு அற்று அறிவு
மறக்கும் பொழுது என்முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே.

சிறப்புமிகுந்த சகஸ்ரதள கமலத்தில் வீற்றிருக்கும் பேரழகு வடிவமான என் அபிராமி அன்னையே! என் தலையில் வைத்த உன் திருவடிகளையே பற்றி நின்று தியானம் செய்கின்றேன். முக்தி இன்பம் தருபவரான நின்துணைவரான ஈசனும் அவர் இடபாகம் இருப்பவளான நீயும் எப்போதும் என் உள்ளத்தில் நிறைந்து நிற்கின்றீர்கள். என் தியான தவ சாதனையில் சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம் என்ற அவத்தை நிலைகளை கடந்து துரியாதீதம் என்னும் ஐந்தாவது நிலை அடையும் போது

உடம்போடுபற்றி உறவு வைத்திருந்த உயிர் பரம்பொருளோடு கூடி ஐக்கியமாகும். அப்போது தற்போதம் என்னும் தன்னறிவும் மறந்து சிவபோதம் என்னும் மெய்ஞ்ஞான அறிவு பிறக்கும். அப்பொழுது நான் உன்னை வருந்தி அழைத்தால் என் முன்னே எழுந்தருளி வந்து காட்சி கொடுக்க வேண்டும். உன்னை மறவாது உன் உத்தமத்திருவடி விட்டு விலகாத யோக சமாதியில் மெய்ஞ்ஞானம் எனைவிட்டு நீங்காமல் இருக்கவும் திருவருள் செய்ய வேண்டும் அம்மா.

90. வருந்தாவகை என்மனத்தாமரையினில் வந்து புகுந்து
இருந்தாள் பழைய இருப்பிடமாக இனி எனக்குப்
பொருந்தாது ஒரு பொருளில்லை விண்மேவும் புலவருக்கு
விருந்தாக வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே.

அம்மா அடியேன் உன்னைத் தேடி அலைந்து வருந்தா வகையில் என் உள்ளத்தாமரையில் தானே வந்து புகுந்து கொண்டாள். அவளை நான் முன் சென்மாவிலேயே முறையாக வணங்கி வழிபாடு செய்தமையால் அதையே தன்பழைய இருப்பிடமாகக் கொண்டு இப்பிறவியிலும் என் உள்ளத்தில் தங்கி இருந்தாள். அவளே மெய்ஞ்ஞான அறிவாய் என் உள்ளே விளங்கும் பொழுது இனி எனக்குப் புரியாத ஒரு பொருள் இல்லை. இனி நான் அடையவேண்டிய பொருள் ஒன்றும் இல்லை. விண்ணிலுள்ள தேவர்களுக்கு பாற்கடலில் தோன்றிய அமுர்தத்தை விருந்தாக வழங்கி அதையே இறவாநிலையுடன் இருக்கும் மருந்தாக்கி அருள் செய்த மென்மையான என் அபிராமி அன்னையே! உன் அடியேனாகிய எனக்கும் அம்மருந்தைக் கொடுத்து இறவாநிலை தர வேண்டும் அம்மா.

91. மெல்லிய நுண்ணிடை மின்அனையாளை விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனையாளை புகழ்ந்து மறை
சொல்லிய வண்ணம் தொழும் அடியாரைத் தொழுமவர்க்குப்
பல்லியம் ஆர்த்தெழ வெண்பகடு ஊரும் பதம் தருமே.

மெல்லிய நுண்ணிய இடை உடைய மின்னலைப்போல் பிரகாசிக்கும் சோதி ஒளியான அன்னையை விரிந்த சடாமுடியை உடைய சிவபெருமான் தழுவும் மென்மையான முலைகளை உடைய உமா தேவியை, பொன் மேனி கொண்ட பொன்னம்பலத்தில் வாழும் அபிராமி அன்னையை நாமணக்கப் பாடிப் புகழ்ந்து வேதங்களில் சொல்லிய வண்ணம் முறைப்படி தொழுது வணங்கும் அடியார்களுக்கு தொண்டு செய்து தொழுபவர்களுக்கும் மேலான பதவி தருபவள் அபிராமி. பலவித இசை வாத்தியங்களும் ஓங்கி ஒலி எழுப்ப வெள்ளை யானையில் ஏறி பவனி வரும் தேவலோகத்தில் சேர்த்து இந்திர பதவியையும் அடையச் செய்வாள் அன்னை அபிராமி.

92. பதத்தே உருகிநின் பாதத்திலே மனம் பற்றி உன்றன்
இதத்தே ஒழுக அடிமை கொண்டாய் இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங்கேன் அவர் போன வழியும் செல்லேன்
முதத்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே.

இந்திர பதவியை விட மேலான பதவி நின் அடியராகும் நற்பேறு. அதற்கே என் உயிரை உருக்கி, உன் திருவடியையே மனம் பற்றி, உன் திருவுளம் விரும்பும் சன்மார்க்க நெறியில் ஒழுகி நடக்க வைத்து என்னை அடிமையாக ஆக்கிக் கொண்டாய். இதை விட இப்பிறவிக்கு வேறு என்ன பேறு வேண்டும். இனியான் ஒருவர் பேசும் வாய் ஜாலத்தில் மயங்கி வேறொரு மதங்களில் என் அறிவை செலுத்தி வீணாக மாட்டேன். அவர்கள் நடக்கும் சமய வழிகளை நாடி ஒருக்காலும் செல்ல மாட்டேன். முதல் தெய்வங்களான பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மூவரும், மற்ற சமயங்களில் வணங்கப்படும் தெய்வங்கள் யாவரும் போற்றி வணங்குவது தெய்வங்களின் தெய்வமாக விளங்கும் அன்னை அபிராமியையே. அவள் எப்போதும் புன்னகை தவழும் பேரழகு சொரூபமானவள்.

93. நகையே இஃதிந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை மானே முதுகண் முடிவில் அந்த

வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

இந்த உலகங்கள் எல்லாம் ஈன்றருளிய நாயகியாம் அன்னை அபிராமிக்கு தாமரை மொட்டு போன்று அரும்பி நிற்கும் முலைகள் என்றும், அருள் பழுத்த அவள் கண்கள் மான்போன்று மருட்சி உடையவை என்றும் கூறுவதெல்லாம் நகைப்புக்குரியதே. அவளுக்கு முடிவும் இல்லை ஆதலால் பிறப்பும் இல்லை. அவள் ஆதி அந்தம் இல்லா அருட்பெருஞ்சோதி வடிவினள். அவளை மலையரசன் மகள் என்பது நமது அதிகப்படியான அறியாமையே. இவளுடைய இயல்புகளை ஆராய்ந்து பார்க்க விரும்புவது நம் அறிவாற்றலுக்கு இயலாத செயலே ஆகும். அவள் அழிவே இல்லாத நித்திய தன்மை உடையவள் என்பதை உணர்ந்து அந்த அன்னையை விரும்பித் தொழுது வணங்கிடுவோம்.

94. விரும்பித் தொழும் அடியார் விழிநீர் மல்கி மெய்புளகம்
அரும்பித் ததும்பி ஆனந்தமாகி அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழி தடுமாறி முன்சொன்ன எல்லாம்
தரும்பித்தர் ஆவரென்றால் அபிராமி சமயம் நன்றே.

தாயே! உன் திருவருளை அடைவதையே விரும்பி உன் மீது உண்மை அன்பு பூண்டு வணங்கி வழிபடும் அடியார் விழிகளில் கண்ணீர் பெருக்கெடுத்து வழிய, உடம்பெல்லாம் மயிர் கூச்சலாகி புளகாங்கிதப்பட்டு பேரின்ப பெருநிலையில் ஆனந்தமயமாகி தற்போதம் இழந்து தேனை மிகுந்து உண்ட வண்டுபோல் மயங்கி சமாதி இன்பத்தில் களித்திருப்பார். அவர்கள் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகள் எல்லாம் அப்படியே சொன்னது போல் பலிக்கும். அன்னையின் அருள்வழியில் தன்னை மறந்து ஆனந்தநிலையில் இருக்கும் அடியாரை உலகம் பைத்தியக்காரன் என்று கூறுமென்றால் அச்சமயத்திலேயே அபிராமி தன் தரிசனம் காட்டி தன்னடியாராக ஆக்கிடுவாள். ஆதலால் அபிராமியை வழிபட்டு அவள் திருவடி சேரும் சமயநெறியே உயர்ந்த நன்னெறி ஆகும்.

95. நன்றே வருகினும் தீதே விளைகினும் நான் அறிவது
ஒன்றேயுமில்லை உனக்கேபரம் எனக்கு உள்ள எல்லாம்
அன்றே உனதென்று அளித்துவிட்டேன் அழியாத குணக்
குன்றே அருட்கடலே இமவான் பெற்ற கோமளமே.

அம்மா நான் முன் சென்மங்களில் செய்த நல்வினைகளால் என்னை நல்லவைகள் யாவும் தேடி வந்து சேர்ந்தாலும், தீ வினைகளால் தீமைகள் விளைந்தாலும் நான் அவைகளைப் பற்றி பெருமை அடைவதற்கோ, கஷ்டப்பட்டு கவலைப்படுவதற்கோ ஒன்றுமே இல்லை. நான் அறிவது எல்லாம் அவைகளில் ஆட்படாது என்னைக் காக்கும் உன் திருவருட் கருணை ஒன்றை மட்டும் தான். அவற்றால் ஏற்படும் விளைவுகள் எல்லாம் உனக்கே சுமையன்றி என்னுடையதல்ல. எனக்கென்று உள்ள சொந்த பந்தங்கள், சொத்தான உடமைகள் என்று எல்லாம் என்னை நீ ஆட்கொண்ட அன்றே உன்னுடையவை என்று சமர்ப்பித்து விட்டேன். அம்மா நீ என்றும் அழியாத குணக்குன்றானவள். கருணை நிறைந்த அருள் கடலானவள். இமவான் அடைந்த மகளாகப் பெற்ற அழகு நிறைந்த கோமளவல்லியாவாய்.

96. கோமளவல்லியை அல்லியந் தாமரைக் கோயில் வைகும்
யாமளவல்லியை ஏதம் இலாளை எழுதரிய
சாமள மேனிச் சகலகலாமயில் தன்னைத் தம்மால்
ஆமளவும் தொழுவார் எழுபாருக்கும் ஆதிபரே.

அழகுக்கு அரசியான அபிராம வல்லியை, ஆயிரம் இதழ்கள் கூடிய சகஸ்ரதள தாமரை மலரை கோயிலாகக் கொண்டு விளங்குபவளை, சாக்த தந்திர சாஸ்திரத்தில் இளங்கொடிபோன்ற இடையை உடைய யாமளவல்லியை, எந்தக் குற்றமும் இல்லாத அழியாத நித்திய சொரூபியை, ஓவியத்தால் வரைவதற்கு அரிய செக்கச் சிவந்த குங்கும மேனிகொண்ட பேரழகு கொண்டவளை, சகல கலைகளுக்கும் தலைவியான சகலகலா வல்லியான மயில் போன்ற நடையழகு கொண்டவளையே தன் தாயாகக் கருதி தம்மால் முடிந்த வரையில் அகாரத்தில் நின்ற அன்னை அவள் திருவடியைப் பற்றி தொழுது தவம் செய்வார் ஏழு உலகங்களுக்கும் அதிபதியாகி அரசாள்வார்.

97. ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன் அமரர்தங் கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதிய முனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.

சூரியன், சந்திரன், அக்கினி, குபேரன், தேவர்கள் தலைவனான இந்திரன், தாமரையில் வீற்றிருக்கும் பிரமன், திரிபுரங்களை எரித்தழித்த சிவன், முராரி எனும் திருமால், பொதிகை மலையில் வாழும் அகத்திய முனி, வேலாயுதம் கையில் கொண்ட கந்தன், மூலமுதல்வனான கணபதி, காமன் என்ற தெய்வங்கள் முதல் யோகம் ஞானம் தவம் என்ற சாதனைகளில் நின்று இவ்வுலகில் இறவாநிலை பெற்று தத்வமசி என்னும் தான் அதுவாகி சாதித்த புண்ணியர்கள் எண்ணில் அடங்காதவர்கள் என அனைவரும் வணங்கிப் போற்றுவது பெண்ணில் நல்லாள் என நின்று அருள் வழங்கும் அபிராமி அன்னையையே.

98. தைவந்து நின்அடித்தாமரை சூடிய சங்கரற்குக்
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்ததெங்கே
மெய்வந்த நெஞ்சின் அல்லால் ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல் அறியா மடப்பூங்குயிலே.

மென்மையாக உன் திருவடித் தாமரையை வருடி தன் தலையில் சூடிக் கொண்டான் சங்கரன். அப்போது சிவன் தன்கையில் இருந்த தீயையும் தலையில் இருந்த கங்கையையும் தன் உள்ளத்தின் உள்ளே மறைத்துக் கொண்டான். இருப்பினும் அவன் உள்ளத்தில் இருந்த உண்மை உணர்ந்து சிவபெருமான் இடபாகத்தில் அன்னை இடங்கொண்டாள். அதுபோல் உண்மையான பக்தி கொண்ட உள்ளங்களை அன்னையே விரும்பி வந்து குடிகொள்வாள். அதைத்தவிர ஒருக்காலும் வஞ்சகர் தங்கள் பொய்யான நெஞ்சில் அவள் புகவே மாட்டாள். எல்லாம் அறிந்த அவளுக்கு பொய்யான உள்ளத்தில் மட்டும் இருக்கத் தெரியாதாம். வாலைப் பெண்ணாக விளங்கும் அழகு சோதி ஒளியாக நின்ற அவளே பூங்குயில் போல் நாத ஒலியாக வெளிப்படும் நாயகியாம் அன்னை அபிராமி அவளை உள்ளன்போடு பூசை செய்து அருளை அடைந்திடுங்கள்.

99. குயிலாய் இருக்கும் கடம்பாடவியிடைக் கோல இயல்
மயிலாய் இருக்கும் இமயாசலத்திடை வந்துதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில் கமலத்தின் மீது அன்னமாம்
கயிலாயருக்கு அன்று இமவான் அளித்த கனங்குழையே.

கடம்பவனம் எனும் தலத்தின் நடுவில் குயில் போல் கூவி நாத ஒலியாய் இருக்கின்றாள். சோதி ஒளிவடிவாக இயங்கி இமயமலை உச்சியில் மயில்போல் நடனம் ஆடிக் கொண்டு இருக்கின்றாள். உதித்து எழுகின்ற சூரியனில் ஆகாய வெளியாய் விளங்கும் சகஸ்ரதள தாமரையின் மீது அன்னம் போல் நீரினில் உலாவிக் கொண்டிருக்கின்றாள். அந்த அபிராமி அம்பிகை அன்று இமவான் மகளான பார்வதியாய் அவதரித்து கயிலாயத்தில் வாழும் சிவ பெருமானுக்கு இமவானால் திருமணம் செய்யப்பட்டாள். அவள் தன் காதில் பொன்னாலான தாடங்கத்தை அணிந்துள்ளாள்.

100. குழையைத்தழுவியகொன்றையந்தார்கமழ்கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந்தோளும் கருப்பு வில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பானமும் வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணும் நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே.

சிவபெருமானை அம்பிகையான காமாட்சி தன் திருக்கரங்களால் இறுகக் குழையத் தழுவியதால் இறைவன் சூடிய கொன்றை மாலை மணம் அவள் இரு கொங்கைகளிலும் தவழ்ந்து விளங்குகின்றது. அந்த அபிராம வல்லியின் இரு தனங்களும், மூங்கிலைப் போன்ற அழகிய நீண்ட தோள்களும் கரும்பு வில்லும், அவளிடம் பொருந்தி நிற்கும் விருப்பத்தை ஈசனுக்குத் தரும் புஷ்ப பாணங்களும், வெண்மையான முத்து போன்ற பல்வரிசை தெரியும்படி புன்னகை புரியும் வதனமும் அன்னையின் அழகு வடிவம் எப்போதும் என்நெஞ்சில் ஒரு கண்ணில் தோன்றி உதித்துக் ொண்டே இருக்கின்றதே.

நூற் பயன்

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்கையில் பாசாங்குசமும் கரும்பு வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.

அம்மா! உன் திருவடிகளை பற்றி வாழும் உன் மெய்யடியார்கள் ஆகிய எங்கள் அபிராம வல்லியை, அண்ட சராசரங்கள் யாவையும் படைத்த அவள் மென்மையான பூப்போன்ற பாதங்களை, மாதுளம் பூ போன்று சிவந்த நிறம் உடையவள் திருவடிகளை, இப்பூமியை தன் திருவடியால் தாங்கி காப்பவளை, அங்குசம், பாசம், மலர் அம்புகள், கரும்புவில் ஆகியவற்றை தன் கரங்களில் ஏந்தி நிற்கும் அன்னையின் திருவடியில் சேர்ப்பவளை, சூரியன் சந்திரன் அக்கினி என்ற மூன்று கண்களை உடைய தேவியின் திருவடிகளையே தொழுது வழிபடுபவர்களுக்கு ஒரு தீங்கும் ஏற்படாதே.

அபிராமி அன்னையின் திருவடிகளே சரணம்.

அபிராமி அந்தாதி முற்றிற்று


திருக்கடையூர் அபிராமி

அபிராமி அம்மைப் பதிகம்

முதலாவது

காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதம், நால்வாய்,
ஐங் கரன்தாள் வழுத்துவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்க்கடவூர் எங்கள்அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு

நூல்

கலையாத கல்வியும், குறையாத வயதும்
ஓர் கபடு வாராத நட்பும், கன்றாத வளமையும்,
குன்றாத இளமையும், கழுபிணி இலாத உடலும்,
சலியாத மனமும், அன்பு அகலாத மனைவியும்,
தவறாத சந்தானமும், தாழாத கீர்த்தியும்,
மாறாத வார்த்தையும், தடைகள் வாராத கொடையும்,
தொலையாத நிதியமும், கோணாத கோலும்,
ஒரு துன்பம் இல்லாத வாழ்வும்,
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப்,
பெரிய தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலைஆழி அறி துயில்கொள் மாயனது தங்கையே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 1

கார் அளக பந்தியும், பந்தியின் அலங்கலும்,
கரிய புருவச் சிலைகளும்,
கர்ண குண்டலமும், மதி முக மண்டலமும்,

நுதல் கத்தூரிப் பொட்டும் இட்டுக்,
கூர் அணிந்திடு விழியும், அமுத மொழியும்,
சிறிய கொவ்வையின் கனி அதரமும்,
குமிழ் அனைய நாசியும், குந்த நிகர்
தந்தமும் கோடு சோடான களமும்,
வார் அணிந்து இறுமாந்த வனமுலையும்,
மேகலையும், மணி நூபுரப் பாதமும்
வந்து எனது முன் நின்று, மந்தகாசமுமாக
வல் வினையை மாற்றுவாயே;
ஆர மணி வானில் உறை தாரகைகள் போல
நிறை ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 2

மகர வார் குழை மேல் அடர்ந்து, குமிழ் மீதினில் மறைந்து,
வாளைத் துறந்து, மைக் கயலை வென்ற நின் செங்கமல
விழி அருள் வரம் பெற்ற பேர்கள் அன்றோ-
செகம் முழுதும் ஒற்றைத் தனிக் குடை கவித்து,
மேல் சிங்க ஆதனத்தில் உற்றுச், செங்கோலும்,
மனு நீதி முறைமையும் பெற்று, மிகு திகிரி உலகு ஆண்டு, பின்பு
புகர் முகத்து ஐராவதப் பாகர் ஆகி, நிறை புத்தேளிர்
வந்து போற்றிப் போக தேவேந்திரன் எனப் புகழ
விண்ணில் புலோமசையொடும் சுகிப்பர்;
அகர முதல் ஆகி வளர் ஆனந்த ரூபியே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 3

மறி கடல்கள் ஏழையும், திகிரி இரு நான்கையும்,
மாதிரக் கரி எட்டையும், மா நாகம் ஆனதையும்,
மா மேரு என்பதையும், மா கூர்மம் ஆனதையும், ஓர்
பொறி அரவு தாங்கிவரு புவனம் ஈர் ஏழையும்,
புத்தேளிர் கூட்டத்தையும், பூமகளையும், திகிரி மாயவனையும்,
அரையில் புலி ஆடை உடையானையும்,
முறை முறைகளாய் ஈன்ற முதியவளாய்ப்,
பழைமை முறைமை தெரியாத நின்னை-
மூவுலகில் உள்ளவர்கள் வாலை என்று அறியாமல்
மொழிகின்றது ஏது சொல்வாய்?
அறிவு நிறை விழுமியர்தம் ஆனந்த வாரியே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 4

வாடாமல் உயிர் எனும் பயிர் தழைத்து ஓங்கி வர,
அருள் மழை பொழிந்தும்,
இன்ப வாரிதியிலே நின்னது அன்பு எனும்
சிறகினால் வருந்தாமலே அணைத்துக்,
கோடாமல் வளர் சிற்றெறும்பு முதல் குஞ்சரக்
கூட்டம் முதலான சீவ கோடிகள் தமக்குப் புசிக்கும்
புசிப்பினைக் குறையாமலே கொடுத்தும்,
நீடாழி உலகங்கள் யாவையும் நேயமாய் நின்
உதர பந்தி பூக்கும் நின்மலீ அகிலங்களுக்கு அன்னை
என்று ஓதும், நீலி என்று ஓதுவாரோ?
ஆடாய நான்மறையின் வேள்வியால் ஓங்கு புகழ்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 5

பல் குஞ்சரம் தொட்டு எறும்பு கடையானது ஒரு
பல் உயிர்க்கும், கல் இடைப் பட்ட தேரைக்கும்,
அன்று உற்பவித்திடு கருப் பை உறு சீவனுக்கும்,
மல்கும் சராசரப் பொருளுக்கும், இமையாத வானவர்
குழாத்தினுக்கும், மற்றும் ஒரு மூவருக்கும், யாவருக்கும்,
அவரவர் மனச் சலிப்பு இல்லாமலே,
நல்கும் தொழில் பெருமை உண்டாய் இருந்தும்,
மிக நவ நிதி உனக்கு இருந்தும்,
நான் ஒருவன் வறுமையில் சிறியன் ஆனால்,
அந் நகைப்பு உனக்கே அல்லவோ?
அல் கலந்து, உம்பர் நாடு அளவு எடுக்கும் சோலை,
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 6

நீடு உலகங்ளுக்கு ஆதாரமாய் நின்று, நித்தமாய்,
முத்தி வடிவாய், நியமமுடன் முப்பத்து இரண்டு
அறம் வளர்க்கின்ற நீ மனைவியாய் இருந்தும்,-
வீடு வீடுகள் தோறும் ஓடிப் புகுந்து, கால் வேசற்று,
இலச்சையும் போய், வெண் துகில் அரைக்கு அணிய
விதியற்று, நிர்வாண வேடமும் கொண்டு, கைக்கு ஓர்
ஓடு ஏந்தி, நாடு எங்கும் உள்ளம் தளர்ந்து நின்று,
உன்மத்தன் ஆகி, அம்மா! உன் கணவன் எங்கெங்கும் ஐயம்
புகுந்து, ஏங்கி, உழல்கின்றது ஏது சொல்வாய்?
ஆடு கொடு மாடமிசை மாதர் விளையாடி வரும்
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 7

ஞானம் தழைத்து, உன் சொரூபத்தை அறிகின்ற
நல்லோர் இடத்தினில் போய், நடுவினில் இருந்து, உவந்து
அடிமையும் பூண்டு, அவர் நவிற்றும் உபதேசம் உட்கொண்டு,
ஈனம்தனைத் தள்ளி எனது, நான் எனும் மானம்
இல்லாமலே துரத்தி, இந்திரிய வாயில்களை இறுகப் புதைத்து,
நெஞ்சு இருள் அற, விளக்கு ஏற்றியே-
வான் அந்தம் ஆன விழி அன்னமே! உன்னை என்
அகத் தாமரைப் போதிலே வைத்து, வேறே கவலை அற்று,
மேல் உற்ற பர வசம் ஆகி, அழியாதது ஓர்
ஆனந்த வாரிதியில் ஆழ்கின்றது என்று காண்?
ஆதி கடவூரின் வாழ்வே?
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 8

சலதி உலகத்தில் சராசரங்களை ஈன்ற தாய் ஆகில்,
எனக்குத் தாய் அல்லவோ? யான் உன் மைந்தன் அன்றோ?
எனது சஞ்சலம் தீர்த்து, நின்றன்
முலை சுரந்து ஒழுகு பால் ஊட்டி, என் முகத்தை உன்
முந்தானையால் துடைத்து, மொழிகின்ற மழமைக்கு
உகந்துகொண்டு, இள நிலா முறுவல் இன்புற்று, அருகில் யான்
குலவி விளையாடல் கொண்டு, அருள் மழை பொழிந்து,
அங்கை கொட்டி, வா என்று அழைத்துக்,
குஞ்சர முகன், கந்தனுக்கு இளையன் என்று எனைக்
கூறினால், ஈனம் உண்டோ?
அலை கடலிலே தோன்றும் ஆராத அமுதமே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 9

கைப் போது கொண்டு, உன் பதப் போது தன்னில் கணப்
போதும் அர்ச்சிக்கிலேன்; கண் போதினால், உன் முகப் போது
தன்னை, யான் கண்டு தரிசனை புரிகிலேன்;
முப் போதில் ஒரு போதும், என் மனப் போதிலே முன்னி,
உன் ஆலயத்தின் முன் போதுவார் தமது பின் போத நினைகிலேன்;
மோசமே போய் உழன்றேன்;
மைப் போதகத்திற்கு நிகர் எனப் போது எரு -
மைக் கடா மீது ஏறியே, மா கோர காலன் வரும்போது,
தமியேன் மனம் கலங்கித் தியங்கும்
அப் போது, வந்து உன் அருட்போது தந்து அருள்;
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 10

மிகையும் துரத்த, வெம் பிணியும் துரத்த, வெகுளி
ஆனதும் துரத்த, மிடியும் துரத்த, நரை திரையும் துரத்த,
மிகு வேதனைகளும் துரத்தப்,
பகையும் துரத்த, வஞ்சனையும் துரத்தப் பசி என்பதும்
துரத்தப், பாவம் துரத்தப், பதி மோகம் துரத்தப்,
பல காரியமும் துரத்த,
நகையும் துரத்த, ஊழ் வினையும் துரத்த, என் நாளும் துரத்த,
வெகுவாய் நா வறண்டு ஓடிக், கால் தளர்ந்திடும் என்னை
நமனும் துரத்துவானோ?
அகில உலகங்கட்கும் ஆதார தெய்வமே!
ஆதி கடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி!
அருள் வாமி! அபிராமியே! 11

அபிராமி அம்மைப் பதிகம்

இரண்டாவது

கங்கையொடு தும்பையும் அணிந்தவர் வியக்கும்
கலா மதியை நிகர் வதனமும், கருணை பொழி விழிகளும்,
விண் முகில்கள் வெளிறெனக் காட்டிய கரும் கூந்தலும்,
சங்கை இல்லாது ஒளிரும் மாங்கல்ய தாரணம் தங்கு
மணி மிடறும், மிக்க சதுர் பெருகு துங்க பாசாங்குசம்
இலங்கு கர தலமும், விரல் அணியும் அரவும்,
புங்கவர்க்கு அமுது அருளும் அந்தர குசங்களும்,
பொலியும் நவமணி நூபுரம் பூண்ட செஞ் சேவடியை நாளும்
புகழ்ந்துமே- போற்றி என வாழ்த்த, விடை மேல்
மாங்களம் மிகுந்த நின் பதியுடன் வந்து, அருள் செய்;
வளர் திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 1

சந்திர சடாதரி! முகுந்த சோதரி! துங்க சலச
லோசன மாதவி! சம்ப்ரம பயோதரி! சுமங்கலி!
சுலட்சணி! சாற்ற அரும் கருணாகரி!
அந்தரி! வராகி! சாம்பவி! அமர தோத்ரி! அமலை!
செக சால சூத்ரி! அகில ஆத்ம காரணி! வினோத சய நாரணி!
அகண்ட சின்மய பூரணி!
சுந்தரி! நிரந்தரி! துரந்தரி! வரை ராச சுகுமாரி!
கௌமாரி! உத் துங்க கல்யாணி! புட்ப அத்திர அம்புய
பாணி! தொண்டர்கட்கு அருள் சர்வாணி!
வந்து அரி, மலர்ப் பிரமராதி துதி, வேத ஒலி வளர்
திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 2

வாச மலர் மரு அளக பாரமும், தண் கிரண மதி முகமும்,
அயில் விழிகளும், வள்ள நிகர் முலையும், மான் நடையும்,
நகை மொழிகளும், வளமுடன் கண்டு, மின்னார்
பாச பந்தத்திடை, மனம் கலங்கித், தினம் பல வழியும்
எண்ணி, எண்ணிப் பழி பாவம் இன்னது என்று அறியாமல்,
மாயப்ர பஞ்ச வாழ்வு உண்மை என்றே,
ஆசை மேலிட்டு, வீணாக, நாய் போல் திரிந்து அலைவது
அல்லாமல் உன்றன் அம்புயப் போது எனும் செம் பதம்
துதியாத அசடன் மேல் கருணை வருமோ?
மாசு இலாது ஓங்கிய குணாகரி! பவானி! சீர் வளர் திருக்
கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி! சிவ
சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 3

நன்று என்று, தீது என்று நவிலும் இவ் இரண்டனுள்,
நன்றதே உலகில் உள்ளோர் நாடுவார் ஆதலின்,
நானுமே அவ்விதம் நாடினேன்; நாடினாலும்
இன்று என்று சொல்லாமல், நினது திரு உள்ளம் அது இரங்கி,
அருள் செய்குவாயேல் ஏழையேன் உய்குவேன்,
மெய்யான மொழி இது உன் இதயம் அறியாதது உண்டோ?
குன்றம் எல்லாம் உறைந்து, என்றும் அன்பர்க்கு அருள்
குமார தேவனை அளித்த குமரி! மரகத வருணி!
விமலி! பைரவி! கருணை குலவு கிரி ராச புத்ரி!
மன்றல் மிகு நந்தன வனங்கள், சிறை அளி முரல,
வளர் திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 4

ஒரு நாள், இரண்டு நாள் அல்ல; நான் உலகத்து
உதித்த இந் நாள் வரைக்கும் ஒழியாத கவலையால்,
தீராத இன்னல் கொண்டு, உள்ளம் தளர்ந்து, மிகவும்

அரு நாண் அற்றிட்ட வில் போல் இருக்கும் இவ்
அடிமைபால் கருணை கூர்ந்து, இங்கு அஞ்சேல் எனச் சொல்லி,
ஆதரிப்பவர்கள் உனை அன்றி இலை உண்மையாக;
இரு நாழிகைப் போதும் வேண்டாது, நிமிடத்தில் இவ் அகில
புவனத்தையும் இயற்றி, அருளும் திறம் கொண்ட நீ,
ஏழையேன் இன்னல் தீர்த்து, அருளல் அரிதோ?
வரு நாவலூரர் முதலோர் பரவும், இனிய புகழ் வளர்
திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 5

எண்ணிக்கை இல்லாத துன்பங்கள் மேன்மேல்
ஏறிட்டு ஒறுக்க, அந்தோ! எவ்விதம் உளம் சகித்து
உய்குவேன்? இப்பொழுது எடுத்திட்ட சன்மம் இதனில்,
நண்ணி எள் அளவு சுகம் ஆனது ஒரு நாளினும் நான்
அனுபவித்தது இல்லை, நாடு எலாம் அறியும், இது கேட்பது ஏன்?
நின் உளமும் நன்றாய் அறிந்து இருக்கும்;
புண்ணியம் பூர்வ சனனத்தினில் செய்யாத புலையன்
ஆனாலும், நினது பூரண கடாட்ச வீட்சண்ணியம் செய்து,
எனது புன்மையை அகற்றி அருள்வாய்;
மண்ணவர்கள், விண்ணவர்கள் நித்தமும் பரவும்,
இசை வளர் திருக்கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 6

தெரிந்தோ, அலாது, தெரியாமலோ, இவ் அடிமை
செய்திட்ட பிழை இருந்தால் சினம் கொண்டு அது ஓர்
கணக்காக வையாது, நின் திரு உளம் இரங்கி, மிகவும்
பரிந்து வந்து இனியேனும் பாழ் வினையில் ஆழ்ந்து,
இனல் படாது, நல் வரம்அளித்துப், பாதுகாத்து அருள் செய்ய
வேண்டும்; அண்டாண்ட உயிர் பரிவுடன் அளித்த முதல்வி!

புரந்தரன், போதன், மாதவன் ஆகியோர்கள் துதி புரியும்
பதாம்புய மலர்ப் புங்கவி! புராந்தகி! புரந்தரி! புராதனி!
புராணி! திரி புவனேசுவரி!
மருந்தினும் நயந்த சொல் பைங் கிளி! வராகி! எழில்
வளர் திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 7

வஞ்சகக் கொடியோர்கள் நட்பு வேண்டாமலும், மருந்தினுக்கா
வேண்டினும், மறந்தும் ஓர் பொய்ம்மொழி சொலாமலும்,
தீமை ஆம் வழியினில் செல்லாமலும்
விஞ்சு நெஞ்சு, அதனில் பொறாமை தரியாமலும், வீண்
வம்பு புரியாமலும், மிக்க பெரியோர்கள் சொலும்
வார்த்தை தள்ளாமலும், வெகுளி அவை கொள்ளாமலும்,
தஞ்சம் என நினது உபய கஞ்சம் துதித்திடத், தமியேனுக்கு
அருள் புரிந்து, சர்வ காலமும் எனைக் காத்து
அருள வேண்டினேன்; சலக் கயல்கள் விழியை அனைய
வஞ்சியர் செவ்வாய் நிகரும் வாவி ஆம்பல் மலரும்
வளர் திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 8

எனது இன்னல் இன்னபடி என்று வேறு ஒருவர்க்கு இசைத்திடவும்,
அவர்கள் கேட்டு, இவ் இன்னல் தீர்த்து, உள்ளத்து இரங்கி,
நன்மைகள் செயவும், எள் அளவும் முடியாது; நின்
உனதம் மருவும் கடைக் கண் அருள் சிறிது செயின், உதவாத
நுண் மணல்களும் ஓங்கு மாற்று உயர் சொர்ண மலை ஆகும்;
அது அன்றி உயர் அகில புவனங்களைக் கனமுடன் அளித்து,
முப்பத்து இரண்டு அறங்களும் கவின் பெறச் செய்யும்
நின்னைக் கருது நல் அடியவர்க்கு எளி வந்து, சடுதியில்
காத்து, ரட்சித்தது ஓர்ந்து,

வனசம் நிகர் நின் பாதம் நம்பினேன், வந்து அருள் செய்;
வளர் திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 9

கரு நீல வடிவமார் மாடு ஏறி, உத்தண்ட கன தண்ட
வெம் பாசமும், கைக் கொண்டு, சண்ட மா காலன் முன் எதிர்க்க,
மார்க்கண்டன் வெகுண்டு நோக்க,
இரு நீல கண்டன் எனும் நின் பதியை உள்ளத்தில்
இன்பு கொண்டு, அருச்சனை செய, ஈசன், அவ் இலிங்கம் பிளப்ப,
நின்னொடு தோன்றி, யமனைச் சூலத்தில் ஊன்றிப்
பெரு நீல மலை என, நிலத்தில் அன்னவன் விழப்,
பிறங்கு தாளால் உதைத்துப், பேசு முனி மைந்தனுக்கு அருள்
செய்தது, உனது அரிய பேர் அருளின் வண்ணம் அலவோ?
வரு நீல மட மாதர் விழி என்ன, மலர் வாவி வளர்
திருக் கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 10

சகல செல்வங்களும் தரும் இமய கிரி ராச தனயை!
மா தேவி! நின்னைச் சத்யமாய், நித்யம் உள்ளத்தில்
துதிக்கம் உத்தமருக்கு இரங்கி, மிகவும்
அகிலமதில் நோய் இன்மை, கல்வி, தன தானியம்,
அழகு, புகழ், பெருமை, இளமை, அறிவு, சந்தானம், வலி,
துணிவு, வாழ் நாள், வெற்றி, ஆகு நல்லூழ், நுகர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும் தந்து அருளி, நீ சுக ஆனந்த
வாழ்வு அளிப்பாய்; சுகிர்த குண சாலி! பரி பாலி! அநு கூலி!
திரி சூலி! மங்கள விசாலி!
மகவு நான், நீ தாய், அளிக்க ஒணாதோ? மகிமை வளர் திருக்
கடவூரில் வாழ் வாமி! சுப நேமி! புகழ் நாமி!
சிவ சாமிமகிழ் வாமி! அபிராமி உமையே! 11

<u>அபிராமி பதிகங்கள் முற்றிற்று</u>

ஸ்ரீ காமாட்சி துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகம் கண்ட நல் கற்பகக் காமினியே
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

கான்உறுமலர் எனக்கதிர் ஒளி காட்டிக் காத்திட வந்திடுவாள்
தான்உறு தவஒளி தார்ஒளி மதிஒளி தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவர் மொழியாள் மாலைகள் சூடிடுவாள்
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச் சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப் பொருந்திட வந்தவளே
எங்குலம் தழைத்திட எழில்வடிவுடனே எழுந்தநல் துர்கையளே
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

தனதன தந்தண தவில்ஒளி முழங்கிடத் தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக் கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறைஒலி கூவிடப் பண்மணி நீ வருவாய்
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி பஞ்சநல் பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணம்மிகு வேழனைக் கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமர்அது செய்த நல்சக்தி எனும் மாயே
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

என்னியபடி நீ அருளிட வருவாய் எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப் பல்கிட அருளிடுவாய்

கண்ணொளி அதனால் கருணையே காட்டிக் கவலைகள் தீர்ப்பவளே
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லையென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச் சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து பழவினை ஓட்டிடுவாய்
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

ஜய ஜய பாலா சாமுண்டேச்வரி ஜய ஜய ஸ்ரீதேவி
ஜய ஜய துர்கா ஸ்ரீ பரமேச்வரி ஜய ஜய ஸ்ரீதேவி
ஜய ஜய ஜயந்தி மங்கள காளி ஜய ஜய ஸ்ரீதேவி
ஜயஜய சங்கரி கௌரி க்ருபாகரி துக்க நிவாரணி காமாட்சி!

ஸ்ரீ காமாட்சி துக்க நிவாரண அஷ்டகம் முற்றிற்று

வராகி மாலை

வசியம்

இருகுழை கோமளந்தாள் புட்பராக மிரண்டு கண்ணும்
குருமணி நீலங்கை கோமேதக நகங் கூர் வயிரம்
திருநகை முத்துக் கனிவாய் பவளஞ் சிறந்து வல்லி
மரகத நாமந் திரு மேனியும் பச்சை மாணிக்கமே.

தரிசனம்

தோராத வட்ட முக்கோண சட்கோணத் துலங்கு வட்டத்
தீராறிதழிட்டு ரீங்கார முள்ளிட்டிது நடுவே
ஆராதனை செய்தருச்சித்துப் பூசித்தடி பணிந்தால்
வாரா திராளல்லளே வாலை ஞான வராகியுமே.

தம்பனம்

மெய்ச்சிரத்திற் பணியார் மனங்காய மிக வெகுண்டு
கைச்சிரத்தேந்திப் புலானிண நாறக் கடித்துதறி
வச்சிரத்தந்த முகப் பணியாற் குத்தி வாய் கடித்துப்
பச்சிரத்தங் குடிப்பாளே வராகி பகைஞரையே.

மோகனம்

படிக்கும் பெரும்புகழ்ப் பஞ்சமியன்பர் பகைஞர்தமை
அடிக்கு மிருப்புத்தடி கொண்டு பேய்களவர் குருதி
குடிக்குங்குடர் கொண்டு தோண் மாலையிட்டுக் குலாவிமன்றில்
நடிக்கும் வராகி பதினாலுலகு நடுங்கிடவே.

ஆக்ருடணம்

நடுங்கா வகையன்பர் நெஞ்சினிற் புக்கவர் நண்ணலரைக்
கொடுங்காளியுண்ணக் கொடுக்குங் குருதிகள் கொப்புளித்திட்
டிடும் பாரக் கொங்கையின் மீதே யிரத்தத் திலகமிடும்
தொடுங்கார் மனோன்மணி வராகி நீலி தொழிலிதுவே.

உச்சாடணம்

வேய்க்குல மன்ன திண்டோளான் வராகி தன் மெய்யன்பரை
நோய்க்குல மென்ன விடும்பு செய்வார் தலை நொய் தழித்துப்
பேய்க்குல முண்ணப் பலி கொண்டு போட்டுப் பிணக் குடரை
நாய்க்குலங் கௌவக் கொடுப்பாள் வராகி யென்னாரணியே.

பேத மாரணம்

நாசப் படுவர் நடுங்கப் படுவர் நமன் கயிற்றால்
வீசப் படுவர் வினையும் படுவரிம் மேதினியோர்
ஏசப் படுவர் இழுக்கப் படுவரென்னேழை நெஞ்சே
வாசப் புது மலர்த்தோளாள் வராகியை வாழ்த்திலரே.

வசியம்

வாலை புவனை திரிபுரை மூன்றுமிவ் வையகத்திற்
காலையு மாலையு மூச்சியுமாக வெக்காலத்துமே
ஆலய மெய்தி வராகி தன் பாதத்தை அன்பிலுன்னி
மாலயன் தேவர் முதலான பேர்களும் வாழ்த்துவரே.

வித்துவேடணம்

வருத்திப் பகைத்திரென்னோடறியாமன் முன் வானவர்க்காச்
சிரித்துப் புரமெரித்தோன் வாம பாகத்துத் தேவியெங்கள்
கருத்திற் பயிலும் வராகியென் பஞ்சமி கண் சிவந்தாற்
பருத்திப் பொதிக்கிட்ட தீப்பொறி கானும் பகைத்தவர்க்கே.

மாரணம்

பாப்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் நின்மலர்ப் பாதந்தன்னிற்
பூப்பட்டதுவும் பொறிபட்டதோ நின்னையே புகழ்ந்து
கூப்பிட்டதுன் செவி கேட்கிலையோ வண்ட கோளமட்டும்
தீப்பட்டதோ பட்டதோ நிந்தையாளர் தெருவெங்குமே.

சிலை மாரணம்

எங்குமெரியக் கிரிகள் பொடிபட வெம் பகைஞர்
அங்கம் பிளந்திட விண் மண் கிழிந்திட வார்த்தெழுந்து
பொங்குங் கடல்கள் சுவறிடச் சூலத்தைப் போக விட்டுச்
சிங்கத்தின் மீது வருவாள் வராகி சிவசக்தியே.

சத்துரு மாரணம்

சத்தி கவுரி மகமாயி ஆயியென் சத்துருவைக்
குத்தி யிரணக் குடரைப் பிடுங்கிக் குலாவி நின்றே
இத்திசை யெங்கு நடுங்கக் கிரிகளிடி படவே
நித்த நடித்து வருவாள் வராகியென் னெஞ்சகத்தே.

பூத மாரணம்

நெஞ்சகந் தன்னில் நிறைந்திருக்கின்றவ ணிர்க் குணத்தி
நஞ்சணி கண்டத்தி நாராயணி தனை நம்புமெற்கு
வஞ்சனை பண்ணி மதியாத பேரை வாணாளை யுண்ணக்
கொஞ்சி நடந்து வருவாள் வராகி குல தெய்வமே.

எதிரி மாரணம்

மது மாமிசந்தனை தின்பானிவளென்று மாமறையோர்
அதுவே யுதாசினஞ் செய்திடுவாரந்த வற்பர் கடங்
கதிர் வாயடைத்திட வுள்ளங் கலங்கக் கடிதடித்து
விதிர் வாளில் வெட்டி யெறிவாள் வராகியென் மெய்த்தெய்வமே.

தேவி ஆக்ருஷணம்

ஐயுங் கிலியு மெனத் தொண்டர் போற்ற வரிய பச்சை
மெய்யுங் கருணை வழிந்தோடுகின்ற விழியுமலர்க்
கையும் பிரம்புங் கபாலமுஞ் சூலமுங் கண்ணெதிரே
வையந் துதிக்க வருவாள் வராகி மலர்க் கொடியே.

சத்துரு மாரணம்

மாளு மனமுந் தலையுங் குலையத் தாியலர்கள்
மாளும் படிக்கு வரந்தருவாயுன்னை வாழ்த்து மன்பர்
கோளும் பகையுங் குறியார்கள் வெற்றி குறித்த சங்கும்
வாளும் கட்கமுஞ் சூலமுமேந்தி வருந்துணையே.

லோக மாரணம்

வருந்துணையென்று வராகியென்றன்னையை வாழ்த்தி நிதம்
பொருந்துந் தகைமையைப் பூணாதவர் தம் புலாலுடலைப்
பருந்துங் கழுகும் வெம்பூதமும் வெய்ய பசாசுகளும்
விருந்துண்ணப் பட்டுக் கிடப்பர் கண்டாயுடல் வேறுபட்டே.

ஏவல் சத்துரு மாரணம்

**வேறாக்கு நெஞ்சும் வினையும் வெவ்வேறு வெகுண்டுடலம்
கூறாக்கு நெஞ்சத்திற் செந்நிறமான குருதி பொங்கச்
சேறாக்குங் குங்குமக் கொங்கையிற் பூசுந் திலகமிடும்
மாறாக்கு நேமிப் படையாடனை வணங்காதவர்க்கே.**

மிருக மாரணம்

**பாடகச் சீறடிப் பஞ்சமியன்பர் பகைஞர் தமை
ஓட விட்டேகை யுலக்கை கொண்டேற்றி யுதிரமெல்லாம்
கோடகத்திட்டு வடித்தெடுத் தூற்றிக் குடிக்குமெங்கள்
ஆடகக் கும்பவிணைக் கொங்கையா ளெங்களம்பிகையே.**

பாவ மாரணம்

**தாமக் குழலுங் குழையும் பொன்னோலையுந் தாமரைப்பூஞ்
சேமக் கழலுந் துதிக்க வந்தேற்குச் செகமதனில்
வாமக் கரள களத்தம்மை யாதி வராகி வந்து
தீமைப் பவத்தைக் கெடுத்தாண்டு கொள்வள் சிவசத்தியே.**

சத்துரு மாரணம்

**ஆராகிலு நமக்கே வினை செய்யின வருடலம்
கூராகும் வாளிக் கிரையிடுவாள் கொன்றைவேணி யரன்
சீரார் மகுடத்தடியிணை சேர்க்குந் திரிபுரையாள்
வாராகி வந்து குடியிருந்தாளென்னை வாழ்விக்கவே.**

பசாசு மாரணம்

**தரிப்பாள் கலப்பை யென்னம்மை வராகியென் சத்துருவைப்
பொரிப்பாள் பொறியெழச் செந்தீயிலிட்டுப் பொரிந்த தலை
நெரிப்பாடலை மண்டை மூளையைத் தின்று பின்னெட்டுடலை
உரிப்பாள் படுக்க விரிப்பாள் சுக்காக வுலர்த்துவளே.**

எதிரி மாரணம்

ஊராகிலு முடனாடாகிலு மவர்க் குற்றவரோ
டாராகிலு நமக்காற்றுவரோ வடலாழியுண்டு
காரார் கனத்த வுலக்கையுமுண்டு கலப்பையுண்டு
வாராகி யென்னுஞ் சண்டப்ரசண்ட விடிவியுண்டே.

சேனை மாரணம்

உலக்கை கலப்பை வொளிவிடுவாள் கடகாழி சங்கம்
வலக்கை யிடக்கையில் வைத்த வராகியென் மாற்றலர்கள்
இலக்கமில்லாத வெழில் பெருஞ் சேனை யெதிர் வ்ரினும்
விலக்க வல்லாளொரு மெல்லி தன்பாதம் விரும்புகவே.

சத்துரு மாரணம்

தஞ்சமுன் பாதஞ் சரணாகதியென்று சார்ந்தவர் மேல்
வஞ்சனை பில்லி கொடிதேவல் சூனியம் வைத்தவரை
நெஞ்சம் பிளந்து நிணக்குடல் வாங்கி நெருப்பினிலிட்
டஞ்சக் கரங்கொண்டறுப்பாள் திரிபுரை யானந்தியே.

அலைபட்டு நெஞ்ச மலைந்துயிர் சோர வலகை கையால்
கொலை பட்டுடலங் கழுகுகள் சூழக் குருதி பொங்கித்
தலை கெட்டவயவம் வேறாய்ப் பதைப்புற்றுச் சாவர் கண்டீர்
நிலை பெற்ற நேமிப் படையாடனை நினையாதவரே.

பகைவர் மாரணம்

சிந்தை தெளிந்துனை வாழ்த்திப் பணிந்து தினந்துதித்தே
அந்தி பகலுன்னை யர்ச்சித்த பேரை யசங்கிதமா
நிந்தனை பண்ணி மதியாதலுத்தர் நிண மருந்திப்
புந்தி மகிழ்ந்து வருவாய் வராகி நற் பொற்கொடியே.

படை மாரணம்

பொருப்புக்கு மாறு செய்யாழியுந் தோடும் பொருப்பை வென்ற
மருப்புக்கு நேர் சொலுங் கொங்கையு மேனியும் வாழ்த்துமென
திருப்புக் கடிய மனத்திற் குடிகொண்டெதிர்த்தவர்க்கு
நெருப்புக் குவாலெனக் கொல்வாய் வராகியென் னிர்க்குணியே.

மோகன மாரணம்

தேறிட்ட நின்மலர்ப் பாதார விந்தத்தைச் சிந்தை செய்து
நீறிட்ட வர்க்கு வினை வருமோன நின்னடியவர் பால்
மாறிட்டவர் தமை வாளாயுதங் கொண்டு வாட்டியிரு
கூறிட்டெறிய வருவாய் வராகி குலதெய்வமே.

உச்சாடணம்

நரி பரியாக்கிய சம்புவின் பாகத்தை நண்ணிய மான்
அரியயன் போற்று மபிராமி தன்னடியார்க்கு முன்னே
சரியாக நின்று தருக்கஞ்செய்மூடர் தலையை வெட்டி
யெரியா யெரித்து விடுவாள் வராகி யெனுந் தெய்வமே.

வீற்றிருப் பாணவ கோணத்திலே நம்மை வேண்டுமென்று
காத்திருப்பாள் கலிவந்தணுகாமலென் கண் கலக்கம்
பார்த்திருப்பாளல்ல வெங்கே யென்றங்குச பாசங்கையில்
கோத்திருப் பாளிவளே யென்னை யாளுங் குல தெய்வமே

சிவஞான போதகி செங்கைக் கபாலி திகம்பரி நற்
றவமாரு மெய்யன்பர்க்கே யிடர் சூழுந் தரியலரை
அவமானஞ் செய்யக் கணங்களையேவு மகோரியிங்கு
நவமாக வந்தெனைக் காக்குந் திரிபுர நாயகியே.

வராகிமாலை முற்றிற்று

கற்பூர நாயகி

கற்பூர நாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்ட சிவகாமியம்மா
பூவிருந்த வல்லி தெய்வயானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
சொற்கோவில் நானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழவைப்பாய் என்னை நீயே.

-அம்மா கற்பூர

புவனம் முழுதும் ஆளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவ நவமாய் வடிவாகும் நாகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜெகதீஸ்வரி
உன்னடிமை சிறியேனை நீயாதரி

-அம்மா கற்பூர

உன்னிடத்தில் சொல்லாமல் வேறு எந்த
உறவிடத்தில் முறையிடுவேன் தாயேஎந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோஅம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடி வாம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவளின் குரல்கேட்டு உன்முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத் தினம் வழி அனுப்பு

-அம்மா கற்பூர

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னடியே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நா உன்னையே பாடவேண்டும்
பக்தியோடு கையுன்னையே கூட வேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடையதாக வேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகளுடைய குறைகளையும் தீருமம்மா
-அம்மா கற்பூர

நெற்றியில் உன் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினில் உன் திருநாமம் நிலவ வேண்டும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருக வேண்டும்-பாடும்
கவிதையிலே உன்நாமம் வழியவேண்டும்
சுற்றமெல்லாம் நீடூழி வாழ வேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நான் உனக்குச் சொல்லலாமா-உன்
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா
-அம்மா கற்பூர

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எந்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ
-அம்மா கற்பூர

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என் காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்நெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர் வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நான்என்றும் பணிய வேண்டும்
என்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
என்னோடு நீ என்றும் வாழவேண்டும்

-அம்மா கற்பூர

கும்பிடவோ கையிரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தி இல்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவுமில்லை

-அம்மா கற்பூர

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கயிறாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகிப் பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் வென்றாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடும் புகழோடு வைப்பாய் என்னை.

-அம்மா கற்பூர

ஸ்ரீ சக்ர லலிதாம்பிகை

ஸ்ரீ சக்ர ராஜ சிம்ஹாசனேஸ்வரி ஸ்ரீ லலிதாம்பிகையே

ஆகம வேத கலாமய ரூபினி
அகில சராட்சர ஜனனி நாராயணி
நாகங்கன நடராஜ மனோகரி
நாதவிக்னேஸ்வரி ராஜராஜேஸ்வரி
-ஸ்ரீசக்ர

பலவிதமாய் உன்னைப் பாடவும் ஆடவும்
பாடிக் கொண்டாடும் அன்பர் பதமலர் சூடவும்
உலகமுழுதும் எனக்அக முறக் காணவும்
ஒரு நிலை தருவாய் காஞ்சி காமாட்சி
-ஸ்ரீசக்ர

உழன்று திரிந்த என்னை உத்தமனாக்கி வைத்தாய்
உயரிய பெரியோருடன் ஒன்றெனக் கூட்டி வைத்தாய்
நிழலெனத் தொடர்ந்த எந்தன் கொடுமையை நீங்கச் செய்தாய்
நித்ய கல்யாணி பவானி பத்மேஸ்வரி
-ஸ்ரீசக்ர

துன்பப் புடத்திலிட்டு தூயவனாக்கி வைத்தாய்
தொடர்ந்து உன்மாயம் நீக்கி பிறந்த பயனைத் தந்தாய்
அன்பை புகட்டி உந்தன் ஆடலைக் காணச் செய்தாய்
அடைக்கலம் நீயே அம்மா அகிலாண்டேஸ்வரி
-ஸ்ரீசக்ர

ஸ்ரீ லலிதா நவரத்ன மாலை

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான சத்குரு சரணம் சரணம்
ஞானானந்தா சரணம் சரணம்

காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தரனாற்ற
நலம் பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே!

-மாதா ஜெய ஓம் லலிதாம்பிகை

வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய் கண்மூடி நெடுங்கனவான தவம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்பெருகும் பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப் பகைவர்க் கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய் மாதாஜெயஓம் லலிதாம்பிகையே!

நீலம்

மூலக் கனலே சரணம் சரணம் முடியா முதலே சரணம் சரணம்
கோலக் கிளியே சரணம் சரணம் குன்றாத ஒளிக் குவையே சரணம்

நீலத் திருமேனியிலே நினைவாய் நினைவற்று எளியேன் நின்றேன்
அருள்வாய்
வாலைக்குமரி வருவாய் வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே.

முத்து

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே முன்நின்றருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம் வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய்நீ சாகாதவரம் தரவே வருவாய்
மத்தேறு ததிக்கிணை வாழ்வடையேன் மாதா ஜெய ஓம் லிதாம்பிகையே!

பவளம்

அந்தி மயங்கிய வானவிதானம் அன்னை நடனம் செயும் ஆனந்தமேடை
சிந்தை நிறம் பவளம் பொழிபாரோர் தேம்பொழிலாமிது செய்தவளாரோ
எந்தை இடத்தும் மனத்தும் இருப்பாள் எண்ணுபவர்க்கருள்
எண்ணமிகுத்தாள்
மந்திர வேதமயப் பொருளானாள் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே!

மாணிக்கம்

காணக்கிடையாக் கதியானவளே கருதக்கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானவளே புனையக் கிடையாப்
புதுமைத்தவளே
356. ஸதாசார ப்ரவர்திகா – ஸதாசாரத்தில் ஈடுபடச் செய்பவள்

357. தாபத்ரயாக்நி ஸம்தப்த ஸமாஹ்லாதந சந்த்ரிகா – மூன்று வகைப்பட்ட அக்னியினால் தகிக்கப்பட்டவர்களுக்கு சாந்தியளிக்கும் நிலவு போன்றவள்

358. தருணீ – நித்ய யௌவனத்தோடு இருப்பவள்

359. தாபஸாராத்யா – தபஸ்விகளால் ஆராதிக்கப்பட்டவள்

360. தநுமத்யா – மெல்லியதான இடையுள்ளவள்

361. தமோபஹா – அவித்யை என்கிற இருட்டைப் போக்குபவள்

362. சிதி: – சித் ஸ்வரூபமாக இருப்பவள்

363. தத்பத லக்ஷ்யார்தா – 'தத் என்கிற பதத்தினால் குறிக்கப்படுகிறவள்

364. சிதேகரஸரூபிணீ – சித் என்பதோடு அபேதமான ரூபங்களோடு கூடியவள்

365. ஸ்வாத்மாநந்த லவீபூத ப்ரஹ்மாத்யாநந்த ஸந்ததி: – தனது ஆத்மானந்தத்தில் ஒரு திவலை போன்ற பிரம்மா முதலியவர்களின் ஆனந்த பரம்பரையை உடையவள்

366. பரா – பரா என்ற சப்தஸ்வரூபிணி

367. ப்ரத்யக் சிதீரூபா – அறிவை உள்நோக்காகச் செய்பவள்

368. பஶ்யந்தீ – 'பச்யந்தீ என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்

369. பரதேவதா – சிறந்த தேவதையாக இருப்பவள்

370. மத்யமா – 'மத்யமா என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்

371. வைகரீ ரூபா – 'வைகரீ என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்

372. பக்த மாநஸ ஹம்ஸிகா – பக்தர்களுடைய மனதில் ஹம்ஸம் போல் விளங்குபவள்

373. காமேஶ்வர ப்ராணநாடீ – காமேச்வரருடைய ஜீவநாடி (குறிப்பு)

374. க்ருதஜ்ஞா – செய்யப்பட்ட எல்லாக் காரியங்களையும் அறிபவள்

375. காமபூஜிதா – மன்மதனால் பூஜிக்கப்பட்டவள்

376. ச்ருங்கார ரஸ ஸம்பூர்ணா – ச்ருங்கார ரஸத்தைப் பூர்ணமாக உடையவள்

377. ஜயா – ஜய ரூபமாக இருப்பவள்

378. ஜாலந்தர ஸ்திதா – ஜாலந்தர பீடத்தில் இருப்பவள்

379. ஓட்யாண பீட நிலயா – ஓட்டியான பீடத்தில் இருப்பவள்

380. பிந்து மண்டலவாஸிநீ – பிந்து மண்டலத்தில் வசிப்பவள்

381. ரஹோயாக க்ரமாராத்யா – ரஹோயாகத்தால் (ரகசிய யாகத்தால்) ஆராதிக்கப்படுபவள் (குறிப்பு)

382. ரஹஸ்தர்பண தர்பிதா – ரகசிய தர்ப்பணத்தால் திருப்தியடைபவள் (குறிப்பு)

383. ஸத்ய: ப்ரஸாதிநீ – உடனே அருள் புரிபவள்

384. விஶ்வஸாக்ஷிணீ – எல்லாவற்றிற்கும் ஸாக்ஷியாயிருப்பவள்

385. ஸாக்ஷிவர்ஜிதா – தனக்கு எந்த ஸாக்ஷியும் இல்லாதவள்

386. ஷடங்கதேவதா யுக்தா – ஆறு அங்கங்களின் தேவதைகளுடன் கூடியவள் (குறிப்பு)

387. ஷாட்குண்ய பரிபூரிதா – ஆறு குணங்கள் நிறைந்தவள் (குறிப்பு)

388. நித்ய க்லிந்நா – எப்பொழுதும் உள்ளத்தில் (தயையால்) ஈரமுள்ளவள்

389. நிருபமா – உவமை இல்லாதவள்

390. நிர்வாண ஸுக தாயிநீ – நிர்வாண முக்தியைக் கொடுப்பவள்

391. நித்யாஷோடஶிகா ரூபா – பதினாறு நித்யா தேவதைகளின் ரூபமாக இருப்பவள்

392. ஸ்ரீகண்டார்த ஶரீரிணீ – பரமசிவனின் பாதி சரீரத்தை உடையவள்

393. ப்ரபாவதீ – பிரபைகளோடு கூடியவள்

394. ப்ரபாரூபா – பிரபையையே ரூபமாக உடையவள்

395. ப்ரஸித்தா – பிரசித்தமானவள்

396. பரமேஶ்வரீ – சிறந்த ஈச்வரியாக இருப்பவள்

397. மூலப்ரக்ருதி – ஸகலத்திற்கும் ஆதிகாரணமான பிரகிருதி ரூபமாக இருப்பவள்

398. அவ்யக்தா – வெளிப்படையாகத் தெரியாதவள்

399. வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணீ – வெளிப்படையாகத் தெரிந்தும் தெரியாமலும் இருப்பவள்

400. வ்யாபிநீ – எங்கும் வியாபித்திருப்பவள்

401. விவிதாகாரா – பலவகையான ரூபங்களையுடையவள்

402. வித்யாவித்யா ஸ்வரூபிணீ – வித்யை, அவித்யை என்று இரண்டு ரூபங்களாகவும் இருப்பவள்

403. மஹாகாமேஶ நயந குமுதாஹ்லாத கௌமுதீ – மஹாகாமேச்வரரின் கண்களாகிற குமுத புஷ்பங்களை – மலரச்செய்யும் நிலவு போன்றவள்

404. பக்த ஹார்த தமோ பேதபானுமத்பானு ஸந்ததி: – பக்தர்களுடைய இதயத்திலிருக்கும் இருட்டைப் போக்கும் – ஸூரிய கிரணம் போன்றவள்

405. ஶிவதூதீ – சிவனைத் தூதனாக அனுப்பிய பெருமையுடையவள் (குறிப்பு)

406. ஶிவாராத்யா – சிவனால் ஆராதிக்கப்பட்டவள்

407. ஶிவமூர்த்தி: – சிவ வடிவானவள் (மங்கள வடிவான வள்)

408. ஶிவம்கரீ – மங்களத்தைச் செய்பவள்

409. ஶிவப்ரியா – சிவனுக்குப் பிரியமானவள்

410. ஶிவபரா – சிவனைத் தவிர வேறு நாட்டமில்லாதவள்

411. ஶிஷ்டேஷ்டா – சிஷ்டர்களிடம் (நல்ல ஆசார சீலர்) இஷ்டமுள்ளவள்

412. ஶிஷ்டபூஜிதா – சிஷ்டர்களால் பூஜிக்கப்பட்டவள்

413. அப்ரமேயா – அளவிடமுடியாதவள்

414. ஸ்வப்ரகாஶா – ஸ்வயம் பிரகாசமாக இருப்பவள்

415. மநோ வாசாமகோசரா – மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவள்

416. சிச்சக்தி – சித் எனப்படும் சக்தி ஸ்வரூபமாக இருப்பவள்

417. சேதநா ரூபா – சைதன்ய ரூபிணி

418. ஜடஶக்தி – ஜடசக்தியாக இருப்பவள்(குறிப்பு)

419. ஜடாத்மிகா – ஜடப்பிரபஞ்சமாகவும் இருப்பவள்

420. காயத்ரீ – காயத்ரீ ரூபமாக இருப்பவள் (குறிப்பு)

421. வ்யாஹ்ருதி: வ்யாஹ்ருதி (உச்சாரணம்) ரூபமாக இருப்பவள்

422. ஸந்த்யா – ஸந்த்யா ரூபமானவள் (குறிப்பு)

423. த்விஜப்ருந்த நிஷேவிதா – த்விஜர்களுடைய கூட்டங்களால் நன்றாக ஸேவிக்கப்பட்டவள்

424. தத்த்வாஸநா – தத்வங்களை ஆஸனமாக உடையவள்

425. தத் – தத் ரூபமானவள் (குறிப்பு)

426. த்வம் – த்வம் (நீ) என்று சொல்லக்கூடியவள்(குறிப்பு)

427. அயீ – அயீ எனப்படுபவள் (குறிப்பு)

428. பஞ்சகோஶாந்தர ஸ்திதா – ஐந்து கோசங்களுக்கும் நடுவிலிருப்பவள்

429. நி:ஸீம மஹிமா – எல்லையில்லா மகிமை வாய்ந்தவள்

430. நித்ய யௌவநா – எப்பொழுதும் யௌவனமாக இருப்பவள்

431. மதஶாலிநீ மதத்தால் சோபிக்கிறவள் (மதம் என்றால் ஆனந்தம்)

432. மதகூர்ணித ரக்தாக்ஷீ – மதத்தால் சுழலும் சிவந்த கண்களையுடையவள்

433. மதபாடல கண்டபூ: – மதத்தால் கன்னங்கள் சிவந்தவள்

434. சந்தந த்ரவ திக்தாங்கீ – அரைத்த சந்தனம் பூசிய அங்கமுடையவள்

435. சாம்பேய குஸும ப்ரியா – சம்பக புஷ்பத்தில் பிரியமுள்ளவள்

436. குஶலா – ஸாமர்த்தியசாலியாக இருப்பவள்

437. கோமலாகாரா – மிருதுவான அங்கங்கள் உடையவள்

438. குருகுல்லா – குருகுல்லா என்ற தேவி வடிவானவள்

439. குலேஶ்வரீ – குலத்திற்கு ஈச்வரியாக இருப்பவள்

440. குருகுண்டாலயா – குலகுண்டமெனப்படும் இடத்தை இருப்பிடமாகக் கொண்டவள்

441. கௌலமார்க தத்பர ஸேவிதா – கௌலமார்க்கத்தில் ஈடுபாடு உள்ளவர்களால் ஸேவிக்கப்பட்டவள

442. குமார கணநாதாம்பா – குமரனுக்கும் கணபதிக்கும் தாயாராக இருப்பவள்

443. துஷ்டி: – த்ருப்தி வடிவானவள்

444. புஷ்டி: – செழுமையாக இருப்பவள்

445. மதி: – புத்தி ரூபமாக இருப்பவள்

446. த்ருதி: – தைரிய ரூபிணி

447. ஶாந்தி: – சாந்தி ரூபமாக இருப்பவள்

448. ஸ்வஸ்திமதீ – க்ஷேமத்தை உடையவள்

449. காந்தி: – காந்தி ரூபமாக இருப்பவள்

450. நந்திநீ – நந்தனுடைய பெண்ணான நந்தினீ வடிவான வள் (குறிப்பு)

451. விக்நநாஶிநீ – இடையூறுகளை நாசம் செய்பவள்

452. தேஜோவதீ – பிரகாசம் பொருந்தியவள்

453. த்ரிநயநா – மூன்று கண்களையுடையவள்

454. லோலாக்ஷீ காமரூபிணீ – பெண்களின் காம வடிவான வள்

455. மாலிநீ – மாலை தரித்தவள் (ஐம்பத்தோரு அக்ஷரங்களின் அதிதேவதையான மாலினீ சக்தி. ஏழு வயதுள்ள கன்னிகை)

456. ஹம்ஸிநீ – ஹம்ஸங்கள் உடையவள்

457. மாதா – அன்னை வடிவினள்

458. மலயாசல வாஸிநீ – மலயமலையில் வசிப்பவள்

459. ஸுமுகீ – பிரகாசிக்கும் முகமுடையவள்

460. நலிநீ – தாமரை புஷ்பம் போன்றவள்

461. ஸுப்ரூ: – அழகிய புருவங்கள் உள்ளவள்

462. ஶோபநா – மங்கள ஸ்வரூபணி

463. ஸுரநாயிகா – தேவர்களின் தலைவி

464. காலகண்டீ – காலகண்டருடைய பத்னி

465. காந்திமதீ – காந்தி உள்ளவள்

466. க்ஷோபிணீ – தீவிரமான உணர்ச்சியை உண்டு பண்ணுகிறவள்

467. ஸூக்ஷ்மரூபிணி – ஸூக்ஷ்ம ரூபத்தையுடையவள

468. வஜ்ரேஶ்வரீ – வஜ்ரேச்வரி என்கிற தேவி ரூபமாக இருப்பவள் (குறிப்பு)

469. வாமதேவீ – வாமதேவருடைய பத்னி

470. வயோவஸ்தாவிவர்ஜிதா – வயதால் நிலைமாறாதவள்

471. ஸித்தேஶ்வரீ – ஸித்தர்களுக்கு ஈச்வரியாக இருப்பவள்

472. ஸித்தவித்யா – சாச்வதமான வித்யா ரூபிணியாக இருப்பவள்(குறிப்பு)

473. ஸித்தமாதா – ஸித்தர்களை ரக்ஷிப்பவள்

474. யஶஸ்விநீ – கீர்த்தி உள்ளவள்

475. விஶுத்திசக்ர நிலயா – (பதினாறுதள கமல) விசுத்தி சக்கரத்தில் இருப்பவள் (குறிப்பு)

476. ஆரக்தவர்ணா – கொஞ்சம் சிவந்த நிறமுள்ளவள்

477. த்ரிலோசநா – மூன்று கண்கள் உள்ளவள்

478. கட்வாங்காதி ப்ரஹரணா – கட்வாங்கம் முதலிய ஆயுதங்களை உடையவள்

479. வதனைக ஸமந்விதா – ஒரு முகம் உடையவள்

480. பாயஸாந்ந ப்ரியா – பாயஸான்னத்தில் பிரியமுள்ளவள்

481. த்வக்ஸ்தா – தோலின் அபிமானி தேவதையாக இருப்பவள்

482. பஶுலோக பயங்கரீ – பசுலோகத்திற்கு பயத்தை உண்டாக்குபவள்

483. அம்ருதாதி மஹாஶக்தி ஸம்வ்ருதா – அம்ருதா முதலிய மஹாசக்திகளால் சூழப்பட்டவள்(குறிப்பு)

484. டாகிநீஶ்வரீ – ‘டாகினி என்ற ஈச்வரி ரூபமாக இருப்பவள்

485. அநாஹதாப்ஜ நிலயா – (பன்னிரண்டு தள கமல) அனாஹத கமலத்திலிருப்பவள்

486. ஶ்யாமாபா – பச்சை கலந்த கருப்பு நிறமுள்ளவள்(பதினாறு வயதுள்ள பெண் ச்யாமா)

487. வதநத்வயா – இரண்டு முகங்கள் உடையவள்

488. தம்ஷ்ட்ரோஜ்ஜ்வலா – கோரைப் பற்களுடன் பிரகாசிப்பவள்

489. அக்ஷமாலாதி தரா – அக்ஷமாலை முதலியவற்றை தரித்திருப்பவள்

490. ருதிர ஸம்ஸ்திதா – ரத்தத்தின் அபிமானி தேவதையாக இருப்பவள்

491. காலராத்ர்யாதி ஶக்த்யௌக வ்ருதா – காலராத்ரி முதலிய சக்திக் கூட்டங்களால் சூழப்பட்டவள்(குறிப்பு)

492. ஸ்நிக்தௌதந ப்ரியா – நெய் நிறைந்த அன்னத்தில் பிரியமுள்ளவள்

493. மஹாவீரேந்த்ர வரதா – மஹா வீரேந்திரர்களுக்கு வரம் கொடுப்பவள்

494. ராகிண்யம்பா ஸ்வரூபிணீ – ‘ராகிணி எனப்

பெயருள்ள ஸ்வரூபமுள்ளவள்

495. மணிபூராப்ஜ நிலயா – (பத்து தள) மணிபூரக கமலத்திலிருப்பவள்

496. வதநத்ரய ஸம்யுதா – மூன்று முகங்கள் உள்ளவள்

497. வஜ்ராதிகாயுதோபேதா – வஜ்ரம் முதலிய ஆயுதங்களையுடையவள்

498. டாமர்யாதிபி ராவ்ருதா – டாமரீ முதலியவர்களால் சூழப்பட்டவள்(குறிப்பு)

499. ரக்தவர்ணா – சிவப்பு நிறமுள்ளவள்

500. மாம்ஸநிஷ்டா – மாம்ஸத்தின் அபிமானி தேவதையாக இருப்பவள்

501. குடாந்ந ப்ரீத மாநஸா – வெல்லம் கலந்த அன்ன த்தினால் பிரீதியடையும் மனமுள்ளவள்

502. ஸமஸ்தபக்த ஸுகதா – எல்லா பக்தர்களுக்கும் சுகத்தை அளிப்பவள்

503. லாகிந்யம்பா ஸ்வரூபிணீ – 'லாகினீ தேவியின் ஸ்வரூபமாக இருப்பவள்

504. ஸ்வாதிஷ்டாநாம்புஜகதா – (ஆறு தள) ஸ்வாதிஷ்டான கமலத்தை அடைந்தவள்

505. சதுர்வக்த்ர மநோஹரா – நான்கு முகங்களோடு அழகாக இருப்பவள்

506. ஶூலாத்யாயுத ஸம்பந்நா – சூலம் முதலிய ஆயுதங்களையுடையவள்

507. பீதவர்ணா – மஞ்சள்(பொன்) நிறமானவள்

508. அதிகர்விதா – மிக்க கர்வம் உள்ளவள்

509. மேதோ நிஷ்டா – மேதஸ்ஸின்(கொழுப்பு) அபிமானி தேவதையாக இருப்பவள்

510. மதுப்ரீதா – தேனில் பிரியமுள்ளவள்

511. பந்திந்யாதி ஸமந்விதா – பந்தினீ முதலியவர்களால் சூழப்பட்டவள்(குறிப்பு)

512. தத்யந்நாஸக்த ஹ்ருதயா – தயிர்ச் சாதத்தில் அதிக விருப்பமுள்ளவள்

513. காகிநீ ரூப தாரிணீ – 'காகினீ தேவியின் ரூபத்தையுடையவள்

514. மூலாதாராம்புஜாரூடா – (நாலு தள) மூலாதார கமலத்தில் வீற்றிருப்பவள்

515. பஞ்சவக்த்ரா – ஐந்து முகங்கள் உள்ளவள்

516. அஸ்திஸம்ஸ்திதா – எலும்பின் அபிமானி தேவதையாக இருப்பவள்

517. அங்குஶாதி ப்ரஹரணா – அங்குசம் முதலிய ஆயுதங்கள் உள்ளவள்

518. வரதாதி நிஷேவிதா – வரதா முதலான சக்திகளால் ஸேவிக்கப்பட்டவள்(குறிப்பு)

519. முத்கௌதநாஸக்த சித்தா – பயத்தம் பருப்புக் கலந்த அன்னத்தில் அதிக விருப்பமுள்ளவள்

520. ஸாகிந்யம்பா ஸ்வரூபிணி – 'ஸாகினீ தேவியின் ஸ்வரூபமாக இருப்பவள்

521. ஆஜ்ஞா சக்ராப்ஜ நிலயா – (இரண்டு தள) ஆஜ்ஞா சக்கர கமலத்திலிருப்பவள்

522. ஶுக்லவர்ணா – வெண்மை நிறமுள்ளவள்

523. ஷடாநநா – ஆறு முகங்கள் உள்ளவள்

524. மஜ்ஜா ஸம்ஸ்தா – மஜ்ஜை (ஊன்) எனும் தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்

525. ஹம்ஸவதீ முக்ய ஶக்தி ஸமந்விதா – ஹம்ஸவதீயை முதன்மையாகவுடைய சக்திகளோடு கூடியவள்

526. ஹரித்ராந்நைக ரஸிகா – மஞ்சள் கலந்த (நிறமான)

அன்னத்தில் பிரியமுள்ளவள்

527. ஹாகிநீ ரூப தாரிணீ – ‘ஹாகினீ தேவியின் ரூபத்தைத் தரிப்பவள்

528. ஸஹஸ்ரதல பத்மஸ்தா – (ஆயிரம் தள) ஸஹஸ்ரார கமலத்திலிருப்பவள்

529. ஸர்வ வர்ணோப ஶோபிதா – எல்லா வர்ணங்களாலும் சோபிக்கிறவள்

530. ஸர்வாயுத தரா – எல்லா விதமான ஆயுதங்களையும் தரித்தவள்

531. ஶுக்ல ஸம்ஸ்திதா – சுக்ல(வீர்ய) எனும் தாதுவின் அபிமானி தேவதையாக இருப்பவள்

532. ஸர்வதோமுகீ – எல்லாத் திக்குகளிலும் திரும்பிய முகங்கள் உள்ளவள்

533. ஸர்வௌதந ப்ரீதசித்தா – எல்லா அன்னங்களிலும் பிரீதியுள்ளவள்

534. யாகிந்யம்பா ஸ்வரூபிணீ – ‘யாகினீ தேவியின் ஸ்வரூபத்தையுடையவள்

535. ஸ்வாஹா – ஸ்வாஹா வடிவானவள்

536. ஸ்வதா – ஸ்வதா ரூபமானவள்

537. அமதி: – அவித்யா ரூபமாக இருப்பவள்

538. மேதா – புத்தியாக இருப்பவள்

539. ஶ்ருதி – வேதங்களின் ரூபமாக இருப்பவள்

540. ஸ்ம்ருதி: – ஸ்ம்ருதிகளின் ரூபமாக இருப்பவள்

541. அநுத்தமா – தனக்கு மேற்பட்டவரில்லாதவள்

542. புண்யகீர்தி: – புண்யத்தைக் கொடுக்கும் கீர்த்தியுடையவள்

543. புண்யலப்யா – புண்யத்தால் அடையக் கூடியவள்

544. புண்யஶ்ரவண கீர்தநா – (தன் பெருமையைக்) கேட்பவருக்கும் கீர்த்தனம் செய்பவருக்கும் புண்யம் அளிப்பவள்

545. புலோமஜார்சிதா – இந்திராணியால் பூஜிக்கப்பட்டவள்

546. பந்தமோசநீ – பந்தங்களிலிருந்து விடுவிப்பவள்

547. பர்பராலகா – சுருண்ட முன்நெற்றி மயிர்களையுடையவள

548. விமர்ஷரூபிணீ – விமர்ச ரூபத்தையுடையவள்(குறிப்பு)

549. வித்யா – வித்யா ரூபமாக இருப்பவள்

550. வியதாதி ஜகத்ப்ரஸூ: – ஆகாசம் முதலிய ஜகத்தை படைத்தவள்

551. ஸர்வவ்யாதி ப்ரஶமநீ – ஸகல வியாதிகளையும் போக்குபவள்

552. ஸர்வ ம்ருத்யு நிவாரிணீ – ஸகல மரணத்தையும் தவிர்ப்பவள

553. அக்ரகண்யா – முதன்மையாக எண்ணப்படுகிறவள்

554. அசிந்த்யரூபா – சிந்திக்க முடியாதவள்

555. கலிகல்மஷ நாஶிநீ – கலியுகத்தின் தோஷத்தை நாசம் செய்பவள்

556. காத்யாயநீ – காத்யாயனீ ஸ்வரூபமாக இருப்பவள்(குறிப்பு)

557. காலஹந்த்ரீ – காலனை ஸம்ஹரிப்பவள்

558. கமலாக்ஷ நிஷேவிதா – விஷ்ணுவினால் ஸேவிக்கப்பட்டவள

559. தாம்பூல பூரித முகீ – தாம்பூலம் நிறைந்த வாயை உடையவள்

560. தாடிமீ குஸூம ப்ரபா – மாதுளம் பூப்போன்ற காந்தியுள்ளவள்

561. ம்ருகாக்ஷீ – மானின் கண்களைப்போன்ற கண்களையுடையவள்

562. மோஹிநீ – மோஹமடையும்படிச் செய்பவள்

563. முக்யா – முதன்மையானவள்

564. ம்ருடாநீ – (ம்ருடருடைய) பரமசிவனுடைய பத்னி (சுகத்தை அளிப்பவள்)

565. மித்ரரூபிணீ – நண்பன் ஸ்வரூபமாக இருப்பவள்(குறிப்பு)

566. நித்ய த்ருப்தா – எப்பொழுதும் த்ருப்தியோடிருப்பவள்

567. பக்தநிதி – பக்தர்களின் பொக்கிஷம்

568. நியந்த்ரீ – ஜகத்தை நியமிக்கிறவள்

569. நிகிலேஶ்வரீ – எல்லாவற்றிற்கும் ஈச்வரி

570. மைத்ர்யாதி வாஸநாலப்யா – மைத்ரீ முதலான வாஸனைகளால் அடையக் கூடியவள்

571. மஹா ப்ரலய ஸாக்ஷிணீ – மஹா பிரளய காலத்தில் ஸாக்ஷியாக இருப்பவள

572. பராஶக்தி: – பராசக்தி ரூபிணி

573. பராநிஷ்டா – நிஷ்டையின் முடிவாக இருப்பவள்

574. ப்ரஜ்ஞாநகந ரூபிணீ – நித்யமானதும் கலப்பில்லாததுமான ஞானரூபமாக இருப்பவள்

575. மாத்வீபாநாலஸா – மாத்வீ பானத்தால் வெளிநாட்டமற்றிருப்பவள்(குறிப்பு)

576. மத்தா – மயங்கியவள் போலிருப்பவள்

577. மாத்ருகா வர்ண ரூபிணீ – மாத்ருகா வர்ணரூபமாக இருப்பவள்

578. மஹாகைலாஸ நிலயா – மஹாகைலாஸத்தில் இருப்பவள்

579. ம்ருணால ம்ருது தோர்லதா – தாமரைத் தண்டிலிருக்கும் நூலைப்போல ம்ருதுவான கொடி போன்ற கைகளையுடையவள்

580. மஹநீயா – போற்றுதற்குரியவள்

581. தயாமூர்த்தி: – கருணை வடிவானவள்

582. மஹாஸாம்ராஜ்ய ஶாலிநீ – மஹா ஸாம்ராஜ்யத்தோடு விளங்குகிறவள்

583. ஆத்மவித்யா – ஆத்மஞான ரூபிணியாக இருப்பவள்

584. மஹாவித்யா – மஹாவித்யா ரூபிணியாக இருப்பவள்

585. ஸ்ரீவித்யா – ஸ்ரீவித்யா வடிவானவள்

586. காமஸேவிதா – மன்மதனால் ஸேவிக்கப்பட்டவள்

587. ஸ்ரீஷோடஶாக்ஷரீவித்யா – ஸ்ரீஷோடசாக்ஷரீ வித்யா ரூபிணியாக இருப்பவள்

588. த்ரிகூடா – மூன்று கூடங்களோடு கூடியவள்

589. காமகோடிகா – சிவ ஸமானமாயிருப்பவள் (காமகோடி பீடத்திலிருப்பவள்)

590. கடாக்ஷ கிம்கரீ பூத கமலா கோடி ஸேவிதா – கடாக்ஷத்திற்காக பணி செய்யும் கோடிக்கணக்கான லக்ஷ்மிதேவிகளால் ஸேவிக்கப்பட்டவள்

591. ஶிர:ஸ்திதா – சிரஸில் இருப்பவள்

592. சந்த்ரநிபா – சந்திரனைப் போன்ற காந்தியுடையவள்

593. பாலஸ்தா – நெற்றியிலிருப்பவள்

594. இந்த்ர தநு: ப்ரபா – வானவில்போல் அர்த்தசந்திர ரூபமாக இருப்பவள்

595. ஹ்ருதயஸ்தா – இதயத்தில் இருப்பவள்

596. ரவிப்ரக்யா – ஸூரியனைப் போன்ற காந்தியுள்ளவள்

597. த்ரிகோணாந்தர தீபிகா – (மூலாதார) முக்கோணத்தில்

தீபமாக இருப்பவள்

598. தாக்ஷாயணீ – தக்ஷனுடைய பெண்

599. தைத்யஹந்த்ரீ – அசுரர்களை ஸம்ஹாரம் செய்பவள்

600. தக்ஷயஜ்ஞவிநாஶிநீ – தக்ஷனுடைய யஜ்ஞத்தை நாசம் செய்தவள்

601. தராந்தோலித தீர்காக்ஷீ – கொஞ்சம் சஞ்சலமான நீண்ட கண்களையுடையவள்

602. தரஹாஸோஜ்ஜ்வலந்முகீ – புன்சிரிப்பினால் பிரகாசிக்கும் முகமுடையவள்

603. குரு மூர்த்தி: – குருவின் ரூபமாக இருப்பவள்

604. குணநிதி: – குணங்களுக்கெல்லாம் பொக்கிஷம் போலிருப்பவள்

605. கோமாதா – காமதேனு ரூபமாக இருப்பவள்

606. குஹஜந்ம பூ: – ஸ்கந்தருக்கு ஜன்ம ஸ்தானமாக இருப்பவள்

607. தேவேஶீ – தேவர்களுக்கெல்லாம் ஈச்வரி

608. தண்டநீதிஸ்தா – தண்டிக்கும் நீதி சாஸ்த்ரத்தில் இருப்பவள்

609. தஹராகாஶ ரூபிணீ – தஹராகாச ஸ்வரூபமாக இருப்பவள்

610. ப்ரதிபந்முக்ய ராகாந்த திதி மண்டல பூஜிதா – பிரதமை முதல் பௌர்ணமி வரையுள்ள திதி மண்டலத்தில் பூஜிக்கப்படுபவள்

611. கலாத்மிகா – கலா ஸ்வரூபமாக இருப்பவள் (குறிப்பு)

612. கலாநாதா – கலைகளுக்கெல்லாம் தலைவி

613. காவ்யாலாப விமோதிநீ – காவிய வர்ணனைகளில் விசேஷமாக சந்தோஷமடைகிறவள்

614. ஸசாமர ரமா வாணீ ஸவ்ய தக்ஷிண ஸேவிதா – இடது பக்கமிருக்கும் லக்ஷ்மியாலும் வலது பக்கமிருக்கும் ஸரஸ்வதியாலும் சாமரங்களால் ஸேவிக்கப்பட்டவள்

615. ஆதிஶக்தி: – ஆதிசக்தியாக இருப்பவள்

616. அமேயா – அளவிடமுடியாதவள்

617. ஆத்மா – ஆத்மரூபிணியாக இருப்பவள்

618. பரமா – எல்லாவற்றிலும் சிறந்தவள்

619. பாவநாக்ருதி: – பரிசுத்தமான உருவம் உள்ளவள்

620. அநேககோடி ப்ரஹ்மாண்ட ஜநநீ – அநேக கோடி பிரம்மாண்டங்களை உண்டுபண்ணினவள்

621. திவ்ய விக்ரஹா – ரமணீயமான உருவம் உள்ளவள்

622. க்லீம்காரீ – 'க்லீம் என்கிற காமராஜ பீஜ ஸ்வரூபமாயிருப்பவள்

623. கேவலா – தான் தானேயாகி நிற்பவள்

624. குஹ்யா – மிக ரகசியமான அர்த்தத்தையுடையவள்

625. கைவல்ய பத தாயிநீ – கைவல்ய பதவியை அளிப்பவள்

626. த்ரிபுரா – மும்மூர்த்திகளுக்கும் முந்தியிருப்பவள்

627. த்ரிஜகத்வந்த்யா – மூன்று லோகங்களாலும் வணங்கத் தக்கவள்

628. த்ரிமூர்த்தி – மும்மூர்த்தி ரூபமாயிருப்பவள்

629. த்ரிதஶேஶ்வரீ – தேவர்களுக்கெல்லாம் ஈச்வரி (குறிப்பு)

630. த்ர்யக்ஷரீ – மூன்று அக்ஷர ரூபமாயிருப்பவள்

631. திவ்ய கந்தாட்யா – திவ்யமான வாசனையுடையவள்

632. ஸிந்தூர திலகாம்சிதா – ஸிந்தூர திலகத்தினால் அலங்கரிக்கப்பட்டவள்

633. உமா – உமா என்கிற பெயருடையவள் (குறிப்பு)

634. ஶைலேந்த்ரதநயா – பர்வதராஜனான ஹிமவானின் பெண்

635. கௌரீ – வெளுப்பான நிறமுடையவள் (பத்து வயதுள்ள கன்னிகை கௌரி)

636. கந்தர்வ ஸேவிதா – கந்தர்வர்களால் ஸேவிக்கப்பட்டவள்

637. விஶ்வகர்பா – ஸகல பிரபஞ்சத்தையும் தன் கர்ப்பத்தில் வைத்திருப்பவள்

638. ஸ்வர்ணகர்பா – ஹிரண்யகர்ப்ப ரூபமானவள்

639. அவரதா – அசுரர்களைக் கண்டிக்கிறவள்(அவரர் என்றல் அசுரர்)

640. வாகதீஶ்வரீ – வாக்கிற்கு ஈச்வரி

641. த்யாநகம்யா – தியானத்தால் அடையக்கூடியவள்

642. அபரிச்சேத்யா – தேசம், காலம் முதலிய அளவுகளுக்கு அடங்காதவள்

643. ஜ்ஞாநதா – ஞானத்தை அளிப்பவள்

644. ஜ்ஞாநவிக்ரஹா – ஞானமே சரீரமாக உடையவள்

645. ஸர்வ வேதாந்த ஸம்வேத்யா – எல்லா உபநிஷத்துக்களாலும் நன்றாக அறியப்பட்டவள்

646. ஸத்யாநந்த ஸ்வரூபிணீ – ஸத்யம், ஆனந்தம் இவையே ஸ்வரூபமாக உடையவள்

647. லோபாமுத்ரார்சிதா – லோபாமுத்ரையால் பூஜிக்கப்பட்டவள்

648. லீலாக்ல்ருப்த ப்ரஹ்மாண்ட மண்டலா – பிரம்மாண்ட மண்டலங்களை விளையாட்டாக ச்ருஷ்டிப்பவள்

649. அத்ருஶ்யா – (ஊனக்கண்ணால்) பார்க்க முடியாதவள்

650. த்ருஶ்யரஹிதா – தனக்கு வேறாகப் பார்க்கும்படியான பொருள்கள் இல்லாதவள்

651. விஜ்ஞாத்ரீ - விசேஷமான அறிவோடு கூடியவள் (எல்லாவற்றையும் அறிவிப்பவள்)

652. வேத்ய வர்ஜிதா - தெரியவேண்டியது ஒன்றுமில்லாதவள்

653. யோகிநீ - யோக ஸ்வரூபமாக இருப்பவள்

654. யோகதா - யோகத்தைக் கொடுப்பவள்

655. யோக்யா - யோகத்தால் அடையத் தகுந்தவள்

656. யோகாநந்தா - யோகத்திலேயே ஆனந்தமுடையவள்

657. யுகந்தரா - நாலு யுகங்களையும் தரிப்பவள்

658. இச்சாஶக்தி ஜ்ஞாநஶக்தி க்ரியாஶக்தி ஸ்வரூபிணீ - இச்சை, ஞானம், க்ரியா முதலிய சக்திகளை ஸ்வரூபமாக உடையவள்(குறிப்பு)

659. ஸர்வாதாரா - ஸகலத்திற்கும் ஆதாரமானவள்

660. ஸுப்ரதிஷ்டா - சிறந்த இருப்பிடமானவள்

661. ஸதஸத்ரூப தாரிணீ - ஸத், அஸத் என்ற ரூபங்களைத் தரித்திருப்பவள்

662. அஷ்டமூர்த்தி: - எட்டுவிதமான மூர்த்திகளையுடையவள்

663. அஜாஜேத்ரீ - அவித்யையை ஜயித்தவள்

664. லோகயாத்ரா விதாயிநீ - லோகங்களின் யாத்திரையை நடத்தி வைப்பவள்

665. ஏகாகிநீ - ஒருத்தியாக (தனியாக) இருப்பவள்

666. பூமரூபா - 'பூமா என்கிற பிரஹ்மஸ்வரூபிணி

667. நிர்த்வைதா - இரண்டாவது வஸ்து என்ற பாவமே இல்லாதவள்

668. த்வைதவர்ஜிதா - த்வைதத்தினின்றும் இயல்பிலே நீங்கியவள்

669. அந்நதா - அன்னமளிப்பவள்

670. வஸுதா – செல்வமளிப்பவள்

671. வ்ருத்தா – வயதில் முதிர்ந்தவள்

672. ப்ரஹ்மாத்மைக்ய ஸ்வரூபிணீ – பிரஹ்மம், ஜீவாத்மா இவர்களுடைய ஐக்கிய ஸ்வரூபிணி

673. ப்ருஹதீ – பெரியவள் (ப்ருஹதீ என்கிற சந்தஸ் வடிவானவள்)

674. ப்ராஹ்மணீ – பரமசிவனுடைய பத்னி (பிராம்மண பத்னி) (குறிப்பு)

675. ப்ராஹ்மீ – பிரம்மாவின் சக்தி ரூபமாக இருப்பவள் (ஸரஸ்வதி)

676. ப்ரஹ்மாநந்தா – பிரஹ்மானந்தத்தையுடையவள்

677. பலிப்ரியா – பலசாலிகளிடம் பிரியமுள்ளவள்

678. பாஷாரூபா – பாஷைகளின் ரூபமாக இருப்பவள்

679. ப்ருஹத்ஸேநா – பெரிய சேனைகளை உடையவள்

680. பாவாபாவ விவர்ஜிதா – உத்பத்தி, அழிவு இவ்விரண்டுமில்லாதவள்

681. ஸுகாராத்யா – சுகமாக ஆராதிக்கக் கூடியவள்

682. ஶுபகரீ – சுபத்தை செய்கிறவள்

683. ஶோபநாஸுலபாகதி: – நித்யானந்தத்தை அளிப்பவளாகவும் சுலபமாக அடையக்கூடியவளாகவும் இருப்பவள்

684. ராஜராஜேஶ்வரீ – ராஜாதிராஜர்களுக்கெல்லாம் ஈச்வரி

685. ராஜ்யதாயிநீ – ராஜ்யத்தை அளிப்பவள்

686. ராஜ்யவல்லபா – ராஜ்யங்களில் பிரியமுள்ளவள்

687. ராஜத்க்ருபா – சோபிக்கும் கிருபையுடையவள்

688. ராஜபீட நிவேஶித நிஜாஶ்ரிதா – தன்னை நாடியவர்களை ராஜபீடங்களில் அமர்த்தி வைப்பவள்

689. ராஜ்யலக்ஷ்மீ: – ராஜ்யலக்ஷ்மி ரூபமாக இருப்பவள்

690. கோஶநாதா – பொக்கிஷத்திற்கு ஸ்வாமினி (பஞ்ச கோசங்களுக்கு நாயகி)

691. சதுரங்க பலேஶ்வரீ – (ரத, கஜ, துரக, பதாதி) சதுரங்க சேனைக்கு ஈச்வரி

692. ஸாம்ராஜ்ய தாயிநீ – ஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவள்

693. ஸத்யஸந்தா – ஸத்தியமான பிரதிஜ்ஞை உள்ளவள்

694. ஸாகரமேகலா – ஸமுத்திரத்தையே ஒட்டியாணமாக உடையவள்

695. தீக்ஷிதா – ஞானத்தை அடையும்படி செய்பவள்

696. தைத்யஶமநீ – அசுரர்களை அடக்குபவள்

697. ஸர்வலோகவஶங்கரீ – ஸகல லோகங்களையும் தன்வசங் கொண்டவள்

698. ஸர்வார்த்ததாத்ரீ – ஸகல புருஷார்த்தங்களையும் அளிப்பவள்

699. ஸாவித்ரீ – ஸாவித்ரி ரூபமாக இருப்பவள்

700. ஸச்சிதாநந்த ரூபிணீ – ஸத், சித், ஆனந்தங்களை தன்னுடைய ரூபமாக உள்ளவள்

701. தேஶகாலாபரிச்சிந்நா – தேசம்,காலம் இவைகளுடைய அளவுக்கு உட்படாதவள்

702. ஸர்வகா – எங்கும் நிறைந்திருப்பவள்

703. ஸர்வமோஹிநீ – எல்லோரையும் மோஹமடைய செய்பவள்

704. ஸரஸ்வதீ – ஸரஸ்வதி வடிவினள்

705. ஶாஸ்த்ரமயீ – சாஸ்த்ரங்களில் பூர்ணமாக வியாபித்திருப்பவள்

706. குஹாம்பா – இதயகுகையில் இருப்பவள்

707. குஹ்யரூபிணீ – பரம ரகசியமான ரூபத்தையுடையவள்

708. ஸர்வோபாதி விநிர்முக்தா – ஸகலவிதமான உபாதிகளிலிருந்தும் விடுபட்டவள்

709. ஸதாஶிவ பதிவ்ரதா – ஸதாசிவ பதிவிரதை

710. ஸம்ப்ரதாயேஶ்வரீ – ஸம்பிரதாயத்திற்கு ஈச்வரி

711. ஸாது – (மேலே சொல்லியிருப்பது) உசிதமாயிருப்பவள்

712. ஈ – 'ஈ என்கிற காமகலா அக்ஷர ரூபிணியாயிருப்பவள்

713. குருமண்டல ரூபிணீ – குருமண்டல ரூபமாக இருப்பவள்

714. குலோத்தீர்ணா – குலம் எனும் இந்திரிய சமூகத்தால் அறிய முடியாத ரூபத்தையுடையவள்

715. பகாராத்யா – ஸூரியமண்டலத்தில் ஆராதிக்கப்படுகிறவள்

716. மாயா – மாயை எனப்படுபவள்

717. மதுமதீ – மதுமதீ வடிவானவள் (குறிப்பு)

718. மஹீ – பூமி ரூபமாக இருப்பவள்

719. கணாம்பா – கணங்களுக்கும் கணேசருக்கும் தாய்

720. குஹ்யகாராத்யா – ரகசியமான இடத்தில் பூஜிக்கப் படுகிறவள்

721. கோமலாங்கீ – மிருதுவான அங்கங்கள் உடையவள்

722. குருப்ரியா – குருவிற்குப் பிரியமானவள்

723. ஸ்வதந்த்ரா – ஸ்வதந்திரமாக இருப்பவள்

724. ஸர்வதந்த்ரேஶீ – ஸகல தந்திரங்களுக்கும் ஈச்வரி

725. தக்ஷிணாமூர்தி ரூபிணீ – தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாயிருப்பவள்

726. ஸநகாதி ஸமாராத்யா – ஸநகாதி யோகிகளால் நன்கு ஆராதிக்கப்பட்டவள்

727. ஶிவஜ்ஞாந ப்ரதாயிநீ – சிவ ஞானத்தை அளிப்பவள்

728. சித்கலா – சித்கலையாக இருப்பவள்

729. ஆநந்த கலிகா – ஆனந்தத்தின் அம்சமாக (ஜீவனிடம்) இருப்பவள்

730. ப்ரேமரூபா – பிரேமை அல்லது பக்தி என்ற ரூபத்தோடிருப்பவள்

731. ப்ரியம்கரீ – பிரியத்தைச் செய்பவள்

732. நாமபாராயண ப்ரீதா – நாம பாராயணத்தால் சந்தோஷமடைபவள்

733. நந்திவித்யா – நந்திகேச்வரரால் உபாசிக்கப்பட்ட வித்யாரூபிணி

734. நடேஶ்வரீ – சிதம்பர நடராஜனை அனுசரித்து நடனம் செய்யும் ஈச்வரி

735. மித்யா ஜகததிஷ்டாநா – பொய்யான உலகத் தோற்றத்திற்கு அதிஷ்டானமாயிருப்பவள்

736. முக்திதா – முக்தியை அளிப்பவள்

737. முக்திரூபிணீ – முக்தியையே ரூபமாக உடையவள்

738. லாஸ்யப்ரியா – நர்த்தனத்தில் பிரியமுள்ளவள்

739. லயகரீ – லயத்தை உண்டுபண்ணுகிறவள்(குறிப்பு)

740. லஜ்ஜா – லஜ்ஜா ரூபமாக இருப்பவள்

741. ரம்பாதிவந்திதா – ரம்பை முதலான அபஸரஸ் ஸ்த்ரீகளால் வணங்கப்பட்டவள்

742. பவதாவஸுதாவ்ருஷ்டி: – ஸம்ஸாரமாகிய காட்டுத்தீக்கு அம்ருத மழையாயிருப்பவள்

743. பாபாரண்ய தவாநலா – பாவமென்னும் அரண்யத்திற்கு காட்டுத்தீயாக இருப்பவள்

744. தௌர்பாக்ய தூலவாதூலா – துர்பாக்கியம்

என்கிற பஞ்சுபொதியை சிதற அடிக்கும் சுழல் காற்றாக இருப்பவள்

745. ஜராத்வாந்தரவிப்ரபா – மூப்பு என்கிற இருளைப் போக்கும் ஸூரிய பிரபையாக இருப்பவள்

746. பாக்யாப்தி சந்த்ரிகா – பாக்கியமாகிய கடலைப் பொங்கச்செய்யும் சந்த்ரிகையாக இருப்பவள்

747. பக்த சித்த கேகி கநாகநா – பக்தர்களின் மனமாகிய மயிலுக்கு மேகம் போன்றவள்

748. ரோகபர்வத தம்போலி – நோய் என்னும் மலையைப் பிளக்கும் வஜ்ராயுதம் போன்றவள்

749. ம்ருத்யு தாரு குடாரிகா – ம்ருத்யுவாகிய மரத்தை வெட்டும் கோடாலி போன்றவள்

750. மஹேஶ்வரீ – பெரியவளாயும் ஈச்வரியாயும் இருப்பவள்

751. மஹாகாலீ – மஹாகாளி (குறிப்பு)

752. மஹாக்ராஸா – பெரியதான கவளத்தை உடையவள்

753. மஹாஶநா – பெருந்தீனி உள்ளவள்

754. அபர்ணா – கடன் யாதொன்றும் இல்லாதவள் (குறிப்பு)

755. சண்டிகா – கோபமுள்ளவள் (ஏழு வயதுள்ள கன்னிகை)

756. சண்டமுண்டாஸுர நிஷூதிநீ – சண்டன், முண்டன் என்கிற அசுரர்களைக் கொன்றவள்

757. க்ஷராக்ஷராத்மிகா – அழிவுள்ளதும் அழிவில்லாததுமான அனைத்துமாயிருப்பவள்

758. ஸர்வலோகேஶீ – ஸகல லோகங்களுக்கும் ஈச்வரி

759. விஶ்வதாரிணீ – ஸகல பிரபஞ்சத்தையும் தாங்குகிறவள்

760. த்ரிவர்கதாத்ரீ – தர்ம, அர்த்த, காமங்களைக்

கொடுப்பவள்

761. ஸுபகா – ஸௌபாக்கிய வடிவினள் (ஐந்து வயதுள்ள கன்னிகை)

762. த்ரயம்பகா – மூன்று கண்களையுடையவள் (மும்மூர்த்திகளுக்குந் தாய்)

763. த்ரிகுணாத்மிகா – (ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களாகிய) முக்குண வடிவானவள்

764. ஸ்வர்காபவர்கதா – ஸ்வர்க்கத்தையும் மோக்ஷத்தையும் அளிப்பவள்

765. ஶுத்தா – சுத்தமானவள்

766. ஜபாபுஷ்ப நிபாக்ருதி: – செம்பருத்திப்பூ நிறமுடையவள்

767. ஓஜோவதீ – ஓஜஸ்ஸை உடையவள் (குறிப்பு)

768. த்யுதிதரா – காந்தியோடிருப்பவள்

769. யஜ்ஞரூபா – யஜ்ஞ ரூபமானவள்

770. ப்ரியவ்ரதா – விரதங்களில் பிரியமுள்ளவள்

771. துராராத்யா – சிரமப்பட்டு ஆராதிக்கப்படுகிறவள்

772. துராதர்ஷா – ஜயிக்க முடியாதவள்

773. பாடலீ குஸும ப்ரியா – பாதிரிப்பூவில் பிரியமுள்ளவள் (வெளுப்பும், சிகப்பும் கலந்த நிறமுள்ள பூ)

774. மஹதீ – மிகவும் பெரியவள்

775. மேருநிலயா – மேரு மலையில் இருப்பவள்

776. மந்தார குஸும ப்ரியா – மந்தாரப்பூவில் பிரியமுள்ளவள்

777. வீராராத்யா – வீரர்களால் ஆராதிக்கப்படுகிறவள்

778. விராட்ரூபா – விராட் ஸ்வரூபமாக இருப்பவள்

779. விரஜா – மாசற்றவள்

780. விஶ்வதோமுகீ – எங்கும் முகமுள்ளவள்

781. ப்ரத்யக் ரூபா – உள் நோக்கித் திரும்புவதால் விளங்கும் ரூபத்தையுடையவள்

782. பராகாஶா – பரம ஆகாச ஸ்வரூபமாயிருப்பவள்

783. ப்ராணதா – பிராணனைக் கொடுப்பவள்

784. ப்ராணரூபிணீ – பிராண ரூபமாயிருப்பவள்

785. மார்தண்ட பைரவாராத்யா – மார்த்தண்ட பைரவரால் ஆராதிக்கப்பட்டவள்

786. மந்த்ரிணீ ந்யஸ்த ராஜ்யதூ: – மந்த்ரிணியிடம் ராஜ்யபாரத்தை வைத்தவள்

787. த்ரிபுரேஶீ – த்ரிபுரேசீ என்கிற தேவி (ஸர்வாசாபரிபூரக சக்கரத்தின் அதிஷ்டான தேவி)

788. ஜயத்ஸேநா – ஜயத்துடனிருக்கும் சேனை களையுடையவள்

789. நிஸ்த்ரைகுண்யா – முக்குணங்களைக் கடந்தவள்

790. பராபரா – பர, அபர, பராபர என்கிற பதங்களால் குறிக்கப்படும் பிரம்மத்தின் ஸ்வரூபமாயிருப்பவள் (குறிப்பு)

791. ஸத்யஜ்ஞாநாநந்த ரூபா – ஸத்ய, ஞான, ஆனந்த ரூபமாயிருப்பவள்

792. ஸாமரஸ்ய பராயணா – ஸமரஸத்தில் நிலை பெற்றவள்

793. கபர்திநீ – சிவனுடைய பத்னி (ஜடைக்கு கபர்தம் என்று பெயர்)

794. கலாமாலா – கலைகளை மாலையாகத் தரித்திருப்பவள்

795. காமதுக் – பக்தர்களுடைய மனோரதங்களைப் பூர்த்தி செய்பவள்

796. காமரூபிணீ – நினைத்த ரூபங்களை எடுப்பவள்

797. கலாநிதி: – கலைகளின் பொக்கிஷம்

798. காவ்யகலா – காவியங்களை இயற்றும் கலா ரூபமாக இருப்பவள்

799. ரஸஜ்ஞா – ரஸங்களை அறிந்தவள்

800. ரஸஶேவதி: – பிரம்மாம்ருதத்தின் பொக்கிஷம்

801. புஷ்டா – புஷ்டியாயிருப்பவள் (போஷிக்கப்பட்டவள்)

802. புராதநா – எல்லோருக்கும் முந்தியிருப்பவள்

803. பூஜ்யா – பூஜிக்கத் தகுந்தவள்

804. புஷ்கரா – புஷ்டியைக் கொடுப்பவள்

805. புஷ்கரேக்ஷணா – தாமரை போன்ற கண்களையுடையவள்

806. பரம்ஜ்யோதி: – சிறந்த ஜ்யோதி ஸ்வரூபமாக இருப்பவள்

807. பரம்தாம – உத்தமமான இருப்பிடமாயிருப்பவள்

808. பரமாணு: – மிகவும் ஸூக்ஷ்மமான அணுவாயிருப்பவள்

809. பராத்பரா – சிறந்தவர்களுக்கும் சிறந்தவள்

810. பாஶஹஸ்தா – பாசத்தைக் கையிலுடையவள்

811. பாஶஹந்த்ரீ – பாசங்களைப் போக்கடிப்பவள்

812. பரமந்த்ர விபேதிநீ – எதிரிகளின் (அஸ்திர, அபிசார) மந்திரங்களை பிளப்பவள்

813. மூர்தா – ரூபத்தோடிருப்பவள்

814. அமூர்தா – ரூபமே இல்லாதவள்

815. அநித்யத்ருப்தா – அழிவுள்ள பொருள்களால் செய்யப்பட்ட உபசாரங்களாலும் திருப்தியடைபவள்

816. முநிமாநஸ ஹம்ஸிகா – முனிவர்களின் மனதாகிய தடாகத்தில் உள்ள ஹம்ஸம்

817. ஸத்யவ்ரதா – உண்மையே பேசுவது என்கிற விரதத்தால் அடையக் கூடியவள்

818. ஸத்யரூபா – முக்காலத்திலும் பாதிக்கப்படாத ஸத்தியரூபத்தையுடையவள்

819. ஸர்வாந்தர்யாமிநீ – எல்லோருக்குள்ளும் பிரவேசித்திருப்பவள்

820. ஸதீ – மஹா பதிவிரதையாக இருப்பவள்

821. ப்ரஹ்மாணீ – பிரம்ம சக்தியாக இருப்பவள்

822. ப்ரஹ்ம – பிரம்மமாக இருப்பவள்

823. ஜநநீ – ஸகல பிரபஞ்சத்தையும் சிருஷ்டிப்பவள்

824. பஹுரூபா – அநேகவிதமான ரூபங்களோடிருப்பவள்

825. புதார்சிதா – ஞானிகளால் பூஜிக்கப்பட்டவள்

826. ப்ரஸவித்ரீ – யாவற்றையும் படைத்தவள்

827. ப்ரசண்டா – மிகவும் அதிகமான கோபமுள்ளவள்

828. ஆஜ்ஞா – ஆஜ்ஞா ரூமாக இருப்பவள்

829. ப்ரதிஷ்டா – ஸகல பிரபஞ்சத்தையும் தன்னில் பிரதிஷ்டித்திருப்பவள்

830. ப்ரகடாக்ருதி: – எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரியும் வடிவினள்

831. ப்ராணேஶ்வரீ – பிராணன்களுக்கு ஈச்வரி

832. ப்ராணதாத்ரீ – பிராணன்களைக் கொடுப்பவள்

833. பஞ்சாஶத்பீட ரூபிணீ – ஐம்பது பீடங்களின் ரூபமாக இருப்பவள்

834. விஶ்ருங்கலா – கர்மாதி விலங்குகள் இல்லாதவள்

835. விவிக்தஸ்தா – விவேகமுடையவர்களின் மனதில் இருப்பவள்

836. வீரமாதா – வீரர்களுக்குத் தாயாராக இருப்பவள்

837. வியத்ப்ரஸூ: – ஆகாசத்தை படைத்தவள்

838. முகுந்தா – முக்தியை அளிப்பவள் (முகு: என்றால் மோக்ஷம்)

839. முக்திநிலயா – முக்திக்கு இருப்பிடமானவள்

840. மூலவிக்ரஹ ரூபிணீ – ஸகல சக்திகளுக்கும் மூலமான ராஜராஜேச்வரி ரூபமாக இருப்பவள்

841. பாவஜ்ஞா – மனதில் உள்ள எண்ணங்களை அறிந்தவள்

842. பவரோகக்நீ – ஸம்ஸாரமாகிய ரோகத்தைத் தீர்ப்பவள்

843. பவசக்ர ப்ரவர்திநீ – ஸம்ஸார சக்கரத்தைச் சுழலச் செய்பவள்

844. சந்த:ஸாரா – வேதங்களின் ஸாரமாயிருப்பவள்

845. ஶாஸ்த்ரஸாரா – சாஸ்திரங்களின் ஸாரமாயிருப்பவள்

846. மந்த்ரஸாரா – மந்திரங்களின் ஸாரமாயிருப்பவள்

847. தலோதரீ – (உள்ளங்கை போல் ஸமமான) சிறிய இடை உடையவள்

848. உதாரகீர்தி: – உயர்ந்ததும், விஸ்தாரமானதுமான கீர்த்தி உடையவள்

849. உத்தாமவைபவா – அளவிடமுடியாத பெருமையுள்ளவள்

850. வர்ணரூபிணீ – வர்ணங்களின்(எழுத்து, வர்ணாச்ரமம்) ரூபமாக இருப்பவள்

851. ஜந்மம்ருத்யு ஜராதப்த ஜந விஶ்ராந்தி தாயிநீ – பிறப்பு, இறப்பு, மூப்புகளால் தகிக்கும் ஜனங்களுக்கு ஓய்வு அளிப்பவள்

852. ஸர்வோபநிஷ துத்குஷ்டா – ஸகல உபநிஷத்துக்களிலும் இரைந்து கோஷிக்கப்பட்டவள்

853. ஶாந்த்யதீத கலாத்மிகா – சாந்த்யதீதமென்ற கலா ஸ்வரூபமானவள்(குறிப்பு)

854. கம்பீரா – ஆழங்காண முடியாதவள்

855. ககநாந்தஸ்தா – ஆகாசத்தின் மத்தியிலிருப்பவள்

856. கர்விதா – கர்வத்தோடிருப்பவள்

857. காநலோலுபா – கானத்தில் பிரியமுள்ளவள்

858. கல்பநா ரஹிதா – கற்பனைகள் இல்லாதவள்

859. காஷ்டா – முடிவான எல்லை ஸ்வரூபமாயிருப்பவள்

860. அகாந்தா – பாபத்தைப் போக்குகிறவள்

861. காந்தார்த விக்ரஹா – தன் புருஷனுடைய சரீரத்தில் பாதியான ரூபத்தையுடையவள்

862. கார்யகாரண நிர்முக்தா – காரியகாரணங்களுக்கு அப்பாற்பட்டவள்

863. காமகேலி தரங்கிதா – ச்ருங்கார கேளிகளை அலைகள் போல் உடையவள்

864. கநத்கநக தாடங்கா – பிரகாசமான ஸ்வர்ண தாடங்கங்களை அணிந்தவள்

865. லீலா விக்ரஹ தாரிணீ – விளையாட்டாகப் பல உருவங்களைத் தரிப்பவள்

866. அஜா – பிறப்பில்லாதவள்

867. க்ஷயவிநிர்முக்தா – மரணமில்லாதவள்

868. முக்தா – விசேஷமான ஸௌந்தர்யத்தோடு கூடியவள்

869. க்ஷிப்ர ப்ரஸாதிநீ – விரைவில் அனுக்ரஹம் செய்பவள்

870. அந்தர்முக ஸமாராத்யா – அந்தர்முகமாக இருப்பவர்களால் நன்கு ஆராதிக்கத்தக்கவள்

871. பஹிர்முக ஸுதுர்லபா – பஹிர்முகமாக இருப்பவர்களால் அடைவதற்கு அரிதானவள்

872. த்ரயீ – மூன்று வேதங்களின் வடிவானவள்

873. த்ரிவர்க நிலயா – த்ரிவர்க்கத்தில் நிலைப்பெற்றவள்

(குறிப்பு)

874. த்ரிஸ்தா – மூன்று காலத்திலுமிருப்பவள் (குறிப்பு)

875. த்ரிபுர மாலிநீ – திரிபுரமாலினி ரூபமானவள் (ஸ்ரீசக்கரத்தில் ஆறாவது ஆவரணத்தின் தேவதை)

876. நிராமயா – நோயற்றவள் (அம்பாளை நினைத்தால் எல்லா நோய்களும் நீங்கும்)

877. நிராலம்பா – பிடிப்பு எதுவும் இல்லாதவள்

878. ஸ்வாத்மாராமா – தன்னிடத்திலேயே ரமிப்பவள்

879. ஸுதாஸ்ருதி: – அம்ருத தாரையாயிருப்பவள்

880. ஸம்ஸாரபங்க நிர்மக்ந ஸமுத்தரண பண்டிதா – ஸம்ஸாரச் சேற்றில் முழுகியவர்களைத் தூக்கி விடுவதில் ஸாமர்த்தியமுள்ளவள்

881. யஜ்ஞ ப்ரியா – யஜ்ஞத்தை விரும்புவள்

882. யஜ்ஞகர்த்ரீ – யஜ்ஞ கர்த்தாவின் பத்னி ரூபமாக இருப்பவள்

883. யஜமாந ஸ்வரூபிணீ – யஜமான ஸ்வரூபமாயிருப்பவள்

884. தர்மாதாரா – தர்மத்திற்கு ஆதாரமாயிருப்பவள்

885. தநாத்யக்ஷா – தனத்திற்கு அதிபதியாக இருப்பவள்

886. தநதாந்ய விவர்திநீ – தனம், தான்யம் இவைகளை விருத்தி செய்பவள்

887. விப்ர ப்ரியா – விப்ரர்களிடம் பிரியமுள்ளவள் (குறிப்பு)

888. விப்ர ரூபா – விப்ரர்களின் ரூபமாயிருப்பவள்

889. விஶ்வப்ரமண காரிணீ – பிரம்மாண்டங்களை சுழலச் செய்பவள்

890. விஶ்வக்ராஸா – ஸகல ஜகத்தையும் ஒரு கவளமாய் உண்பவள்

891. வித்ருமாபா – பவழம் போன்ற காந்தியுள்ளவள்

892. வைஷ்ணவீ – விஷ்ணுவின் சக்தியாக இருப்பவள்

893. விஷ்ணுரூபிணீ – விஷ்ணு ஸ்வரூபமாயிருப்பவள்

894. அயோநி – பிறப்பிடம் இல்லாதவள்

895. யோநி நிலயா – (ஸகல பிரபஞ்சத்திற்கும்) பிறப்பிடமாயும் நிலயமாயுமிருப்பவள்

896. கூடஸ்தா – வாக்பவம் முதலான கூடத்திலிருப்பவள்

897. குலரூபிணீ – குலத்தின் ரூமாக இருப்பவள்

898. வீரகோஷ்டீ ப்ரியா – உபாஸக வீரர்களின் கோஷ்டியில் பிரியமுள்ளவள்

899. வீரா – வீரியமுள்ளவள் (குறிப்பு)

900. நைஷ்கர்ம்யா – கர்ம ஸம்பந்தம் இல்லாதவள்

901. நாதரூபிணீ – நாதரூபமாக இருப்பவள்

902. விஜ்ஞாநகலநா – விஜ்ஞானத்தை உண்டாக்குபவள்

903. கல்யா – கலைகளில் திறமை வாய்ந்தவள்

904. விதக்தா – சாதுர்யம் உள்ளவள்

905. பைந்தவாஸநா – ஸர்வானந்தமய சக்கரமென்கிற பிந்துவாகிய ஆஸனத்திலிருப்பவள் (குறிப்பு)

906. தத்த்வாதிகா – தத்துவங்களை விட பெரியவள்

907. தத்த்வமயீ – தத்துவரூபமானவள்

908. தத்த்வமர்த ஸ்வரூபிணீ – தத், த்வம் என்ற பதங்களின் அர்த்த ஸ்வரூபமாயிருப்பவள்

909. ஸாமகாந ப்ரியா – ஸாமகானத்தில் பிரியமுள்ளவள்

910. ஸோம்யா – சந்திரனைப்போல் அழகியவள்

911. ஸதாஶிவ குடும்பிநீ – ஸதாசிவருடைய பத்னி

912. ஸவ்யாபஸவ்ய மார்கஸ்தா – ஸ்ருஷ்டி, லயம், ஸ்திதிகளில் இருப்பவள்

913. ஸர்வாபத்விநிவாரிணீ – ஸகல விதமான ஆபத்துக்களையும் நீக்குபவள்

914. ஸ்வஸ்தா – தன்னிடமே நிலையுள்ளவள்

915. ஸ்வபாவமதுரா – இயற்கையாகவே மதுரமாயிருப்பவள்

916. தீரா – புத்தியைக் கொடுப்பவள்

917. தீரஸமர்சிதா – பண்டிதர்களால் நன்கு அர்ச்சிக்கப்பட்டவள்

918. சைதந்யார்க்ய ஸமாராத்யா – சித்ரூபமான அர்க்யத்தால் நன்கு ஆராதிக்கத்தக்கவள்

919. சைதந்ய குஸுமப்ரியா – சைதன்யமாகிய புஷ்பத்தில் பிரியமுள்ளவள்

920. ஸதோதிதா – ஸதா உதயமாயிருப்பவள் (நல்லவர்களிடம் எப்பொழுதும் பிரகாசிப்பவள்)

921. ஸதாதுஷ்டா – ஸதா ஸந்தோஷமாயிருப்பவள்

922. தருணாதித்ய பாடலா – மத்யான்ன ஸூரியனைப் போன்ற வெளுப்பும் சிகப்பும் கலந்த நிறமுள்ளவள்

923. தக்ஷிணா தக்ஷிணாராத்யா – பண்டிதர்களாலும் பாமரர்களாலும் ஆராதிக்கப்பட்டவள்

924. தரஸ்மேர முகாம்புஜா – தாமரைப்பூ மலர்ந்தாற் போன்ற புன்சிரிப்பு முகமுடையவள்

925. கௌலிநீ கேவலா – கௌல தர்மத்தையும் கேவல ஞானத்தையுமுடையவள்

926. அநக்ர்ய கைவல்ய பத தாயிநீ – விலை மதிக்க முடியாத கைவல்ய பதத்தைக் கொடுப்பவள்

927. ஸ்தோத்ர ப்ரியா – ஸ்தோத்திரத்தில் பிரியமுள்ளவள்

928. ஸ்துதிமதீ – துதிப்பவர்க்கு ஞானத்தையும் ஐச்வர்யத்தையும் அருள்பவள்

929. ஶ்ருதி ஸம்ஸ்துத வைபவா – வேதங்களால் நன்கு

புகழப்பட்ட வைபவமுடையவள்

930. மநஸ்விநீ – ஸ்வதந்திரமான மனதையுடையவள்

931. மாநவதீ – பெருந்தன்மை உடையவள்

932. மஹேபஶீ – மஹேச்வரருடைய பத்னி

933. மங்கலாக்ருதி: – மங்கள வடிவுடையவள்

934. விஶ்வமாதா – ஸகல லோகங்களுக்கும் அன்னை

935. ஜகத்தாத்ரீ – ஜகத்தைத் தாங்குகிறவள்

936. விஶாலாக்ஷீ – விசாலமான கண்களையுடையவள்

937. விராகிணீ – வைராக்யத்தோடு கூடியவள்

938. ப்ரகல்பா – துணிச்சல் நிறைந்தவள்

939. பரமோதாரா – கொடுப்பதில் தாராளமாயிருப்பவள்

940. பராமோதா – பரம ஆனந்தத்தையுடையவள்

941. மநோமயீ – மனதையே ரூபமாக உடையவள்

942. வ்யோமகேஶீ – ஆகாசத்தைக் கேசங்களாகக் கொண்டவள்

943. விமாநஸ்தா – விமானத்தில் வீற்றிருப்பவள்

944. வஜ்ரிணீ – வஜ்ராயுதத்தைத் தரிப்பவள்

945. வாமகேஶ்வரீ – வாமமார்கத்தை அனுசரிப்பவர்களின் ஈச்வரி

946. பஞ்சயஜ்ஞ ப்ரியா – பஞ்ச யஜ்ஞங்களில் பிரியமுள்ளவள்

947. பஞ்சப்ரேத மஞ்சாதிஶாயிநீ – பஞ்ச பிரேதங்களாலான மஞ்சத்தில் வீற்றிருப்பவள்

948. பஞ்சமீ – ஸதாசிவனுடைய பத்னி

949. பஞ்சபூதேஶீ – பஞ்ச பூதங்களுக்கு ஈச்வரி

950. பஞ்சஸங்க்யோபசாரிணீ – (கந்தம், புஷ்பம்,

தூபம், தீபம், நைவேத்தியம் என்கிற) ஐந்து வகை உபசாரங்களை உடையவள்

951. ஶாஶ்வதீ – எப்பொழுதும் இருப்பவள்

952. ஶாஶ்வதைஶ்வர்யா – நித்யமான ஐச்வர்யத்தையுடையவள்

953. ஶர்மதா – சுகத்தைக் கொடுப்பவள்

954. ஶம்புமோஹினீ – சிவனை மோஹமடையச் செய்பவள்

955. தரா – பூமாதேவி ரூபமாயிருப்பவள்

956. தரஸுதா – பர்வதத்தின் புதல்வி

957. தந்யா – ஸகல ஸம்பத்தும் நிறைந்தவள்

958. தர்மிணீ – தர்ம சுபாவம் உடையவள்

959. தர்மவர்திநீ – தர்மத்தை வளர்ப்பவள்

960. லொகாதீதா – லோகங்களைக் கடந்தவள்

961. குணாதீதா – குணங்களைக் கடந்தவள்

962. ஸர்வாதீதா – எல்லாவற்றையும் கடந்தவள்

963. ஶமாத்மிகா – சாந்த ஸ்வரூபமாயிருப்பவள்

964. பந்தூக குஸும ப்ரக்யா – பந்தூக புஷ்பம் போன்ற காந்தியுடையவள்

965. பாலா – பாலா ஸ்வரூபமாயிருப்பவள் (குறிப்பு)

966. லீலா விநோதிநீ – லீலைகளால் சந்தோஷப்படுகிறவள்

967. ஸுமங்கலீ – சுமங்கலி ரூபமாயிருப்பவள்

968. ஸுககரீ – சுகத்தைச் செய்பவள்

969. ஸுவேஷாட்யா – நன்றாக அலங்கரிக்கப்பட்டவள்

970. ஸுவாஸிநீ – ஸுவாஸினி ரூபமாயிருப்பவள்

971. ஸுவாஸிந்யர்சந ப்ரீதா – ஸுவாஸினி பூஜையால் ப்ரீதியடைகிறவள்

972. ஆஶோபநா – பூர்ணமான சோபையுள்ளவள்

973. ஶுத்த மாநஸா – சுத்தமான மனதையுடையவள்

974. பிந்து தர்பண ஸம்துஷ்டா – பிந்து தர்ப்பணத்தால் சந்தோஷமடைகிறவள்

975. பூர்வஜா – எல்லாவற்றிற்கும் முன்பாக ஜனித்தவள்

976. த்ரிபுராம்பிகா – த்ரிபுராம்பிகா என்ற தேவி ரூபமான வள்

977. தஶமுத்ரா ஸமாரத்யா – பத்து முத்திரைகளால் நன்கு ஆராதிக்கப்பட்டவள் (குறிப்பு)

978. த்ரிபுராஸ்ரீவஶங்கரீ – த்ரிபுராஸ்ரீ தேவியை தன் வசப்படுத்துகிறவள்

979. ஜ்ஞாநமுத்ரா – ஞானமுத்திரையின் ரூபமாயிருப்பவள் (சின்முத்திரை)

980. ஜ்ஞாநகம்யா – ஞானத்தால் அடையப்படுகிறவள்

981. ஜ்ஞாந ஜ்ஞேய ஸ்வரூபிணீ – ஞானமாகவும் ஞேயமாகவும் இருப்பவள்

982. யோநிமுத்ரா – யோனி முத்திரை ரூபமாயிருப்பவள்

983. த்ரிகண்டேஶீ – த்ரிகண்டா முத்திரைக்கு ஈச்வரி

984. த்ரிகுணா – ஸத்வ, ரஜஸ், தமோ குணங்களோடு கூடியவள்

985. அம்பா – முக்குணத்திற்கும் காரணமாயிருப்பவள்

986. த்ரிகோணகா – யோனி சக்கரமாகிய த்ரிகோணத்தை அடைந்திருப்பவள்

987. அநகா – பாபம் யாதொன்றுமில்லாதவள்

988. அத்புத சாரித்ரா – ஆச்சரியமான சரித்திரங்களையுடையவள்

989. வாஞ்சிதார்த ப்ரதாயிநீ – விரும்பிய பொருளைத்

தருபவள்

990. அப்யாஸாதிஶய ஜ்ஞாதா – அப்பியாஸத்தின் பெருக்கினால் அறியப்படுகிறவள்

991. ஷடத்வாதீத ரூபிணீ – ஆறு (அத்வாக்கள்) உபாஸனா மார்க்கங்களைக் கடந்த ரூபமுள்ளவள்

992. அவ்யாஜ கருணா மூர்த்தி – பாரபக்ஷம் பாராமல் கருணை புரிபவள்

993. அஜ்ஞாந த்வாந்த தீபிகா – அஞ்ஞானமாகிய இருட்டைப் போக்கும் தீபம் போன்றவள்

994. ஆபால கோப விதிதா – குழந்தைகளும் இடையர்களும் உள்பட எல்லோராலும் அறியப்படுகிறவள்

995. ஸர்வானுல்லங்க்ய ஶாஸநா – எவராலும் மீறமுடியாத கட்டளைகளையுடையவள்


996. ஸ்ரீசக்ரராஜ நிலயா – ஸ்ரீசக்கரத்தை இருப்பிடமாகக் கொண்டவள்

997. ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரீ – ஸ்ரீமதியாயும் பரமசிவனின் பத்னியாயும் இருப்பவள்

998. ஸ்ரீஶிவா – பரமமங்கள ஸ்வரூபிணி

999. ஶிவஶக்த்யைக்ய ரூபிணீ – சிவன், சக்தி இவர்களுடைய ஐக்ய ரூபமானவள்

1000. லலிதாம்பிகா – லலிதையாயும் அம்பிகையாயும் இருப்பவள்



ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட அறக்கட்டளை

பதிவு எண் - 15/2018

சேரவாரும் புண்ணியோரே நம் மார்க்கம் சத்திய மார்க்கம்
மூலபண்டாரம் வழங்குகின்றான்! வந்து முந்துமினே

சித்தர்களின் யோக ஞானக் கலைகளும் சித்தர் பாடல்களும் மறைந்து விடாமல் பாதுகாத்து வளர்ப்பது. எங்கே உண்மை இருக்கும் எங்கு ஞானம் கிடைக்கும் என தேடுகின்ற சாதகர்களுக்கு ஐயம் திரிபு இன்றி எந்தவித எதிர்ப்பார்ப்புமின்றி எவ்வித கட்டாயமுமின்றி உபதேசம் வழங்கி ஆன்மிகப் பாதையில் அனைவரும் உழைப்பது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் சித்தர்களின் நெறிப்படி இல்லறமோ துறவறமோ அவரவர்க்கு அமைந்தபடியே இருந்து யோகம், தியானம், தவம் போன்றவைகளை நித்தியம் கடைப்பிடித்து வாழ்வது.

இந்து தர்மமும் சைவ சமயமும் காட்டும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு வழிகளிலும் இறையை அடைய சாதனை புரிவது. யோகம், தியானம், செய்ய நண்பனாக இருந்து கற்றுத்தருவது கற்றுக்கொள்வது.

இயற்கையாய் இறைவனே அனைத்திலும் மிகப்பெரியவன். அவன் அருளால் அவன் தாள் வணங்கியே அனைத்து ஞான சித்தர்களும் மெய்நிலை அடைந்தனர். ஆகவே நாமும் இறைவனை மட்டுமே குருவாகவும், திருவாகவும் கொண்டு பெரியவர், சிறியவர், இல்லார், உள்ளார், ஆண், பெண் என்ற பேதமேதுமின்றி அனைவரையும் தம்முயிர்போல் எண்ணி ஞானமடைய முயற்சிக்கும் உயிர்கள் யாவும் நல்லவையே என தேர்ந்து அன்போடு ஒன்று கூடி யோக ஞான சாதனைகளை மேற்கொள்வது.

தம்மில் அழுந்தி இருப்பதால் தமிழ் என பேர் பெற்றது என்ற வள்ளலாரின் வாக்குப்படி பிற மொழிகளில் பேதம் பாராது தமிழ் வளர்க்க சான்றோார்கள் வழியில் பாடுபடுவது. தமிழே தெய்வமாய் இருப்பதை உலகிற்கு உணர்த்துவது.

தெய்வத்திருப்பணிகளிலும் திருவிழாக்களிலும் பங்கேற்று பசிப்பிணி போக்க அன்னதானங்கள் செய்வது.

இறையருளால் தீட்சை பெற்ற யாவரும் சமதர்மமாகவும் சகோதரத்துவமாகவும் இருந்து காட்டி அன்பினால் இணைந்து பக்தி, தொண்டு, பஜனை, பாராயணம் போன்றவைகளை ஆன்மிக சாதனையாக்கி முழுமனதோடு செய்வது.

அனாதைக் குழந்தைகளையும், ஆதரவற்ற முதியோர்களையும் பாதுகாக்க இயன்ற நன் முயற்சிகளை செய்வது. படிக்கும் மாணவ மாணவியர்க்கு படித்தவர்களை கொண்டு இலவச கல்வி போதனா வகுப்புகள் நடத்துவது.

வள்ளுவரிலிருந்து வள்ளலார் வரை வாழ்ந்து காட்டிய சித்தர்கள் நெறியில் வாழ்வியலையும் உலகியலையும் ஆன்மிக வழியில் கடைப்பிடித்து வாழ்ந்து இறவா நிலை அடையப் பாடுபடுவது.

ஞானிகளும் சித்தர்களும் சற்குருக்களும் மதிப்பதற்கும் போற்றுதற்கும் உரியோரே. ஆனால் வணங்குவதற்கும் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் கருப்பொருள் இறைவன் ஒருவரே. அனைத்து மேலாம் நிலைகளுக்கும் மெய்பக்தியே அடிப்படை என்பதை அறிந்து அந்த இறையிடம் மட்டுமே அன்பு

பக்தி செலுத்தி மேன்மையடைய வேண்டி அனைவருக்கும் போதித்து மெய் பக்தியை வளர்ப்பது.

ஞாயிறுதோறும் சத்சங்கம் கூடி தங்களது சந்தேகங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டு தெளிவடைவது. நன்நூல்களை படித்து ஆராய்ந்து மெய்பொருளைப் பெறுவது சத்விசாரம் செய்வது. மெய்பொருளை அறிந்து சித்த வைத்திய ஆராய்ச்சி மேற்கொள்வது. ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தி அறிவை அறிய வைப்பது.

சித்தர்களின் பீடங்களுக்கும் தெய்வ ஆலயங்களுக்கும் ஒத்த மனம் கொண்டு கூடி ஆன்மிக பயணங்கள் செய்வது அனுபவ அறிவு பெறுவது. இயற்கையில் ஏகாந்தமாய் இருந்து தியான தவம் மேற்கொள்வது.


ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

- திருக்குறள்.



நமது அன்பு திருக்கோவிலின் மாதிரி வரைபடம்





சித்தர்கள் போற்றும் **வாலை** என்ற இந்த நூலை மூன்றாவது பதிப்பு வெளியிடுவதற்கு உதவி செய்த மதிப்பிற்குரிய **ப. தெய்வசிகாமணி** அவர்கள் மற்றும் அவரது குடும்பத்தாருக்கும் எங்களது மனமார்ந்த நன்றி!

நன்றி!

என் அன்பு நிறைந்த நெஞ்சங்களே

நமது அன்பு திருக்கோவில் திருப்பணிக்கு தாங்கள் அன்புடன் வழங்கும் நன்கொடைகளை கீழ் கண்ட வங்கி கணக்கில் செலுத்துமாறு யாசிக்கின்றேன்.

அன்புடன்
பாட்டுச்சித்தன்

BANK DETAILS

BANK	:	CITY UNION BANK	A/C TYPE	:	CURRENT ACCOUNT
A/C NAME	:	SRI MANONMANI CHITTHAR BEEDAM TRUST	BRANCH.	:	SIRKALI
A/C NO	:	510909010092871	IFSC	:	CIUB0000202

சித்தர்கள் போற்றும்

வாலை



வெளியீடு:
ஸ்ரீ மனோன்மணி சித்தர் பீட குருகுல ஆசிரமம்
7/17C, பழைய பாபநாசம் சிவன் கோயில் தெரு,
சிவந்திபுரம் கிராமம், அம்பை வட்டம்,
நெல்லை மாவட்டம் - 627 425.
செல் : 9843650639, 9894751006

Price Rs. 200/-

ISBN 978-81-935039-1-1